அஸ்ராரே அனல்ஹக்



வெளியிடுவோர்
மெஞ்ஞானிய பரமார்த்தத் திருச் சபை
மேலப்பாளையம்

அஸ்ராரே அனல்ஹக்

Ali Trust, madurai
+91 94431 25786

''இர்ஷாதாத்துல் ஆரிபீன்'' மூலகிரந்தகர்த்தா
ஷெய்கு முஹம்மது இபுறுஹீம் உசூரே இலாஹி (கத்தஸ)

தமிழில் கோர்வை செய்தவர்கள்
'காமிலுல் மஃபூத்' மா. மு. மஸ்தான் லெப்பை ஆரிபில்லாஹ்
பொருள்வைத்தசேரி, சிக்கில்.

வெளியிடுவோர்
மஸ்தானியா பரமார்த்த சபை
மேலப்பாளையம்



காமிலுல் மஃபூத்

சை. மு. மஸ்தான் லெப்பை ([illegible])



ஞானோபதேசிகர்
முஹம்மது ரஸாத் பாவா அவர்கள்

بسم الله الرحمن الرحيم

1

முகவுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

அன்புடையீர்!

அஸ்ஸலாமு அலைக்கும். நீங்கள் இந்நூலைப் படிப்பதற்கு முன் இதனை வெளியிடும் மஸ்தானியா பரமார்த்த சபையார்களாகிய நாங்கள் எங்கள் கருத்துக்களை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

அல்லாஹ்வை வணங்குபவர்களில் இரு வகுப்பார் உள்ளனர். (1) துவைதிகள் (2) அத்வைதிகள். அல்லாஹ் வேறு. சிருஷ்டிப் பொருள்கள் வேறு என்று காண்பவர்கள் துவைதிகள். இவர்கள் இறைவனைத் தங்களுக்கு அர்நியமாகக் காண்பவர்கள். அரூபத்திலோ, சொரூபத்திலோ அல்லாஹ்வை மட்டுப்படுத்தாமல் 'சர்வமும் அவனே' (ஹமவோஸத்) என்ற கொள்கையுடையோராய் அல்லாஹ்வைத் தங்கள் கல்புகளிலே காண்பவர்கள் அத்வைதிகள். பெருமானார் நபி முஹம்மது (ஸல்) அவர்களிடம் 'அல்லாஹ் வானத்திலிருக்கிறானா, பூமியிருக்கிறானா? என்று ஸஹாபாக்கள் கேட்ட கேள்விக்கு ''அல்லாஹ் முஃமீன் ஆனவர்களின் கல்புகளிலே இருக்கிறான்'' என்று பெருமானார் சொன்ன பதில் அத்வைதிகளின் கொள்கையை உறுதிப்படுத்துவதாயுள்ளது. 'லா யஸ்அனி அர்ழி வலா சமாயி வலாகின் யஸ்அனி அர்ழி கல்பி அப்துல் முஃமீன்'' என்ற ஹதீதின் கருத்தாகிய ''வானத்திலும் பூமியிலும் என்னை அடக்கி விட முடியாது. ஓர் முஃமீன் உள்ளத்தில் என்னை அடக்கிவிட முடியும்'' என்று

கல்பின் மகிமை பற்றி அல்லாஹ் கூறியிருப்பதை மனிதன் சிந்திக்கால் தன்னை ஒரு சிறிய பொருளாகத் தேகத்தின் அளவில் தன்னை கைது செய்து கொள்ள மாட்டான்

அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்பதால் அல்லாஹ்வுக்கு யாதொரு இலாபமுமில்லை அவன் இல்லை என்பதால் அவனுக்கு யாதொரு நஷ்டமுமில்லை. ஒருவன் தன்னை யார் என்று அறியாமலிருப்பதே பெரிய நஷ்டமாகும் ஒருவன் தன்னை அறிவது பற்றி விளக்குவதே இந்நூலின் சாராம்சம் ஆகும். இந்நூலை பாரசீக பாஷையில் "இர்ஷாத் தாத்துல் ஆரிபீன்" என்ற தலைப்பில் ஷெய்கு முஹம்மது இபுறாஹீம் உருமீ இலாஹி (கத்தஸ) என்ற பெரியார் எழுதினார்கள். அதனை "அஸ்ராரே அஸல் நூர்' என்ற தலைப்பில் தமிழில் தந்தவர்கள் கீழக்கரை ஞானமேதை கல்வத்து செய்யது அப்துல் காதர் ஆரிபில்லாஹ் நாயகம் அவர்களை ஜீவியத்தில் நேரில் சந்தித்து அவர்களிடம் ஞான தீட்சையும் தல்லாகியும் பெற்றவர்களும் "கலீபுக் கல்வாதி" என்று கல்வத்து ஆண்டவர்களால் கௌரவிக்கப்பட்ட ஷெய்குநா முஹம்மது தாஹிர் பாவா ஆரிபில்லாஹ் அவர்களின் பிரதான கலீபாவும் அம்மகான் அவர்களால் "காமிலுல் மஷ்யூக்" என்ற பட்டம் சூட்டப்பட்டவர்களும் "மெய்ஞானத் தெளிவு", "பரமார்த்த தெளிவு" ஆகிய ஞான நூல்களை தமிழில் கோர்வை செய்தவர்களுமாகிய தஞ்சை ஜில்லா, சிக்கல், பொருள்வைத்தசேரியில் வாழ்ந்த பெரியார், ஞானசொரூபி மா. மு. மஸ்தான் லெப்பை ஆரிபில்லாஹ் அவர்கள் ஆவார்கள்.

அவர்கள் எழுதிய கைப்பிரதியை அம்மகான் தங்கள் ஜீவிய காலத்தில் அவர்களின் ஆத்மீக சகோதரரும், சிறந்த ஞானதேசிகருமாகிய முஹம்மது சலாத் பாவா அவர்களிடம் ஒப்படைத்து "இதனை நீங்கள் அச்சிட்டு வெளியிடுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள் அம்மகானின்

வாக்கைத் தெய்வ வாக்காக சிரமேற் கொண்டு முஹம்மது ரஸாத் பாவா அவர்கள் இந்நூலை மஸ்தானியா பரமார்த்த சபை மூலம் வெளியிடுகிறார்கள். மதிப்பிற்குரிய அன்னவர் இருவர்களின் படத்தையும் அவர்களை சங்கை செய்யும் நோக்கத்துடன் இந்நூலில் வெளியிடுகிறோம். மேலும் இந் நூல் விளங்கி அறிவதற்கு எளிதாக இருக்கும் பொருட்டு ரஸாத்பாவா அவர்கள் விளக்கத்துடன் எழுதிய ஞானபூமி ஏழு என்பதையும் இத்துடன் இணைத்துள்ளோம். “இன்ஸான் என் இரகசியம் நான் அவனது இரகசியம்” என்று இன்ஸா னின் மகிமை பற்றி ஹதீது குத்ஸியில் இறைவன் குறிப்பிட்ட தற்கு மாற்றமாக இன்ஸான் தன்னைத் தேகத்தின் அளவில் கட்டுப்படுத்தி எவ்வளவு சிறிய பொருளாய்க் காண்கிறான் என்பதை பட விளக்கத்துடன் இத்துடன் இணைத்துள்ளோம். குத்புல் அக்பர் செய்யிதுனா அபுல் ஹஸன் அலியுஷ்ஷாதுலி (கத்கஸ) அவர்களால் கோர்வை செய்யப்பட்ட சுத்த அத்வைதி களின் சிறப்புப் பிரார்த்தனையாகிய ‘ஹிஸ்புல் பஹ்றின்’ தமிழ் விளக்கமும் இந்நூலோடு சேர்க்கப்பட்டுள்ளது எல்லோரும் பயன் பெற இந்நூல் வெளியிட்டுள்ள போதிலும் சுத்தாரியாக் களும், வுஜூதியாக்களுமாகிய அத்வைத கூட்டத்தினர்க்கே இந்நூல் பெரிதும் பயன்தரும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நூல் எந்நோக்கத்தோடு கோர்வை செய்யப் பட்டதோ அதனை இன்ஸான் விளங்கி அதன்வழி நடக்க எல் லாம் வல்ல அல்லாஹ்வை வேண்டிக் கொண்டும் அவ்வழியை நுபுவத்து மூலம் விளக்கிய மஹ்ஹறல் அகம் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வஸீலாவை வேண்டியும் அத்தத்துவத்தை விலாயத்து மூலம் வெளிப்படுத்திய பீரான பீர். தஸ்தகீர். கௌதுல் அஃலம் முஹையத்தீன் அப்துல் காதர் ஜெய்லானி

(கத்தஸ) அவர்களின் கிருபா கடாக்ஷத்தை வேண்டியும் ரி முகவுரையை முடிக்கிறோம். சர்வ புகழும் முச்சுடராய் செ வந்த மெய்ப் பொருளுக்கே!

ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்!

இங்ஙனம்
மஸ்தானியா பரமார்த்த சபை
மேலப்பாளையம்,

أ

انا الله لا اله الا انا

مقام مظهر ذات الفردية

وجود بحوت

لباس الشيخ الاكبر

طريقة سر القدير

உஜூதிய்யா சித்தாந்தங்கள்

(தமிழ் விளக்கம்)

'அனல் லாஹுவா லா இலாஹ இல்லா அனா'

திட்டமாக வஸ்து அடங்களிலுமிருந்து 'நான்' என்று சொல்கிறதே அதுவே அல்லாவாயிருக்கும் இன்னும் வஸ்து அடங்கலும் என்னைத் தவிர இல்லை.

மகாமுனா மள்ஹரு தாத்துல் ஸர்மதிய்யா'

வஸ்து அடங்களிலும் தானே வியாபித்து இருந்து ஆட்சி புரியும் அந்த தாத்து வெளியாகும் இடம் தான் எங்கள் மகாம்

'உஜூதே ஹகீகி மஸ்லகுனா'


ஜீவபோதமற்று சிவபோதமுற்று வஸ்து உடல் தானா யிருப்பது எங்கள் உள்ளமை.

'லிபாஸுனா ஷரீஅத்துல் அஹ்மதி'

முக்காலத்திலும் ஜோதி என்ற இஸ்மு தானுமிருந்த நேர்வழி காட்டும் சர்வவியாபகமான பெருடைய ஜிஸ்மு (சரீரம்) தான் எங்களுடைய லிபாஸ் என்னும் உடலம்

'தரீகத்துனா ஸிர்ருல் கதீர்'

குத்ரத் என்னும் வல்லமை தானுமிருந்து சர்வ உலகங்களையும் முக்காலத்திலும் ஆட்சி புரியும் அந்தவஸ்து தானும் இருப்பதுவே எங்கள் தரீகா;


Lungs
Heart
Liver
Kidney
Stomach
Large intestine
Small intestine
Sulphur enough for a packet of sulphur tablets
Iron to make a two-inch nail
Enough carbon for 9,000 lead pencils
Weight of man 10 stone
Sufficient lime to whitewash a chicken coop
Magnesium for a dose of salts
Phosphorus to make 2,200 match heads

மனிதனின் சரீரத்தில் அடங்கி உள்ள இரசாயனப் பொருள்களின் விபரம்

140 பவுண்டு எடையுள்ள மனிதனுடைய சரீரத்தில் கீழ்க்கண்ட இரசாயனப் பொருட்கள் அடங்கியிருக்கின்றன.

(1) 7 பார்சோப் செய்வதற்கு வேண்டிய கொழுப்பு (Fat) அவனுடைய சரீரத்தில் இருக்கின்றது

(2) 10 காலன் கொள்ளளவு உள்ள ஒரு பீப்பாய் தண்ணீர் இருக்கின்றது.

(3) ஒரு கோழிக்கூட்டிற்கு பூச வேண்டிய அளவு சுண்ணாம்பு இருக்கிறது.

(4) ஒரு பாக்கெட் கந்தக மாத்திரைகள் செய்யக்கூடிய அளவு கந்தகம் உள்ளது

(5) இரண்டு-இஞ்ச் ஆணி செய்வதற்கு வேண்டிய இரும்பு (Iron) இருக்கிறது.

(6) 9,000 பென்சில் செய்வதற்கு வேண்டிய கரி (Carbon) இருக்கிறது.

(7) 2,200 தீக்குச்சிகள் செய்ய வேண்டிய அளவு பாஸ்வரம் (Phosphorus) இருக்கிறது.

(8) ஒரு தடவை உட்கொள்ள வேண்டிய மெக்னீசியம் (Magnesium) உப்பு இருக்கிறது.

மனிதனின் சரீரத்தில் உள்ள இப்பொருள்கள் இருபது ரூபாய் விலைதான் ஆகும்.

பொருளடக்கம்

★ அஸ்ராரே அனல்ஹக் ★

1-வது அத்தியாயம்

அஹதியத்து

ஒவ்வொரு வார்த்தையின் அகமியமும் 'அலிப்' ஆகும் அலிபின் அகமியம் 'நுக்தா' வாகும், நுக்தாவின் அகமியம் (சாயத்தின் அகமியமாகும்) சாயத்தின் அகமியம் புகையாகும் புகையின் அகமியம் தானியமாகும். தானியத்தின் அகமியம் பஞ்ச பூதங்களாகும் பஞ்ச பூதங்களின் அகமியம் அல்லாஹ்வின் 'நூர்' ஆகிய ஒளிவாயிருக்கும். 'தாத்'தின் ஒளிவாகிறது இருளாகும் இருளிலேதான் 'மாஉல் ஹயாத்' என்னும் ஜீவதீர்த்தம் இருக்கிறது. நீ உன் பார்வையை சாயத்தின் மீது செலுத்துவாயாகில் எழுத்துக்கள் மறைந்துவிடுகின்றன. எழுத்துக்களின் பால் செலுத்தினல் சாயம் மறைகின்றது.

தனது இருசம்பூரணங்களையுங் கொண்டு 'தாத்து' தோற்றமளித்துக் கொண்டு வருகிறது தன் 'ஜமால்' ஆகிய பேரழகையும் 'ஜலால்' என்னும் மகத்துவத்தையுங் கொண்டு அந்த 'தாத்து' உன்னில் வெளியீடாயிருக்கின்றது. உன்னில் அது வெளியாகியிராவிட்டால் வேறெங்ஙன் அது வெளிப்பட போகின்றது?

"அதனது சொந்த 'தஜல்லி'யை நீ ஆசித்தால் மானிடனில் தெளிவான புன்முறுவல் பூத்ததாக நீ அங்கே காண்பாய்," என்று மௌலானா ரூமி (கத்தஸ) அவர்கள் பகர்ந்தருளியிருக்கிறார்கள்

அறைத்தியத்து

'கைபு' ' ' என்னும் மறைவின் நிலைமை
யில் 'தாத்து' எதையும் உணராதிருந்தது ஆகை
யால் அந்நிலையில் படைக்கிறவனாகிய 'ஹாலிகு' யார்?
(யாருமில்லை) வெளித் தோன்றியிருப்பது 'சிபாத்து'
ஆகிய பண்புகளின் புறமிருந்தே

'ஜீவியம்' என்னும் பண்பின் குண
பாடகவே உளமை' தன்னை 'ஜீவன்' என்பாதா
யுணர்ந்தது 'அறிவு என்னும் பண்பிலிருந்து
தன்னை அறிபவனாயுணர்ந்தது இவ்வாருகவே எழு
பிரதான பண்புகளும் பேரழகு அல்லது நன்மை.
மகத்துவம் அல்லது தீமை என்று இருவகையாக
உள்ளதெல்லாம் 'சிபாத்து ஆகிய பண்புகளின்
குணபாடேயாம். 'தாத்து'டையதல்ல இந்த ஆலம்
எவ்வாறு 'சிபாத்தி' லிருந்து உண்டாயிற்று?
சிபாத்துகளின் உள்ளிடை தத்துவங்கள் தங்களை
வெளிப்படுத்திக்கொள்ள நாடின. உதாரணமாக
உள்ளமையின் உள்ளிடை சக்திகள் வெளியீடாவ
தற்கு ஒரு கோலத்தைக் கொண்டது. அதுவே
ஜீவன் நாட்டத்தின் உள்ளிடை தத்துவங்கள்
இச்சையாகிய கோலத்தையும். "சக்தி"யின் தத்துவங்
கள் வல்லமையையும் மற்றும் இவ்வாறே நீஎங்கெங்கு
ஜீவனைப் பார்க்கிறயோ அது உள்ளமையின் குண
பாடு எங்கெங்கு புத்தியை பார்க்கிருயோ அறிவின்
குணபாடு பிரிது இவ்வண்ணமேயாம். 'உளமை'
'ஜீவியம் என்னும் கோலத்தைப் பெற்றது 'அறிவு'
புத்தி என்னும் கோலத்தை அடைந்தது நாட்டம்
மனம் என்னும் கோலத்தையும். 'சக்தி' புஜ என்னும்
கோலத்தையும் 'கேள்வி' காது என்னும் கோலத்தை
யும் பார்வை' கண் என்ற கோலத்தையும். 'பேச்சு'
நாக்கு என்னும் கோலத்தையும் பெறலாயின

1-வது அத்தியாயம்

ஒவ்வொரு வஸ்துவும் ஒரு பண்பின் கோலம் இந்த பிரபஞ்சம் பூராவும் பல பண்புகளின் கோலங்களாகயிருக்கின்றன. கோலங்களின் மாற்றமும், முரண்பாடும் பண்புகளின் மாற்றங்களையும் முறண்பாடுகளையும் பொருத்திருக்கின்றன.

'வாஜிபுல் உஜூது' ஆகிய அத்தியாவசிய 'உண்மையும்' 'அஃயான்' ஆகிய வஸ்துகளின் அகமியமும் 'கைபில்' (' ') மறைந்திருக்கின்றன வெளியீடாயிருப்பதெல்லாம் 'அஃயான்' ஆகிய அஸ்மாக்களின் கோலங்களாக 'தாத்து' 'முந்தலக்கு' ஆன சம்பூரணதாத்துடைய பிரதி பிம்பம்தான். 'தாத்து' முத்தலக்கும். 'அஃயானு'கிய அஸ்மாவும் மறைந்திருக்க வெளியீடானவையாவும் அதன் பிரதி பிம்பங்களும், மாதிரிகளுமாம். 'சாலிக்' என்னும் வழி நடப்போன் உள்ளமையையோ, அஃயானுகிய 'அஸ்மாவையோ பார்ப்பதில்லை ஆனல் வெளிப்பாட்டைதான் பார்க்கின்ருன்.

'ஹக்கு' தன்னையே உணராத நிலைதான் தனது சொந்த 'தாத்து'டன் கூட யாதொரு சம்பந்தமுமற்றிருந்த நிலையாம். அந்த கைபு 'முத்தலக்கு' ஆன சம்பூரண மறைவான நிலையில் தன் 'தாத்'தையும் தான் அறியாதிருந்தான்.

அன்பே 'தாத்'தின் மர்மம் 'தாத்து' தானும் அதுவே அதனை தீர்க்கதரிசிகளுக்கும், முக்தர்களான ஒளலியாக்களுக்குங்கூட வெளிப்படுத்தபடவில்லை அதனை சம்பூரணமாய் அறிதலேயன்றி மட்டிட்டுக் கூற முடியாத மாப்பெரும் ஆச்சிரிய நிலையாகும். அதனை ஞானத்திலோ அல்லது தீர்க்கதரிசனமான 'வஹி'யிலோ கட்டுப்படுத்தப்பட முடியாது அதனை 'அழகு' என்னும் மண்டலத்தில் கொண்டு வருதல் அசாத்தியம் பேரின்ப காதலர்களும், ஞானிகளும் அதனைப் பற்றி தாங்கள் அறிந்ததாகச் சொல்வதெல்லாம் அதன் பிரதி பிம்பத்தையும், மாதிரியையுமே தவிற மற்றதையல்ல அகண்ட பரிபூரண 'தாத்தை' 'தஜல்லி'யாகிய பிரதி பிம்பத்

1-வது அத்தியாயம்

திற்குள்ளும், மாதிரிகளுக்குள்ளும் கொணர்ந்து அ' க்கிவிட
முடியாது. தண்ணீரில் சூரியனின் பிரதி பிம்பமான
தோற்றத்தை பார்க்கும் ஒருவன் சூரியன் தன்னையே பார்த்து
விட்டதாய்க் கூறிவிடமுடியாது. ''மா 'அரப்னுக்க ஹக்க
மஃரிபத்திக்க'' - நான் உன்னை அறியக்கூடிய அளவுக்கு
அறிந்துவிடவில்லை என்று ரசூல் (சல்) அவர்கள் திருவாய்
மலர்ந்தருளியிருக்கிறார்கள் அவனது தன்மையை அறிதல்
அவனாலேயேயன்றி பிரிதொன்றினாலன்று லாயஃரிபுல்லாஹ்
கைருல்லாஹி'' ''அல்லா(ஹ்)வின் வேறு அல்லா(ஹ்)வை
அறியாது.

'ஹக்கு' தனக்குத்தானே வெளியாகாத நிலையே - காயிபுல்கைபு ஆகிய 'மர்மத்தின் மர்மம்; அல்லது 'முன்கதிஉல் இஷாரா'வாகும் முதன்முதல் தன்னை பட்டும் தான் உணர்ந்திருந்த ஸ்தானம் 'அஹதிய்யத்து' ஆகும். தன்னில்தான நோட்டமிட்டு தன்னில் சகலமும் அடங்கியிருக்கக் கண்ட பதவி 'வஹ்தத்து' ஆகிய முதற் குறிப்பும், 'ஹக்கீகத்து முஹம்மதீ' (நூர்முஹம்மதீ)யும் ஆகும். ரூஹுல்குத்ஸி' இதுவே தன்னில் அடங்கியிருந்த சகல வற்றையும் பிரித்தறிந்த நிலையே இரண்டாங் குறிப்பான 'வாஹிதியத்து ஆகிய ஹகீகத்துல் இன்ஸான்' (ரூஹு முஹம்மதீ) ரூஹுல் அஃலம், இதுவே இந்நிலையில் தன் ஞானத்தில் தன்னையும், தன்னுள் அடக்கமான சகல வற்றையும் பிரித்து உணர்வதாம். வெளி படையாகத் தன்னை பிரிவு பிரிவாக காண்பதான நிலமைகள்தான் 'ஆலம் அர்வாஹு' என்னும் ஆன்மலோகம், ஆலம்மிதால்' என்னும் சூட்சுமலோகம் 'ஆலம் அஜ்ஸாம். என்னும் ஜடலோகம். பின்னர் கூறப்பட்ட இம்மூன்று லோகங்களுஞ் சேர்ந்தே சிருஷ்டிக்கப்பட்டவை' என்பதாயிற்று உளமை என்பது தன் மட்டாக இருந்தபொழுது தனக்கு மட்டும் தோன்றலா யிருந்தது தன்னை மட்டுமே பார்ப்பதாய்யிருந்தது ஆனால் அதற்கு நோற்றுததொன்றுமில்லை படமைக்கு எதிரிடைய என்றில்லாத சம்பூரண ஞானம் அதுவே தரிபாடான தனது

தன்மையைதான் உணர்ந்திருந்தது. தன் உள்ளமையில் சந்தேகமென்பது அசாத்தியம் தன்னில்தான் சம்பூரண முடையது குறைவு என்பதெல்லாம் கோலத்தைப் பொருத்ததே அது (உளமை) பூர்வீகமானது மாறுதலற்றது. எங்கும் வியாபித்தது. தர்க்காலிகம். மாறுந்தன்மை, தோன்றி மறைதல் கோலத்துக்கு உரியதாம்,

தனக்கே மறைவான 'ஹூ' வாகிய 'அவன்' தான் தனக்கு வெளியான 'அனா' வாகிய 'நான்' என ஆனான். அதனால்தான் 'ஷுத்தாரியாக்கள்' 'பனா' செய்தலாகிய உணர்விழந்த நிலையை விடுத்து 'பகா' செய்தலென்னும் 'மெய்கண்ட நிலை'யைப் பற்றிப் பிடித்துக் கொண்டார்கள், 'முராக்பா'வென்றும் நெருங்கிச் செல்வதில் தன்னை ஒழிக்க முயல்வதால் காலங் கடத்தல் வீண் என்று கருதுகின்றனர். ஏனெனில் உண்மையில் 'இல்லாமை' என்னும் 'இன்மை'யை இல்லாமையாக்கலாயிருப்பதால்தான் தம்முடைய நினைவில் தோன்றும் ஒரு செத்த குதிரையை உயிர்ப்பித்து சவுக்காலடிப்பது போன்றும் இது.

ஷுத்தாரியாக்கள் பாதையில் தன்னை அழித்துவிடல் என்பதில்லை 'நான்' நானாகயிருக்கிறேன் என்பதைவிட அதில் யாதொன்றுமில்லை 'தாத்து' ஆகிய தத்சொரூபம் தன்னில்தான் சம்பூர்ணமுடையது. அதனை எக்கோலத்திலும் அடக்கிவிட முடியாது. ஏனெனில் அதற்கு ஒரு கோலமிருந்தால் அது தன்னில்தான் சம்பூர்ண குறிப்பற்ற கோலமாகத் தானிருக்கும் எத்தகைய கோலமெனில் சர்வலோகங்களும். கோணங்களும் அதனில் நிலைபெற்றிருக்குமே அத்தகைய கோலம் 'கலகல்' இன்ன சான அலா சூரத்திற் றஹ்மான்' 'அவன்' மனிடனை 'றஹ்மான்' என்னும் வடிவத்திலே சிருஷ்டித்தான்' மரத்துண்டுக்கு ஒரு கோலமுண்டு அதிலிருந்துதான்' எல்லா கோலங்களும் எடுக்கப்படுகின்றன எனினும் அவன் விரும்பினால் ''ரஅய்த்து ரப்பீ சூரத்தி அம்ரதின் கதத்'' முகவரை கீராத ஒரு வாலிபனின் கோலத்தில் நான் என்னுடைய 'றப்பை'க் கண்டேன் என்று நாயகம் (சல்) அவர்கள் அருளி

அஹதியத்து

யிருக்கிருர்கள். இதுவே மாதிரியாக இருக்கும் இவ்வாறில்லா விடில் ஜனங்கள் வழிகேடடைந்து விடுவார்கள். எனினும் இம்மாதிரியாகக் காணப்படுவது ஒருவகை மித்தையான தோற்றமேயன்றி சர்வ சம்பூர்ணமன்று

வஸ்துவினுடைய உளமையின் நினைவு-கோலம் வஸ்துவின் நினைவு-கோலத்தைவிட முந்தியதாம் வஸ்துவானது உளமையின்மையாயிருக்குமாயின் அது 'அதம்' என்றும் 'இல்லாமை' என்பதாகும். உளமையாயிருப்பதற்கு முந்தியதாக இன்மையாயிருப்பது முடியாத காரியம் இதுதான். மஹ்தூலுல் அவ்வலு' ஆகிய முதன் முதல் அறியப்பட்டது 'ஜைது' நிற்கிருன் என்று நீ சொல்லும்பொழுது ஜைதுடைய ''இருப்புத் தன்மை'' உன்னுடைய நினைவு கோலத்தில் முதலில் அமைந்துதான் அவனுடைய நிற்றல்' என்பது தோன்றுகிறது. ஆதலின் 'நிற்கிருன்' என்ற எண்ணமானது 'உளமையாயிருக்கிருன்' என்பதற்குப் பிந்திதான் உணரப்படுகின்றது. உளமையைத் தவிர ஹக்கு'டைய மற்ற பண்புகளல்லாம் அவனுடைய தாத்துக்கு பிந்தியே வருகின்றன. ஆகையால் உளமை என்பதே 'தாத்தாகும்' முதகல்லிர்கள் ஹகீகத்து அல்லது தாத்து அல்லது தத்சொருபம் உள்ளமைக்கு முந்தியதென்று வாதிக்கிருர்கள்.

உள்ளமையில் மிகவும் வெளியீடான உள்ளமை 'ஹக்'கின் உள்ளமையாகும் வஸ்துக்களின் உள்ளமை 'ஹக்'குடைய நூரின் மாறலாயிருக்கும் நீ நோட்டமிடுங்கால் முதல்முதலில் அல்லா(ஹ்)வின் நூராகிய பேரொளியைப் பார்க்கிருய், பிறகு கோலங்கள் உண்டாயிருக்கிறதையும், அந்த கோலங்கள் இந்த பேரொளியால் வெளியீடாயிருப்பதையும் காண்கிருய்.

சர்க்கரையில் அல்லது மெழுகில் நீ வடிவங்களுண்டு பண்ணும்பொழுது நீ முதன்முதல் நீ பார்ப்பது சர்க்கரையையும் மெழுகையுமாம். எந்த கோலமும் அப்பொழுது சர்க்கரை அல்லது மெழுகுடன் சம்பந்தப்பட்டிருப்பதில்லை பிறகு

நினைவிலே அமைந்த வஸ்துக்களின் வடிவங்களின் மாதிரிகளைப் பார்க்கின்றாய். அவைகள் நினைவில்தான் உண்டாயிருக்கின்றன. வெளிப்படையில் அவைகள் சர்க்கரையும், மெழுகுமாம். நீ அந்த மாதிரி அல்லது அமைப்பை சிதைத்து விடும்பொழுது அறியப்படாதது யாதொன்றுமில்லை. இவ்வகையில் அந்த கோலம் சர்க்கரை அல்லது மெழுகுடன் சேர்ந்தோ அல்லது அவற்றிலிருந்து பிரிக்கப்பட்டோ இல்லை வேற்றுமையான தனித்தனி இரண்டு வஸ்துக்கள் தோன்றப்படக் கூடிய கோலங்கள் அதற்கில்லை. கோலம் அல்லது வடிவம் முக்காலத்தும் இன்மையான கற்பனையும், மித்தையுமாகும்; சர்க்கரையும், மெழுகும் தரிபாடான உள்ளமைகளாம். அவையால் உள்ளமையும், 'ஹக்'குடைய பண்புகளும்தான் வெளியிடாயுள்ளவை. நீ உன்னையும், வஸ்த்துக்களையும் பார்ப்பாயாகில் ஹக்குடைய உள்ளமையைதான் பார்க்கிறாய். வார்த்தைகளைப் பார்க்குங்கால் மையானது உனக்கு தோன்றுகின்றது. வார்த்தைகளென்று உன்னைப் பார்ப்பதுதான். 'ஹக்'கை பார்ப்பதாகும். 'மன் அரப நப்ஸஹூ பகத் அரப ரப்பஹூ' எவனொருவன் தன்னை அறிந்தானோ அவன் தன் நாயனை அறிந்தான் என்பது இந்த வகையின் மர்மமாகும். அல்லா(ஹ்) உடைய உள்ளமையை அறிதல் என்பது உன்னுடைய தன்மையாகிய 'நப்ஸை' அறிவதற்கு முந்தியதாகும். வல்லாஹூ காலிபுன் அலா அம்ரிஹி' - அல்லாஹூத்து ஆலா தனது 'அம்று' கட்டளையை மிகைத்திருக்கிறான். நீ உன்னுடைய 'நப்ஸை' முந்தி பார்ப்பாயாகில் 'ஹக்'கைப் பார்ப்பதை மறந்துவிடக்கூடும். ஏனெனில் உன்னுடைய 'நப்ஸை' பார்ப்பதானது உன்னுடைய நப்ஸை மட்டும் பார்ப்பதாகும். அந்த உன்னுடைய 'நப்ஸ்' என்பதோ ஒரு சூன்யம். ஆனால் 'ஹக்'கை அறிவதாகிறது. 'ஹக்'கின் உள்ளமையை அறிதலாகும்.

''சிர்று'' ஆகிறது 'ஹக்கீகத்து முஹம்மதிய்யா'வாகும் அதற்கு மேல் குறிப்பற்ற 'தாத்து' ஆகும். 'தான்' என்பது அந்த 'லாத அய்யுன்' அளவில் குறிப்பிடுவதாகும்

அஃமதியத்து

'கைபுஹாலியத்து' ஆன மறைந்த 'ஹாலியத்து' அல்லது மஜ்ஹூலிலாக அத் அறியப்படாத நிலைமயித் தாத்து' பண்புகளவில் சாருவதற்கு யாதொரு விருப்பமுங் காட்டாதிருக்கிறதாகும். இங்கு அதனை யாதொன்றும் என்றும் குறிப்பிட முடியாத 'முன்கதில் உல் இஷாராவாகும். அதற்கு யாதொரு பண்புகளும் கிடையாததால் செயல்களும் மற்றிருக்கிறது பிறகு எவற்றிலின்று 'ஆலம்' என்னும் பிரபஞ்சம் தோன்றியது? பண்புகள்தான் இப்பிரபஞ்சத்தைத் தோன்றச் செய்தன தாத்து அன்று பிரபஞ்சத்தின் ஜீவியம் 'ஜீவன்' என்ற பண்புடைய குணபாடு. பிரபஞ்சத்தில் தோன்றியிருக்கும் அறிவு 'தாத்து'டைய 'ஞானம்' என்னும் பண்பின் குணபாடே. இவ்வாறாகவே நாட்டம், சக்தியும், பார்வை, கேள்வி ஆகியவை குணபாடு செய்யும் பண்புகளின் குணபாடேயாம் ஆதலின் நன்மையும், தீமையும் பண்புகளிடமிருந்துதானேயொழிய 'தாத்'திடமிருந்தல்ல உள்ளமையானது ஜீவித்தல் என்னும் வடிவத்தைக் கொண்டது. நாட்டமோ இச்சையாகிய கோலத்திலானது ஞானமாகிறது புத்தியின் தோற்றத்தை எடுத்தது இது போன்றுதான் மற்றவையும் பின்னர் தோற்றப்பட்ட இந்த தத்துவங்கள் புலமைகள் வாயிலாய் தோன்றலாயின நாட்டம் ஹிருதயத்தின் கோலத்தைக் கொண்டது சக்தி மூளையினுடையதையும், கேள்வியானது காதினுடையதையும், பார்வை கண்ணினுடையதையும், பேச்சு நாக்குடையதையுங் கோலங் கொண்டது ஒவ்வொரு அணுவும் ஒரு பண்பின் கோலமாகும். ஞானமும் நாட்டமும் 'வஹ்தத்'தில் பிரபஞ்சத்தின் வடிவாய் தோன்றலாயின இந்த பிரபஞ்சம் பண்புகளின் வெளியீடாகும். சரியாக கூறுங்கால் பண்புகளின் கோலம் அல்லது தோற்றமாம் ஒவ்வொரு பண்பும் ஒரு கோலத்தில் தோன்றியிருக்கிறது கோலங்களிலுள்ள ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் பண்புகளிலுள்ள ஒற்றுமைகளும். வேற்றுமைகளும் பொருந்தியிருக்கின்றன.

எல்லையற்ற தாத்து' தன் எல்லையற்ற தன்மையை அறியுங்கால் அந்த 'தாத்து' அறிவைக்கொண்டு மட்டுப் படுகின்றது. அதற்கு அவ்வாறான அறிவு இல்லாவிடில் அதனுடைய அறிவு குறைபாடுள்ளதாக ஆகிறது. ஆதல்

அறியப்பட்டது எல்லாவற்றதாயிருக்குமானால், எவ்வாறு அறிவு அதனை சூழ்ந்துகொள்ளமுடியும்? அதற்கு விடையாவது:-

சம்பூரண 'தாத்து' இந்த நிலைமையில் சம்பூரண ஞானத்தைப் பெற்றிருக்கிறது இதில் அவ்வாறான அறிவுடன் அதற்கு சம்பந்தமுண்டாயிருப்பதால் அந்த சம்பந்தமும், சம்பூரணமாகவும், அந்த 'தாத்து' தன்னை சர்வபூரணமாகவும் அறிகிறது. 'கண்டிப்பு' என்பது இங்கே யாதொரு வடிவை யும் பெறுகிறதில்லை இந்த அகண்ட பரிபூரணதத்தாகிறது அகண்ட பரிபூரண ஞானமாகிய அறிவாக 'மஜ்ஹூலுத் தஅத்' என்ற அறியப்படாத அறியவியலாத நிலைமையில் இருக்கிறது. இந்த நிலையில் அறிபவனுக்கும் அறிவுக்கும் யாதொரு வேலையுமில்லை அந்த நிலையிலிருந்து அது இறங்கியதும் அறியப்பட்டதின் கோலம் தோன்றியது. அந்த தோற்றமே முதற்குறிப்பாம் இவ்வாறாக அகண்ட பரிபூரண நிலைமை யாகிய 'தாத்தில்' அறிவு முதலான சகல பண்புகளும் மறைந் திருக்கின்றன. 'தாத்து' ஞானத்தைக் கொண்டு மட்டுப் படவில்லை இந்த நிலையில் அது தனக்கே உள்ளிடமா யிருக்கிறது உண்மை யாதெனில் 'லாஹூத்' ஆகிய வெளி யாங்கமும், 'பாத்தின்' ஆகிய அந்தரங்கமும், அதாவது கண்டமும், அகண்டமுமாய்ச் சமைந்திருக்கிறது. ஒன்றை மற்றொன்றுடன் ஒப்பிடவேண்டாம். கண்டமோ அதன் கண்டத்தன்மையின் அறிவைப் பெற்றிருக்கிறது அகண்டமோ அதன் அகண்டத்தன்மையின் அறிவைப் பெற்றிருக்கிறது கடல் நோக்கிச் செல்லும் நீர்த்துளி தன் துளித்தன்மையை உணர்ந்திருக்கிறதன்றி சமுத்திரத் தன்மையையும் விளங்கியிருக்கிறது ஒருவனை அறிவு மற்றொரு அறிவுடன் போரிடுகிறதில்லை மட்டுப்படக்கூடிய தனது அற்பத் தன்மையை அது உணர்ந்திருக்கிறது மட்டற்ற தனது அபாரத் தன்மையையும் அது விளங்கியிருக்கிறது. 'தாத்'தும் அறிவும் ஒன்றாயொழுகு சூழ்ந்திருப்பனவாம். சூழப்பட்டதும் எங்கே? இவ்விடத்தில் தாத்தும், பண்புகளும் ஏகமாம்.

வஸ்துவின் அகமியப் பண்புகளைவிட்டும் நீங்கியதா யிருக்கிறது விவரித்துக்கூற இயலாததாயிருக்கிறது

அஹதியத்து

உதாரணமாக, வேதனையென்பது விவரித்துக்கூறமுடியாத ஒன்ருயிருக்கிறது. யாராலும் அதை தொனிக்கக்கூடிய வார்த்தைகளால் விபரித்து அதன் அகமியத்தை மற்றவர் உணர்ந்துகொள்ளச் செய்யமுடியாது. அதனை உணர்பவன் மட்டும்தான் அதனை உணரவல்லவன். அந்த வேதனை தன் எல்லையை கடக்குமாகில் அது மரணமாக முடிவடைகின்றது. அதனுல்தான் அறிவு, புத்தி, ஞான சிருஷ்டி ஆகியவற்றின் ஆதிக்கத்தில் அடங்குவதாயில்லை. குல்பர்கா ஷரீபின் ஒளியாவான ஹஜரத்து முஹம்மது கேசூதராஜ் (கத்) அவர்கள், ''நீ ஒரு கோழியைக்கொன்று பூமியில் புதைத்துவிடுவாயாகில் எல்லா ஒலிமார்களும், தீர்க்கதரிசிகளும் ஒன்ருய்ச் சேர்ந்துகொண்டு தங்களுடைய அகப்பார்வையைக்கொண்டு அந்தக்கோழி உயிருடனிருக்கும் பொழுதுள்ள அதன் அகமியம் என்னவென்பதைச் சொல்ல சக்தியற்றவர்களாய் யிருக்கிருர்கள்'' என்பதாய் சொல்லியிருக்கிருர்கள். கோழியோ பல கோணங்களாலமைந்த ஓர் வஸ்து ஆனுல் உன்னுல் மிகச் சிறிய ஒரு மணற்றுளியின் அகமியத்தைக்கூட விளங்கிக்கொள்ளமுடியாது. காரணமென்னவெனில் அதன் அகமியம் சர்வசம்பூரண 'தாத்'தாகவும் உண்மையாகவுமிருப்பதினுலேயே அதனை அறிவுக்கும் ஞான திருஷ்டிக்கும் கொண்டுவருதல் சாத்தியப்படாத தொன்றும். அதுவோ பண்புகளான 'சிபாத்து' வெளிப்படாத, அறியப்படா, அறியவிலா 'தாத்'தாகும் அறியப்படுவதெல்லாம் பண்புகள் மட்டுமே.

ஜைது 'ஜீவியம்' 'நாட்டம்' 'சுத்துவம்' 'பார்வை' 'பேச்சு' 'கேள்வி' முதலான பண்புகளைப் பெற்றிருக்கிருன். அவன் இந்த பண்புகளை உதறிவிடுவாஞகில் அவனுக்குத்தான் என்னவாயிருக்கிருனென்பதே தெரியாது. இந்த தேட்டத்தில் நெடுங்காலம் அவன் தரிப்பானேயாகில் தன்னையறிவதில் பித்தனுய்விடுவான் இந்த பைத்தியத்தில் அவன் எதையேனும் அறிவானுயின், அவன் தன்னுலொன்றும் அறியவியாலாதிருக்கிறதென்பதைதான் அறிகிருன். அதலின் தாத்தின் அகமியத்தை அறிய முயல்வதை இது காரணத்துக்குத்தான்

தடை செய்யப்பட்டிருக்கிறது. ''வயுஹஸ்ஸிருகுமுல்லாஹு நப்ஸஹு''- ''அவன் உங்களை தன்னைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கும்படி செய்திருக்கிறான்'' அறிவுகூட அவனுடைய 'ஹக்கீகத்'தில் வாய் மூடலான பேராச்சிரியத்தில் கறைந்து போய் மூழ்கிக் கிடக்கிறது தாத்துடைய நிலைமையில் அதன் அறிவு அதன் ஹக்கீகத்தாகிய அஃமியமாயிருக்கிறது பிரிவினை ஏற்படாதவரை அது தாத்தை அறியாது ஆகையால் தாத்தை விளங்கிக்கொள்ளாதது அறிவிலுள்ள குறைபாட்டினலன்று அறிவே அதில் கறைந்து மறைந்திருக்கையில் அதன் தேட்டமும் அவ்வாறேயாம். அதற்கு குணபாடு யாதுமில்லை இங்கு காணுதல் என்பது காணுதிருத்தல்தான் ஒருவனின் அவனை அறிதலென்னும் உச்ச ஸ்தானம் அவனை அறியவிலா மடமையும். பேராச்சிரியமுமே ''அல்இல்மு பீதாத்தில்லாஹி ஜஹ்லுன்''- அல்லா(ஹ்)வுடைய தாத்தில் அறிதல் (அறிய முயலுதல்) மடமையாகும் என்று துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்த நபியும், எந்த ஒலியும் அந்த (நுக்த) புள்ளியை அடைந்ததுமில்லை ஒருக்காலும் அடையவுமாட்டார்கள் ''மா அரப்ஞாக்க ஹக்க மஃரிபத்திக்''- நான் உன்னை அறிவுகோளும் அந்த அளவுக்கு அறியவில்லை. என்று நாயகம் (சல்) அவர்கள் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள். எந்த பார்வையும் 'தாத்து'டைய 'தஜல்லி'யாகிய பிரதி பிம்பத்தைக் கண்டதில்லை எப்பொழுதேனும் அந்த தஜல்லியை யாதொரு பார்வையும் அடையப் பெறுமாகில் அதுதானே இல்லாமையாகிய நாஸ்தியாயிருக்க வேண்டும். ஏனெனில் தாத்துடைய தஜல்லியாகிய தோற்றம் சகல வெளிப்பாடுகளாலான கண்ணுறைகளை கரைந்துவிடச் செய்வதாயிருக்கிறது. இதனைத்தான் நபிமார்களும். ஒலிமார்களும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் நபிமார்கள் முந்திய வெளிப்பாட்டையும், ஒலிமார்கள் இரண்டாம் வெளியீட்டையும் பெற்றிருக்கின்றனர் வெளியீட்டின் இரண்டாவது நிலைமை முதல் நிலைமையில் கரைந்துவிடுகிறது பிறகு முதல் நிலைமையும் கரைந்து இரண்டும் எல்லையற்ற தாத்தில் சேர்ந்துவிடுகின்றன பண்புகளின் தஜல்லியானது இவ்வாறு தாத்தின் தஜல்லியில் கறைந்துவிடுகிறது.

அஹதியத்து

சர்வசம்பூரண 'தாத்து' மட்டுமே தரிபட்டிருக்கின்றது. அவனுக்கு இரண்டாவது என்பதேயில்லை. அவனுடைய இரகசிய அறைகளின் கதவுகள் வெளியிலிருப்பவர்களுக்கு அனுமதியளிக்கப்படாது. சாத்தப்பட்டிருக்கின்றன. தன்னையும் கடந்து தன்நிலை (ஜீவஅங்காரம்) அற்றவனே அங்கு அனுமதிக்கப்படுகிறான்.

குறிப்பு:— "அப்ருப்தேர ஈதீதீஹை பர்பாத்பர்பாத் பதீபதீஹை". மன்லகன் ஒரே 'தாத்து' தான் மணற்றுவியிலும். மலையிலும் கூடுதல் குறைதலின்றி சமமாக வெளியீடாயிருக்கிறது ஏ! இறைவா உனது தோற்றமானது மலைகளிலும் இலைகளிலும்யிருப்பதுபோன்று சமமாகவே அணுக்களிலுமிருக்கிறது.)

நாயகம் (சல்) அவர்கள் குறைஷிகளை ஒன்று திரட்டி "லாஇலாஹ இல்லல்லாஹு" என்று சொல்லும்படி அழைத்தும் அவர்கள் மிகுந்த போராச்சிரியங்கொண்டு 'கைபஜஅலல் ஆலிஹத்த இலாஹன் வாஹிது இன்னஹாத லஷைஉன் உஜ்ஜாப்' எவ்வாறு ஏகநாயகன் (பிரபஞ்சம் பூராவையும் தன்னுள்டக்கிக்கொள்வான்? அவர் (நபி) எல்லா இலாஹு களையும் ஒருஇலாஹு என்று ஆக்கிவிட்டார்? ஒவ்வொரு தனித் தனி பொருளும் ஒரே தாத்துடைய பிரதி பிம்பமான தோற்ற மென்பது அவர்களுக்கு புரியவில்லை]

"இன்னஹு பிகுல்லி ஷையின் முஹீது" நிட்சய மாக அவன் சகலவற்றயுஞ் சூழ்ந்திருக்கிறான் இந்த சூழ்தல் தண்ணீரானது அலைகளையும், பனியையும் பனித்துளியையும், மழைச்சாரலையும் இன்னும் இதுபோல்வனவற்றைஞ் சூழ்ந் திருப்பது போன்றும்.

'ஹு' என்பதைக் கொண்டு சர்வ சம்பூரண 'தாத்'தைக் கருதப்படுகிறது அதாவது பண்பாதிகளின் சம்பந்தமற்றதாம் 'அல்லாஹ்' எனும் திருநாமம் தாத்தையும் அதன் சகல சியாத்து ஆகிய பண்புகளையுங் குறிப்பதாகும்

அஸ்ராரே அனல்ஹக்

'அஹது' என்னும் நிலையில் எல்லா குறிப்புகளும் தரிக்கப்பட்டு விடும். அதாவது அது இது என்ற வார்த்தைகளை நீ அவனள வில் சாற்றுதிருந்தால்தான் 'வாஹிது' என்னும் நிலை அவனது உள்ளமையை மட்டும் உறுதியுடன் தரிபடுத்தலாம்.

'ஹக்கு' மட்டிலடங்காத முடிவற்ற பண்புகளை யுடையவனாயிருக்கிறான். அந்த பண்புகளையோ நம்மால் யூகித் தறிய முடியாது அதாவது அவன் நாம் அவனளவில் சாற்றக்கூடிய கண்டித்த பண்புகளைவிட்டும் நீங்கியவனாய் யிருக்கிறான் '' .... அம்மாயலியூன் '' ஒரு ஹதீதுபடி. '' ஓ, எனது இரட்சகரே! உனக்கு முன்பு யாதொன்று மில்லாத முந்தியவனாயும், உனக்கு பின்பு யாதொன்றுமில்லாத பிந்தியவனாயும். உனக்கு மேல் யாதொரு வஸ்துமின்றிய வெளியீடானவனாயும், உனக்குள் யாதொரு வஸ்துவுமின்றிய உள்ளீடானவனாயுமிருக்கிறாய் '' அல்லாஹுமம அந்தல் அவ்வலு லைஸ கப்லிக்க ஷைஉன். வஅன்தல் ஆகிறு லைஸ பஃதிக ஷைஉன் வஅந்தல் ளாஹிரு லைஸ பௌக்கிக்க ஷைஉன், வஅன்தல் பாதினு லைஸ தூனிக்க ஷைஉன் '' வேறு '' என்பதினுடைய உள்ளமை கிடையாது. 'ஹக்'கின் உள்ளமையை எல்லைப்படுத்தக்கூடும்பொழுதுதான் ' கைறு ' ஆகிய 'வேறு' என்பதன் உள்ளமைவலிந்து கொணரப் படுகிறது அப்பொழுதுதான் அது சாத்தியப்படுகிறது.

இஸ்மு ஆகிய திருநாமம் ஓர் வெறும் வார்த்தை யன்று 'சிபாத்து' என்னும் பண்புடன் சம்பந்தப்பட்டு பெயரிடப்பட்டதொன்றின் ' தாத்தா'கும் (வஸ்துடைய தாத்தாகும்).

தாத்தும் சிபத்தும் உள்ளமையைப் பொருத்தவரை ஒன்றே கஸ்தூரியும், அதன் வாடையும்போல் உள்ளமை யில் ஒன்றாயிருப்பினும் நாம ரூபத்தால் வேற்றுமைப் பட்டிருக்கின்றன இந்த நாமரூபத்தைப் பாராட்டுவதனாலேயே வேற்றுமை தொனிக்கிறது. ஆனால் யதார்த்தமான (உண்மை யாகிய) ஒற்றுமையும் அனர்த்தமாகிய (இன்மையான)

அஹதியத்து

மாய்கையாகிய வேற்றுமை தொனிக்கும் 'கத்ரத்து' என்னும் பலவும் தாத்திலிருந்துதான். பரோட்ச ஞானிகள் கூற்றுப்படி அவைகளை வேற்றுமைப்படுத்திக் கண்டால் அவைகள் மௌட்டீகமான ஒரு முடிவற்ற நிலையைத்தான் பெரும் என்பதில் ஐயமில்லை.

ஒரு குறித்த வஸ்துவை சூழ்வது அறிவு அந்த அறிவு குறிப்பற்ற வஸ்துவைச் சூழாது. இவ்வாறே சர்வ சம்பூர்ண நிலைமையில் 'ஹக்கு' தன்னை அறிந்தவனா யிருந்தான். ஞானியும் (அறிபவனும்) ஞானமும் (அறிவும்) தானாகவே இருந்தான்.

ஒரு கண்டப் பொருளின் மூன்று (அப் ஆகிதுலாதா) கோணங்களிலும் ஆழம் அல்லது உயரத்தை நீக்கிவிடுவா யானால் (நிழலும், கண்ணாடியில் பிரதிபிம்பமும் போன்று) பரப்பு அல்லது விஸ்தீர்ணம் என்றழைக்கப்படும் நீளமும், அகலமும்தான் மீதப்படும் நீ அகலத்தை விட்டுவிடுவாயகில் (ஓர் துண்டு கடிதத்தின் ஓரத்தைப் போன்று) நீளத்தை மட்டுந்தான் பெறுவாய் நீளத்தையும் புறக்கணித்துவிட்டால் அந்த நீளத்தின் மூலம்தான் மிச்சப்படுகிறது. இந்த மிகக் குறைந்த மதிப்புள்ள கோலம்தான் சகல கண்டப் பொருள் களின் அகமியமான புள்ளி (நுக்தா) அல்லது அணுவா யிருக்கிறது அது 'மஃலூமிஅதம்' எனப்படும் அறியப்பட்ட இன்மையாயிருக்கிறது. நினைவில் மட்டும்தான் அது அறியப் பட்டிருக்கிறது. ஆனால் பரப்பிலோ வெளியில் அது இன்மையா யிருக்கின்றது. இந்தப் புள்ளிக்கு இரு முகங்களுண்டு. ஒன்று தனது பக்கம் நோக்கும் 'மும்தனிஉல் உஜூது' என்னும் இன்மையாகிய உள்ளமை, மற்றொன்று கண்டிப்பான உள்ளமையான மும்கினுல்உஜூது ஆகும். இடம்பாடான உள்ளமையின் பகர்லும், வேற்றுமையென்பதற்கு இடமில்லாத வாஜிபுல்உஜூது எனப்படும் அத்தியாவசியமாகிய உள்ள மையின் பகர்லும்நோக்கிக்கொண்டிருக்கிறது இந்தப் புள்ளி.

அஸ்ராரே அனல்ஹக்

அஸ்மாவெனும் திருநாமங்களில் தங்கள் மூலத்தைப் பெற்றிருக்கும் படைக்கிறவன் படைக்கப்பட்டவன் என்ற உலூஹிய்யத்து என்ற நாயகத் தன்மையையும், ருபூபிய்யத்து என்னும் இரட்சகத் தன்மையையும் விட்டுங்கூட தாத்து சர்வசுதந்திரமுடையதாயும் பரிசுத்தமாயுமிருக்கிறது. ஹக்கு இவைகளை விட்டும் தேவையற்றவனுயிருக்கிருன். ''பஇன்னல்லாஹ லகனிய் யுன் அனில்ஆலமீன்'. அந்த தாத்துக்கு இரு முகங்களுண்டு 'தன்ஸீஹு' என்னும் நிற்குணமும், தஷ்பீஹு என்னும் சற்குணமுமாம். (அருபஅம்சம் அல்லது அகண்டத்தன்மை; சொருப அமசம் அல்லது கண்டத்தன்மை). அஸ்மாயெ-சல்பீ எனும் திருநாமங்கள் மற்ற திருநாமங்களின் ஆதிக்கத்திலில்லை 'கவீ' (சக்தியுடையவன்); 'கனீ' (தேவை யற்றவன்) ஆகியவைகளைப் போன்ரும். 'அஸ்மாயெதுபூத்தி' எனும் திருநாமங்கள் மற்ற திருநாமங்களுக்குக் கீழ்ப்பட்டன வாம். உதாரணமாக 'றஜ்ஜாக்' (போஷகன்), 'காலிக்' (சிருஷ்டிகன்), 'கப்பார் (பிழை பொருக்கிறவன்) என்பன போலவாம்.

இருநிலைகள் அல்லது வஸ்துக்களுக்கிடையில் பிரிக்கும் பிரிவினையே 'பர்ஜக்' ஆகும். அஹதியத்துக்கும், வாஹிதிய்யத்துக்குமிடையில் 'பர்ஜகா'யிருப்பது 'வஹ்தத்து' தான். அத்தியாவசிய உள்ளமைக்கும், இடம்பாடான உளமைக்கும் இடையில் வாஹிதிய்யது பர்ஜகாயிருக்கிறது.

'தஅய்யுன்' என்பது அறிவிலோ அல்லது வெளிப் படையான தோற்றத்திலோ ஒரு வஸ்துவை மதிப்பிட்டு அளவு குறிக்கப்பட்ட கண்டிப்பு அல்லது கண்டமாகும். தனது உள்ளமை மட்டிட முடியாதது என்ற அறிவால் 'ஹக்கு' உள்ளமை மட்டிடப்பட்டான். இன்னும் அந்த மட்டு அல்லது எல்லைக்குள் அடங்கியதெல்லாம் அவனது தோற்றமாகிய வெளியீடுதான். அவனது சர்வ சம்பூர்ண உள்ளமை அறிவில் மறைந்த உள்ளமையேயன்றி வெளித்தோன்றியுள்ள உள்ளமையன்று.

அஹதீயத்து

இந்த கண்டிப்புகளெல்லாம் மறைந்துவிட்டபொழுது அது சர்வசம்பூர்ணமாகவும், மதிப்பிட முடியாததாயுமாயிருக்கிறது.

தாத்து தனது முதற் குறிப்பு சம்பந்தப்பட்டவரையில் நான் என்பதாய் அழைகப்படுகிறது 'பிஷர்த்திலாஷைஇன்' ''ஹக்கு'' கண்டிப்பிலே கண்டிப்பானது. நீ, அதை, நான் எனப்பகர்கின்றாய்.''

அநேக கண்டிப்பான கோலங்களில் அது தோன்றும் பொழுது அதை '' நீ '' என அழைப்படுகிறது. பிஷர்த்திஷைஇன் அது கண்டிப்புகளுக்கும், விளக்கங்களுக்கும் புறம்பாகவிருக்கும்பொழுது அது 'அவன்' அல்லது 'ஹூ' 'லாபிஷர்த்திஷைஇன்' எனவாகிறது

'தாத்'தைப்பற்றி யாதொரு வகையாலும் குறிப்பிடக் கூடாதநிலையில் 'லாபிஷர்த்திலாஷைஇன்' 'லாஹூ' என்ற வார்த்தையைக் கொடுக்கப்படுகிறது ! அங்கு 'ஹூ' என்ற பிரதிச் சொல்லானதுகூட பொருத்தமற்றது ஜாமிதுல் பக்தாதீ (கத்தஸ) அவர்கள் சொல்லுவதுபோல் 'தாத்'தைப் பற்றித்தான அறியாத நிலையில் அது 'மஜ்ஹூலுன் நஅத்'தாக இருக்கிறது. ஆகவே, அவன் குணமின்றியும், குணமுடைத்துமிருக்கிறான் அவன் குணத்தில் குணமின்மையில், குணம்பெற்றும், குணமுடையதில் குணமின்மையாயுமிருக்கிறான் அவன் எங்கு தோன்றியும் தோன்றாது மிருக்கிறான் ஒன்றாயும், பலதாயும் இருக்கிறான் அவன் இவ்வாறு பல வேற்றுமைகளையும், முரண்பாடுகளையும் சேகரித்துக்கொண்டிருக்கிறான்

இவ்வாறாக அவனது திருநாமங்கள் 'அல் காபிலு' (சுருங்கச் செய்கிறவன்). 'அல்பாஸிது' (விரிவடையச் சய்பவன் அல்முயிஸ்ஸு (கௌரவிப்பவன்) 'அல முதில்லு' (அசௌரவப்படுத்துகிறவன்) என்பவையாகும் இந்த முரண்பாடுகளான எதிரிடைகள் அவனுடைய ஏகத்துவத்துடன் போரிடுகிறதில்லை. ஏனெனில் இந்த 'அஸ்மா'வாகிய

திருநாமங்கள் அந்த ஏகமான ஒன்றில் தரிபட்டு ஒன்றாகவே ஆகிறது. இரண்டு என்பது இங்கு ஒன்றாய்த்தானிருக்கிறது. 'அவன் முந்திய முந்தினவனாய்யிருக்கிறான். மற்ற வகையிலன்றி அவ்வகையிலேயே அவன் பிந்திய பிந்தினவனாய் யிருக்கிறான். அவனது முந்தியதுதான் பிந்தியதும், அவனது பிந்தியதுதான் முந்தியதுமாகும். அவனது 'லாஹிர்' ஆகிய வெளியீடுதான் அவனது 'பாத்தின்' ஆகிய உள்ளீடு; அவனது 'பாத்தி'னாகிய உள்ளீடே 'லாஹிர்' ஆகிய வெளியீடாகும். 'தாத்தின்' ஏக தன்மையைப் பொருத்தவரையில் 'சிபாத்து' ஆகிய பண்புகள் ஒன்றினுக்குள் மற்றொன்று மறைந்திருக்கின்றது. ஆனால் 'கதரத்து' ஆகிய அநேகத்தன்மையில் அவைகள் ஒன்றோடொன்று போரிடக்கூடிய அளவுக்கு எதிரிடையாய் இருக்கின்றன. அத்தகை எதிரிடையும். முரண்பாடு மாயையையன்றி உண்மையன்று. இல்லாவிடில் அவர்கள் 'தரத்தை' மிகைத்துவிடும். அவைகள் வேறுந் தோற்றங்களும், வேற்று நினைவுகளும்தான். ஆதலின். இந்த பிரபஞ்சம் தோன்றி மறைந்துவிடக்கூடிய மாய்கையாயிருக்கின்றது தோற்றத்தில் மட்டும்தான் இந்த முரண்பாடு கொல்லாமேயொழிய உள்ளமையிலன்று (இமாமுல் கிராம்) கஸ்ஸாலி (றஹ்) அவர்கள், "நபிமார்கள் தௌஹீதைப் பிரச்சாரஞ்செய்து ஜனங்களை 'ஷிர்க்கு'" (இணைவைத்தல்), 'குப்ரு' (உண்மையை மறைத்தல்) ஆகியவற்றினின்றும் நீக்குவதற்கு 'தௌஹீது'க்கு முரணானவற்றினின்றும் மனிதர்களின் பார்வையை உயத்துவதற்காகவுமே வந்தார்கள்" என்று கூறியிருக்கிறார்கள். ஆகையால் எப்பொழுதும் தாத்தின் ஏக தன்மையில் 'சிபாத்து' ஆகிய பண்புகள் மறைந்திருக்கின்றனவென்று நோட்டமிட்டு 'ஷிர்க்கு ஜலி'யான் பகிரங்க இணையைவிட்டு நீங்கியிரு. இன்னும் அகனுடைய சகல தன்மைகளையும் விடுத்து அந்த ஒன்றைத் தேடியடைவாயாக.

பெயரிடப்பட்ட (நாம ரூபமுடைய) 'தாத்'தைச் சுட்டிக் காட்டும் ஒரு வெறும் வார்த்தையல்ல 'இஸ்மு' என்பது. ஆனால் அது ஒரு குணம் அல்லது பண்பைக்கொண்ட

அஹதியத்து

'தாத்து'டையகுணம் (இஸ்மு) ஆகிய 'உள்ளமை'யாயிருக்கும். பண்பையுடைய 'அலீம்' (அறிபவன்) என்பதைப் போன்றும், இன்மையாயிருக்கும் பண்பையுடைய 'குத்தூஸ்' (பரிசுத்தமானவன்) என்பதுபோலும் 'ரஸ்மு' எனுங்கோலம் 'கதாத்'தைப் பொருத்தவரையில் வெளியீடான வஸ்துக்களின் விபரமாகும்.

உள்ளமையைப் போன்று சதோதயமாய் எங்கும் நிறைந்த தன்மையைப் பெற்ற 'தாத்து'டைய குணியே 'நஅத்து' என்பதாகும். 'ஹக்கு'டைய 'ஹகீகத்து' உண்மையில் அவனது 'தாத்'தாகவேயுள்ள அவனுடைய 'உஜூது' தாகிய உள்ளமைதான். சர்வசம்பூரண உள்ளமைக்கு யாதொரு கோலமுமில்லை. வடிவமுமில்லை. கண்டிப்புமில்லை இஃதிவ்வாறிருக்க, அவன் பால் கோலங்களில் தாத்தில் யாதொரு மாறுதலான கூடுதல், குறைதலுமின்றி தன்னை தோற்றுவித்தான் அதுவோ ஒருவன் தன்னை சுற்றிலும் பல்வேறுன அளவுகளும், வகைகளும், நிறங்களுமுடைய கண்ணாடிகளால் சூழப்பட்டு அந்த கண்ணாடிகளில் தோன்றும் காலை அந்தந்த கண்ணாடிகளும் தேவைகளுக்கு தக்கவாறு தன்னில் யாதொறு மாறுதலுமின்றி தோன்றுகிறுனே அது போன்றேயாம். ''அல் ஆனகமாகான''. அவன் முன்னிருந்தவாறுதான் இப்பொழுதுமிருக்கிருன்

மறைந்திருக்கும் ஒருவனைக் குறிக்கவே ''ஹூ'' அவன் எனும் வார்த்தை பார்க்ககூடிய சகல தத்துவங்களுக்கும் அவனுடை 'தாத்'தைப் பொருத்தவரையில் 'ஹக்கு' உள்ளீடாகிய மறைவாயிருக்கிருன் இங்குதான் அவனை மஜ்ஹூலுன் நஅத்' என்றும் 'வர்ணிக்கபட முடியாதவன்' என்றழைக்கப்படுகின்றது

கண்டிப்பில் 'ஹக்கு' வெளியீடாயிருப்பது ''தஷ்பீஹு'' ஆகும். 'தன்ஸீஹு' என்பது அம்மாதிரி வெளியீட்டில் அகண்டமாயிருத்தலாகும். அவன் 'தன்ஸீஹு'ன அகண்டத்

தின் புறத்தாலும், 'தஷ்பீஹா'ன கண்டத்தின் புறத்தாலும் பேசப்படுகிருன். லைஸகமித்திலிஹிஷைஉன், வஹுவஸ்ஸமீ உல்பஸீர்'' அவன் யாதொரு வஸ்துவினுடைய மாதிரியாகவு மில்லை அவனே கேட்கிறவனுகவும், பார்க்கிறவனுகவு மிருக்கிருன்'' என்ற இந்த அறிவுப்பு ஒரு விளக்கமாய் யிருக்கின்றது

2-வது அத்தியாயம்

வாஜிபுல்உஜூது (அத்தியாவசிய உள்ளமை)

'ஹக்கு'டைய தோற்றப்படா பார்வை 'ஜலால்' என்னும் மகத்துவமும், தோற்லான பார்வை 'ஜமால்' என்னும் பேரழகுமாம் இந்த இரு நோக்குகளான, 'ஜலால்; 'ஜமால்' ஆகியவற்றிடயேதான் 'சாலிக்' ஆகிய (மார்க்க) யாத்திரீகனுடைய ஆன்மபூர்ணத்துவத்தின் நிலைமை யிருக்கிறது.

'கைர்' என்ற வேற்றுமைக்கு ஒரு உள்ளமை யின்மையால் அது 'இல்லாத' ஒன்றுக்கு தவறியழைக்கப் பட்ட பெயரும், இதனுல்தான் 'ஷுத்தாரியர்க்கள் ஒரே 'அனு நியத்து' ('நான் எந்தன்மை) தான் உண்டு என்று உறுதி பூண்டிருக்கிருர்கள் தௌஹீது' என்னும் அத்வைதம் ஒன்ருக விளங்குதல் ஒன்ருக கூறுதல், ஒன்ருகப் பார்த்தால், ஒன்ருக இருத்தலாம், 'நான் ஒருவன் மட்டுமே, என்னுடன் யாதொரு இணையுமில்லை ''வஹ்தீலாஷரீக்கலீ'' அடிமைத் தனம் (சிருஷ்டிப் பொருள் என்ற ஒரே நினைவே தவிர யாதொரு திரையுமில்லை. வானங்களும், மேகங்களும் இந்த திரைகளைப் போடவில்லை. அவ்வாருன இந்த திரையிட்ட தெல்லாம் உங்கள் தாய் தந்தையரும் உங்கள் நாடும், வேதஸ்மிருதிகளுமேயாம்.

அஹதியத்து

உங்களை சிலவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:— 1. சடம், 2. மனம், 3. ஆத்மா, 4. 'சிர்ரு', 5. மர்மம், 6 ஒளி ஹகீகத்து (அகண்ட பரிபூர்ண அகமியம்) இந்த வேறுபாடுளெல்லாம் 'தாஜா' வென்னும் படிகளைப் பொருத்தேயன்றி ஹக்கீகத்தைப் பொருத்தவரை ஒன்றே ஒன்றுதான். உன் ஹக்கீகத்தாகிறது 'ஹக்கு' அல்லா(ஹ்) தாத்து 'முத்லக்கு' 'உஜூது முத்லக்' என்ற பலவாறுன பெயர்களால் அழைக்கப்பட்டு பல தோற்றங் களிலானதும் பல்வேறுபடிகளான 'தாஜா'க்களைப் பெறுகின்றன. ஆனல் உனது சொந்த 'ஹகீகத்து'தான் அது. பண்புகள் புலப்படாதிருக்கும் நிலமைதான் 'நூர்' என்னும் சோதி, 'ஸிர்ரு' என்பது அந்த பண்புகள் பிரிவு பிரிவாயிருக்கின்ற நிலை 'ரூஹு' என்பது 'ஆலமுல் அர்வாஹு' என்னும் ஆன்மலோகத்தின் நிலைமை நான்காவது, 'கல்பு' என்னும் மனதின் நிலை ஐந்தாவது சூட்சும லோக மான 'ஆலம்-மிதாலி'ன் நிலை. ஆருவது, ஆலம் அஜ்ஸாம் என்ற சடலோகத்தின் நிலைமை, சடமும், மனமும் பார்க்கப் படுவன, 'ரூஹும், 'சிர்று'ம் 'நூரும்' பார்க்கப்பப்படமுடியா' தவை. 'ஹக்'கைத் தெரிசிக்க ஒருவன் இந்தபடிகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்ரு கடந்து செல்லவேண்டும்.

எவ்வாறு (மனத்தில் படியும் பல எண்ணங்களாலான) தூசிகளாகிய 'கத்ரா'வானது இறங்கி வருகின்றதென்பதைக் கூர்ந்து கவனிப்பாயாக. முதலில், அது 'நூரி'லும் 'கல்பி'லும். முடிவாக. 'காலிப்' என்னும் சட்டத்திலும் படிப்படியாக இறங்கிக்கொண்டிருக்கின்றது. இந்த 'கத்ரா'தான் 'ஹக்கு'டைய "கலாம்" என்னுக் பேச்சின் ஒரு சிபத்தாக விருக்கிறது. அது நாட்டத்தின் படிகளின் வாயிலாய் வருகின்றது அனல் உனது 'ஹகீகத்து' (அகமியம்) இந்த படிகளின்னும் ஏதொன்றுமல்ல. ஆனல் தாத்தேமாஹாத்து (அகண்ட பரிபூரண 'தாத்து', ஆகும். உன்னா உள்ளபடியான நற்செயற்கை பகட்டான நற்செய்கையில் மறைவதினை யாதொரு ஹானியுமில்லை. கலப்பு தங்கம் நெருப்பிலே

போடப்பட்டதும் கலவையானது பாசிகளெல்லாம் எறிக்கப்பட்டு சுத்த தங்கம் வெளிப்படுகிறது. அந்த தங்கம்தான் உண்மை யான, நன்மை தோற்றமான நன்மை ஆகியவற்றின் கலப்பு வஸ்துவாகும். சுத்தமான தங்கம் நாசப்படுத்தப்பட்டால் நஷ்டமுண்டாகிறது. நரகமாகிறது தங்கத்தில் கலந்த கலப்பு வஸ்தை எரித்து நாசமாகப்படும் இடமாகும்.

ஹகீகத்து முஹம்மதீதான் எல்லா வெளிப்பாடு களுக்கும், தோற்றங்கட்கும் ஊற்றுக் கண்ணாகும். ''அனமின் நூரில்லாஹி வகுல்லிஷையின் மின் நூரி'' நான் அல்லா(ஹ்)வின் ஒளியினின்றுமுள்ளவன், வஸ்துக்கள்யாவும் எனதுஒளியினின்று முள்ளவையாகும்'' எதுதானேதானக வெளியீடாயிருக்கிறதும், மற்றவைகளை தன்னிலிருந்து வெளிப்பட செய்வதுமா யிருக்கிறதோ அதுவே 'நூர்' என்னும் ஜோதியாகும். ''இன்னல்லாஹ கலக்கல்கல்கபில் லு 'ஹமாத்தின்'' அல்லாஹுத்து ஆலா 'கல்கு' என்னும் சிருஷ்டிப் பொருளை இருளிலே படைத்தான் அவனே பூமி, ஆகாயம் ஆகிவற்றின் 'நூர்' ஆக இருக்கும்பொழுது எதையும் அல்லா(ஹ்)வினிட மிருந்து மறைக்க முடியாது அகண்டார்த்தமான அந்த பரிபூரண ஜோதியானது கண்டிப்பான தோற்றங்களிலே ஒன்றுக்கொன்று முரண்பாடான தன்மையிலே வெளியீடாக இருக்கிறது ''அனா அஹ்மதுன் பிலா மீமுன்'' நான் மீமில்லாத 'அஹ்மதுவாயிருக்கிறேன் என்பது இறசூல் (சல்) வாக்கியம். அதற்கிணங்க, அஹ்மது என்பதிலுள்ள 'மீம்'தான் முறண்பாடானவற்றின் மூலமாகும். அதாவது முரண்பாடான பிரபஞ்சத்தின் வெளியீடுகளான தோற்றங்கள் விளங்கக் கூறு மிடத்து, 'அஹதிய்யத்து' என்னும் களங்கமற்ற கடலிலிருந்து 'வஹ்தத்து' என்னும் ஓர் பாரிய குமிழி உண்டாக, அதனி னின்றும் எண்ணற்ற குமிழிகள் 'வாஹிதியத்து' வாகத் தோன்றிய பல்வேறு முரண்பாடு பண்புகளின் மூலங்களாக ஆயின

அஹதியத்து

'நூர் முஹம்மதீ'யானது ஒரு மயிலின் வடிவில் தோன்றி 'நிர்ணயம்' எனும் மரத்தின் மீது உட்கார்ந்து 'ஹத்த ஆலா' மீது புகழ்ப்பாடி. நன்றியதலாய் ஐந்து விடுத்தம் சாஷ்டாங்கம் செய்தது. இதனால்தான் ஐங்கால தொழுகை கடமையாயிற்று.

(குறிப்பு:— தன் சிறகினுள் மறைக்கப்பட்டதாய் சகல அழகிய கோலங்களையும் மயிலானது பெற்றிருக்கிறது; சிறகுகள் விரிக்கப்படும்பொழுது அழகிய அந்த தோற்றங்கள் வெளி தோன்றுகின்றன அது போன்று 'வஹ்த்தா'னது விரியுங்காலை இந்த பிரபஞ்சம் தோன்றுகின்றது.)

முஹம்மது (சல்) அவர்கள் பூத கடலிலிருந்தாலும் அவர்களின் ஹக்கீகத்துவான அகமியம் சகல படைப்புகளின் அகமியமான 'ஹக்கீகத்'தாயிருக்கிறது. ''அனமின் நூரில்லாஹி கலகுல்லு ஹும்மின் நூரீ'' நான் ஹத்துடைய நூரில் நின்றுமுள்ளவன். சகல படைப்பினங்களும் எனது நூரி லிருந்து உண்டானவை'' என்று ஓர்ஹதீது கூறுகின்றது. அவர்களின் சந்ததிகள் நான்கு வகைப்படுவார்கள் முதலாவது:— அகில லோகங்களும், இரண்டாவது:— சகல ஒளலியாக்களும், மூன்றாவது:— மலக்குகளான அமரர்கள் யாவரும், நான்காவது:— அன்னாரின் பூத ஜடலத்தின் வாயிலாய்ப் பிறந்த சந்ததிகளுமாம். பிந்தின மூன்று வகை களும் முந்தின வகையான பிரிவுகளாம்.

'புக்கஹா'க்களான சட்ட நிரூபணர்கள் 'ஒளலியா'க் களை ஒப்புக்கொள்வதில்லை. அவர்கள் உள்ளமை இரண்டு என நிர்ணயித்திருக்கிறார்கள் ஒன்று மூலமென்றும், மற்றொன்று தற்காலிகம்' என்றும்; அந்த தற்காலிகம் 'அதம்' என்னும் 'இல்லாமையினின்றும் உண்டானது என்றும் சொல்கிறார்கள். உள்ளமைப் பெறமுடியாத தன்னுடைய (வேற்றுமை)யைப் படைக்க அல்லாஹுத்த ஆலாவுக்கு சக்தியில்லை என்று

அவர்கள் சொன்னாலும் இன்மையாகிய அதமில்நின்றும் தற்காலிக உள்ளமையைப் படைத்தான் என்றும் மட்டும் வாதிக்கிறார்கள்.

வஸ்துக்கள் உள்ளமையைப்பெறுதல் இன்மையினின்றுமல்ல ஆனால் 'அஃயான் தாத்தாயே இல்மிய்யா' (இல்மில் தரிபாடான கோலங்கள்) விலிருந்துதான். அந்த 'அஃயான் தாபித்தா' வெளிப்படையில் 'அதமி-இளாபி' என்ற சம்பந்தப் பட்ட இல்லாமையாகும். வெளியீடாகச்செய்பவன் 'அஃயான்' ஆகிய கோலத்தின் மீது தன் 'உஜூது இளாபி' யாகிய சம்பந்தப்பட்டஉள்ளமையை அளிக்குங்காலேகோலங்கள் தோன்றுகின்றன ஆனால் வெளியரங்கத்தில் அவை இன்மையாயும். அறிவில் தரிபடானதாயுமிருக்கின்றன. ஆதலின் வஸ்துக்கள் இன்மையில் நின்றும் வெளிவராது: 'ஹக்க்'டைய உள்ளமையிலிருந்துதான் தோன்றின். 'ஹக்க்'டைய அறிவில் அவைகள் அவனுடைய உள்ளமையுடனிருந்தன அவைகள் வெளிப்படையில் அவனுடைய உளமையுடனேயே தோன்றியிருக்கின்றன ஆனால் தங்களின் சுயமான வெளியரங்கத்தைப்பற்றி அவைகளின் அறிவைப் பொருத்த வகையில் அவைகள், 'வெளிப்படையில் உள்ளமையென்னும் வாடையைக்கூட முகர்ந்ததில்லை மாஷம்மத்ரா இஹத்துல் உஜூதுல்காரிஜீ.

ஆதலின் 'குன்' உண்டாகு என்னும் கட்டளை 'அதம்' ஆகிய இன்மையின் பாலன்று. அஃயான் தாபித்தா'வை நோக்கியே. அந்த அஃயான் தாபித்தா' ஹக்குடைய சுயமான போக்கியதை அல்லது சுதிகளாகும். அவைகள் புகுதீனமானவை அவற்றின் வெளிப்படையில் அந்த குற்றம் மட்டும் நிலைபற்ற மாறுந் தன்மையுடையது இன்மையாகிய 'அதம்' என்னும் இல்லாமையின் அகமியம் உள்ளமையாக மாற

முடியாது. மேலும் உள்ளமையாகிய உஜூதின் அகமியம் இன்மையாக மாறல் அசாத்தியம். பரோட்ச ஞானிகளுக்கும், அப்ரோட்ச ஞானிகளுக்குமுள்ள வித்தியாசம் சட்ட ரீதிகளான கொள்கைகளையும், அவற்றின் பிரிவுகளிலுள்ள விஷயங்களையும் பொருத்ததன்று, ஆனுல், பின்வரும் கொள்கைளில்தான்:— (a) 'உலமா' என்னும் பரோட்ச ஞானி வஸ்துக்களினது உள்ளமை 'ஹக்கு'டைய உள்ளமையிலும் வேறுபாடானது என்கிருர் 'உரபா'வென்னும் அபரோட்ச ஞானியோ ஒரு உள்ளமையேதான் மற்றென்றினதும், அதாவது, ஒன்றின் 'ஐன்' ஆகிய கோலம்தான் எனக் கூறுகிருர்கள். (b) பரிபூர்ணமான இன்மையிலிருந்துதான் சிருஷ்டி உண்டானதும், 'குன்' என்ற கட்டளைச் சொல்லான' உண்டாகு' என்பது அந்த இன்மையை நோக்கியேயென்றும் பரோட்ச ஞானி கூறுகிருர். ஆனுல் அபரோட்ச ஞானியோ கட்டளையிடப்பட்டவர்கள் கட்டளையைப் பெற ஆஜராகி இருக்கவேண்டும் அவ்வாறு இருந்தவர்கள்தான் அறிவில் பொருந்திருந்த உயரிய தத்துவங்களின் கோலங்கள், அவைகள் 'ஹக்கு'டைய சுயமான உள்ளீடான மேலாம்பரமான யோக்கியதை அல்லது தகுதிகளாகும். (c) கடைசியாக ஹூ ஹூவிலும் 'க அன்ன ஹூ ஹூவிலும் ஷெய்கு ஷிஹாபு. தீன்சுஹ்ரவத்தியைப் போன்ற சூபியாக்கள் 'பனு' வான உணர்விறந்த நிலையில் கண்டிப்பிலுள்ள 'பந்தா' வாகிய அடிமை ('க அன்ன ஹூ ஹூ) அவனைப்போல் ஆய்விடுகிருன். அவன் அவனுக (ஹூ ஹூ)வாக ஆகிறதில்லை என்று நிர்ணயங்கொண்டிருக்கிருர்கள் எவ்வாறெனில், நெருப்பில் இரும்பிருந்தால் நெருப்பைப்போன்று அது ஆகிறதென்பது, நெருப்பாக ஆகிறதில்லை என்பதுபோல் இரும்பின் அகமியம் நெருப்பின் அகமியத்திலும் மிகுந்த வேறுபாடுடையராம்.

நபஹாத்துல் உன்ஸு'எனும் கிரந்தத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல் 300' ஒளலியாக்கள் இந்த கொள்கையைப் பற்றுகிறவர்களாயும், மீதி 300 பேர் 'அடிமை' யாகிய

'யந்தர்' - அவனே அவனாக ஆகிறான் எனும் கொள்கைக்கு ஆஸ்பதமான ஷெய்குல்அக்பர் முஹியித்தீனிப்னு அரபீ (றலி) அவர்களைப் பின் தொடர்பவர்களாயுமிருக்கிறார்கள் ஷெய்குல் அக்பர் அவர்கள் 'உள்ளமை ஒன்றேயொழிய இரண்டல்ல; தண்ணீரானது தன்னிலே பனிக்கட்டியின் ரூபத்தில் கண்டிப்பினிமித்தம் தோன்றுவதுபோல் ஒரே 'உஜூது'தான் தனாலேயே தன்க்குத் தோன்றுகின்றது. 'பனா' நிலையிலிருக்கையில் கண்டிப்பாகிய கற்பனையும் மறைந்து அகண்ட பரிபூரணம் மட்டும் தரிபட்டு 'ஹூ ஹூ) வென 'அவனே அவனாகி' ஆய்விடுகிறான் இந்த ஞானபாட்டை யுடையவர்கள் 'அஹத்தியத்து'டைய 'மர்த்தபா'வரையும்படி கடந்து செல்கின்றனர். மற்ற வகையிலான 'முகஸப்பவீன்கள் 'வாஹிதியத்து'டைய மர்த்தபாவரைக்கும்தான் (போலிஞானிகள் செல்ல முடிகின்றது.

இந்த இரண்டாவது ஞானபாட்டையையுடையவர்கள் வேறான இரு உள்ளமைகளையும், இரு தனியான வஸ்துக்களை யும் காண்கின்றனர். இரும்பும், நெருப்பும் சம்பந்தப்படும் வேளை இரும்பு தற்காலிகமாக நெருப்புபோலாகி பிறகு நெருப்பு நெருப்பாகவும் இரும்பு இரும்பாகவும் மீண்டு விடுகின்றன ஆனால் அலைகள் அடங்கியதும் சமுத்திரம் மட்டும் மீதியாயிருக்கிறது.

"கானல் லாஹூ வலாஷை உன்மஅஹூ" அல்லாஹுத்த ஆலாமாத்திரமிருந்தான் அவனோடு யாதொன்று மில்லை.

'வல்லாஹூ அல் அன கமா கான' முன்பிருந்தது போன்றே ஹக்கு இப்பொழுதுமிருக்கிறான்.

நீர் குமிழியானது வெடிக்குங்காலை தண்ணீர் மட்டும் முன்பிருந்தபொழுதும், குமிழி தோன்றியிருந்தபொழுதும் மீத மாயிருக்கிறது. அந்த குமிழி 'ஹக்கீகத்'தில் தண்ணீராகவே தானிருக்கிறது

அஹதியத்து

நமரூபமானது தனி உள்ளமையற்ற ஒரு வெறுந் தோற்றமேயாகும்; அது ஒரு மாய்கை அல்லது கற்பனே. தண்ணீர் முன்னர் எப்படியிருந்ததோ அவ்விதமேதான் இப்பொழுதுமிருக்கிறது ' அல் ஆன கமா கான ' கைர் ஆகிய வேற்றுமையான பிறப்பொருள் என்பது வெறுங் கற்பிதா நாமரூபமான உண்மையில் இன்மையான ஒரு தோற்றப் பொருளேயன்றி வேறில்லை.

ஆகவே எல்லா 'அஸ்மா'வும் ஒரே ஹகீகத்தான அகமியத்தின் தோற்றமாகும். சில வேளை அந்த அகமியம் சமுத்திரமாயும், சில நேரம் குமிழியாவும், சிற்சிலவேளை பனிக் கட்டியாயும், மூடு பனியாயும்; சில வேளை 'றப்பு' ஆகவும், சில வேளை அடிமையாகவும்; சில சமயத்தில் அகண்டமான அரூபியாகவும் இன்னும் சில காலை கண்டமான ரூபியாகவுமிருக்கிறது. நாமரூபங்கள் பல. ஒன்றிற்குதான் பல நாமங்களுமிடப்பட்டிருக்கின்றன.

தத்துவ சாஸ்திரிகளும், தர்க்க வாதிகளும், (சித்து சுத்தி பெற்ற) 'சூபியாக்களும் தோற்றுப் பொருளின் ரூபங்களின்றி ஹக்குடைய செயல்களின் குணபாடுகளுக்கு தோற்றங்கள் ஏதுமில்லை என்று கருத்தோர்மித்து நிர்ணயங் கொண்டிருக்கின்றனர் இந்த விளக்கம் நாயகத் தன்மைக்கு ஒரு குறைபாடு ஏற்பட்டுவிடுகிறதுபோல் சுட்டிக் காட்டுகிறது. ஆகையால் புறம்பேயும் அந்த ரூபங்கள் அவனையும், அவனுடைய 'ஹக்கீகத்'தாயுமிருக்கின்றன ஆகையால் தோற்றமாகிறதற்கு அவன்தானல்லாத பிரிதோன்றின் ஆதிக்கத்தில் இல்லை

யாரேனும் உன்னை மனம் என்னும் ''நப்ஸு''டைய வழியில் நடத்தினல் நீ அவனை ஆத்மாவென்னும் 'ரூஹு'டைய வழியில் நடத்துவாயாக - அதாவது — தீமைக்கு நன்மையை அளிப்பாயாக இதுவே ரூஹினது வழியாம் மற்றென்றில் கெடுதலைப் பார்ப்பது கைர் ஆகிய வேற்றுமையைப்பார்ப்பதாகும்

ஹதீதுகுத்ஸியில் "காலத்தை திட்டாதே. காலமானது அல்லா(ஹ்)வாகயிருக்கும்" லாதஸூப் புத்தஹ்ப இன்னத்தஹ் ரு ஹீனல்லாஹ்.

முதலில் அறியப்படுவது தத்சொரூபமாகிய 'தாத்து' தான் இரண்டாவதாக உணரப்படுவது 'சிபாத்து' எனும் பண்புகள். முதன் முதலில் ஜெய்தீன் இருப்பையே நீ அறிந்து பிறகுதான் அவனது அறிவு. புத்தி முதலானவற்றை அறிகிறாய்

எல்லா வஸ்துக்களும் அல்லாஹ்வினுடைய உள்ளமையையே ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன. அவைகளாக அவைகள் இன்மையானவையாகும். எழுத்துக்கள் இன்மையானது; அவை சாயத்தின் உள்ளமையால்தான் இருப்பைப் பெற்றிருக்கின்றன. எழுத்துக்கள் தானுகவே உள்ளமையானவையன்று; சாயத்துடன் சேர்க்கப்பட்டே இரு உள்ளமைகள் ஸ்தாபிதமாகின்றன.

அகண்ட பரிபூர்ணத்தின் கண்ணாடி இன்மையென்பதாகும். அதிலிருந்துதான் பிரதிபிம்பமும் அல்லா(ஹ்)வின் 'நூர்' ஆகிய ஜோதியும் தோன்றியிருக்கின்றன.

'மும் தனில் உஜூது' (இன்மையான உண்மை)தான் அந்த கண்ணாடியாகும்.

'மும் கினுல் உஜூது' (இடம்பாடான உண்மை) பிரதிபிம்பமாகும்.

வாஜிபுல் உஜூத்து (அத்தியாவசிய உண்மை)தான் உள்ளா உள்ளபடியான வஸ்துவாகும்.

'இன்மையான' உள்ளமையில் 'அத்தியாவசியமான' உள்ளமை பிரதிபலிக்கின்றது 'இன்மை' இல்லாதிருக்கும் பட்சத்தில் எவ்வாறு 'அத்தியாவசியம்' பிரதிபலிக்கப்படும்? என்ற கேள்வி எழுகின்றது ஒரு மனிதன் கதவை தட்டும்போது யார்? என்று கேட்கப்பட்டால், அவன் 'என்னையன்றி

யாருமில்லை என்கிறார் அவன் 'தன் உள்ளமை'யை இன்மைப் படுத்துவதில்லை. 'பிறருடைய உள்ளமை'யைத்தான் இல்லை என்று ஆக்குகின்றான்; இதனால், தன் சுயமான உள்ளமையை வலுவாக உறுதிப்படுத்துகிறான். இதனாலேயே, 'லாஇலாஹ இல்லல்லாஹு' - அல்லா(ஹ்)வையன்றி நாயன் யாருமில்லை - என்றுமிருக்கிறது. ஆனால் 'வேறு' என்பதற்கு ஒரு உள்ளமை இல்லாதிருக்குமாயின் அது எவ்வாறு 'ஹக்கு'டைய உள்ளமையின் கண்ணாடியாக இருக்க முடியும்? 'என்ற கேள்வி எழுகிறது 'தாத்து' என்னும் தத்சொரூபஸ்தானத்தில் 'அதம்' ஆகிய இன்மை காலியாக இருந்ததும் 'அவ்வியக்த' புதையல் தோன்றலானது.

தர்க்க சாஸ்திரிகள் இந்த பிரபஞ்சத்தின் உள்ளமையாகிய பொது அல்லது ஒன்றிலிருந்து பெறப்பட்ட உள்ளமை 'தாத்து'க்கு ஒரு இணைப்பு என வாதிக்கின்றனர் 'சுயாதீன' உள்ளமை அல்லா(ஹ்)வுடையது அதன் 'த அய்யுனாத்' ஆகிய கண்டிப்புகள் அதுதானேயாம்.

அவர்கள் 'தாத்து' என்னும் 'தத்சொரூபத்துக்கு ஒரு உள்ளமை உண்டென்றும், நினைவில் அது பிரிக்கக்கூடியதாயிருந்தாலும் 'தாத்'தைவிட்டும் அதைப் பிரிக்கமுடியாதென்றும் கருதுகிறார்கள். சுயாதீன உள்ளமை'க்கும் பெறப்பட்ட பொது உள்ளமை'யைவிட்டு நீங்கியதும் அது 'அதம்'என்னும் இன்மையாக அது மாறுகிறதில்லை முன்னிருந்த உண்மைதான் இப்பொழுதுமிருக்கிறது)

தத்சொரூப 'தாத்து' தன்னையறிந்திருந்தது தன்னை அறியும் வகையிலே அது 'வாஜிபு' 'பாயில்' 'தன்ஸீஹ்' 'காலிக்கு' 'காதிர்' என பலவாறாக ஆயிற்று அறியப்படும் வகையில் அது மஃலூம் 'அறியப்பட்டது'வாகவும், 'மப்ஊல்' செய்யப்பட்டதுவாகவும் 'தஷ்பீஹு' ஆகவும் 'மக்லூக்' 'படைக்கப்பட்டது' வாகவும், 'சக்தியற்றவன்' ஆகவும் பல பாகங்களாக ஆனது. இந்த இரண்டும் சேர்ந்துதான்

'ஹகீகத்து' இன்ஸானி, (மானிடவர்க்கத்தின் அகமியம்)யாகிய நபிமார்களின் 'மிஃராஜ்' ஆன மேல்நோக்கிச் செல்வதான ஏற்றம் முதல் நோக்குதான் அஸ்மாய உஜூபிய்யாவான அஸ்மாய இலாஹியை (நாயக திருநாமத்தை)யும். இரண்டாம் நோக்குதான் அஸ்மாயெகியானி அல்லது கௌனி (அடிமை திருநாமம்)யையும். சேகரித்தன. முந்தியது 'தோற்றலான உள்ளமை.' பிந்தியது 'தோற்றலான ஞானம்' அல்லது அறிவு. முந்திய வகையான திருநாமங்கள் செயல்கர்தா' அரூபி. தோற்றச் செய்பவன். ஆக்கமுடையவன். ஆகியவையும். இரண்டாம் வகுப்பு திருநாமங்கள் செய்யப்படுபொருள். சொரூபி. தோன்றப்பட்டது ஆக்கமற்றவன் என்பதாகும். அகண்ட பரிபூர்ணமான 'நான்' எனுந்தன்மை இவ்விரு வகைகளின் இணைப்பிலே ஏற்படும் தீர்மானமாகும் இந்த இணைப்பின் வெளிப்பாடே அகில பிரபஞ்சமும் அறியாமையான ஆக்கமுடைய பண்புகளைப் பொருத்தவரை 'நான்' எனுந் தன்மை 'அனு'வானது. அரூபியான 'றப்' (இரட்சகன்) ஆகவும். காரணமாகவும், காதலனாகவும், சக்தியுடையவனாகவும். தரிபாடானவனாகவும். இடம்பாடான ஆக்கமில்லா பண்புகளைப் பொருத்தவரை 'அப்து' (இரட்சிக்கப்பட்டவன் அடிமை) ஆகவும். கருவியாகவும் செய்யப்படு பொருளாகவும். காதலியாகவும் சக்தியற்றவனாகவும். மறைகிறவனாகவும் ஆகி தான் அடிமையான 'அப்து' இரட்சகனை 'றப்பு'டைய பொருத்தத்தை தேடுதல் கடமையானது.

அரபி மொழியில் மனிதனை காதலனென்றும். மனுஷியை காதலியென்றும். இந்தியா பாஷையில் முன் பின்னாகவும். மாற்றமாகவும் அழைக்கப்படுகின்றன 'பார்ஸி'யில் இருவரையும் காதலர்களென்று மட்டுமே அழைக்கப்படுகிறது முதற் குறிப்பிள்ள காதல் 'வாஜிபு' என்னும் அத்தியாவசியத்தி லிருந்தாயிருக்கும் ஆகலின் 'வாஜிபு' ஆகிய அத்தியாவசிய உள்ளமை காதலனாகவும்மும்கினை இடப்பாடான உள்ளமை காதலியாகவுமிருக்கின்றன இரண்டாம் குறிப்பிலே 'மும்கின்' தோன்றியதும், அது காதலனாகவும், 'வாஜிபு' காதலியாகவும்

வாஜிபுல் உஜூது (அத்தியாவசிய உள்ளமை)

ஆயின 'தாத்து' என்னும் தத்சொருப ஸ்தானத்தின் 'தஜல்லி யாகிய பிரதிபிம்பத்தில் வாஜிபும், முன்கினும் மறைந்ததும் காதலனும், காதலியும் மறைந்துவிட்டனர் இதுதான் நிறபேத மற்ற தத்சொருபான 'தாத்தே சாதிஜ்' ஆகும்.

''வஹூவ மஅகும் ஐனமாகுந்தும்'' நீங்கள் எங்கிருப் பினும் அவன் உங்களோடிருக்கிறான். ஆனால் 'ஹக்கு' சகல வற்றினுடைய அகமியமாகயிருக்கிறான். ஹக்கு சகலவற்றி னோடும் இருக்கையில் அவன் சகலவற்றையும் விட்டு நீங்கியு மிருக்கிறான் ஏனெனில் வாஜிபுல் உஜூதான அத்தியாவசிய உள்ளமையுடன் இடம்படான உள்ளமையை இணைத்தல் என்ற தோஷம் நிகழ்ந்துவிடும். அதனால் 'ஹூலூல்' என்ற ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவினுள் நுழைதல் என்பதை ஒப்புக் கொள்ள நேரிடும். ஒன்று மற்றொன்றோடு அடுத்தடுத்து இருக்க வேண்டியதால் ஒரு பரப்பு அல்லது விஸ்தீர்னத்தின் எல்லையைத் தேடும். அதனாலேயே நீ உன் பார்வையிலிருந்து கொண்டிருக்கிற வரையில் அவன் மறைந்திருக்கிறான். நீ இன்மையாய்விட்டபொழுதோ அவன் இருக்கிறான். இல்லா விடில், இரு உள்ளமைகள் ஒன்றை ஒன்று நீக்கியிருக்கச் செய்யும் வகையில் இரண்டும் இடத்தைத் தேடும். அப்போது 'தௌஹீது' என்னும் ஏகத்துவத்திற்கு முரண்டும் அதலின், 'பனா' வாகிறது 'மாஹியத்து' என்னும் 'கைரு' என்னும் ஆகிய வேற்றுமையை ஒழிப்பதாகும்.

விக்கிரகங்களும், மரங்களும், 'சாமரி' யுடைய தங்கப் பசுவும் போன்றமாய்கையான 'இலாஹூ' களை அகற்றுவது எதனாலெனில் குறிப்பான வஸ்துகளில் உள்ளமையைக் கட்டுப் படுத்தலென்பது உண்டாகிறது அதற்காகவேயாம். 'ஹக்கு' அரூப அம்சத்தையும், ரூப அம்சத்தையும் பெற்றிருக்கிறான் இந்த நிலைகள் எதனிலும் அவனை கட்டுப்படுத்தாதிருக்க வேண்டும் இந்த நிலைகள் இரண்டையும் அவன் கடந்தவனா யிருக்கிறான் ''வரா.ல்வரா.'' ஒருவன் தேடிக்கொண்டிருக்கும் வஸ்துவிலேயே 'ஹக்கு' வெளியீடாயிருக்கிறான். மூஸா (அலை) அவர்கள் அவனை எரியும் புதரில் தெரிசித்தார்கள்

அஸ்ராரே அனல்ஹக்

அஹ்லே-தஷ்பீஹா என்னும் கண்டார்த்த (ஜட) வாதிகள் அவனை தஷ்பீஹாகிய சொரூபத்திலேயே கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். 'அஹலே'-தன்ஸீஹ்' என்னும் அகண்டார்த்த வாதிகள் 'தன்னீஹ்' ஆகிய அகண்டத்தில்தான் மட்டுப்படுத்தியிருக்கிறார்கள். தன்ஸி'ஹில் அரூபியாயும், 'தஷ்பீஹில்' சொரூபியாயும் 'ஹக்கு' தான் அகமியமாயிருக்கிறான். தரிபாட்டில் தரிபாடகவும், தற்காலிகத்தில் தற்காலிகமாகவுமிருக்கிறான் அவனுடைய தோற்றம் (முதற்குறிப்பு முதல் ருபூபியத்துவரையுள்ள) தரிபாடும், (அக்லேட குல்லியிலிருந்து மண்மண்டலம்வரையுள்ள) தற்காலிகமுமாகிய இரு நிலைமைகளாலும் பூர்த்தியடைகிறது அவனுடைய அறிவாகிய ஞானம் இருநிலைகளிலும் அறியப்படுதலைக்கொண்டு சம்பூர்ணமாகின்றது அவன் எவ்வாறு தன்னை தற்காலிகமாய்க் கண்டானோ அவ்வாறுதான் தன்னை சாசுவதமாகக் கண்டான் அவனுடைய 'தஜல்லி'யாகிய தோற்றங்கள் எண்ணற்றதாகவிருப்பதால் என்ற மீண்டும் கொணரப்படுவதில்லை (தஜல்லி'-ரா – தக்ரார்தித்) அவைகளின் பெருக்கத்தினால் மறுபடியும் கொண்டு வரப்படாததினால் அவனுடைய 'தாத்'தாகிய தக்சொரூபத்தை எவ்வாறு குறிப்பான கண்டித்த வஸ்துக்களில் அடிக்கவிடமுடியும்? ஆதலின் கண்டிப்பை கண்டபடி வணங்குதல் விக்கிரக ஆராதனையாகும். 'லாஇலாஹ'வில் குறிப்பானது ஒழிக்கப்பட்டு 'இல்லல்லாஹு'வில் குறிப்பற்றதை உறுதிபடுத்தப்படுகிறது "பஸ்ஸே – மஸஸி"யில் ஷெய்குல் அக்பர் (றலி) அவர்கள் சொல்லுவதாவது:— தனது 'தாத்து'டையவும், 'சிபாத்து'டையுமான தோற்றத்தையும், 'சிபாத்து' 'அஸ்மா'வின் குணபாடான 'ஆலத்'தையும் தோன்றச்செய்ய 'ஹக்கு'டைய 'இஷ்கு' ஆகிய காதலுண்டாயிராவிட்டால் 'ஆல'மானது புற உள்ளமையாகத் தோன்றியிராது அவனுடைய ஞானத்திலே சதாதரிபட்டிருக்கும்

'ஆல'த்தின் அசைவானது 'அதம் - இளாபீ'யான சம்பந்தியான இன்மையிலிருந்து வெளியரங்க உள்ளமையான விலானது 'ஆலத்'தைத் தோன்றச் செய்ய சிருஷ்டிக்கர்த்தா

வின் அசைவாகும். காதலின் அசைவு 'ஹக்'கிடமிருந்தும், உணர்ச்சியின் அசைவு 'கல்கு' ஆகிய 'ஆலத்'திடமிருந்தும் உண்டாயிருக்கிறது. வித்தானது தனக்குள்ளேயே சகல வளர்ச்சியையும் பார்த்து அனுபவிக்கிறது. ஆதலின் அவை களைவிட்டும் தேவையற்றதாய்யிருக்கிறது ஆனால் சாசுவத மான அறிவையும், தற்காலிக அறிவையும் பெற்றிருக்கையில் தான் அறிபவனுன 'ஞானி'யின் சம்பூர்ணம் உணரப்படுகிறது. இந்த சாசுவதா 'ஞானம்' தற்காலிக ஞானத்தைப் பெற்றே பூர்த்தியடைகின்றது தற்காலிகமான சாசுவதமற்ற ஞானம் சாசுவத ஞானத்திலேதான் மறைந்திருக்கிறது சகல அசைவு களின் மூலமாகிறது - 'அதமி-இளாபி'யாகிய இன்மையின் சம்பந்தியுடைய அசைவே அதுவே 'வெளியாங்க உளமை' யான தோற்றத்தினளவில் அறிவின் கோலங்கள் தோக்குவ தாகும். ஆகவே உளமையாகிறது அமைதியான நிலைமையி லிருந்து தோற்றத்தினளவில் அசைதலாகும் இதுவே காதலின் அசைவு அல்லாஹுத்தஆலா திருஉளமாயிருப்பது போல், 'குன்து கன்ஸன் மக்பிஸ்யன் பஅஹ்பப்து உஃரிப' அவ்வியக்கத் புதையலாய் நான்ஆகியிருந்தேன் அறியப் படுவதற்கு நான் ஆசித்தேன் இந்த ஆசையாகிய காதல்தான் தன்னை தோற்றுவிப்பதற்கான விருப்பம் இந்த காதலானது அங்கு இருந்திராவிட்டால் சதாகாலமும் தன் அறிவில் அசைவுராத அமைதியுடனேயே அவன் இருந்திருப்பான் ஆலமாகிய பிரபஞ்சத்தின் அசைவு 'அதமி-இளாபி'யான இன்மையின் சம்பந்தி வெளிப்படைத் தோற்றத்திலானதே யாம் இந்த அசைவு என்னும் கலக்கம் அதமி - இளாபியான இன்மையின் சம்பந்தியிலிருந்து உள்ளமையளவில் ஆலத்தைத் தோன்றச் செய்வதற்கு சிருஷ்டிக்கர்த்தா அதனளவில் காதலித்ததாம் ஏனெனில் தன்னுடைய 'தாத்'தாகிய தத்சொரூபத்தை அறிவில் தரிபட்டிருக்கக் கண்ட ஆலமாகிய பிரபஞ்சம் புறத்திலும் தன் 'தாத்'தைக் காண ஆசித்ததி லேயாம்

துவர்க்கமற்ற உள்ளமை 'ஹக்கு'டையது அதுவே அவனது 'தத் சொரூப'மான அகண்ட பரிபூர்ணமான 'தாத்து'

இது தாத்தைப் பொறுத்தவரை துவர்க்கமுடைய உள்ளமை யானது 'ஆல'தின் பல்வேறு ரூபங்களில் 'ஹக்'கிடமிருந்தே வெளியானது. 'ஹக்கு'டைய அறிவில் அது தரிபட்டிருந்தது. இந்த துவர்க்கமுள்ள உள்ளமையைத்தான் நிலை நாட்ட இடம்பாடான உள்ளமையென்று அழைக்கப்படுகிறது. ஆலத்தின் கோலங்களாய்' 'ஹக்கு' தன்னைவெளியாக்கினுன். அதுவே 'அஸ்மா'வான திருநாமங்களின் பூர்ணத்துவம். இவ்வாறே நித்தியத்தில் நித்தியனுயும், அநித்தியத்தில் அநித்தியனுயுமிருக்கிருன்.

'ஹாரித் முஹாஸிபி' கூறுவதாவது:— யாருக்கேனும் லாப, நஷ்டமுண்டானல், உன்னிடமிருந்து உண்டானது என்று கருதாதே. ஏனெனில் உள்ளமையும், அதன் தன்மைகளின் 'இடம்பாடான'வற்றிற்கு இரவலாகக் கொடுக்கப் பட்டிருக்கிறதேயன்றி வேறல்ல. கடன் என்பது அத்தியாவசிய மான 'வாஜிபைச் சேர்ந்தது' மும்கினு'கிய இடம்பாட்டைச் சார்ந்தல்ல தன்மையற்ற ஒன்று தன்மை அல்லது பண்பின் மீது யாதொரு பாத்தியதையையுங் கோர முடியாது இன்மை யான தன்மையிடத்தில் யத்தகைய பாத்தியதையையும் கோருதல் சுத்த இணைவைத்தலான 'ஷிர்க்கு' ஆகும். இதனலேயே பரோக்ஷ ஞானிகளான உலமாக்கள் 'தாத்'தாகிய தத்சொரூபத்து'க்கு உள்ளமையானது ஒரு இணைப்பு என்கிருர்கள். அகண்ட பரிபூர்ணத்தில் உள்ளமை யென்பதைக் கூட நினைக்கப்படுவதில்லை. 'வாஹிதிய்யத்'யாகிய இரண்டாங் குறிப்பில்தான் நீ உள்ளமையுடை (தஜல்லி) பிரதி பிம்பத்தைப் பெறுகிருய் ஆகையில் அகண்ட பரிபூர்ணத்திற்கு உள்ளமை ஒரு சேர்க்கையாகும் என்று பரோட்ச ஞானிகளின் கூற்று அமைந்திருக்கிறது உலமாக்கள் வாஹிய்யத்தைத்தான் கருதிக்கொண்டிருக்கின்றனர் அதற்குமேல் அவர்கள் போனல் அதனை ஒரு (தஜல்லி) யாகதான் காண்கின்றனர். அந்த (கஜல்லி)தான் 'தஜல்லி'யிலுள்ள ஒன்றின் அகமியமாக இருக்கிறது 'தஜல்லி'யும் 'தஅய்யு'னுகிய கண்டிப்பும் 'தாத்' தாகவேயிருப்பதால் அவற்றின் இருப்பாகிய உள்ளமை ஓர்

வாஜிபுல் உஜூது (அத்தியாவசிய உளமை)

இணைப்பு அல்லது கூடுதல் என்னும் கொள்கை மறைந்து விடுகின்றது.

'மஷ்ஷாஇய்யீன்' எனப்படும் அரிஸ்டாட்டிலைப் பின்பற்றி 'கால் நடைக்காரர்கள்' 'ஹகீகத்து' அல்லது அகமியம் சிருஷ்டி கர்த்தாவினால் சிருஷ்டிக்கப்பட்டதன்று. ஆனால் சிருஷ்டிகள் அதற்கு உள்ளமையை அளித்து உள்ளமைப் படுத்தினான். வெளியாங்கத்தில் அதன் குணபாடுகளின் காரணம் உள்ளமையாகவே இருக்கிறது. நெருப்பின் ஹகீகத்து படைக்கப்பட்டதல்ல ஆனால் வெளிப்படை உள்ளமையை சிருஷ்டிக்கர்த்தா அதற்குக் கொடுத்தான். அதனால்தான் உஷ்ணம் வெளிச்சம் ஆகிய குணபாடுகளின் தோற்றங்களுக்கு மூலமாக ஆனது. ஆகையால் நாம் உள்ளமையாகப் பார்க்கப் படும் இந்த நெருப்பு அதன் விஸ்தீர்ணமேயன்றி நெருப்பின் 'ஹகீக்'தான 'தாத்து' அல்லது தத்சொரூபமன்று. அதன் 'தாத்து' ஆகிய தத்சொரூபம் தன்னைக்கொண்டே நிலைப் பெற்றுள்ள அதன் உள்ளமைதான் அப்லாதூனைத் தொடர்ந்த 'இஷ்ராக்கீன்'கள் அகமியமான 'ஹகீக்'காகிறது சிருஷ்டிக்கர்த்தாவினால் படைக்கப்பட்டதென்கின்றனர். அதாவது அவன் வெளிப்படையில் அதனைப் 'படைக்கானம். சிருஷ்டிகர்தாவின் குண்பாடே அகமியம்: அது வெளிப்படையில் உள்ளமையாயிருக்கிறது.' அதனுடைய உள்ளமை நினைவில் தோற்றமாகவிருப்பதேயன்றி வெளியாங்க அகமியமன்று. உதாரணமாக மனிதனுடைய 'ஹகீகத்து' நம்மால் உணரப்பட்ட பொழுது ஒரு வடிவாக உண்டாகிறது. இதையே முக்கிய அறிவு எனப்படுகிறது. மறுபடியும் அதை நினைத்தால் அது சில பண்புகளைப் பெற்றிருப்பதாக தெரிகிறது. அவற்றிற்கோ வெளிப்படையில் யாதொரு உள்ளமையுமில்லை. இதுதான் இரண்டாவது அறிவு 'முதகல்லிமீன்'களான தர்க்க வாதிகளுடையதும், அஷ் அரியாக்களுக்குடையதுமான கொள்கையும் இதுவே. அதாவது ஒரு வஸ்துவின் அகமியம் அந்த வஸ்துதான் அந்த வஸ்துவின் உள்ளமை அந்த வஸ்துவின் அகமியந்தானதாகும். அபுல்ஹஸன் அஷ்அரி ஒருவனது நினைவில் ஒரு உள்ளமை உண்டு என்பதை நம்பவில்லை

அஸ்ராரே அனல்ஹக்

ஆனால் சூபிய்யாக்களோவெனில் வஸ்துக்களின் அகமியம் 'ஹக்கு'த ஆலா'வினுடைய 'தத் சொரூப'மான தாத்துதான்என்று நிர்ணயங்கொண்டிருக்கின்றனர் வெளியரங்க உள்ளமை அந்தரங்க உள்ளமைக்கு வேற்றுமையானதல்ல. சகலமும் ஒன்றே ஒன்றுதான். அதுதான்' 'தத் சொரூப தாத்து' அறியப்பட்டவையான வஸ்துக்கள் அவனுடைய அறிவில் 'அதம்' என்ற இன்மையல்ல அவனுடைய அறிவிலே வெவ்வேருக ஒன்றைவிட்டு மற்றொன்றை பிரித்தெரியப்பட்டது. தரிபாடான அறிவில் அவை உள்ளமையாயிருக்கின்றன. அவைகள்தான் சூபிய்யாக்களால் அழைக்கப்படும் அஃயான் - தாபித்தா; அல்லது ''முதகல்லி மீன்'கள் கூறும் அறிவு கோலங்கள் 'ஹக்கு' அவற்றை 'ஹாலி'ராக்க தன்னுடைய சொந்த உள்ளமையுடன் அதற்கு ஒரு சம்பந்தத்தையளிக்கிருன். இந்த சம்பந்தத்தால் குணபாடுகளும், கட்டளைகளும் வெளிப் படையில் தோன்றுகின்றன 'தாத்து'தான் இக்குணபாடு களுக்கும் கட்டளைகளுக்கும் மூலமாக உண்டாகியிருக்கின்றது. 'வஹுவ மஅகும் ஐனமாகுந்தும்' நீங்கள் எங்கிருப்பினும் அவன் உங்களோடிக்கிருனென்பது இதைக் குறித்தே 'அலா இன்னஹு பிகுல்லி ஷைஇன் முஹீத்' சகல வஸ்துக்களையும் அவன் சூழ்ந்திருக்கிருனென்பதும் இதைக் குறித்ததயாம். வெளி யரங்க உள்ளமை இருமுகங்களைப் பெற்றிருக்கின்றன.

ஒன்று 'ஹக்கீகத்'தாகிய அகமியம். மற்றொன்று. தோற்றம் (பொருள்) தோற்றமாகிறது இடம்பாடான உள்ளமையும். அடிமைத்தன்மையுமாகும் இவ்வாறு அமைக்கப் படுதலே 'பர்கு' என்னும் 'பிரிவினை' என்ற பெயர்கொண்டு சூபிய்யாக்கள் அழைக்கின்றனர். இந்த தன்மையை 'ஹக்கு' என்றழைப்பது 'குப்ரு' ஆகும் மற்றது. தோற்றங்களுக்கு மூலமானது இதுவே நாயகத் தன்மையுடையது இந்த முகத்தையே 'ஹக்கு.' 'வாஜிபுல் உஜூது.' 'உலூ திஹிய்யத்து' என்னும் பலவாருயழைக்கப்படுகிறது. 'சூபிய்யாக்கள்' அதனே 'ஜம்உ' என்ற பெயர்கொண்டு அழைக்கின்றனர்.

3-வது அத்தியாயம்

மும்கினுல் உஜூது - இடம்பாடான உள்ளமை.

இஷ்கு - காதல் எனும் பெயரால் ஒருவனது மனப் பான்மையை சார அழைப்பது பொருத்தமல்ல கோதுமை மரமாகிய (இல்மு என்னும்) அறிவை சுவர்க்க லோகத்தின் மரம் என்ற நாமத்தால் அழைப்பதும் நேர்மையன்று. ''அந்த மரத்தை முடுகினுல் நீங்கள் அநியாக்காரர்களாக ஆகிவிடுவீர்கள்.'' லாதக்ரபா ஹாதிஹிஷ்ஷஜர பதகூனு'மினல்லாலமீன். காதல் என்பது யதார்தத்தில் அழகாயுள்ள ஒன்றன்பால் கவர்தலாயிருத்தல். பிரபஞ்ச வஸ்துக்களின் குறிக்கீடு இல்லாது ஹக்கு தனது சுயமான அழகில் சொக்கிப்போய் அந்த பேரழகை கூர்ந்து கவனித்து நோட்டமிடுவதான அந்த நிலைக்கு 'ஜம்உ'டைய ஸ்தானம் எனப்படும். ஷெய்குல் அக்பர் அவர்கள் இந்த நிலையை 'ஜம்உ' என்னும், மூதற் குறிப்பு என்றும், ஹகீகத்து முஹம்மதி' என்னும் அழைகிருர்கள். அது தாத்தின் பேரில் தாத்துக்குள்ள காதலாகும். ஆலத்தின் மீது 'தாத்து'க்குள்ள காதலே ஜம்-பி-ஜம் எனப்படும். ஆலத்திற்கு ஆலத்தின் பேரிலுள்ள காதல், அதாவது, தனித்தனி நபர்களுக்கு தனிதனி நபர்களின் பாலிருக்கும் காதலே ஜம்-பி-பர்கு என்ருகும்.

'ஹக்கு' தனது முதற்ரேற்றத்தில் 'அஃயான்' ஆக இருந்தான். அவனுடைய தத்துவங்கள் 'அஃயான்' என்ற கண்ணுடியில் தோன்றலாயின ஆதலின் 'அஃயானு'டைய தந்தை ,ஹக்கு' ஆகும். வெளித் தோற்றத்தில் 'அஸ்மா', 'சிபாத்து'' என்ற செவிலித்தாய்களால் 'அஃயான்'கள் போஷிக்கப்பட்டுவந்தன

தோற்றப்படாதிலிருந்து தோற்றம் வெளியானதும் தோற்றத்திலிருந்து தோன்றப்படாதது பிறப்பதுமா பிருக்கின்றன தோற்றமென்பது ஒருகோலமெடுப்பது என்ருகும்

அஸ்ராரே அனல்ஹக்

'லம்லியத்; வலம்யூலத்' - அவன் பெறுகிறதுமில்லே. பெறப்படுவதில்லே 'தாத்து' ஆகிய 'தத்சொரூப' ஸ்தானம் அகண்ட பரிபூணமாயிருக்கிறது. அதிலிருந்து வெளிப்படுவன வெல்லாம் கண்டிப்பு'தான் நாயகம் (சல்) அவர்கள் கண்டிப் பாகும். அவர்களிலிருந்து வெளிப்பட்டது அகண்ட பரிபூர்ண மாகும். இந்த கண்டிப்பான உள்ளமையாகிறது உள்ளமையே யன்றி வேறன்று ஒரு அலேயினின்றும் வெளியீடானதெல்லாம் சமுத்திரமேயன்றி வேருென்றுமில்லே சாயத்தால் சமைந்த எழுத்துக்கள் பூர்ணமான சாயத்தையே தவிர வேறு யாருமில்லே ஒரு முட்டையிலிருந்தும் ஒரு கோழியும், கோழியிலிருந்த முட்டையும் வெளிப்படுகிறது ''ஆல'மாகிய கண்ணுடியிலே இரண்டாம் தோற்றதில் 'ஹக்'கைத் தவிர யாரும் காணப் படுவதில்லே. 'ஹக்கு' என்னும் கண்ணுடியில் முதல் தோற்றத் திலே ''ஆலத்து'க்கு புறம்பானதை''யே காணப்படுகிறது. இவ்வாறு ஆலம் 'ஹக்'கிலிருந்து பெறப்படுகிறது ஆகவே ஆலத்திலிருந்தும் 'ஹக்'கைப் பெறபடுகின்றது வித்தானது மரத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. மரமானது வித்திலிருந்து தான் கிடைக்கப்படுகிறது எது வெளிப்படையாகத் தோன்று கின்றதோ அது அந்த வஸ்துவின் அகத்திலிருந்துதான். ஆகையால் ஆலத்திருந்து வெளிப்படுகிறது 'ஹக்'லிருந்து வெளிப்படுவதைக் காண மேலானது.

இரு லோகங்கட்கும் 'றஹ்மத்'தாகிய ஒளிவிலிருந்து ஆனவர்களாயிருக்கும் முஹம்மது (ஸல்) அவர்கள் '' வமா அர்ஸல்ஞக்க இல்லாறஹ்மதுன் - லில் ஆலமீன்'' ஆசீர்வதித் தல் 'ஜமால்' என்னும் பேரழகின் பண்பாயிருக்கும் 'ஜலால்' என்னும் மகத்துவத்தின் நெருப்பிலிருந்துதான் 'இப்லீஸ்' உண்டானன். வெளியீட்டில் 'ஜலாலே' 'ஜமால்' கவிழ்த்தலாக சூழ்ந்துக்கொண்டிருக்கிறது. ஷைத்தானுடைய கருமங்களே விட்டும் நாம் காவல் தேடுகிருேம் ஆகையால் தீமை - செய்பவனே திட்டாதே என்ருலும் அவனுடைய செயல்களே விட்டும் நீ காவல் தேடுவாயாக.

மும்கினுல் உஜூது - இடம்பாடான உள்ளமை.

'குல்லுஷையின் யர்ஜிஉ-இலாஅஸ்லிஹி' சகலவஸ்துக்களும் 'அஸ்'லான மூலத்தளவில் மீளுகின்றன. உள்ளமையை பொறுத்தவரை வஸ்துக்களின் மூலம் 'ஹக்கு'த ஆலாவாகும் அவனிடமிருந்து அவைகள் தோன்றி, அவனிடமே மீளுகின்றன. இவ்வாறே இடம்பாடான உள்ளமை (மும்கினுல் உஜூது) அத்தியாவசியமான உள்ளமைக்கு (வாஜிபுல்உஜூது) ஐக்கியப்பட்டிருக்கிறது தங்களின் உள்ளமையைப் பெற எழுத்துக்களும், வார்த்தைகளும் சாயத்துக்கு ஐக்கியப் பட்டிருக்கின்றன. வஸ்துக்களின் 'தாத்'தான சொரூபம் உள்ளமையின் வேறான இன்மையாகும் ஒவ்வொரு விநாடிம் வஸ்துக்கள் தங்கள் உள்ளமையை ஹக்கிலிருந்து இரவல் வாங்கிக்கொண்டிருக்கின்றன மேலும் ஒவ்வொரு விநாடியும் இன்மையான தங்கள் 'தாத்'தளவில் மீண்டுகொண்டிருக்கின்றன. உள்ளமையைப் பொறுத்தவரையில் அவைகள் (அத்தியாவசிய) (வாஜிபும் உஜூது) உள்ள அளவில் மீளுகின்றன அவைகளின் கற்பனை உள்ளமையைப் பொறுத்தவரையில் இன்மையளவில் அவை மீளுகின்றன. "பல்ஹும் பீலப்ஸின் மின்கல்கின் ஜதீது" ஆதலின் இடம்பான (மும்கினுல் உஜூது) உள்ளமைக்கு இரு முகங்களுண்டாயிருக்கின்றன ஒன்று 'ஹக்'களவிலும், மற்றொன்று தன்னளவிலுமாகும். அதன் முந்தியதில் அது 'ஹக்'கையன்றி பிறிதொன்றுமல்ல இரண்டாவதில், பூர்ணமான இன்மையேயன்றி மற்றொன்றுமில்லை "குல்லுஷையின் ஹாலிகுன்இல்லவஜ்ஹஹு" ஒவ்வொரு வஸ்தும் இன்மையாக்கப்படுவதற்குறியது, அதன்வதனத்தை தவிர தன்னளவில் ஒரு வஸ்தாகிறது நித்தியமான இன்மையுடையதாயிருக்கிறது அவை ஆதன் வதனத்தில் (அதாவது ஹக்கு அளவில் பார்க்கும் அதனுடைய நோக்கில்) இன்மை-இன்மை (உள்ளமை) யாகும். வஸ்துக்களின் அகமியங்கள் மகிமையினுலான 'ஜலால்.' பேரழகினாலான ஜமால்' ஆகியவற்றின் 'பண்பு'களாகும். இந்த இரு பண்புகளின் தோற்றங்களே வஸ்துக்கள் நன்மையாயினும், தீமையாயினும் இந்த இரு வகை பண்புகளின் ஜன்னல்களின் வழியேதான் வெளிப்பட்டு அதே வழியாக மீளுகின்றன ஒற

பண்பாகிய குணத்தைக்கொண்டு சுகம் பெறுகிறது. இந்த சுகம்தான் அது இரவல் வாங்கிக்கொண்ட பண்போடுள்ள அதன் சம்பந்தமாகும். அது அந்த வஸ்துவின் தத்துவங்களாக சமைகிறது. ஒவ்வொரு வஸ்தும் ஒரு குணத்தின் தோற்றம். பண்புகளின் கோலங்களே 'அஃயான்' ஆகும். ஒரு பண்பிலிருந்து வெளிப்படுவதெல்லாம் அந்தப் பண்பின் 'கமாலியத்து' என்னும் பூர்ணத்துவமே ஒவ்வொரு வஸ்தும் நிலையற்ற இம்மையிலிருந்து நிலைபாடான மறுமைக்கு அது இங்கே பெற்றிருந்த பூர்ணத்துவத்துடன் மீண்டுவிடும். அவைகளின் பண்புகளைவிட்டு நீங்கியிருக்கும்பொழுது (ஒரு விநாடி நேரத்தைக் காட்டிலும் மேற்படாத இந்நிலையால் அகம் புறமாகிவிடும்) உண்மையாக ஐக்கியம் அல்லது ஏகத்துவம் தோன்றுகிறது. 'ஆரிப்' ஆகிய 'ஞானி' இதனை இவ்வுலகில் ஒரு நிமிஷம் நேரம்தான் ரசிக்கிறார். வஸ்து 'தாத்'தளவில் மீளுகிறதில்லை. ஆனால் அது வெளிப்பட்டுவந்த 'சிபாத்து' அளவில்தான் அது மீளுகின்றது. மறு உலகின் நிலைமையை உருவகப்படுத்துகின்றது இதனாலேயே நியாயத் தீர்ப்பு நாளில் மறைந்திருக்கும் சிபாத்து ஆகிய பண்புகள் வெளிப்படுவது அத்தியாவசியமாகிறது.

சிருஷ்டிப் பொருள்கள்கள் 'தாத்'தாகிய தத்சொரூபத்துக்கு யாதொரு கூடுதலுமாகாது. தாத்தும் அந்த சிருஷ்டிப் பொருள்களுக்கு ஒரு இணைப்புமல்ல. ஆதலின் அவனது ஏகத்துவத்தில் பலவென்பது புகுத முடியாது. ''குல்ஹுவல்லாஹு அஹது'' நீர் சொல்வீராக அல்லாஹ்வான அவன் ஒருவனென்று உள்ளமையென்பது ஒன்றுக்கு மேற்பட்டதல்லவென்றுரும்பொழுது கூட்டுதலென்பது எதனுடன்?

ஷெய்குல்அக்பர் முஹிதீனிப்னு அரபி சொல்வதாவது: ''கல்கு'' ஆகிய சிருஷ்டி ''ஹக்கு'' ஆகவே இருக்கிறான். ஏனெனில், சிருஷ்டியாகிறது 'ஹக்'கின் பண்புகளுடைய திருநாமங்களின் தோற்றங்களும். கணக்கற்ற கண்ணாடிகளில் அகண்ட பரிபூர்ண உள்ளமையின் பிரதி பிம்பங்களுமாம்.

மும்கினுல் உஜூது - இடம்பாடான உள்ளமை.

சிருஷ்டிகளுடைய கண்டிப்புகளையும் தடைகளையும் அவன் பக்கல் சேர்க்கவேண்டாமென்றது, 'தனஜ்ஜுலாத்'தாகியபடி இறக்கத்தின் காரணமாகவேதான் ஆகையால் இந்த படிகளை யும், குறிப்புகளான கண்டிப்புகளையும் கவனியாது 'வஹ்தத்து' அளவில் அவைகளின் வாயிலாய் புகுந்து செல்வாயக.

குணபாடுகள் தோன்றியுள்ள (வெளிப்பாடாக உள்ள) சாதாரண உள்ளமையன்றழைக்கப்படும் உள்ளமை அலைகளின் தண்ணீர் சமுத்திரத்தின் பாகமாகயிருப்பது போன்று. 'உஜூது முத்தலக்'கான பரிசுத்த தத்சொரூப எனப்படும் அகண்ட பரிபூர்ணமான உள்ளமையின் பாகமேயாகும் என்று கஜூ ருடைய (செய்கு இப்ராஹீம் - கஜூரே - இலாஹி) அபிப்பிரா யம். இந்த சாதாரண உள்ளமையைதான் 'முதகல்லிமீன்'கள் 'மும்கினுள் உஜூது' என்றழைக்கின்றனர். 'அரிஸ்தாதுலே'ப் பின்பற்றிய 'மஷாஇய்யீன்'கள் 'மாஹூக்கேமஜீது' (படைக்கப்பட்ட சிருஷ்டிகள்) என்றும் 'அப்லாதுனைப்' பின்பற்றிய 'இஷ்ராகீன்'கள் 'மாஹியத்து. (தாத்துகள்) சிருஷ்டிகர்த்தாவால் உள்ளமையளிக்கப்பட்டுதான்படுத்தப்பட்டு தான் வெளிப்படுத்தப்படுகின்றனவென்றும் பல வாருய்க் கூறுகிறார்கள். சாதாரண உள்ளமையும் யதார்த்தத்தில் 'ஹக்'காகவேயிருப்பதால் வஸ்துக்களின் உள்ளமை 'ஹக்' குடைய உள்ளமையன்றி வேறல்ல லாமவுஜூத இல்லல் லா(ஹ்) - ஹக்கையன்றி யாதொன்றும் உள்ளமையுடைய தாக இல்லை. அலைகளுக்காவேண்டி சமுத்திரத்தைப் புறக் கணித்துவிடாதே.

இடம்பாடான 'மும்கினுல் உஜூது' அஃயானுடைய கோலத்தில் தனிதனியான குணதுணங்களுடன் 'ஹக்கு'டைய 'தஜல்லி'யாக இருக்கின்றது. தோன்றப்பட்ட உள்ளமையும், உள்ளமையின் சம்பந்தியுமான 'உஜூதே இளாபீ' என இது அழைக்கப்படுகிறது இது சாய்கை நிழல் (ழில்லு) என்றும் பெயரிடப்பட்டது ''அலம்தர இல றப்பிகைப மத்தல்ளில்லா'' உன்னுடைய இரட்சகன் எவ்வாறு தனது நிழலாகிய சாய்கையை நீளச் செய்கிறான் என்பதை நீ பார்க்கவில்லையா?

4-வது அத்தியாயம்

(பண்புகள் அல்லது சிபாத்து)

தனஜ்ஜுலாத்து ஆகியபடி இறங்குதலின் முந்திய மூன்று நிலைகளும் உள்ளீடானவையாகவும் (அம்மூன்றும்) ஒன்றேதானாயுமிருக்கிறது. 'அஹதிய்யத்தில் வஹ்தத்து உள்ளீ வஹ்தத்தில் வாஹிதிய்யத்து உள்ளீடாயும் 'வஹ்தத்தில் 'வாஹிதிய்யத்து உள்ளீடாயுமிருக்கின்றன எனவே 'வாஹிதிய்யதி'ல் 'அஹதிய்யத்து' அகமியமாயிருக்கிறது. 'வாஹிதிய்யதி'ல் சகல 'இஸ்மு'களும் மறைமுகமாயிருக்கின்றன அஸ்மாவாகிய திருநாமங்கள் ஆலமுல் அர்வாஹான ஆன்ம லோகத்தில் வெளியீடாகி, பிறகு ஆலமுல் மிதாலாகிய சூட்சும லோகத்திலும் ஆலமுல் அஜ்ஸாமான சடலோகத்திலும் தோன்றியிருக்கின்றன ஹகீகத்து முஹம்மதிய்யாவில் எல்லா அஸ்மாவும் மறைந்திருக்கின்றன அஹ்மது (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:- நான் அல்லாஹ்வின் ஒளியிலிருந்துள்ளவன். சர்வமும் எனது ஒளியிலிருந்து தோன்றியவை. அனாமின் நூரில்லாஹி வகுல்லி ஷையின் மின் நூரி நபி (ஸல்) அவர்களுடைய கோத்திரத்தில் 'ஹாதி' (உண்மை நேர்வழி காட்டி) என்னும் இஸ்மைத் தவிர மற்ற இஸ்முகள் யாவையும் செயலறச்செய்யப்படுகிறது இப்லீஸைப் பொறுத்தவரையில் 'முதில்லு' (வழிகெடச் செய்பவன்) என்ற இஸ்மை தவிர மற்றும் யாவும் அழித்தப்பட்டுவிடுகிறது.

இன்னல்லாஹ ஜமீலுன் யுஹிப்புல் ஜமால்' திட்டவட்டமாக அல்லாஹுத் தஆலா பேரழகுடையவனாயிருப்பதால் அவன் அழகை நேசிக்கிறான் அழகாகிறது 'தாத்து'டைய சுயாதீனமான பண்பாகும் அல்லாஹுத்தஆலா மனிதனை தன் சுயவடிவிலே சிருஷ்டித்தான். 'கலகல்லாஹு தஆலா அலா சூரத்திஹி' மனிதனை தன் சொந்த நிகரற்ற அழகுடைய பண்பிலே படைத்தான் ஆகவே மனிதன் வனப்புள்ளதை நேசிக்கிறான் இரு லோகங்களையும் படைப்பதற்கு முன்பு 'ஹக்கு' அழகை காதலித்தான் ஹக் இவ்வாறாக அழகாயும், காதலாயுமிருந்தான் 'அனாது வனி' காதல் அவனின் காதலே

பண்புகள் அல்லது சிபாத்து.

காதலனும், காதலிக்கப்படுவோனும் ஒரே நோக்கில் வனப்புமிருந்தான். அவன் தன்னைத்தான் தன்னுடைய சுயாதீனமான 'அழகு' என்னும் கண்ணாடியில் பார்த்தான். அவன் தன்னையே தான் நேசித்தான் "ஸாயுஹிப்புல்லாஹ கைருல்லா(ஹ்)" தானல்லாத தொன்றை அல்லா(ஹ்) நேசிப்பதில்லை.

"அதம்" (இன்மை) என்பது 'ஹக்கு'டைய சிருஷ்டியை விட்டும் புறம்பானது "மாகலகஸ்மா அவல் அர்ன வமா பைனஹுமா பாத்திலா" அல்லா(ஹ்) அகண்ட பரிபூர்ணமான 'நன்மை'யாகும் நன்மையிலிருந்து யாதொரு தீங்கும் வெளி வராது. தீமையாய் தோன்றுவனவெல்லாம் பேதா பேதமான முரண்படும் தன்மையுடைய அஸ்மாவின் திருநாமங்களுக்கிடையேயுள்ள சம்பந்தா சம்பந்தமன்றி உள்ளமையினிடமிருந்தல்ல. அல்லது. அதம் என்னும் இன்மையிலிருந்து (கற்பிதா ரூபமாக) வெளிப்படுவதாம். வெட்டக்கூடிய ஒருவாளை உபமானமாய் எடுத்துக்கொள் வெட்டுதலென்பது அது மட்டுக்கு ஒரு தீங்கன்று. அது அந்த வாளின் பூர்ணத்தை எடுத்துக் காட்டுவதாகும். ஒரு உருப்பை மற்றொன்றிலிருந்து தரிப்பது தீமையுடைய தோற்றத்தையளிக்கிறது. ஆனால் இது இன்மையுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. உண்மையில் அது அஸ்மா யெஜலாலி (மகத்துவமிக்க திருநாமங்கள்)யில் ஒன்று மற்றொன்றுடன் வைத்திருக்கும் சம்பந்தம் அஸ்மாயெ லதீபிய்யா (அருள் மிக்க திருநாமங்கள்)வுக்கு எதிரிடையாக பார்க்குங்கால் அது தீமையாகக் காட்சியளிக்கின்றது. இல்லாவிடில் அது மட்டுக்கு பரிபூர்ண நன்மையேதானாகும்.

மௌலானா ரூமி (கத்தஸ்) அவர்கள் சொல்லுகிறதாவது:- அத்தார் (ரஹ்) காதல் என்னும் ஏழு பட்டணங்களையும் கடந்து சென்றார்கள். நாமோ ஒரு தெருவினுடைய வளைவினிலேதானிருக்கிறோம்.

ஞானி கடந்து செல்லும் ஏழு பட்டணங்களும் ஏழு 'சிபாத்து'களாகும். மற்றவர்கள் ஒரே ஒரு பண்பைத்தான் கடக்கிறார்கள் மூஸா (அலை) அவர்கள் (கலாம்) பேச்சு என்னும் பண்புடன் சம்பந்தப்பட்டிருந்தார்கள். ஈஸா (அலை) அவர்கள்

'ஹயாத்து' ஜீவன் என்னும் பண்போடு சம்பந்தம் வைத்திருந் தார்கள் அன்றி அது ஏழு உரைகளையுங் குறித்தாயிருக்கும். அவை யாவன ஸ்தூலம் (ஜிஸ்மு) சூட்சுமம் (மிதால்), காரணம் (அர்வாஹு), வாஹிதிய்யது, வஹ்தத்து, அஹதிய்யது, முத்தலக்கு.

'முஹக்கீன்'களாகிய சூபிய்யாக்கள் பண்புகள் நிலைபாடானவையென்றும், 'தாத்'தகியதக்சொரூபத்துக்கு ஒரு இணைப்பு என்று நிர்ணயங் கொண்டிருக்கின்றனர். 'ஹுக்கமா'க்களான பூர்வ கால பண்டிதர்கள் பண்புகள் 'தாத்து' தானே இருக்கிறதென்றும், அவ்வாறே தாத்தும், சிபாதும் கலந்து அவனில்பட்டி (தாஜா) களாயிருக்கவில்லை என்று கருதுகின்றார்கள்.

ஒரு ஹதீதுபடி :— ''இன்னபீ ஜன்னத்தின் சௌகன் பிபாய பீஹி ஸ்ஸுவர்'' ஜன்னத்' ஆகிய சுவன பதியில் ஒரு கடை வீதியிருக்கிறது. அங்கு வதனங்களே (ரூபங்கள்) விற்கப்படுகின்றன. இது 'தஜல்லியாத்' தென்னும் ஹக்குடைய பிரதிபிம்பத்தைக் குறிக்கிறது. ஷெய்குல் அஃலம் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் ''(நபிஸல்) அவர்களுடைய கோலத்தில் நான் கனவில் 'ஹக்குதஆலா'வைக் கண்டேன்,'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

'வஹ்தத்திலிருந்து நபி (ஸல்) அவர்களுடைய வருகை வரையும் உள்ள நிலைமையை 'ஹகீகது' முஹம் மதிய்யா' உடைய 'ரூஹ்' பிரபமான ''தஜல்லி''யென்று சுத்தி பெற்ற சூபிய்யாக்களின் ஒருவரோர் மித்த் கருத்தாகும்.

தத்துவங்களை 'ஷரீஅத்து' பிரகாரம் மலக்குகள் என்று அழைக்கப்படுகின்றன. அவைகளின் தெய்வீகசக்தி களின் பிரதிபிம்பங்களாகும். உதாரணமாக காற்றின் மலக்கு. நெருப்பின்மலக்கு. சாது ஒரு வெளிப்பாடு கேட்டால் அதன் சக்தி யாருமில்லா விட்டால் இந்த சக்தியின் வெளிப்பாடு. உண்டாயிராது. ஹக்குடைய 'தாத்து' பண்புகளின் பிரதி பிம்பத்திலிருக்கிறது. பண்புகளோ தத்துவங்கள் அல்லது சக்தி களில் வெளியிட்டாயிருக்கின்றன. தத்துவங்கள் சடங்களில்

பண்புகள் அல்லது சிபாத்து.

வெளிப்பாட்டிருக்கின்றன. செயல்கள் குணபாடுகளில் தோன்றி யிருக்கின்றன. சிபாத்து ஆகிய பண்புகளின் வெளிப் பாட்டின்றி 'தாத்து' டையதன்று; ஏனெனில் 'தாத்துக்கு' யாதொருதோற்றமுமில்லை.

'இல்மு' (அறிவு) என்பது (அறியப்பட்டது) வஸ்துக் களைக் கண்டு, தெளிந்து, உள்ள உள்ளபடி உணர்த்தலே யாகும். அகமியப் பொருளான 'தாத்து'டைய தோற்றமே தான் வெளிக்காட்சியளிக்கும் 'நூர்' என்றும் பிரகாசம். 'கைப்' ஆகிய மறைவும் உள்ளிடுமாயுள்ளது வெளியிடாவ தாகிய உணர்ச்சியே 'ஷுஹூது' என்றும் சாட்சியாகும்.

முன்னர் இல்லாததை தோன்றச் செய்வதே உஜூது என்றும் உண்மையாகும். அஃயானதாபித்தா வென்பது அறிவிலுள்ள கோலங்களாகும் மேலும். வஸ்துக்களின் அகமியங்களும் யதார்த்தங்களுமாகும் அஸ்மா. உஜூது ஆகியவற்றின் சேகரமாகும் இந்த நிலைமை அவைகள் சிரு ஷ்டிகர்த்தாவின் சிருஷ்டிப்பினால் சிருஷ்டிக்கப்பட்டவையல்ல அதைல் தாங்களாகவே வெளித்தோன்ற அவைகளுக்கு இயல வில்லை சிருஷ்டிகள் அவற்றை உண்மைக்கொண்டுவருகிறான் அந்த அகமியங்களை வெளியரங்கத்தில் உண்மையாக்கினையானாரி (அதாவது) உஜூதிய்ய கொள்கைபடிக்கு உண்மையில் அவற்றின் கோலங்களை எடுத்தல் அல்லது ஷுஹூதிய்ய கொள்கைபடிக்கு அவனுடைய உண்மையை இன்மையான அவற்றிற்கு அளிக்கலாயிருக்காலுஞ்சரி இந்த அகமியங்கள் 'அஃயான்' செயல்கர்த்தாவில் ஆதிக்கமிலிருக்கின்றன அவன் தான் அவைகளின் குணப்பாட்டுக்கு காரணமாக இருக்கிறான் இந்த எல்லையை விட்டும் நீதாண்டுவாயாகில் நுனிதத்தில் சிக்கிக்கொள்கிறாய். சாயத்துடையவும். (அகல்சமைந்த) வார்த்தைகளுடையுமான உதாரணத்தை எடுத்துக்கொள். சாயத்தின் உண்மை வார்த்தைகளின் வாயிலாய் காட்சியளிக் கின்றது அதைல் வார்த்தைகளுக்கு சாயத்தின் உண்மை யேயன்றி தனியே யாதொரு உண்மையுங்கிடையாது

அஸ்ராரே அனல்ஹக்

சிபாத்து(பண்புகள்)தாத்துக்கு கூடுதலானபிரத்தியேக உள்ளமைகளெனக் கருதப்படுவதில்லை அறியும் வகையில் 'தாத்து' அறிவாகவே இருக்கிறது உள்ளமையைப் பொறுத்த வகையில் அது ஜீவனாகவே இருக்கிறது சிபாத்து தனி அகமியங்களைப் பெற்றிருக்குமாகில் அவைகள் உள்ளமையான கூடுதல்களாக ஆய்விடும். அவ்வாறு ஏற்படுதல் அசாதியமானதாகும். எனவே 'தாத்தாகிறது தன்னைக் கொண்டே ஜீவனுடையதாகவும். தன்னைக்கொண்டே அறிவதாயும், தன்னைக்கொண்டே கேட்பதாயும், தன்னைக்கொண்டே மொழிவதாயு மிருக்கிறது.

'கைரு' என்னும் வேற்றுமையைப்பார்க்காத ஒருவரே முவஹ்ஹிதர்வர் அதாவது அவர் 'அசர்' என்னும் துவக்கமற்ற ஆரம்பகாலத்திலிருந்து'அபது'என்னும்முடிவில்லா நித்திய காலம்வரை பிற 'காத்' தைப்பாராது தனது சுயமான தாத்திலே தரிபட்டவர். இது தன்னிலிருந்து தன்னளவில் உதயமாகி தன்பாலே கடந்துவிடுகிற 'தாத்துடைய 'தஜல்லி' யாகிய பிரதி பிம்பமே இதில் 'சிபாதுக்கு' இடமேகிடையாது. 'லாஇலாஹ இல்லா அஹ வஹ்தீலா ஷரீக்கலி' என்னின் வேறான நாயன் யாருமில்லை.

மனிதர்கள் கல்லெறிந்து கொல்லப்படுகிற அபாய மண்டலம் இதுவேயாம். இதுதான் 'ஜம்-ப-ஜம்' உம் 'பர்க்-பஃதுல்-ஜம்' உமாகும். இதில் 'தாத்து'டைய தத்சொருபத் தத்மையான ஐய்னியத்தும், சிபாத்துடைய கற்பனையான வேற்றுமையும் சேகரமாகிறது ஒன்று மற்றொன்றை திரையிடுவதில்லை 'தாத்து'டைய ஏகத்துவம். சிபாத்தின் பலவான தன்மைக்கு யாதொரு திரையும் போடுவதில்லை சிபாத்தின் பலவான தன்மை தாத்துடைய ஓர்மைக்கு திரையிடுகிறதில்லை. சிபாத்தின் பலவான தன்மை அறிவிலேயுள்ள ஒரு கற்பனை அம்சம் அதாவது. புறம்பே அதற்கு யாதொரு உள்ளமையுங் கிடையாது. ஆனால் தாத்துடைய

ஒர்மைமாத்திரம்உள்ளமையாக தரிப்
பண்புகள் அல்லது சிபாத்து.
பட்டிருக்கிறது.அந்ததாத்தின்ஒர்மைக்குப்புறத்திலும்,அறிவினுள்ளும்
இருக்கிறது அதாவது ஜைது என்பவனுக்கு ஒரு இலட்சம் பண்புகளுண்டு இந்த பண்புகளின் பலவானத்தன்மை அவனுடைய 'தாத்'தை அதிகரிப்பதில்லை. ஏனெனில் ஒரு கற்பனையான அம்சம் சேருவது கொண்டு ஒரு உள்ளமையான அம்சத்தின் உள்ளமையை அதிகப்படுத்தமுடியாது. (1+0+0+0=1) ஆனால் கற்பனை அம்சங்களின் பலவாருனத் தன்மையை கனவுகள் சமைக்கப்படும் வஸ்தை'ப் போன்று 'தாத்து' கறைத்து விடுகிறது.

இந்த கற்பனை அம்சமானது ஒரு உள்ளமையான வஸ்துவாக மாற்றப்படும்பொழுது அது ஒரு வெளியாங்க திரையாகவும் பல சங்கடமாயும் ஏற்பட்டு பலவாருன சந்தேகங்களுக்கும் இடமளிக்கின்றது இந்த முறை அதன் பூர்ணத்துவத்தில் 'குப்ரு' என்று மாறுகிறது இந்த 'குப்ரு'தான் பல விபரீதமான சந்தேகங்களையும், சகுனங்களையுங்கொண்டு உள்ளமையான ஹகீகத்தை மறைப்பதாயிருக்கிறது. ''கதமல்லாஹு அலாகுலூபி ஹிம் வஅலா சம் ஹிம் வஅலா அப்சாரிஹிம் கிஷாவதன் வலஹும் அதாபுதன் அளீம்'' அல்லாஹுத்ஆலா அவர்களின் இருதயங்களிலும் கேள்வியிலும் முத்திரையிட்டுவிட்டான மேலும் அவர்களின் கண்கள் மீது ஒரு திரையிடப்பட்டிருக்கிறது; அவர்களுக்கோ சகிக்கொணு வேதனையிருக்கிறது.

'தஷ்பீஹ்' என்னும் சொரூப அம்சத்தில் 'தன்ஸீஹ்' என்னும் அரூபியாகவும். 'தன்ஸீஹ்' எனும் அரூப அம்சத்தில் 'தஷ்பீஹ்' எனும் சொரூபியாகவும் 'ஹக்கு' இருக்கிருன் 'தஷ்பீஹ்' என்னும் சொரூப அம்சத்தோடு அவனுக்கு அரூப அம்சமும். 'தன்ஸீஹ்' எனும் அரூப அம்சத்தோடு அவனுக்கு சொரூப அம்சமும் உண்டு இவற்றுள் எந்த ஒன்றிலும் அவன் கட்டுப்பட்டவனல்ல. சொரூபத் தன்மையும், அருபத்தன்மையும் 'தனஸ்ஸுல்' என்றபடி இறங்குதலின் பாட்டையினல்தான். அவனே இவ்விரண்டு அம்சங்களைவிட்டும் கடந்த அகண்ட பரிபூர்ணமாயிருக்கிருன். அவனின் தாத்தில் அவன் ஒன்று மல்ல, பலதுமல்ல.

அஸ்ராரே அனல்ஹக்

சூபிய்யாக்கள் தத்துவ ஸாஸ்திரிகள் கொள்கைப்படி 'தாத்து' உண்மையில் சிபாத்தாகவேயிருக்கிறது உன்னுடைய 'தாத்து' தானாகவே, உதாரணமாகவே, உன்னைப் பார்க்கச் செய்ய முடியவில்லை. ஆனால் 'ஹக்கு' பார்வைக்கு ஐக்கியப் பட்டவனல்ல. அவன் தனது தாத்தைக்கொண்டே பார்க்கிறார். உள்ளமையில் 'தாத்தும்' சிபாத்தும் ஒன்றே கற்பனையான நாம ரூபத்தில்தான் வெவ்வெறாகத் தோன்றுகின்றன. சிபாத்து ஆகிய பண்புகள் 'தாத்து'டைய அம்சங்களே. ஹகீகத்தாகிய அகமியத்தில் அவைகள் தாத்து தானாகவே இருக்கின்றனவென்று சொல்லக்கூடும் அல்லது உன்னுடைய கற்பிதத்தில் தாத்தினின்றும் வேறுபட்டதாக இருக்கின்றனவெனவும் கூறக்கூடும். ''லாஐன் வலா கைர்'' ஷெய்குதாவூது கைஸரீ அவர்கள் சொல்லுவது போன்று, 'ஹக்கு'டைய ஞானம் யதார்த்தில் அவனுடைய 'தாத்து'டையதே; ஏனெனில், அறியப்பட்டவை (அஃயானான லோகங்கள்) அவனுடைய 'தாத்து' தானாகும். இவ்வாறே வானத்திலும் பூமியிலுமுள்ள சகலமும் அணுவரைக்கும் அவனால் அறியப்பட்டவையாகும் அவன் தன்னுடைய 'தாத்து'டனும், அவனது அறிவின் கோலங்கள் எண்ணற்றதாயிருந்தாலும், அஃயானு'டைய அறிவுடனும், ஏகமாகத்தானிருக்கிறான். உண்மையாக, 'அஃயான்' அவனோடு உள்ளமையில் ஒன்றாகவும், கண்டிப்பில் வெவ்வேறாயுமிருக்கிறது. ஆகவே 'அடக்கிக்கொள்பவனும்'ம் 'அடக்கப்பட்டதும்' யதார்த்தத்தில் இல்லை. ஆனால் 'அடக்கிக்கொள்பவன்' ஆகவும் 'அடக்கப் பட்டது'மாயும் காட்சியளிப்பது ஒரே ஒரு 'அகமியம்'தான். இந்த பெருக்கம் கற்பனையில்தானேயொழிய அகமியத்திலன்று.

இருண்டஒளி 'ஜலால்'எனும் மகத்துவத்தின்தோற்றம். பிரகாசமான ஒளி 'ஜமால்' எனும் பேரழகின் தோற்றம். இருள் என்பதை நீ அறிவாயானால் அது 'தாத்துடைய' ஒளி எனக் காண்பாய் 'மாவுல்' ஹயாத்து எனப்படும் ஜீவ தீர்த்தமானது இருளில் தானிருக்கிறது'

தாத்து (லாஹூத்து) பண்புகளான 'சிபத்தின்' மூலமாகும். சிபாத்து(ஜபரூத்து)செயல்களான மலக்கூத்துடைய

பண்கள் அல்லது சிபாத்து.

மூலமாகும் செயல்களான 'அப்ஆல்' 'நாசூத்' ஆகிய 'அதர்' என்னும் குணபாடுகளின் மூலமாகும்.

'முதகல்லிமீன்' களுடைய கருத்தில் இது ஒருகற்பித மானது தத்தவ சாஸ்திரிகளிடத்தில் இது வானங்களும், கிரகங் களும் சுற்றலால் கொண்டு வரப்பட்டதாகும் சூபிய்யாக் களிடத்தில் துவர்க்கமற்ற 'அஜலி'யாகிய காலமும், முடிவில்லாத 'அபது' ஆகிய காலமுங்கூடிய 'பகா'வென்னும் தரிபாடு, நிலைபாடு, சாசுவதம் என்பதாகும் படைப்பும், அழிவும் அதில்தானிருக்கின்றன. வஸ்துக்களின் முன், பின் என்ப தெல்லாம் விவகார்த்தமாகவே; இல்லாவிடில் படைத்தலும், அழித்தலும் ஒன்றிலிருந்து ஒரே சமயத்தில்தான் என்பதாகும் காலம் என்பது அல்லா(ஹ்) உடைய தரிபாடான சிபாத்தாகும் அதற்கு முரண்டு முடிவுகளில்லை.

'புள்ளி' யின் சுழற்சிதான் காலமாகும் வருடங்கள், மாதங்கள், நாட்கள், நிமிடங்கள், வினாடிகள், யாவும் தரிபாடான காலத்தின் வகை விபரங்களாகும். ஆதலின் கடந்ததும், நிகழ்தலும் கேள்விக்கு புறம்பானவையாகும். ''லா இன்த றப்பீசபாஹுன்வமா ஸாஉன்'' (ஹதீது) 'றப்பு'டனே 'காலை' என்பதும், 'மாலை' என்பதுங் கிடையாது காலமானதும் நிலைபாட்டிலே நிலைபாடாயும், நிலையற்றதிலே நிலையற்றதாயுமிருக்கிறது.

'நுக்தா'வாகிய புள்ளி சதோதயமாயிருக்கிறது.

5-வது அத்தியாயம்

அஃயான் (அகமியங்கள்)

"வலில்லாஹில் மஷ்ரிகு வல் மக்ரிபு பஐன மா துவல்லூ பதம்ம வஜ்ஹுல்லஹ். இனல்லாஹ வாஸிஉன் அலீம்."

கீழ் திசையும், மேற்றிசையும் அல்லா(ஹ்)வுக்காயிருக்கும் நீ உனது முகத்தை எத்திசையில்திருப்பினும் அங்கு அல்லா(ஹ்)வுடைய முகமிருக்கிறது. நிச்சயமாக அல்லாஹுத்த ஆலா சகலவற்றையுஞ் சூழ்ந்த அறிவாளியாயிருக்கும். கீழ்த்திசை 'ஹக்கு'டைய 'அஸ்மா', சிபாத்தைக்குறிப்பதாகும்; மேற்திசை சூட்சும ஸ்தூல லோகங்களில் அவற்றின் (அந்த அஸ்மா, சிபாத்தின்) விருப்பங்களையும், நேட்டங்களையும் குறிப்பனவாகும். ஒவ்வொரு சிபத்தும் அதன் சொந்த கீழ் திசையாகிய இஸ்மே-இலாஹி (நாயக திருநாமம்)யில் உதயமாகிப் பிரகாசித்து. தன்னுடைய மேற் திசையான இஸ்மே-கௌனி (சிருஷ்டிப் பொருளின் அல்லது அடிமை திருநாமம்) யிலுள்ள தோற்றப்பட்ட வஸ்துவின் மீது அஸ்தமிக்கின்றது. இறுதிநாள் என்று பொதுமக்கள் கூறும் 'பஞ'வின் நிலைபாடான 'கியாமத்'தானது தரிபட்டபொழுது சூரியன் மேற் திசையில் உதயமாகும் (லுஹுருஷ்ஷம்ஸுமின் மக்ரிபிஹி); அதாவது, அஸ்மா சிபாத்துகளின் உதய ஸ்தானங்களை அஸ்தமன ஸ்தானங்களில் பெற்று தோற்ற ரவசவேயாம் மற்றொரு வகையாகக் கூறுமிடத்து. உள்ளதெல்லாம் ஒன்றேயான உள்ளமைக்கு கீழ் திசை அதன் அஸ்மா, சிபாத்தும், மேற் திசை பிரபஞ்சத்தின் தோற்றங்களுமாகும். இரு புறங்களிலும், அது அத்தியாவசிய தன்மையையும், இடம்பாடான தன்மையையும் பெற்றிருக்கின்றது இருபுறங்களாலும் நீ பார்ப்பாயாகில் தரிபாட்டில் தரிபாடானதாயும் மாறுதலுடையதில் மாறுந்தன்மையதாயும் 'ஹக்கு'டைய உள்ளமையையே நீ காண்பாய் ஷெய்கு இப்னு அரபீ (ரலி) சொல்லுவதுபோல் " அல் உஜூது பில்கதீப் கதீமுன், வபி ஹாதிது ஹாதிதுன்"

அஃயான் (அகமியங்கள்)

அல்லா(ஹ்)வின் அஸ்மாவாகிய திருநாமங்கள் அவனுடை அறிவில் தனித்தனி லோகங்களாக இருப்பவை. இதனையே சூபிய்யாக்கள் 'அஃயான் தாபித்தா'வென்றழைக்கின்றனர். தர்க்க சாஸ்திரிகள் 'மஅலூமாத்'தாகிய அறியப்பட்டவையென்றும், தத்துவ ஞானிகள் 'மாஹியத்து' என்னும் தாத்துகளான அகமியங்களென்று பலவாறுக அழைக்கின்றனர்.

அல்லாஹுத்த அலா கள் பேரிலுள்ள காதலால் ('அஃயான் தாபித்தர்') பிரதிபலித்தது முதல் தஜல்லியாகிய 'பைலே அக்தஸ்' (மகா பரிசுத்த கிருபை) என்பதாகும். இவை அவனது அறிவில் தோன்றலாயின. பிறகு அவன் "பைலே-முகதத்ஸ்' என்னும் 'பரிசுத்த கிருபை'யான இரண்டாம் தஜல்லியை அளித்தான். அவை வெளித் தோற்றங்களாய் தத்தம் விருப்பத்திற்கும், தேட்டத்துக்கும் தகுதிக்கும் தக்கவாறு பேதங்களுடனும், முரண்பாட்டுனுமான பண்புகளில் தோன்றலாயின.

வஸ்துக்களின் 'மாஹியத்து' என்னும் அகமியங்கள் அல்லது அறிவில் சமைந்த கோலங்கள் சிருஷ்டிகர்த்தாவின் சிருஷ்டிக்கும் பண்பைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்டவையல்ல. தத்தம் தேட்டத்திற்கும், விருப்பத்துக்கும் தகுதிக்கும் தக்கவாறு சிருஷ்டிகர்த்தாவிடமிருந்து 'மாஹியத்' தான அறிவன் கோலங்கள் அருள்மாரிகளைப் பெற்றன. வேற்றுமையாகவும், கணக்கற்றதாகவும் அவற்றின் தோன்றங்களுண்டாயின. உதாரணமாக, சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பும், கருவியும் ஆன்மாவிலிருந்து பலத்தைப் பெறுகின்றன. அறுல் தனது சொந்த சக்தியைத்தான் வெளிப்படசெய்கின்றது கண்ணனது பார்க்கும் தத்துவத்தைக் காட்டுகிறதேயன்றி கேட்கும் தத்துவத்தையன்று காது கேட்கும் தத்துவத்தையேயன்றி பார்க்கும் சக்தியையல்ல. இந்த தத்துவங்களான தகுதிகள் பூர்வீகமானவை.

அகமியங்கள் சிருஷ்டிகளுல் சிருஷ்டிக்கப்பட்டதல்ல. நடிகனுடைய நடிப்பு 'தகுதி'களுக்கு மாற்றமானதன்று

அஸ்ராரே அனல்ஹக்

'ஹக்'குடைய அறிவென்னும் பலகை 'உம்முல்கிதாபு') (கிரந்தங்களின் தாய்) ஆகவிருக்கும் ''லௌஹுல்-மஹ்பூல்'' என்னும் பாடமிடப்பட்ட பலகையாகிய 'கிதாபுல் முபீன்' (தெள்ளிய கிரந்தம்) ஆக அது வெளியீடாயிருக்கிறது இங்கு 'ஜிப்ரயீல்' (அலை) அவர்கள் 'ஹக்கு'டைய வார்த்தைகளைப் படித்து நபி (ஸல்) அவர்களுக்கு இறக்கி வைத்தார்கள். 'ஹக்கு'டைய 'தஜல்லி'யாகிய ஒளியின் சுடர் அல்லது பிரதி பிம்பம்முதன் முதல் 'ஜபரூத்' தின் நிலைமையாகிய உம்முல் கிதாபை அடைந்துதான் 'லௌஹுல் மஹ்பூல்' ஆகிய மலக்கூத்தின் நிலையின் மிகத்தாழ்ந்த எல்லை (இது ஆலம் மிதாலும், நப்ஸு குல்லியுமாகும்)க்கு இறங்குகின்றது ஜிப்ரீல் (அலை) அவர்களுடைய தானம் மலக் கூத்துக்கும். ஜபரூத்துக்கு மிடையில் (அதாவது சூட்சும, ஆன்ம லோகங்கள்) உள்ள எல்லையோரத்திலிருக்கிறது இந்த சடலோகத்தில் தோன்றும் எதுவும் முதன்முதல் இந்த பலகையில்தான் செதுக்கப்படுகிறது. ''லா றத்பின், வலா யாபஸின் இல்லா பீகிதாபின் முபீன்.'' கிதாபுல் முபீனில் எழுதப்படாத யாதொரு பசுமை அல்லது காய்ந்த வஸ்துவும் கிடையாது அலம் கபீரி-ல் நபி (ஸல்) அவர்களுக்குள்ள வஹீயைப்பற்றி இவ்வளவுதான் 'ஆலம் சகீரி'ல் 'ஔலியா'க்களுக்குள்ள இல்ஹாமை'ப் பொறுத்தவரை 'ஹக்'கிடமிருந்து அது 'ஸிர்ரு' 'கபீ' (ரூஹு) என்ற 'ஜபரூத்' தின் நிலைமையிலுள்ள இருதானங்கள் வாயிலாயும் இறங்குகின்றது (மலக் கூத்திலுள்ள) ளமீர், புஅசு, கல்பு (மனம்)க்கு மிறங்குகின்றது. 'லௌஹுல் மஹ்பூல்' ஆன 'ஒலி'யுடைய 'ஆலம்' மிதால்' – கல்பு – ஆக இருக்கின்றது

உள்ளமையானது கோலங்களாய்த் தோன்றுதற்கு கூறப்படும் வார்த்தை 'ஜிலா'வெனப்படும் தன்னுடைய இந்த கோலங்களை இந்த உள்ளமையினால் சாட்சியமாக அறியப்படுதலான ஷுஹூதுக்கே 'இஸ்திஜ்லா'வென்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது வித்தானது வேரினால் வேரைப்போலும் கிளையினால் கிளையைப்போலும் தோன்றுகின்றது இதுவே அதனுடைய 'இஸ்திஜ்லா' இதுதான் தனஜ்ஜுல் என்னும் இறங்குதலில் தன்னையேதானே சாட்சியமாக அறிதலாகும்.

அஃயான் (அகமியங்கள்)

உருஜ்' ஆகியபடி ஏற்றத்திலன்று. இந்த சாட்சியமாக
அறிதல் என்னும் 'ஷுஹூது' மறதியைக்கொண்டு வருகிறது.
அந்த மறதியை 'உரூஜ்' ஆகியபடி ஏற்றத்திலுள்ள இரண்டாம்
அறிவுதான். இதைப் போக்குகின்றது. இந்த நோட்டத்தால்
தான் துவிதமும், வேற்றுமையும் அடிமைத்தனமான
'உபூதிய்யத்தும்' ஏற்படுகின்றன.

'தாத்து' ஆகிய தத்சொரூபம் தன் பேரில் உதய
மானதே முதற் தோற்றமான 'தஜல்லி'யாகும். இது மகா
பரிசுத்தமும், சங்கையும் வாய்ந்தது இது தூய்மையான கிருபை
யாகிய 'பைழே அக்தஸ்' என்பதாகும். இங்கு அஸ்மா.
சிபாத்துகளுடைய அதி அந்தரங்க தத்துவங்களென்றும்
'ஷுஹூத்' உள்ளீடான (பாதின்) 'தா'த்தில் 'முன்தமிஜ்'
என்றும் ஐக்கியமடைந்திருக்கின்றன வெளியீடான (லாஹிர்)
தா'த்தின் தத்துவங்களாக அஸ்மா. சிபாத்துகள் அதனில்
ஐக்கியமடைந்து 'தாத்து' மாத்திரமே உணரப்படுவதாயிருப்பது
போன்றும் 'தாத்து' உணரப்படும்பொழுது வெளியீடென்றும்
'வாஹிரா'யிருந்தது அஃயான். அஸ்மா, சிபாத்து ஆகியவை
உள்ளீடான 'பாத்தினா'யிருந்தன இதற்கு மாற்றமானவகையில்
'தாத்து' 'பாத்தி'னாயிருக்கும்பொழுது அஸ்மா. சிபாத்து
(அறிவில்) வாஹிராக ஆகி. அவைகள் பூரணவும் 'தாத்'தால்
உணரப்படுபவையாயிருந்தன அஸ்மா. சிபாத்தை 'தா'த்
தினுல் அறிவில் அறியும் இந்த உணர்ச்சிதான வெளிப்படை
உள்ளையான 'வாஹிருல் உஜூது'டைய முதற் குறிப்பாகிய
'வஹ்தத்து' அல்லது 'ஹகீகத்து முஹம்மதுதீ' என்றழைக்கப்
படுகின்றது எனவே பாத்தினுல் உஜூதான 'உள்ளிடை
உள்ளமை'எல்லையற்றதாயும் மற்றும் அஸ்மா, சிபாத்துஎன்றும்
குறிப்புகளிலே அறிவில் மட்டும் தோன்றியதாயுமிருந்தது இது
வகை வகையாக வந்தபோது நான்கு கற்பனைகளான 'இஃதி
பாத்தே-அர்ப அ' என்னும் உஜூது (சத்து). இல்மு (சித்து)
நூர் (ஆனந்தம்-ஜோதி) ஷுஹூது (சாட்சாத் காரம்) என்று
விற்ற சிபாத்தும், அஸ்மாவும் அவ்வவற்றின் கோலங்களை
எடுத்துக்கொண்டதும் 'அஃயான் கரிஜா' அவற்றினின்றும்
வெளிப்பட்டு அறிவில்வஸ்துக்களாக ஆயின இந்தநிலைமையைத்

தான் 'வாஹிதிய்யத்து' அல்லது அறிவில் மறைந்திருந்த இரண்டாங்குறிப்பென்று அழைக்கப்படுகின்றது. இதன் பின்னர் அறிவிலுள்ள இரண்டு நிலைமைகளான 'உலூஹிய்யத்து' (நாயகத் தன்மை)யை 'ருபூபிய்யத்து' (இரட்சகத் தன்மையின் தோற்றம்)விலிருந்து பிரிக்கப்பட்டதும் அஸ்மாயெ-இலாஹி) ஆளும் திருநாமங்கள் என்னும் நிலைமையும் (அஸ்மாயெ கியானி) ஆளப்படும் திருநாமங்கள் என்னும் நிலைமையும் ஏற்பட்டன. (ருபூபிய்யத்து) துவங்கிய பொழுதுள்ள தோற்றத்தின் நிலையே: 'பைலே முகத்தஸ்' என்னும் புண்ணிய கிருபை என்றழைக்கப்படுகிறது. இந்த நிலை 'வாஹிதிய்யத்'திலிருந்து மண் மண்டலம்வரை வியாபித்திருக்கிறது. இவைகளே ஹகீகத்து முஹம்மதீ'யுடைய வகை விபரங்களாகும் இதனாலேயே நாயகம் (ஸல்) அவர்கள் ''அனமின் நூரில்லாஹி வகலக குல்லூ ஹம்மின் நூரி'' நான் அல்லா(ஹ்)வின் 'நூ'ரிலிருந்துமுள்ளவன் சகல படைப்பினங்களும் எனது நூரில் நின்றுமாயிருக்கும், என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொரு வஸ்தையும் 'றசூல்' (அல்லாவால் அனுப்பி வைக்கப்பட்டது) அல்லது 'பர்ஜக்' (இரு நிலைகளுக்குமிடையிலுள்ள பிரிவினை) என்ழைப்பது சரியேயாகும். நாயகம் (ஸல்) ஏனைய 'பர்ஜக்'குகள் வெளியீடாகும். 'பர்ஜகே-ஜாமி' ஆன தொகுப்பான பர்ஜக்காய் இருக்கிறார்கள் ஒரு பர்ஜக்கானது கோலமெடுக்கும்பொழுது முந்திய நிலைமைவிட கண்டிப்பான ஒரு கோலத்தையே எடுக்கிறது. முந்திய கோலம் பிந்தியதின் அகமியமாக ஆய்விடுகிறது. எனவே 'குல்லி'யான அடங்கலும் 'ஜுஸ்இய்'யான ஒவ்வொரு அணுவிலும் பிரதி பிம்பிக்கிறது.

கோலங்கள் அல்லா(ஹ்)வின் ஞானத்திலேதரிபாடான ஸ்தாபிதத்தைப் பெற்றிருக்கின்றன அவர்கள் பரிபூர்ணமான இல்லாமையல்ல. ஏனெனில் இல்லாமையான வஸ்துவாக ஆக முடியாது பரிபூர்ண உள்ளமைக்கும். 'தாத்து'டைய உள்ளமைக்கும் எதிராக வஸ்துக்களால் பெறப்படுகிற உள்ளமை பொது உள்ளமையாகும். ''குன் தும் அம்வா தன் பஅஹ்யாகும்?'' நீங்கள் மரித்திருந்தீர்கள், அவன் உங்களை

அறிவாளன் (அனைவரியங்கள்)

உயிர்ப்பித்தான். அதாவது, நீங்கள் வெளிப்படாதிருக்கையில் தனது உள்ளமையால் உங்களுக்கு உள்ளமையளித்து வெளிப் படுத்தினான். எவ்வாறு அவன் அறிவில் தரிப்படச் செய்தானோ அவ்வாறேயாம்.

அஸ்மா என்றும் (பல தன்மையைப் பெற்ற) இஸ்மு என்றும் சொல் சாய்ந்து வைத்தல் அல்லது புள்ளி வைத்தல் என்ற அர்த்தங்களைக்கொண்ட 'வஸ்மு' என்பதிலிருந்தோ அல்லது உயர்த்தல் அல்லது உன்னதமாக்கல் என்ற பொருள் கொண்ட 'சமு' என்பதிலிருந்தோ எடுக்கப்பட்டது. 'தாத்து'டைய குறிப்பான ஒரு அம்சத்திற்கு 'அஸ்மா' உன்னதமளிக்கிறது. அதை அந்த தாத்திற்கு அதிகப்படியோ அல்லது விசேஷ வளர்ச்சியோ அல்ல. எந்த அம்சமானது சமய சந்தர்ப்பத்துக்கு தக்கவாறு பிரதானமாயிருக்கிறதோ அந்த அம்சம் ஒன்று செயல் சம்பந்தப்பட்டதாயும், அல்லது குண சம்பந்தப்பட்டதாயும், அல்லது தாத்து எனும் தத்சொரூப சம்பந்தப்பட்டதாயுமிருக்கவேண்டும். செயல் சம்பந்தப்பட்ட 'இஸ்மு' அந்த முடிவடையப்பட்டவேண்டிய ஒரு வஸ்துவைத் தேடுகிறது. அம்மாதிரி வஸ்துவின்றி அதன் குணப்பாட்டை அறிய முடியாது. உதாரணமாக 'ரஹ்மான்' என்றும் 'கிருபையுடையவன்' என்ற 'இஸ்மு'க்கு கிருபை செய்யப்படவேண்டிய தேவைப்படுகிறது. இந்த வகையைச் சேர்ந்ததே 'பாரிஉ' என்றும் காரணகர்த்தனும், 'ஹாபிழு' என்றும் 'கண்காணிப்பவனும்' 'காலிக்கு' என்றும் 'படைக்கிறவனும்' 'முஸவ்விர்' என்றும் ரூபகரப்படுத்துகிறவனுமாயிருக்கிறான். எந்த 'இஸ்மு' ஒரு 'முஸம்மா' (வஸ்து) வைத்தேடாது பண்பை மாத்திரம் குறிப்பதாயிருக்கிறதோ அது அஸ்மாயெ-ஸிபாத்தி என்னும் பண்புத் திருநாமங்களாயிருக்கின்றன. உதாரணமாக, 'ஹய்யுன்' என்றும் உயிரளிப்பவன், காதிர் என்றும் சக்தியுடையோன் 'உக்பீர்' என்றும் 'மர்மங்களை அறிபவன்' என்பதாம்.

தாத்தை மட்டுமேயன்றி மற்றவைகளை குறிக்காதவை 'அஸ்மாயெ-தாத்தி' என்றும் தாத்து திருநாமங்களாகும். உதாரணமாக, 'முஹைமின்' என்றும் 'பாதுகாப்பவன்

'றப்' என்னும் இரட்சகன் 'லாஹிர்' என்னும் வெளியீடானவன், 'ஹக்கு' என்னும் 'மெய்ப்பொருளானவன்' 'சமது' என்னும் தேவையற்றவன், நூர் என்னும் ஜோதி ஆகியவையாம் ஒரு பண்பையுங் குறிப்பிடாத அல்லா(ஹ்) உடைய திருநாமம் ஏதும் இல்லை ' திருநாமம் தாத்துடைய குறிப்பிட்ட ஒரு அம்சத்தை பிரதானப்படுத்தி வைப்பதாகும். ஆகையால் திருநாமங்கள் தாத்தின் மீது யாதொரு அதிகப்படியுமன்று. தரிபாடான புண்ணிய 'அஃயான் தாபித்தா' வாயிருக்கும். வாஹிதிய்யத்துடைய நிலைமையில் தோற்றமாயிருக்கும். 'அஃயான்' மீது அருளப்படும் உள்ளமையே பைலே-அக்தஸ் என்னும் புண்ணிய கிருபையாகும் இது 'அஃயான்' மீது விவரிக்கப்படும்போது உள்ளமையாகும். பரோட்ச ஞானிகளோ இதனை 'மாஹிபத்து' (அஃயான்)க்கு ஒரு அதிகப்படியான கூடுதல் என்று வாதிக்கிறார்கள் பரிபூர்ண உள்ளமை இதனை விட்டும் கடந்ததாயிருக்கிறது. வெளிப்படையிலான 'அஃயா' னுடை அகமியமாகிய இந்த பொது உள்ளமையை அகமியங்களென்றும் கண்ணுடிகளின் மீது பிரதிபலித்த ஆன்மா வென்று ஷெய்கு அபுல்ஹசன் அஷ்அரீ அவர்கள் சொல்லு கிறார்கள் ஷெய்கு முஹிப்புல்லா(ஹ்) அவர்கள் விளக்கி வைப்பதாவது:- ''தஸ்விய் பைனல் கிளாபத்துல் உஜூது'' இந்த வெளியீட்டிற்கு முன்பு பரிபூர்ணத்தை 'பொது உள்ளமை' யுடன் இணைக்கப்படவில்லை

அறிவிலுள்ள அஃயானுக்கு எந்த கட்டளை உண்டானதோ அதே வெளிப்படையில் கோலங்கொண்டது. ஒவ்வொரு 'ஐனும்' (வஸ்து) ஒரு இஸ்மின் தோற்றமாகும் அதனை யோஷிக்கிற ஒரு இஸ்முடைய தோற்றமாகவேதான் ஒவ்வொரு வஸ்துவுமிருக்கிறது அந்த இஸ்முதான் தோற்றமாகிய வஸ்துவின்முன் நெற்றிரோமங்களைப் பிடித்து வழி காட்டு கிறது. ''வமாமின் தாபத்தின் இல்லாஹுவ ஆகிதுன் பிநுசியதிஹா இன்னறப்பீ அலாசிராத்தின் முஸ்தகீம்'' தத்தம் 'றப்பு'டைய கையில் ஊர்வனவற்றின் முன் நெற்றி உரோமமிருக்கிறது. நிட்சயமாக 'றப்'பாகிறவன் நேரான பாதையின்பேரிலாயிருக்கிறான். இதுதான் அஸ்மாவின் பாட்டை

அஃயால் (அகமியங்கள்)

யாரும். 'ஹாதி' என்னும் இஸ்மு ஒருவனை நேர் வழியிலும், 'முதில்லு' என்னும் இஸ்மு வழி கேட்டிலும் நடத்துவதன்றி ஒன்றை ஒன்று. தடை செய்வதில்லை' ''மன் யுதில் ஹூ வலஹாதியலஹூ'' யாரை அவன் வழிகெடச் செய்கின்றானோ அவனை யாரும் நேர் வழியிலாக்க முடியாது. வழி கேட்டிலாக்கப்பட்டவன் தனது சொந்த 'றப்' பின் பொருத்தத்தை பெற்ற போதிலும் 'றப்பு' களுக்கு 'றப்'பான 'றப்புல் அர்பாபு' டைய வெறுப்பைப் பெற்றுக்கொள்கிறான். வெறுத்துத் தள்ளப்பட்டவை தங்கள் விதி வசத்தைப்பற்றி நியாயத் தீர்ப்பு நாளித் முறையிடுங்காலை அவர்களின் அஃயானுடைய அகமியங்களை அவர்களுக்கு காட்டப்படும். (எனவே, சூரியன் அந்த நாளில் மேற்குத் திசையில் உதயமாகும்.) அந்த (அஃயானுன) அகமியங்களுக்கு. அதாவது அறியப்பட்டவற்றிற்கு அல்லாஹ்வின் அறிவு ஐக்கியப்பட்டதாகும். ''லாதப்தீல லிகலிமாதில்லா(ஹ்)'' அல்லா(ஹ்) வார்த்தைகளை மாற்றல் கிடையாது வெறுக்கப்பட்டவர்கள் தங்கள் அகமியங்களுக்கு தலைசாய்ப்பார்கள். அவர்களுக்கு வேதனை (அதாபு) அவர்களுக்கு இன்பமாகும் ஏனெனில், இந்த தலை சாய்த்தலால் (ஏளா-பி-களா) நெருப்பின் தன்மையுடைய நெருப்பில் வாழும் பல்லிக்கு நெருப்பு அதன் இனமாக ஆவதுபோல் அவர்கள் சாந்தியையும், இன்பத்தையும் பெறுகின்றனர்.

ஏகதன்மையில் சிபாத்தினுடைய பல தன்மையால் 'தாத்து' பலவாருய்விடவில்லை. ஏனெனில் ஏகதன்மையில் அவனுடைய அந்தமே அவனுடைய ஆதி. அவனது ஆதியே அவனுடைய அந்தம் அவனுடைய அகமே அவனுடைய புறம் அவனுடைய அகம் அவனுடைய சகல அம்சங்களும் ஒரே அபசம்தான். !இல்லாவிடில் பலவாறன பேதமும், முரண்பாடுள்ள அம்சங்கள் ஒன்றிவிருக்கமுடியாது. 'தாத்து'டைய ஏகத்தன்மையிலே பலவாறன சிபாத்தும் ஏகமாயிருக்கிறது. எனவே முறண்பாடான அவற்றின் தோற்றங்கள் ?தாத்தின் ஏகத்தன்மையில் ஒன்றாகத்தானிருக்கின்றன ஷெய்குல் அக்பர் அவர்கள் ''பிகுல்லிஷைஇன் பிகுல்லி ஷைஇன்'' சகல

வஸ்துகளிலும் சகல வஸ்துகளும் எல்லாம் இங்கு ஒரே உள்ள மையும் ஒரே 'தாத்து' மாயிருக்கிறது.

'இஃதி பாரத்து' (கற்பனைகள்) அஃயானின் தகுதி களுடைய விருப்பங்களை அறியும் 'தாத்து'டைய ஞானமே ஒரு இஃதி பாராகும். 'வஹ்தத்' துடைய நிலைமையில் அஃயா னுடைய தகுதிகள் 'தாத்து' தானாகும் அறிவு உதயமானதும் அவை அறியப்பட்டவையாயிற்று. அவை வெளிப்படையில் தோன்றியபொழுது வஸ்துக்களின் அகமியமாகவும், படைக்கப் பட்டவையுமாயிற்று. கடைசி நிலைமையில் கற்பனையான அநேகத் தன்மையான உண்மையான அநேகத் தன்மை 'கத்ரத்து' ஆக ஆனது. ஏனெனில் இந்த 'கத்ரத்தி'ல் 'தாத்து' தானே தன் மீதில் தோற்றலானது. இந்த பலவாருன 'தாத்து'கள் சதா தரிபட்டிருக்கும்.

'ஹக்கு'டைய அறிவில் அகமியங்களாயமைந்த 'அஃயான் தாபித்தா' அறிவில் லோகங்கொண்ட (உஜூதே இல்மி) பிறகு அவைகளின் லோகங்களுக்கும், விருப்பங்களுக்கும் தக்கவாறு பரிபூர்ண உள்ளமை வெளியில் தோன்றியது. (உஜூதே லாஹிரி) வெளியரங்கத்தில் 'ஹக்கு'டைய 'உஜூ'தைத் தவிர யாதொன்றுங் கிடையாது. அஃயானோ 'அதம்' என்னும் இன்மையாகவே இருக்கிறது மன்றி உள்ளமை யென்னும் வாடையையக்கூட முகரவில்லை. ஆகையால், தாங்க ளாகவே வெளிப்படையில் அவைகள் உள்ளமைப் பெற்றதல்ல.

பரோட்ச ஞானி என்னும் உல்மாவின் அறிவு வார்த்தைகளும், அவற்றின் அர்த்தமுமாயிருக்கும் ஆரிபின் அறிவோ எனில் 'அஸ்மா'வையும் அவைகள் சுட்டிக்காட்டும் வஸ்துக்களை உணர்வதாயிருக்கும்.

நப்ஸின் வெளிப்படை துவிதமாகும், அதன் அகமியம் தௌஹீதான அத்வைதமாகும், ஒரு ஹதீதுபடி:- "அரப்து ரப்பீபிரப்பீ" என்னுடைய "றப்பை" எனது 'றப்'பை கொண்டே நான் அறிந்தேன்.

6-வது அத்தியாயம்

ஆன்ம லோகம் - ஆலமுல் அர்வாஹு

மலாயிக்கத்துகளாகிய தேவதூதர்களின் ரூஹு ஆகிய மானிடனின் ஆத்மாவின் தன்மையைப் போன்றதன்று ஜபருத்து 'ரூஹு'; ஏனெனில் அது (மானிட ரூஹு) மகா (காரணம்) லாஹூத்து (மகாகாரணம்) ஆகியவற்றின் உன்னத நிலைமைகளை அடையப் பெறுகின்றது; மலாயிகத்துகளோ குறிப்பிட்ட நிலைமையை மட்டும் பெற்றிருக்கின்றனர். "வலஹும் மகமுன் மஃலூம்" அவர்களுக்கு அறியப்பட்ட (குறிப்பிட்ட) ஸ்தானம் உண்டாயிருக்கின்றது 'மிஃருஜு'டைய இரவிலே நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுடன் அந்த பெரிய அத்தி மரமான 'சிதுரதுல்-முன்தஹா'க்கு அப்பால் ஜிப்ராயீல் (அலை) அவர்களை தங்களுடன் கூடவருமாறு அழைத்தற்கு வானவர்க்கரசர் கூறிய பதிலிலிருந்து இதனை நன்கு விளங்கிக் கொள்ளலாம். "மயிரிழையேனும் உயர்ந்து நான் பறப்பேனேயானால் மகிமை தன் சுடர்கொண்டு என் சிறகு பொசுக்கப்படுவேன் (ஸஅதி) மானிடனின் ஆத்மா தெய்வீகமாகவும், புறத்தோற்றமும், 'அறூஹு' என்னும் நான் ஆத்மா' என்பதினுடைய இரகசியத்திலே 'ஹக்கு'டைய கண்டிப்புமாகும். அந்த புறந்தோற்றம் என்று ஈண்டு குறிப்பிட்டது அகமியமேயாகும்.

ஒரு வித்துப் பல்வேறு வயல்களாகத் தோன்றுவது போன்றும், ஒரு ஜ்வாலையானது தன்னைப் பல சிறப்பட்ட ஜ்வாலைகளாகத் தோற்றுவது போன்றும், ஒரு மனிதன் தன்னை பலகோடி மானிடர்களாக வெளிப்படுத்துவது போன்றும், ஒரு வஸ்து தன்னை தன் மீதே பல்வேறு விதவிதமான லோகங்களிலே தோற்றுவிப்பதையே 'தஜல்லி' என்று அழைக்கிறோம் இதுவோ இரண்டறக் கலத்தலாகிய "இத்திஹாது"ம் ஒரு வஸ்து மற்றொன்றினூடே நுழைதலாகிய 'ஹுலூலு'ம் அன்று ஆதலின் பூதலோகத்திலே இவ்வாறாக ஆத்மாவானது 'தஜல்லி'யாகி இருக்கின்றது சில வேளை சரீரமல்லாத பிற கோலத்திலேயும் காட்சியளிக்கின்றது தன்னை தனக்குத்தானே தோற்றுவித்துக்

கொண்டு. சரீரத்தின் புறம்பேயும் கோலமெடுத்து சரீரத்தை விட்டும் தான் வேறு என்பதாயும் காட்டுகின்றது. எனவே, சரீரத்திலும், சரீரத்துக்கு புறம்பேயுமிருக்கிறது யதார்த்தத்தில் சகல சரீராதிகளும் அதனுடைய ஆடைகளாகும். ஆத்மாவுக்கு மூவ்வகை ஆடையுண்டு அவை யாவன:- (1) ஸ்தூல (2) சூட்சுமம் (3) ஆன்ம சரீரங்களாம். மனிதன் பூத உடலைத்தான் பார்க்கிறான். ஆனால், அவன் அப்பியாஸ முறைகளையும், வணக்கங்களையும் கடைபிடிக்குங்காலை, சூட்சும சரீரமானது ஸ்தூல சரீரத்தினின்றும்வெளிபட்டு பார்ப்பவனும், பார்க்கபடுபவனுமாக ஆகிவிடுகின்றது. அப்பொழுது மனிதன் அதை 'கைர்' ஆகிய வேறு பொருளாகக் கருதுகின்றான். ஆயினும் இங்கு யாதொரு 'வேறு' என்னும் 'கைர்' கிடையாது இவ்வாறாக தன்னையே ஓராயிரம் கோலங்களில் பார்க்க அவனுக்கு முடியும் சந்தேகமின்றி ஒன்றே ஒன்றான ஆத்மாவினுடைய ஆடையே இப்பிரபஞ்சம் பூராவும். சரீரம் அதன் ஆடை அதனுள் மறைந்த மற்றொரு ஆடையும் அந்த ஆத்மாவுக்கு உண்டு அதுவே அதன் சூட்சும சரீரம். கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பம் தான் இந்த சரீரம். இயற்கை மரணத்திலே சரீரம் மரிக்கிறது. வம்பித்த மரணத்தின்போது அவ்வாறு மரிப்பதில்லை பிந்தியதான வம்பித்த மரணத்தில் சரீரம். மனம். ஆத்மா இம்மூன்றும் சமமாக தெளிவுபடுத்தப் படுகின்றன. சரீராதி, பொறிகளின் சம்பந்தம் அப்பொழுது அதற்கு குறைவாக இருக்கின்றன- தன் ஸ்தூல சரீரத்தினின்றும், ஸ்தூல உடுமானத்துக்கு பகரமான சூட்சும உடையில் தன்னை தான் தனக்கே காட்டிக் கொள்கின்றது. வம்பித்த மரணத்தின்போது சூட்சும கோலம் ஸ்தூல சரீரத்தை விட்டும் துண்டித்து கொள்வதில்லை. சொப்பனத்தில் சூட்சுமம் தொலை தூரங்களுக்கு சென்று விடுகின்றது ஒரு ஈ கடித்தவுடன் ஒருநொடியில் ஸ்தூல சரீரத்திற்கு மீண்டு விடுகின்றது இந்த முறையில் நாயக (ஸல்) அவர்களுடைய 'மிஃராஜை' சிந்தித்துப் பார். அன்னாரின் படுக்கை அவர்கள் திரும்பி வந்ததும் சூடாகவே இருந்தது.

ஆன்ம லோகம் - ஆலமுல் அர்வாஹு

சர்வலோகங்களும் ஆத்மாவின் ஆடை அல்லது உறை
களாகும். 'தஜல்லி'யிலிருக்கும் வஸ்துவை 'தஜல்லி'யாத்
தானது பெருக்குவதில்லை, 'தஜல்லி' என்பது தன் சுய
கோலத்தைக் காட்டாது. பொய்த் தோற்றமளிப்பதாகும்.
பல்வேறு திரிகள் ஒரே விளக்கினின்றும் கொளுத்தப்பட்டாலும்
விளக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பதில்லை. சடம் என்பது
ஆன்மாவே; பனிக்கட்டி என்பது தண்ணீர், அல்லது நீர்
ஆவியே. ஒன்றின் தடிப்பிலும், மற்றொன்றின் தடிப்பின்மை
யிலும் தான் பேதமுண்டாயிருக்கிறது ஆன்மா சரீரத்திலுட்
பிரவேசிப்பதில்லை; ஆனால் ஒரு ஜடம் போதிய பக்குவத்
திலான பொழுது தன்னில் தானே தன்னைத் தோற்றுவிக்
கிறது. ஆன்மா ஒரு சவாரைப் போலும், சரீரம் ஒரு
குதிரை போலுமிருக்கின்றன. ஆன்மாவுடையவும் சரீரத்தி
னுடையதுமான அசைவுகையினதும், சரவியினதுமான
அசைவைப்பொருத்திருக்கின்றது. "அர்ருஹு ஹுவல்லா(ஹ்)
லாதத ஹர்ரக தாராதின் இல்லபி இத்தனில்லா(ஹ்)"
ஆன்மாவே அல்லா(ஹ்)வாகும் அல்லா(ஹ்)வின் உத்திரவு
கொண்டேயொழிய யாதொரு அணுவும் அசைவதில்லை.
'ஹக்கு' தன்னை பார்க்க நாடியபொழுது ஒரு புறத்தில பிர
காசமும், மறுபுறத்தில் இருண்டதுமான கண்ணாடிகளை அவன்
விரும்பினான். மனிதர்களின் சரீரங்கள் ஒரு புறம் பிரகாசமும்
மறுபுறம் பிரகாசமின்மையுமான 'கல்பு' என்னும் மனங்களைப்
பெற்றிருந்தன. பிரகாசமிக்க பாகத்திலே அவன் தன்னை
தோற்றுவித்தான். 'கல்பு' எவ்வளவுக் கெவ்வளவு பிரகாசம்
பெற்றிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு தெளிவாக அது
'ஹக்'கைப் பிரதிபலிக்கிறது. 'கல்பு'களைப் பொருத்தவரை
தான் பல்வேறு தன்மையுண்டாயிருக்கிறது. பார்ப்பவனைப்
பொறுத்தன்று எனவே 'ஹக்கை'ப் பிரதிபலிக்கும் ஆத்மா
ஒன்றேயாகும். பிரதிபிம்பத்தில் 'ஹுலூல்' அவதாரம் அன்று
கண்ணாடியின் பிரகாசம் பார்ப்பவனது முகத்தைப் பிரதிபலிக்
கின்றது. 'கல்பி'னது கண்ணாடி ஒரு புறத்தில் ஜடப்பொருள்.
ஆசை என்னும் இருளால் மூடப்பட்டிருக்கிறது இவ்வாறே
தான் பார்ப்பவனின் பார்வை மீதே மீட்டப்படுகிறது. ஆதலின்
பிரதிபலித்தல் என்பது ஒரு வெறும் வார்த்தையே அது

எதார்த்தத்தில் இல்லாததொன்று. அது பார்ப்பவனின் முகம் பார்க்கப்படுதலாம். முகம் ஒன்றேயாயினும் முகங்கள் பலவாருகத் தோன்றுவது கண்ணுடிகளின் பெருக்கத்திஞல் தான். அளவும், அமைப்பும் நிறமும் பலவான பலதிறப் பட்ட கண்ணுடிகளின்றி ஒருமுகம் பலவாகத் தோன்ற வழி இல்லை. இங்குதான் பார்ப்பவன் ஒரு வஸ்து பலவாக ஆகிறதென்று தவறுதலாய் நினைத்துக் கொள்கிருன். ஒன்றை பலவாகநோட்டமிடுதலேரூஹு(ஆத்மா)அல்லது ஷரிஅத்துப்படி 'அம்ரு-ரப்பி'யும், 'தஸவ்வு'பில் தஜல்லியுமாகும். உண்மை யில் 'தஜல்லி'யாகிறது ஒரு வஸ்து தனக்கே தன்னைக் கொண்டு பிரதிபலித்து தன்னையே தோற்றுவிப்பதாகும். எனவே இந்த 'நப்ஸு' என்னும் தன்மையை நோட்டமிடுவதற்காக வேண்டி அவன் தன்னினின்றும் பிரகாசம் பொருந்திய பாக மான 'கல்பு' (மனம்) என்ற நாமமிடப்பட்ட கண்ணுடியையும் இருண்ட பாகமான 'காலிப்' (சடம்) என்றழைக்கப்படும் கண் ணுடியையும் உண்டு பண்ணிஞன். கண்ணுடியும், பிரதிபிம் பமும், பார்ப்பவனும் ஒரே 'அகமியம்' தான். பார்ப்பவன் தனது பேரழகாகிய அமிர்த பானத்தை அருந்தி அனந்திப்பதில் தாகசாந்தியடைந்து விடுவதில்லை காலவரையறையின்றிய நித்திய காலமும் அந்தப் பேரழகைக் காணும் ஆவல் தீராது. சதா அவனைத் தேடிக் கொண்டேயிருப்பான் பார்வையாகிய 'ஷுஹூ' கிலே கண்ணுடி பங்கெடுத்துக் கொள்வதில்லை பிரகாசமும். இருளும் பார்வையாகிய 'ஷுஹூ'தினுடைய கருவிகளாகும். 'கல்பு'டைய இருண்டபாகம், அகன் பிரகாச பாகத்தின் தடிப்பும், பருமனுமாகும். இல்லாவிடில், இங்கு யாதொரு கருமையுங் கிடையாது எதுபோன்றெனில். தண்ணீர் தடித்து பனிக்கட்டி ஆவது போன்றும் தண்ணீரினுள் பார்வை செல்கிறது பனிக்கட்டியினுள் அவ்வாறில்லை. பிரகாச மட்டுமோ, அல்லது இருள் மட்டுமோ இருந்தால் 'ஷுஹூ'து என்னும் பார்வை ஏற்பட மார்க்கமில்லை பிர காசத்திறைடே கிரணங்கள் ஊடுருவிச் சென்று பிரகாசமின்மை யான கண்ணுடியின் பின்பிறத்தைக் கொண்டு தடுக்கப்பட்டு பிரதிபலிக்கின்றன. 'ஹக்கு' தன்னை தனது பிரகாசமான சரீ ரங்களான மலக்குகளாகிய தேவ தூதர்களிலும், இருண்ட

ஆலமுல் அர்வாஹ

ஆலம லோகம் - ஆலமுல் அர்வாஹ

சரீரங்களான மிருகங்களிலும் பார்க்க முடியாது. மானிடனே தன்னில் ஒளிவான பாகத்தையும், இருண்ட பாகத்தையும் பெற்றிருக்கிறன். இதனுலேயே 'ஹக்கு'டைய பிரதிபிம்பத் துக்கு தக்க கண்ணுடியாகவும் அவனுடைய ஜோதியைப் பெறும் தகுந்த பாத்திரமாகவும் மனிதன் ஆகியிருக்கிறன். மனி தர்கள் 'ஜின்'களை இவ்வுலகில் பார்ப்பதில்லை. ஏனெனில் அவர்கள் ஒளியினுலான சரீரமுடையவர்கள். அந்த ஒளி யினூடே மனிதர்களின் பார்வையானது பீறிச் சென்று விடுகின் றது. மறுமையில், ஜின்கள் மனிதர்களைப் பார்க்க சக்தி பெற மாட்டார்கள் ஏனெனில், மனிதர்களின் சடலங்கள் ஜின்களை விட மிகுந்த பிரகாசத்தையும், ஒளியையும் பெற்றவையா யிருக்கும்.

''வபி அன்புஸிகும் அப்லாதுப்ஸிரூன்'' அவன் உங்கள் உள்ளங்களிலேயிருக்கிறன். எனினும், நீங்கள் அவனைப் பார்ப் பதில்லை. 'லகத்ஜா அகும்றஸூலுன் மின் அன்புஸிகும்' உங் களில் நின்றும் நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம் என்ப தானது 'சாலிக்' ஆகிய மூமீன்களின் ''அனிய்யத்து'' எனும் தன்மையாகிய 'நான்' என்பது இறைவனின் 'ஹுவிய்யத்து' என்னும் 'அவன்' என்கிற படர்க்கை ஒருமையிலிருந்து தோன் றிய ஒரு தூதுவன் என்பதைக் குறிக்கிறது. எனவே ''லாயஸ் அனி அர்லீ வலா சமாஇ வலாகின் யஸ்அனீ கல்பி அப்துல் முஃமின்' என்ற ஹதீது பிரகாரம் ''வானத்திலும், பூமியிலும் என்னை அடக்கிவிட முடியாது. ஆனல் மெய்யான ஓர் நன் நம்பிக்கையாளனின் உள்ளத்தில் அடக்கப்பட முடியும். 'ரூஹு' என்னும் ஆத்மா தெய்வீக இராஜதானியின் சுமைதூக்கியாயிருக்கிறது. அது தன்னையும் பிறரையும் இறைவனிடம் நெருங்கச் செய்கின்றது ஆகை யால் உன்னை இறைவனது ஒரு தூதனுக பாவித்துக் கொள். மனிதனின் அகமியம் 'அவசியத் தன்மை'யையும், 'அநுமானத் தன்மையையும் தனது இரு புறங்களிலும் பெற்றிருக்கின்றது. ''பைனுல் அஸ்பஇனி மின் அஸாபி உர்றஹ்மான்.'' இறை வனின் விரல்களினின்றும் இரு விரல்களுக்கிடையில் என்ற ஹதீது இதற்கேயாம். திருக்குர்ஆனின் திருமொழியான

அஸ்ராரே அனல்ஹக்

'லகத் கர ரம்ஞ பனீ ஆதம வஹமல்ஞ ஹும் பில்பர்ரி,- வல் பஹ்ரி.'' நாம் ஆதமுடைய சந்ததிகளை ஆசீர்வதித்து தரைக்கும், கடலுக்கும் அப்பால் அவர்களை எடுத்துச் சென்றோம்'' இதற்காகவே, அபூபக்கரும், பாரூக்கும் 'ரூஹா' என்னும் ஆத்மா 'குன்' - (ஆகு) என்ற கட்டளைக்குட்பட்ட தன்று-அக்ரூஹுலா துத்கிது தஹ்கிருன்' என்று சொல்லி யிருக்கிறார்கள். எனவே, 'அஸ்ஸுபிலம்யுக்லக்' 'சூபி'யான வர் படைக்கப்பட்டவரன்று.

சர்வ ஆன்மாக்களுக்களும் 'ஆத்மீகத்தன்மையில்'யில் ஒன்றே ஒன்று. எவ்வாறு சூரியன் பல்லேறு வஸ்துக்களின் மீது பிரகாசித்தபோதிலும் அவற்றின் தன்மைகளைப் பங்கெடுத்துக் கொள்ளாதிருக்கின்றதோ அவ்வாறே ஆத்மா சரீராதிகளுடைய சம்பந்ததிஞலேயே பலவாருக ஆயிருக்கின்றது. சகல நற்குணங் களும் ஆத்மாவைச் சார்ந்தது. துற்குணங்கள் சரீரங்களின் சம்பந்தத்திஞல் ஏற்பட்டவை. யதார்த்தில் அதன் சகல நற் குணங்களும் ஆலம் மலகூத்து என்னும் சூட்சும லோகத்தைச் சேர்ந்தவை ஆத்மாவின் சுயமான குணம் 'இர்பான்' என்னும் மெய்ஞ்ஞானமாகும். வெளியீட்டிற்கு முன்னர் ஆத்மீகத் தன்மை 'தாத்து'டன் ஏகவஸ்தாயிருந்தது. அலையாதிகள் சமுத்திரத்துடன் வெளியீட்டுக்கு முன்னர் ஏகமாயிருந்தன. யதார்த்தில் அலைகள் கடலாகவும், கடல் அலைகளாகவு மிருக்கின்றன வித்தியாசம் வெறும் ஹேஸ்யமே. ''லாதப்ரீகபைனீ வபைன றப்பீஇல் லாபிஸிபத்துன் உஜுது மாமின்ஹு'' ''எனக்கும், எனது யிறைவனுக்குமிடையில் சிபாத்து என்னும் பண்பிலேயே யொழிய யாதொரு பேதமுல்லை எனது உஜுது என்னும் உள்ளமை அவனிட மிருந்தே''; தாத்தும்'' சிபாத்தும்' பூர்வமானதே. இல்லாவிடில் சாத்தியமில்லாத இரு 'கதீம்' என்னும் பூர்வப் பொருட்களை உண்டுபண்ணும், அப்பொழுது (தாத்து) உள்ளமைக்கு உள்ளமையாயினின்றும் உள்ளமைப்பெறும். 'சிபாத்து' தனது சொந்த உள்ளமையி லிருந்து உள்ளமையடையும் அவ்வாறு ஏற்படுதல் அசாத்தியம்) நாயகம் (ஸல்) அவர்கள் ''மன்ரஆனி பகத்ராஉல் ஹக்கு''

ஆன்ம லோகம் - ஆலமுல் அர்வாஹ்

எவனொருவன் என்னைக் கண்டானோ அவன் திட்டமாக 'ஹக்'
கைக் கண்டவனாகும். என்று அருட் செய்திருக்கிறார்கள்.
'அல் ஆனகமா கான'- அவன் முன்பிருந்தவாறே இப்பொழுது
மிருக்கிறான். 'கானல்லாஹு வலம் யகுன் மஅஹு ஷைஉன்'
'ஹக்கு' ஆகியிருந்தான். அவனுடன் யாதொரு வஸ்துவு
மிருக்கவில்லை ஆகவே எவ்வாறு அவனுடன் ஒரு பங்காளி
உண்டாயிருக்க முடியும்? கடந்த காலம், நிகழ் காலம்,
வருங்காலம் இம்மூன்றும் அவனோடு ஏகமே

'ரூஹு' (ஆத்மா) அல்லா(ஹ்)வின் 'அம்ரு' என்னும்
கட்டளை அல்லது உத்தி ஆகுமென்றும், அமரர்கள்.
அசுரர்கள், மிருகாதிகள், புற்பூடாதிகள் போன்ற
வஸ்துக்களைப் போன்று 'கட்டளை'யிடப்பட்டது 'உத்திரவிடப்
பட்டது என்ற வகையினுள் அடங்கியதன்று என்று அபூபக்கர்
முக்தி அவர்கள் கூறியிருக்கிறார்கள் 'பனபக்து பீஹிமின் ரூஹீ'-
அவர் (ஆதம்) மீது எனது ரூஹில் நின்றும் ஊதினேன்
என்றும். 'அவரை எனது இரு கரங்களாலும் படைத்தேன்''
(அதாவது, ஜலால் (சக்தி) (ஜமால்) (அழகு) என்ற இரு
கரங்கள், என்றும் இறைவன் அருளியிருக்கிறான் மானிடனோ
அமரர், அசுரர். மிருகம் ஆகியவற்றின் ஆன்மாவினால்
படைக்கப்படவில்லை ஆனால் பரிசுத்த ஆவி (ரூஹுல்
குத்ஸி)யைக்கொண்டே படைக்கப்பட்டிருக்கிறான்.

படையுண்ணப்படாத 'ஆத்மா'தான் 'ஹகீகத்து
முஹம்மதீ 'வஹ்தத்து ஆகும். அதற்கு அடுத்த கீழான
நிலையே ஹகீகத்து இன்சானி (வாஹிதியத்து) ஆகும். படைக்
கப்பட்ட ஆன்மாவோ 'அக்லீ-'குல்லி'யிலிருந்து இன்ஸான்-
காமில்'வரை கீழ்நோக்கில் அடங்கியுள்ள 28 இஸ்முகள்
யாவையும் பொதிந்தது. ரூஹு இன்ஸானியோ அழிவற்றது.
படையுண்ணப்படாத அந்த 'ரூஹு' 'ஸிர்ரு' என்னும் சர்வ
வியாபகமான உள்ளமையென்றும். பரிசுத்த ஆவியென்றும்
பலவாறாயழைக்கப்படுகிறது. வியட்டியான (ஒற்றை
களாகிய தனித் தனியான) ஒவ்வொரு ஆன்மாக்
களும் அந்த 'ரூஹுல்குத்ஸி'யினது பிரதி பிம்பங்

களாகும். அது ஊதப்பட்ட (ரூஹுல்குத்ஸி)' ரூஹாகும். 'நனபக்துபீஹி மின்ரூஹி' (எனது ரூஹில் நின்றும் நான் அவரளவில் ஊதினேன்.) பஜனமாது வல்லுபா பதம்ம வஜ்ஹுல்லா(ஹ்) நீர் எங்கு திரும்பினும் அங்கு இறைவனின் முகமிருக்கிறது.

'ஜிஸ்மு' ஆகிய ஜடம் 'ரூஹு' ஆகிய ஆத்மாவின் கண்டிப்பாயிருப்பது போன்று 'ரூஹும்' ஹக்குடைய கண்டிப்பாகும். நீர்குமிழிக்கும் தண்ணீருக்குமிடையிலுள்ள பேதத்தைப் போன்று கண்டிப்புக்கும், கண்டிக்கப்பட்டதற்குமிடையேயுள்ள வித்தியாசம் வெறுங்கற்பனையே யாகும். முதல் நிலைமையில் அதற்கு 'ரூஹுல் குக்ஸி' என்று பெயர். இந்த நிலையில் அது அதிபரிசுத்தமாயிருக்கிறது. சடத்தன்மையிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் 'உரூஜ்' ஆகிய ஏற்றத்தில் ஒரு சடத்தன்மையற்ற உன்னத நிலையை அடைகிறான் இந்த நிலைதான் 'ரூஹுல் குத்ஸி' அல்லது 'ஹகீகத்துல் முஹம்மதியாகும். அதுதான் சகல (மறை தத்துவங்களின் விருப்பங்களுடையவும். கோலங்களுடையவுமான மூலமாகும். அது தன்னை கோலங்களிலே வெளிப்படுத்திக் காட்டுகிறது. அது வார்த்தைகளுக்கு உரிய அர்த்தங்களுக்கு ஒப்பாகும்.

எங்கெந்த வஸ்துவின் மீது ''ரூஹுடைய பேரழகு தன்னைப் பிரதிபிம்பித்துக் காட்டுகிறதோ அந்தந்த வஸ்த்து அதனுடைய (ரூஹுடைய) மதிப்பைப் பெறுகிறது லைலத்துல் கத்ரு அதன் மதிப்பை ரூஹிடமிருந்து பெற்றது. 'தன்ஸ்ஸலுல் மலாயிகத்துவர்ரூஹுபீஹா' அதன் மீது அமரர்களும் ரூஹும் இறக்கப்பட்டன. இரு லோகங்களையும் மிகைத்து விடாத வரையில் நீ ரூஹைப் பார்க்க முடியாது. அது சரீரத்தினுள்ளோ அல்லது புறம்போ இல்லை. சரீரத்தை விட்டும் பிரிந்தோ அன்றி சேர்ந்தோ இல்லை அது உள்ளிலும், புறம்பிலும், சேர்ந்தும், பிரிந்துமிருக்கிறது.

அஜீஜ்-நப்ஸி கூறுவதாவது :- எந்த மனிதனுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட ரூஹு இல்லை ஆறும் ரூஹோ

வெவ்வேறு நிலைமையிலும் வெவ்வேறு பெயரை அடைகிறது. அதன் பல்வேறான பண்புகளை வெளிப்படுத்திக் கொள்ளும் பொழுது அது அவ்வாறு ஆகின்றது. ரூஹு தனது வெளிப் படைத் தன்மையில் ஓர் இடத்தில் கேட்பவனாயும், மற்றொ ரிடத்தில் பேசுபவனாயும், பிறிதோரிடத்தில் பார்ப்பவனாயு மிருக்கின்றது. இவை யாவுயும் பல்வேறு பெயர்களைக் கொண்ட ஒரே வஸ்த்து. அதன் உள்ளிடைத் தன்மையில் அது ஓர்பொழுது ரூஹு நபாத்தியாகிய தாவர ஆன்மாவென் றும், மற்றோர் பொழுது ரூஹு ஹைவானியாகிய மிருக ஆன்மாவெனவும், பிறிதோர்பொழுது ரூஹு நப்ஸானீயான மனோ ஆன்மாவெனவும் பலவாறாக அழைக்கப்படுகிறது. அது தான் நாப்சு நாத்திகாவும் ரூஹுல் குத்ஸியுமாகும். சில சூபியாக்கள் அதை ஹக்கின் பிரதிபிம்பமென்றும், மற்றும் சிலர் அது ஹக்குதான் என்றும் கூறுகின்றனர்.

முஹம்மது (ஸல்) அவர்களுடைய நூர் என்னும் ஜோதி இருவகைப்படும்.

(1) அந்தரங்க ஜோதி:- இதுவே சம்பூர்ண அறிவுடைய நிலை இந்த நிலையை ஹகீகத்து முஹம்மதீ என்றழைக்கப்படுகிறது. அது படைக்கப்படாதது. ஹதீதுபடி:- 'அனாமின் நூரில்லாஹி வகல்கஹுல்லுஹும்மின் நூரீ' நான் அல்லா (ஹ்)வின் ஜோதியினின்றுமுள்ளவன் சர்வ சிருஷ்டிப் பொருள்களும் எனது ஜோதியினின்றுமுள்ளவை. இங்குள்ள 'மின்' அல்லது 'நின்றும்' என்பது ஆரம்பம் அல்லது ஆதியைக் குறிப்பிடுவதன்றி பிரிவினையைக் காட்டுவ தன்று. முஹம்மது (ஸல்) அவர்களுடைய 'நூர்' ஆகிய ஜோதி பரிபூர்ண உள்ளமையின் குறிப்பு அல்லது ஒரு பாகத்தின் சுற்றுக்கோடு அல்லது விகாசம் ஆகும். இந்த பாகம் படைக்கப்படாதது, படைக்கும் தன்மையைப் பெற்றது. இது 'தஹ்ரிய்யா'வென்னும் காலம் அல்லது இயற்கை வாதியின் கொள்கையை ஒத்ததன்று. 'தஹ்ரிய்யாக்கள் வெளிப்பட்ட தோற்றங்கள் 'ஹக்குடன்' பூர்வமானவையென்று வாதிக்கிறார்கள் பரிபூர்ண உள்ளமை

யின் பாகமான குறிப்பாயும், படைக்கப்படாததாயுமிருப்ப தாயுமிருப்பதால் அது (நூர் முஹம்மதி) பூர்வீகமேயாகும்.

(2) வெளியரங்க ஜோதி:- வெளிப்படையில் தோன்றிய 'நூர்' ஆகிய ஜோதி 'அக்லு-குல்லி'யிலிருந்து ஆரம்பித்தது, ''ரூஹுல்-அஃலம்', 'கலமுல் அஃலா'வென்னும் 'ரூஹு முஹம்மதி' 'ஹகீகத்து முஹம்மதீ' என்றழைக்கப் படுகிறது. ஒரு ஹதீது பிரகாரம் 'அவ்வலுமா கலகல்லாஹு அக்லீய நூரி'' என்னுடைய அக்லு என்னும் புத்தியையும். எனது ஒளியையும் முதன் முதலில் அல்லா(ஹ்) படைத்தான். 'ரூஹு முஹம்மதீ' தான் படைக்கப்பட்ட 'ரூஹு' அல்லது ஆன்மா இவ்விரண்டும் ஒன்றே என்று ஷாஹ்வஜ்ஹுல் 'ஹக்கு கூறுகிறார். உண்மை யில் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இரண்டு தன்மைகளுண்டு ஒன்று அகமியம். மற்றொன்று சிருஷ்டிக்கப்பட்டது. அகமி யத்தைப் பொருத்தவரை நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது:- 'அன அஹ்மதுன் பிலாமீன்' நாம் மீம் மின்றிய 'அஹ்மது'வாயிருக்கிறேன் அதாவது நான் 'அஹ்மது'வாயிருக்கிறேன். படைக்கப்பட்டபுறத்தைப் பொருத்தவரை நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லியிருப்ப தாவது:- அப்த ஹு வறசூஹு அவனது அடிமையும் தூதரும்' ஆதலின் முஹம்மது (ஸல்) அவர்கள் 'ஹகீகத்து' ஆகிய அகமியத்துக்கும், படைப்பினங்களுக்கும் இடையிலுள்ள பிரிவினைக் கோடாகிய 'பர்ஜக்' ஆகயிருக்கிறார்கள்.

இறைவனது ஜோதியாகிய நூரே-றஹ்மானியானது 'றப்' ஆகிய இரட்சகன் என்ற திரையின்றி தோன்றும்வேளை அது நிறம். குணம், இணையின்றி இருக்கின்றது இந்த வகையில் கிழக்கு; மேற்கு என்பதும், வலம். இடம் என்பதும் மேல், கீழ், கால. தேசம். இரவு. பகல் என்பதின்றியிருக் கின்றது ''லாஇன்த றப்பீ ஸபஹுன், வலாமஸாஉன்'' ஹக்குடன் காலை, மாலை என்பதில்லை,

''நான் இறைவனிடம் இரண்டு (பாத) அடிகளைக்

கொண்டு முடுகினேன்'' என்று பாயஸீதுல் பிஸ்தாமீ (ரஹ்) அவர்கள் அருளியிருக்கிறார்கள்.

'ஒரு பாத அடி எனது சொந்த நப்ஸின் மீதும், மற்றொன்று எனது காதியின்தெருவிலும் ஜனங்களுள் பெரும் பான்மையோர் இதனை நப்ஸுக்கு மாற்றஞ் செய்து 'முஜாஹதா' என்னும் தெண்டிப்பைக் கடைபிடிப்பது என்று அர்த்தம் கொள்கின்றனர், ஆனால் உண்மையில் இதன் கருத்தாவது:- தோற்றங்களாகிய பிரபஞ்ச வஸ்துக்களின் மீது ஒரு பாதமும், சாலிக்குடைய 'நான்' என்னுந்தன்மையின் இருப்பின்மீது மற்றொரு பாதமும், தன்னை அறிவதின்பால் ஒன்றும், 'ஹக்'கை அறிவதின்பால் மற்றொன்றும் என்பதே. ''மன்அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு''. எவனொருவன் நப்ஸை அறிந்தானோ அவன் றப்பை அறிந்தவனாகும். ஷுத்தாரிய்யாக்களிடம் நப்ஸுக்கு மாற்றஞ் செய்தலென்பதும், 'முஜாஹதா'வென்றும் பெரும் பிரையாசையாகிய தெண்டிப்பும் கிடையாது 'பனா' இன்மையாக்குதல், 'பனா உல்பனா' இன்மை இன்மையாக்குதல் ஆகியவை அவர்களிடம் கிடையாது ஏனனில் 'பனா'வென்பது இரு வஸ்துக்களைத் தேடும்; ஒன்று அழிந்து இன்மையாக்கற்குரியதும் மற்றொன்று அதனை இடம் பெற்றுள்ளதுமாகும் ஆனால் இதுவோ ''தௌஹீ'துக்கு முற்றும் முறைஞானது. 'ஷுத்திரியாக்கள்' 'தௌஹீது' என்னும் அத்வைதத்தை உறுதிப்படுத்தி சகல நிலைகளிலும். 'தஜல்லியாத்'தாகிய தோற்றத்திலும் 'தாத்து' என்னும் தத் சொரூபத்தை அதன் 'சிபாத்து' ஆகிய பண்புகளுடன் நோட்டமிட்டு வருகிறார்கள் நாயகம் (ஸல்) அவர்கள் மன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு எவனொருவன் தன்னை அறிந்தானோ அவன் நிட்சயமாக தன் நாயனை அறிந்தவனாகும் என்று கூறி இருக்கிறார்களேயொழிய, 'மன்கல நப்ஸஹு பகத் அரப ரப்பஹு', எவனொருவன் தன் நப்ஸுக்கு (தனக்கு) மாற்றஞ் செய்தானோ அவன் தன் நாயனை அறிந்தவனாகும் என்று கூறவில்லை. அந்த 'ஷுத்திரியாக்கள் சடப் பொருளிலும், சடமற்றதிலும், வொவ்

வொரு குறிப்பிலும் குறிப்பற்றதையோ பார்த்து வருகிருர்கள். சகல வஸ்துக்களும் இறைவனது உள்ளமையாகிய இருப்பின் பிரதிபிம்பமாகும். வஸ்துக்களின் அசைதல் அஸ்மா (திரு நாமங்கள்) சிபாத்து (பண்புகள்) ஆகியவற்றினுலேயே எற்படுகின்றது 'தஜல்லியாத்து' அசையுங்காலை அவற்றின் சாய்கைகளான வஸ்துக்களும் (நிழல்களும்) அசைகின்றன. 'லாதத ஹர்ரக தர்ராதின் இல்லா பிஇத்னில்லாஹ்' அல்லா (ஹ்)வின் உத்திரவு கொண்டேயொழிய யாதொரு அணுவும் அசைவதில்லை 'ஹக்' ஒருவன் மட்டுமே உள்ளமையுடையவனின்றி பிரிதொன்றுமல்ல 'ஹக்கு'டைய 'அவன்' என்னும் படக்கை ஒருமை 'சாலிக்' ஆகிய முமுட்சுடைய 'நான்' என்ற தன்மை ஒருமையின் கோலவாயிலாய்த் தோற்றமளிக்கின்றது. இதனுலேயே ஒருவனது 'நான்' என்ற தன்மையை உணர்த்தலானது இறைவனின் 'அவன்' என்ற படர்க்கையை உணர்த்தலாகும். இவ்வாருக, அவன் அறிபவனையும், அறியப்படுவதைவும் ஆகியிருக்கிருன். 'அரப்து ரப்பீ பிரப்பீ' நான் எனது நாயனை என் நாயனைக் கொண்டே அறிந்தேன்.

'வபீ அன்புஸிகும் அபலாதுப்ஸிருன்' அவன் உங்கள் உள்ளங்களிலேயிருக்கிருன் நீங்கள் அவனை நோட்டமிடுவதில்லை (திருக்குர்ஆன்).

தன்னை அறிதற்கு முன்னரே ஒருவன் தன் நாயனை அறிந்து விடுகிருன்; எனவே ''இறைவனை மறத்தலானது தன்னையே மறந்துவிடுதலாகும்'' என்று அவர்கள் கூறுகிருர்கள் அறிதனுக்குப் பிந்தி தான் மறத்தலென்று எற்படுகிறது.

ஆன்ம லோகம் - ஆலமுல் அர்வாஹு

யாரொருவன் தன்னை மறந்தானோ அவன் தன் நாயனை மறந்தவனாகும். கறுப்பு ஆடை அணிந்த ஒரு 'தர்வேஷ்' ஜுனைதுல் பக்தாதீ (ரஹ்) அவர்களுடைய 'கான்காஹ்'வென்னும் ஆஸ்ரமத்திற்குச் சென்றார். அவருடைய துக்க ஆடையைப் பற்றி வினவப்பட்டபொழுது அந்த 'தர்வேஷ்' தனது ஆண்டவன் இறந்து விட்டதாகக் கூறிபதிலிறுத்தார். அதனை முன்னிட்டு அவர் மூன்று விடுத்தம் திருப்பி அனுப்பப்பட்டார். மடமையினால் அந்த 'தர்வேஷ்' தனது நப்ஸை கொல்வதில் மிகுந்த பிரயத்தனத்துடன் பெரும் பிரயாசைப்பட்டு வந்தவராகக் காணப்பட்டார். அதனை யொட்டியே அன்னார் கருப்பு அங்கியை அணிந்திருந்தார்.

'அன்பியாக்'களுடையவும், ஔலியாக்'களுடையுமான சரீராதிகள் ஆத்மா சரீரங்களேயன்றி ஸ்தூல சரீரங்களல்ல. 'அஜ்ஸாமினா அர்வாஹினா. அர்வாஹினா அஜ்ஸாமினா' எங்களுடைய சடலங்களே எங்களின் ஆன்மாக்கள். எங்களது ஆன்மாக்களே எங்கள் சடலங்கள்' என்று அல்லஹ்ாபாதைச் சேர்ந்த முஹிப்புல்லா(ஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

7.வது அத்தியாயம்

ஆலம்-மிதால் சூட்சுமலோகம்

முதற் குறிப்பு அருபத்தில் 'தாத்து', 'சிபாத்து' அஃயான் ஆகியவற்றைப் பொதிந்து கொண்டிருக்கிறது. அதாவது இதில் 'தாத்து' ஆகிய தக் சொரூபம் இன்ன தென்று தெளிவுபடுத்தப்படாமலும், அறிவிலேயுள்ள கோலங்களும் ஒன்றைவிட்டு ஒன்றைவிடாமலும், அந்த 'அஃயான்' ஆகிய அறிவு கோலங்கள் வெளிப்படாமலும் இருக்கும் தொகையான நிலையாகும் இந்த நிலையைத்தான் 'வஹ்தத்து' ஆகிய ஹகீகத்து முஹம்மதி என்றழைக்கிறோம்.

இரண்டாங் குறிப்போவெனில் அவற்றை 'ஹக்கு' வகை வகையாகவும், ஒன்றைவிட்டு ஒன்றை வகுத்தும் அறிந்த வகையான நிலையாகும். இவைகள் அறிவில் வகுக்கப் பட்டு தெளிவாக்கப்பட்டிருந்தன. இந்த நிலையைத்தான் 'ருபூபியத்து' என்றும் இரட்சகத்தன்மை என்றும், 'ஹகீகத்து இன்ஸானி' என்னும் மானிடனின் அகமியம் என்றும் ஆலம்-மிதால் ஆகிய சூட்சுமலோகம் என்றும் பல வாறுயழைக்கப்படுகின்றது. இங்க நிலையில் 'அஃயான்' அறிவு கோலங்கள் தங்களைத்தானே ஒன்றைவிட்டு ஒன்றை பிரித்து தெளிவுடன் அறிகின்றன. இதை ஒருவாறு ஓர் வித்தின் வித்துடைய உபமானத்தால் விளக்கலாம். ஓர் வித்து தன் அறிவு தன்னை அறிதலே முதற் குறிப்பை ஒத்திருக்கிறது தனது அறிவிலே அந்த வித்து தன் தத்துவங்களான வேர், அடிமரம், கிளைகள், இலைகள், பூக்கள், பழங்கள் ஆகிய வற்றைக் காண்பது இரண்டாம் குறிப்புக்கு ஒப்பாகும். இவைகள் உள்ளமையிலன்றி அறிவில் மட்டுமே இவ்வேற்று மைகளைப் பெற்றிருக்கின்றன. இவைகள்தான் 'சூபிய்யாக் களால் அஃயான் ஆகிய அறிவு கோலங்கள் அல்லது வஸ்துக் களின் அகமியங்கள் என்றும், தத்துவஞானிகளால்

ஆலம்—மிதால்...சூட்சுமலோகம்

'மாஹியத்து' என்னும் தத்துவாதிகள் என்றும் அழைக்கப் படுகின்றன இவைகளுடைய வெளிப்படையாகத் தோற்ற மளித்தலின் வகை விபரங்களை ஆலம்-அர்வாஹு (ஆன்ம லோகம்), ஆலம் மிதால் !(சூ ட் சு ம லோகம்), ஆ ல ம் ஷஹாதத்து (சடலோகம்), இன்ஸான் (மானிடன்) என்பதாகப் பிரிக்கிறது.

முதலில் அஹதியத்தில் 'தாத்து' என்னும் தத்சொரூபம் 'சிபாத்து' (பண்புகள்), 'இஃதிபாரத்து' (ஹேஸ்யம்) ஆகியவற்றினையும், பூர்ணத் தன்மையையும், உ ள் ள ை ம யையுங்கூட கருதப்படுவதில்லை. அது மு ந் தி ய தின்றிய முந்திய தாயும், பிந்திய தின்றிய பிந்தியதாயுமிருக்கிறது.

சம்பூர்ணம் 'ஹக்கு'க்கு உரியது. அவனுடைய சம்பூர்ண தோற்றமே இப்பிரபஞ்சம் நம்முடைய தோற்றமும் பண்புகளும் அவனுடைய பண்புகளின் ஒரு சாய்கையிருக் கிறது. அதனாலேயே அவை பரிபூர்ணமின்றியதாயிருக்கிறது.

தன்னுடைய 'கத்ரா'வான எண்ணங்கள் பல திக்கிலும் செல்வதாக ஒரு 'முரீது' தன்னுடைய 'பீர்' இடம் ஒரு தடவை குறையிருந்து கூறினர். எங்கெங்கு அந்த 'கத்ரா' செல் கிறதோ அங்கு இறைவன் இருக்கிருன் என்று பீர் பதிலி றுத்தார். 'பஜனமா துவல்லூ பதம்ம வஜுஹுல்லா(ஹ்)'. நீங்கள் எங்கெங்கு திரும்பினும் அங்கு இறைவனது வதன மிருக்கிறது (குர்ஆன்) ஹாஹூத்'திலிருந்து 'லாஹூத் துக்கும், 'லாஹூத்'திலி ருந்து 'மலகூத்'துக்கும் 'மலகூத்' திலிருந்து 'நாசூத்'துக்கும் சதா 'கத்ரா' இறங்கி கொ ண் டிருக்கும் 'கத்ரா புறப்படுவதற்கு முன் 'ஹாஹூத்தாயிருக் கிறது. புறப்பட்டதும் அது 'லாஹூத்'தாகின்றது. அறிவில் அது ஒரு கோலங் கொண்டதும் அது ஒரு 'மலகூத்'தாகிறது. வெளியில் அது சடத்தைப் பெற்றதும் அது 'நாசூத்'தாகிறது.

கண்டிப்புகள் எண்ணற்றது. ஆனால் விளங்கிக் கொள்வதற்கு ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(1) வஹ்தத்து இது முதல் கைபு என்னும் மர்மப்பொருள்.

(2) வாஹிதிய்யத்து - இது இரண்டாவது 'கைபு' என்னும் மர்மப் பொருள். முதற் குறிப்பில் 'அஃயான்' கூட இல்லாமையாயிருக்கிறது. 'கானல்லாஹு வலம் யகுன் மஅஹூ ஷைஉன்' (ஹதீது) "அல்லா(ஹ்) உண்டாயிருந்தான். அவனுடன் யாதொன்றுமில்லை". இங்கு வஸ்துக்கள் 'அஃயான்' ஆகக்கூட அறிவில் தரிபட்டிருக்கவில்லை. இரண்டாங் குறிப்பில் 'அஃயான்' (அறிவு கோலங்கள்) 'ஹக்கு'டைய அறிவில் தரிபட்டிருக்கின்றன. ஆனால், தங்களுடைய இருப்பையே தாங்கள் அறியாத நிலைமையில் தான் தரிபட்டிருந்தன; மேலும் அவைகள் ஒன்ரோ டொன்று பேதப்பட்டு நின்றன. அதாவது தங்களுக்கு மறைந்தும் ஹக்கு ஒருவனால் மட்டும் அறியப்பட்டும் விளங்கின.

(3) 'அர்வாஹு' என்னும் ஆன்மாக்கள் இதில் 'அஃயான்' தங்களுக்குள்ளே ஒன்றுக்கொன்று பாகுபாடுடையதாயிருக்கும் நிலை.

(4) 'அம்தால்' என்னும் சூட்சுமம். இதில் வஸ்துகளுடைய சூட்சும அணுக்குள் வெளிப்படையாகத் தோன்றலாகும்.

ஆலம் மிதால் சூட்சமலோகம்

(5) அஜ்சாம் என்னும் சடம்:- இதில் அந்த அணுக்கள் திரட்சிப் பெற்று ஜடப் பொருளாய்த் தோற்றுதலாம்.

(6) இன்ஸான் காமில்:- இதுதான் மேற் சொல்லிய சகல நிலைகளையும் தன்னுள் அடக்கிச் சேகரித்துக் கொண்ட பூர்ணப் பதவியாகும். அல்லா(ஹ்)வென்னும் 'இஸ்மு' சம்பூர்ணமான பண்புகளைப் பெற்றுள்ள சகல 'இஸ்மு'களையும் பொதிந்துகொண்ட சேகரமான 'இஸ்மு' ஆக இருப்பதுபோல் 'வஹ்தத்து' முதல் 'இன்ஸான்காமில் வரையுள்ள எல் நிலைகளையும் ஒரே 'அஹது'வாக இருந்து தன்னுள்ளாடிக் கொண்ட சேகரமான பதவியே 'இன்ஸான் காமிலாகும்.

8-வது அத்தியாயம்

ஆலம் .. அஜ்ஸாம் ... சடலோகம்

இருகச் சாத்தப்பட்ட கதவுகளுக்குள்ளே அந்த சக்ராதிபதி இருந்தான் திடீரென 'ஆதமு'டைய ஆடையை அணிந்தவனாக அவன் வெளியில் புறப்பட்டான். இதுவோ, 'சிபாத்து' (பண்புகள்) அஸ்மா (திருநாமங்கள்) ஆகிய போர்வையைப் போர்த்திக் கொண்டு அவன் தன்னைத் தான் தோற்றுவித்தான்.

ஒரு ஹதீதுபடி, நான் அவ்வியக்த புதையலாயிருந்தேன்; என்னை அறியப்பட நான் ஆசித்தேன். அவ்வாறு அறியப்பட இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தேன். அதாவது முதற் குறிப்பு தொடுத்து மண்மண்டலம் வரை தோற்றலானதேயாகும்.

ஒரு கவிஞர் கூறுவதாவது:- அந்த அகண்ட பரிபூர்ண 'தாத்து' ஆகிய 'தத்சொரூபம்' தனது சொந்த வணக்கத்தின் திருவிளையாடலைப் பார்க்க ஆதமுடைய கோலத்தை எடுத்துக் கொண்டு வேட்டைக்கு வெளியில் வந்தது 'கலகல் இன்ஸான அலா ஸூரதிற் றஹ்மான்) (குர்ஆன்) அவன் மானிடனை 'ரஹ்மான்' என்ற கோலத்தில் சிருஷ்டித்தான் அல்லது சிர்ருள்லி அபீஹி தனயனே தந்தையுடைய மர்மமாகும் தனக்கு மட்டும் ஹக்கு தோன்றும் போது பிரபஞ்சம் அகமியப் பொருளான சத்தாக மறைந்திருக்க, ''ஹக்கு'' அதன் கோலமாக விளங்கினான்; பிரகாசம் கோலமாக தோன்றும் வேளை 'ஹக்கு' அகமிய பொருளாகிய சத்தாயிருக்கிறான். பிறந்து வெளிவராத குழந்தையாக தனயன் மறைந்திருக்கும் வேளை தந்தை வெளியீடாயிருக்கிறான். பிறந்த உடன் அது வெளிடானதும், அக்குழந்தையின் அகமியமாக தந்தை ஆகிவிடுகிறான் தந்தையின் கோலம் தனயனின் கோலத்தின் அகமியமாயிருக்கிறது. இவ்வாறு

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

இவ்விரண்டும் ஒரே கோலமும், ஒரே சத்துமாகிய அகமியமா யிருக்கிறது. எனவே, அநேகம் என்பது 'இஃதிபார்' ஆகிய கற்பனையில்தான் இருக்கிறது. தந்தையிலே தனயன் இருக்கும்பொழுது தந்தையுடைய அகமியமே தனயனாகும். அது வெளித் தோன்றியதும் அந்த தந்தையின் கிளையாகத் தோற்றமளிக்கிறது. மரத்தில் விதை மறைந்திருக்கிறது. விதையில் மரம் மறைந்திருக்கிறது.

''இல்மெ ஹக்தர் இல்மெ ஸூபீரும் ஷுவது''(மத்னவீ) ஸூபியின் அறிவில் 'ஹக்கு'டைய அறிவு மறைந்திருக்கிறது. எனவே 'ஹக்கை'ப் பார்ப்பவன் தன்னைப் பார்ப்பதில்லை. ஆகையால் ('ஹக்கு'டைய சமூகத்தில் வேறாக) நீ என்பது இருக்கும்பொழுதுதான் 'பனா'வென்றும் இன்மையாக்கல் தேவையாகிறது 'வேறு' என்பது இன்மையானதாகும். 'அனா அஹ்மது ன்பிலாமீன்' — நான் மீம்மின்றிய 'அஹமது' வாயிருக்கிறேன். அதாவது 'நான்' 'அஹது'வாக இருக்கிறேன் என்று நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னதாகக் கூறப்படுகிறது.

முதல் தோற்றத்தில் 'ஹக்கு' பிரபஞ்சத்தின் கண்ணாடி யாயிருக்கிறான். இரண்டாந் தோற்றத்தில் பிரபஞ்சம் 'ஹக்கு'டைய கண்ணாடியாயிருக்கிறது. அஃயான் ஆகிய வஸ்துக்களின் கோலங்கள் கண்ணாடிகளாகவும், 'ஹக்கு' அவற்றில் தோன்றியுமிருக்கிறான். அல்லது ஹக்குடைய 'நூர்' ஆகிய ஜோதி கண்ணாடியாயும், 'அஃயான்' கோலங் களாயும் இருக்கின்றன இந்த வொவ்வொரு கண்ணாடியிலும் 'ஹக்'கைத் தவிர ஒன்றுமில்லை.

('ஹக்கு' அளவில்) அழைப்பதற்கு ஒரு சம்பூர்ண மனிதன் தேவைப்படுகிறது. 'ஸுலூக்' ஆகிய முழுட்சுத் துவத்தின் சகலநிலைகளையும் தன்னுள்ளடக்கிக் கொண்ட பக்தியாளரான ஞானியாகிய 'ஆரிக்' என்னும் பேரின்ப காதலர் தன்னைப் பின்பற்றும் மானிட கோடிகளை தனது வழியில் நடத்தாட்டுபவராய் நற்குண, நற்செய்கை

களையுடையவராய்த் தேவைப்படுகிறார். எனவே, ஹ்ராபிஸ் அவர்கள் கீழ்வரும் கருத்துக் கொண்டு பாடியிக்கிறார்கள்:- 'முமுட்சு' ஆகிய ஒருவன் யாரெனில், தனது முடிவான எல்லையின் நடுவேயிருக்கும் நிலைமைகளின் ஆசாரங்களையும் சடங்குகளையும் தானே அறியாதவனாய் யிருக்கும்.

நமது இருப்பு அவனது இருப்பின் பிரதிபிம்பமாகும். நம்முடைய பார்வை அவனுடைய பார்வையின் பிரதிபிம்பமாகும் நான் எனது 'நப்ஸை' என்றும் தன்மையைப் பார்க்கையில் 'ஹக்கு' தனது 'தாத்து' என்றும் தத்சொரூபத்தைப் பார்க்கிறான் இவ்வாறே 'ஹக்கு' தனது 'தாத்து' என்றும் தத்சொரூபத்தைப் பார்க்கையில் நான் எனது நப்ஸை என்றும் தன்மையைப் பார்க்கிறேன் 'எனவே, 'மன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு' தன்னையறிந்த ஒருவன் தன்னுடையனையே அறிந்தவனாம் ஒருவன் தனது 'இருப்புத் தன்மை'யை அறிதலே 'ஹக்கை' அறிவதாகும் அதாவது குறித்த ஓர் தோற்றத்தில் 'தாத்து'டைய அறிவு தோற்றத்தின் அறிவு எவ்வளவோ அவ்வளவாகயிருக்கிறது 'தாத்'தும் 'நப்ஸு'ம் ஒரே அகமியத்தின் நாமங்களாகும். 'நான் எனது 'றப்'பை என் 'றப்'பைக் கொண்டே அறியலானேன். 'அரப்து ரப்பி பிரப்பீ' என்று ஒரு ஹதீது இருக்கிறது 'கைர்' என்று வேற்றுமையின் குறுக்கீடு இன்றியே 'ஹக்கு' தன்னையே தனக்குத்தானே அறியப்படுகிறான். அன்னஹு அலாகுல்லி ஷைஇன் ஷஹீது''. ஒவ்வொரு வஸ்தையும் 'ஹக்கு' சாட்சியாக நின்று அறிகிறான். ஞானமும், நேயமும் ஒன்றே ஒன்று 'ஹக்க'ம் 'ஹக்கை' அறிபவனும்' ஹக்கே' 'ஹக்க' 'மா அரப்நாக ஹக்க மஃரிபதிக' யாங்கள் உன்னை உனது அறிவோரும் அறிவுக்கு அறிந்து கிடவில்லை' என்று ஒரு ஹதீது கூறுகிறது அவனுடைய 'இருப்பு' அல்லது 'தன்மை' சம்பந்தப்பட்ட ஞானம் அந்த 'தன்மை'யை மட்டும் தழுவி நிற்கின்றது. மூஸா (அலை) அவர்கள்

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

இறைவனைக் காண்பதற்கு ஆசித்து அவனை இறைஞ்சினார்கள். அவ்வாறான 'கண்டித்த பார்வை' 'கைர்' என்னும் பிற பொருளை விட்டும் துண்டிக்கப்பட்டு விட்டபடியால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பதிலோ 'லன் தரானி' — நீர் என்னைப் பார்க்க மாட்டீர் என்பதாகும். ''லாயறல்லாஹ கைருல்லா(ஹ்) — அல்லா(ஹ்)வின் வேறு (அல்லாஹ்)வைப் பார்க்க முடியாது. 'வேறு' என்பதற்கு ஓர் தனி உள்ளமை அல்லது இருப்பு' இல்லாதபடியால் அதற்கு ஒரு பார்வையுங் கிடையாது ஹக்கு மட்டும் பார்ப்பவனாக ஆயிருக்க 'வேறு' என்னும் பிற வஸ்து குருடாயிருக்கிறது.

எனவே அறிந்து கொள்வாயாக! சகல கண்டப் பொருள்களும் (சித்தாயினுஞ் சரி, சடமாயினுஞ் சரி) உனது உறைகள் அல்லது ஆடைகளாகும். 'குன்துகன்ஸன்மக்பிய்யன் ப அஹ்பப்து அன் உஃரிப பகலகல் கல்க' நான் அவ்வியக்தபுதையலாயிருந்தேன், என்னை அறியப்பட நான் ஆசித்தேன். 'கல்கு' ஆகிய (பிரபஞ்ச) சிருஷ்டிகளைக் கற்பித்தேன். இந்த காதல் அல்லது ஆசை அங்கு இருந்திராவிடில் 'அவ்வியக்த' புதையல் (ஒருகாலும்) 'வியக்த,மாகியிராது, பேரின்ப காதல் மறைந்த புதையலின் கண்ணாடிகளிலே தன்னைத் தோற்றுவித்து, தனது பல திறப்பட்ட பண்புகளைக் கண்டு தன்னைத் தானே புகழ் கூறிக் கொண்டது.

வஸ்துகளுள் மிகவும் வெளியீடாயிருப்பது 'ஹக்கு டைய உள்ளமையாயிருக்கிறது. 'நூருன் அலாநூரின் யஹதியல்லாஹு பிநூரிஹி மன்யஷாஉ' ஜோதியின்மீது ஜோதி, தான் நாடியவர்களைத் தனது ஜோதியைக் கொண்டே 'ஹக்கு' நேர்வழியிலாக்குகிறான். ''அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல் அர் ழி'' 'ஹக்கு' வானங்களினுடையவும், பூமியினுடையவுமான ஜோதியாயிருக்கிறான். பிரபஞ்சத்தின் (தனியான) கற்பனை உள்ளமை 'ஹக்கு'டைய யதார்த்த உள்ளமையின் இன்மையாக்கப்பட்டிருக்கின்றது.

'ஹக்கு'டைய உள்ளமை மற்ற வஸ்துக்களின் உள்ளமையைக் காட்டிலும் அதிக வெளியீடானது. அதுவே

பார்க்கிறதும், பார்க்கப்படுவதுமாயிருக்கின்றது. ஒளியின்றியே ஒளிவானது பார்க்க முடியாது அது எதனைப் பார்க்கின்றதோ அதுவும் ஒளிவாகிய ஜோதியே. வஸ்துக்கள் தாங்களாக இருளாயிருக்கின்றன பார்ப்போன் சூரிய வெளிச்சத்தினால் பார்க்கிறான். பார்க்கப்படும் வஸ்தும் அதே வெளிச்சத்தினாலேயே பார்க்கப்படுகிறது. எனவே (வஸ்துக்களின்) உள்ளமைகள் யாவும் இருள்களே அவற்றின் உள்ளமைகள் அவனது உள்ளமைகளினின்றும் கடன் வாங்கப்பட்டது போன்றதே. அவை அவனிடமிருந்து அளிக்கப்பட்ட அமானிதப் பொருள், அவன் தான் பார்ப்போனும், பார்க்கப்படுவோனும், அறிபவனும், அறியப்படுவோனுமாகும் நீயோ ஒரு 'அதம்' ஆகிய இன்மைப் பொருள் 'குல்லுஷைஇன் ஹாலிகுன் இல்ல வஜ் ஹஹு' அவனது வதனம் (உள்ளமை) தவிர ஒவ்வொரு வஸ்தும் இன்மையானதே ஒருவன் உப்புக்குழியிலிறங்கி உப்புமயமாக மாறுகிறான். எதற்கு உள்ளமையுண்டோ அதற்கு தோற்றமுண்டு. 'சாலிக்' ஆகிய முமுட்சுடைய 'நான்' என்னுந் தன்மை 'ஹக்கு'டைய அவன் என்ற படர்க்கை ஒருமையாயிருக்கிறது எனவே நீ 'நான் பிர்மம் (ஹக்கு) ஆகயிருக்கிறேன்' என்றாலும் அல்லது 'அவன் பிர்மம் (ஹக்கு) ஆகயிருக்கிறான்'' என்றாலும் இரண்டும் சமமானதே.

இருப்பது ஒரே அகமியப் பொருள்தான். அவனே 'சாலிக்' என்னும் முமுட்சுவாகும் அவன் தன்னில் தானே யாத்திரையாகி ஏறுவதும், இறங்குவதுமாக இருக்கிறான். அடிவேரிலிருந்து கிளைகளுக்கு மேலேறிச் செல்வதில் அவனே காதலிக்கிறான் கிளைகளிலிருந்து அடிவேருக்கு கீழிறங்கி வருவதில் அவனே காதலிக்கப்பட்டு காதலியாகிறான் அவன் தனது 'தன்மை'யைத் தனது தன்மையின் மீதே தொழுகச் செய்கிறான். அவன் சகல கிளைகளிலும் தன்னுடைய அந்த 'தன்மை'யைக் காண்கிறான் முடிவில் பழத்தின்பால் மீளுகிறான் சகலவற்றிலும் ஒன்றே ஒன்றான அகமியத்தைத்தான் பார்க்கிறான்.

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

'கைரியத்து' (வேற்றுமை) என்பது 'தாத்'துடைய 'வஹ்தத்து' என்னும் ஏகத் தன்மையின் தொழில்படும் பண் பாகும். சகல தொழில்படும் பண்புகளும் இந்த வேற்றுமைப் பொருளை வெளிப்படுத்துகின்றன. 'வேற்றுமை'யும் அனேக தன்மையுமின்றி வெளிப்பாடு என்னும் தோற்றம் உண்டாக முடியாது. எனவே, ஏகத்தன்மையாகிய 'வஹ்தத்து உண்மை யானது. அனேகத் தன்மையாகிய 'கத்ரத்து' மெய்யானதும் கற்பனையானதுமாகும்.

'தாத்து' ஆகிய தத்சொரூப நிலையில் தத்துவாதிகளும், வஸ்துக்களின் யோக்கியதைகளும் 'தகுதி'களும் 'தாத்து' தானாகவே இருக்கின்றன அங்கு அவற்றின் அநேகத் தன்மை கிடையாது 'தாத்து' 'தாத்து'தானாகவேயிருக்கிறது. அறிவு உதித்த காலை இந்த தத்துவாதிகளும், தகுதிகளும் அறியப்பட்டவையாயிருந்தன. (அவர்களுக்கிடையில் வேற்றுமை ஏற்பட்டு) வெளிப்படைத் தோற்றமுண்டானதும் அவை 'அஃயான்' என்னும் சிருஷ்டிப் பொருளின் அசுமியங் களாக ஆகி முடிவில் படைப்பொருள்கள் என்ற பெயரையும் அடைந்தன. இந்த நிலையில் அறிவில் தோன்றிய 'அநேகத் தன்மை' யதார்த்த அநேகத் தன்மையாக வெளித் தோன்றி யது. ஏனெனில் 'தாத்து' ஆகிய 'தத்சொரூபம்' 'தஜல்லி' யாத்துடைய கணக்கற்ற ஆடைகளில் தன்னைத் தோற்றுவித்து தாத்தை யொத்த கணக்கற்ற தோற்றங்களான 'தாத்துக்' களான 'அஃயான்'கள் ஒரே யகார்த்த 'தாத்'திலிருந்து தோன்றியவையாகும். இவை நித்தியகால பரியந்தம் இவ்வாறேதானிருக்கும். எனவே, சுவனபதியிலிருப்போர் நித்திய வாழ்வையடைவர். அவர்களுடைய அநுமதிச்சீட்டு இவ்வார்த்தைகளால் குறிக்கப்பட்டிருக்கும். ''மினல் ஹையில்லதீ லாயமூத்து இலல் ஹையில்லதீ லாFபூத்து'' ''மரணமற்ற ஜீவிப்புடையவனிடமிருந்து நாசமற்ற ஜீவிப் புடையோன் அளவில்''. ஆகவே 'தாத்து' முதலில் ஒன்று மிருந்து அநேக 'தாத்து'களாக ஆகினது சொந்த தன்மை யினின்றும் நழுவி விட்டது என்று (ஒருகாலும்) நீ நினையா திருப்பாயாக இந்த தோற்றத்தின் மாத்திரமான 'அநேகம்'

அஸ்ராரே அனல்ஹக்

பூர்வ காலமுதல் நித்திய காலம்வரை யதார்த்தமான அநேகம் போல் தோன்றிக் கொண்டிருக்கிறது. 'கஸ்ரு' ஆகிய உண்மையான ஆத்மீகப் பார்வையில் அது 'கற்பனை'. அநேகமாயிருக்கின்றது. ஒரு வஸ்து பல்வேறு தன்மைகளைப் பெற்றிருப்பதால் அது அநேக வஸ்துக்களாய் ஆவதில்லை. தனது அலைகளால் ஒரு சமுத்திரத்தின் தண்ணீர் பலதாக ஆகிறதில்லை. எல்லையற்ற நற்பண்புகளைக் கொண்ட அவனது 'தன்ஸீஹ்' (அகண்டம்) பக்கியின் ஆட்சிக்குள் அடங்கிவிடுவதில்லை 'கைர்றுமை' வஸ்துக்களின் குறைகள் பூர்ணமற்ற தன்மைகள் ஆகியவற்றை விட்டும் அவன் பரிசுத்தமாயிருக்கும் தூயநிலையே அகண்டமாகியதும். அகண்டது மானதுமான 'தன்ஸீஹ்' எனப்படும். மிக நெருங்கிய வானவர்களும் அவனுடைய 'தன்ஸீஹை'ப் பற்றி அறியாதவர்களாயிருக்கிறார்கள் இந்த நிலையில் அவனுடைய 'தாத்து'டன் 'ஸைக்கு' கூட யாதொரு அறிவின் தொடர்பும் வைத்துக் கொண்டிருப்பதில்லை. தன்னை மறந்தும் ஆனியமாக்கியும் இந்த நிலையை 'ஆரிபு' ஆகிய ஞானி அடைகிறார். முதல் குறிப்பு கொடுத்து மண்டலம் வரை அவர் சுற்றி திரிகிறார் இந்த சுற்றுதலாகிய திரிதலிலே அவருடைய மறதி நீங்கி விடுகிறது.

'நாம் கோலங்களாகவும்; 'ஹக்கு' அகமியமாகவும் இருக்கிறான்:

பிரபஞ்சத்தின் உயிராக 'ஹக்கு'. இருக்கிறான் பிரபஞ்சம் அந்த உயிரின் உடலாயிருக்கிறது. ஒன்று 'தௌஹீத்' ஆகிய ஏகத்துவமும், மற்றொன்று விண்வார்த்தைகளுமாகும் அகண்டமின்றி கண்டம் யாதொரு கோலமும் கொள்ள முடியாது. கண்டமின்றியே அகண்டம் எந்த கோலமுங் கொள்ள இயலும். இவ்வகையில் கண்டமாகிறது ஒரு வடிவங் கொண்டதாயும் அதன் அகமியம் அகண்டமாயுமிருக்கிறது இதன் அர்த்தம் வெற்று விவாதங்களால் மனதில் அமைவதன்று ஒருவன் இதனை அறிய 'ஹால்' என்

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்
இந்த நிலையில் கண்டிப்
ஹூம் நிலையை அடைய வேண்டும், அப்பொழுது கண்டிப்பின்
புகள் மறைந்து விடுகின்றன, உணர்கிறான்.
அகமியம் பரிபூர்ணமாயிருக்கிறதென்பதை திரை கண்டிப்பு
அகண்ட பரிபூர்ணத்தின் இடம்பட்டிருக்கும் கண்டிப்புகள்
களின்றி யாதொன்றுமல்ல] குமிழியினுடைய உணர்கிறது.
நீங்கியதும் அது தன்னை ஓர் சமுத்திரமாய் இந்த
நீ இந்த 'ஹால்' ஆகிய நிலையை பெருவிடினும் 'நீதி
உண்மையை திடமாக அங்கீகரித்து வந்தாயாகில் நீயும்
தீர்ப்பு' நாளில் 'ஹால்' உடையவர்களின் கூட்டத்தில் பிரசங்க
சேர்க்கப்பட்டு, கணக்கிடப்படுவாய் தன்னுடைய அவர்கள்
மொன்றில் ஹஜரத்து ஜுனைதுல் பக்தாதீ (ரலி) வந்து
குழுமியிருந்த ஜனங்களைப் பார்த்து 'நீங்கள் இங்கு ஆனால்
எனது போதனைகளுக்கு செவிசாய்க்கின்றீர்கள் தலையை
அதனை நீங்கள் விளங்கிக் கொள்வதில்லை. நீங்கள் உங்களைப்
மட்டும் அசைக்கின்றீர்கள் நியாய தீர்ப்பு நாளில் நாங்கள்
பற்றி நீங்கள் யாரெனக் கேட்கப்படும்பொழுது அசைத்துக்
ஜுனைதுடைய உபதேசங்களைக் கேட்டு தலையை ஹக்குதஆலா
கொண்டவர்கள்' என்று நீங்கள் சொல்வீர்கள்
உங்களை விடுவித்துவிடுவான் என்று மொழிந்தார்கள்.

ஷெய்கு எஹ்யா முனீரி அவர்கள் சொல்லுவதாவது:
தன்னை 'கைர்' ஆகிய வேறு பொருள் என்பதாய்க் காட்டு
வதிலேயும், 'ஜுரியத்து' ஆகிய அகமியத்திலிருந்து 'கைரி
யத்து' ஆகிய அன்னியப் பொருள்வரை தன்னை திருப்பு
வதிலேயும் அல்லா(ஹ்)வின் கோபம் அடங்கியுள்ளது. இவ்
வாறே அல்லா(ஹ்) தனது பேரில் குற்றத்தைச் சாட்டிக்
கொள்ளாது தப்பிக் கொள்கிறான். அவன் ரோஜாமலரை
முள்ளைப் போன்று செரியச் செய்கிறான். 'கைர்' என்னும்
வேற்றுமையைப் பார்க்கிறவர்கள் திரையிடப்பட்ட
'மஹ்ஜூபீன்'களாயிருக்கிறார்கள். இந்த திரை காதலியின்
கன்னத்தின் பேரில் விழுந்து கிடக்கும் கூந்தல் மயிர்களுக்கு
ஒப்பாகும் 'மஹ்ஜூபீன்'கள் இதில் சாதாகாலமும் சிக்கிக்
கொண்டிருப்பார்கள். 'குப்ரு' (உண்மையை மறைத்தல்)
காதலியினுடைய கூந்தலின் கருப்பு மயிருடனும் 'ஈமான்' (விசு

வாசம்) காதலியின் அழகு பொருந்திய கன்னங்களுடனும் சம்பத் தப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக, இரண்டு கூடாரங்கள் தயார் செய்யப்படிருக்கின்றன அவை யாவன:— ஒன்று ஹக்' குடைய படையைக் கொண்டது, மற்றொன்று 'இப்லீசு'டைய படையைப் பெற்றது இவர்கள் முறையே, நேர்மையாக நடத்தப்பட்டவர்களும், வழி கேட்டிலாக்கப்பட்டவர்களு மாகும். மன்யஹ்தியல்லாஹு பலாமுளிலில்லஹு வமன்யுளில் ஹு பலஹாதியலஹு' — (நபியே!) அல்லாஹ் எவனுக்கு நேர் வழி காட்டுகிறானோ அவனை நீர் வழி கெடுக்கச் செய்யமுடியாது; எவனை வழி கேட்டிலாக்குகிறானோ அவனை நீர் நேர்வழியாக்க முடியாது

நேர்வழி நடத்துவதையும். வழிகேட்டிலாக்குவதையும் முறையே முஹம்மது (ஸல்) அவர்களுடனும். 'இப்லீசுடனும் ரூபகரிக்கப்படுகின்றன ஆனால் இவ்விரண்டும் 'ஹக்'குடைய பண்புகள் தான் ஒன்று கன்னங்களுக்கும், மற்றொன்று கூந்தல் மயிர்களுக்கும் ஒப்பிடப்படுகின்றன உண்மையில் ஒரு பண் பினது பெயர் முஹம்மது (ஸல்) மற்றொன்றின் பெயர் 'இப்லீஸ்'. 'ஹக்கு' தன்னில் தான் நோட்டமிட்டு தன்னைக் கண்டு தன் பேரில் புகழ் கூறினவுடன் 'முஹம்மது' என்று ஆனான்.

அக அதூன ப ஆலன் வதஜ் அஹ்ஸன அக்ஸனல் காலிகீன் என்ன நீங்கள் பஆல் என்பதைக் கூவியழைத்து சிருஷ்டி கர்த்தாக்களுக்குள் தலைசிறந்தோனை மறந்து விடுகிறீர்களா?'' தனக்கே தன்னை திரை யிட்டுக் கொள்வதால் அவன் தன் சொந்த கைர் ஆகிய வேற்றுப்பொருளாக ஆகி தன்னையே தான் நிந்தித்துகொண்ட வண்ணம் தன்னை விட்டும் விரண்டோடி இப்லீஸ் ஆக ஆகி ஷைத்தான் என்னும் பட்டப்பெயரைச் சூட்டிக் கொள்கிறான். ஒரு குறித்த தூரத்திலிருந்து ஒரு தன்மை அருள்மாரியையும் மற்றொரு தன்மை கோபாக்கினியையும் அடையப்பெறுகின்றன. இதுவோ நித்திய கால பூர்வ நிலையாகும் இதனாலேயே

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

நபி (ஸல்) அவர்கள் அருளே உருவாய்த் திரண்டவர்களென அழைக்கப்பட்டு கன்னங்களுக்கு ஒப்பிடப்படுகிருர்கள். மாஅர் சல்நாக இல்லாறஹ்மதுன்லில்ஆலமீன் (ஓமுஹம்மதே!) உலகத்தாருக்கு உம்மை ஒரு அருட்கொடையாகவேயன்றி நாம் றசூல் என்னும் தூதராக அனுப்பவில்லை. கோபம் அல்லது மகிமை கூந்தல் மயிர்களின் நாமங்களாகும். அது இப்லீஸ் ஆக ஆயிற்று. அந்த இப்லீஸை நோக்கியே. ''இன்ன அலைக்க லஃனதீஇலா யெ.ாமித்தீன்'' நியாய தீர்ப்பு நாள் பரியந்தம் எனது சாபம் உன் மீது இருப்பதாக என்று கூறப்பட்டது.

வஸ்துக்கள் 'அஃயான்' 'காரிஜா'வாகும் வெளியீட்டிற்கு முன்னர் அவற்றின் அகமியங்கள் 'ஹக்கு'டைய அறிவில் தரிபட்டிருந்தன 'ஹக்கு'டைய அறிவு எவ்வாறு 'கதீம்' என்ற பூர்வீகமாக இருக்கிறதோ அவ்வாறே அவைகள் ஹக்குடைய அறிவில் தரிபட்ட கதீம் ஆகிய பூர்வீகப் பொருள்களே. அவை தோற்றரவானபொழுது (மறையக் கூடிய) அநித்தியமான புதுமையாகிய ஹாதிதுவாக ஆகிறது. அவை முதல் நிலையில் 'தாத்து' என்னும் 'தத்' சொருபமாக இருக்கிறது. அவற்றின் தோற்றம் அநித்திய மான புதுமைப் பொருள்களே,

உள்ளமையுடன் ஹக்குக்கு பிரேத்தியேக சம்பந்த முண்டாயிருக்கிறது அவனுடைய ஒவ்வொரு தோற்றமும் மற்ற தோற்றங்களில்லாத ஒரு புதிய தன்மையைப் பெற்றிருக்கிறது. ஒரு தோற்றப் பொருள் அறிவில் புகுந்த வேளை அது ஒரு ஐன் ஆகிய அறிவின் கோலமாக ஆகிறது வெளியீடானதும் அது 'ஐன்-காரிஜா' அல்லது ஹக்குடைய வார்த்தை அல்லது வஸ்துவாக ஆகின்றது கூஜா, குவளை அல்லது தட்டு ஆகியவை மண்ணினுடைய ஏகத்தன்மையைக் குலைக்காதது போன்று அஃயான் ஆகிய வஸ்துக்களின் பெருக்கம் தாத்துடைய ஏகத்துவத்தைச் சிதைப்பதில்லை. இவ்வாறே குயவனுக்கு ஒவ்வொரு பாத்திரத்துடனும் பிரத்தியேக சம்பந்தமுண்டாயிருக்கிறது. இச்சம்பந்தம் மட்டும் நீங்கிப்போவதில்லை,

அஸ்ராரே அனல்ஹக்

ஹக்குடைய வெளியீடு மற்ற எவ்வஸ்துவினுடய வெளியீட்டைக் காட்டிலும் அதிக பிரத்தியட்சமாயிருக்கிறது. 'ஹுவல்லாஹிர்' அவனே அவன் தனக்கு மேல் யாதொன்றுமில்லாத வெளிப்பாட்டைப் பெற்றிருக்கிருன். மறைவான எந்த வஸ்தைக் காட்டினும் அவன் அதிமறை வானவனுயிருக்கிருன். அனனே 'ஹுவல்பாதின்; அவன் தனக்குக் கீழ் யாதொன்றுமின்றிய உள்ளீடாயிருக்கிருன். எனவே, அவனுடைய வெளியீடு அவனுடைய உள்ளீட்டுடன் போரிடுவதில்லே. ஏனெனில் அவனே 'ஹுவல்லாஹிர்; அவனே 'ஹுவல்பாதின்' அவனுடைய உள்ளீடு அவனுடைய வெளியீட்டைப்போன்றே அவ்வளவு பிரத்தியட்சமாயிருக்கிறது அவனது உள்ளமை' மற்ற உள்ளமைகளே விட மிகுந்த வெளியீட்டைப் பெற்றிருக்கிறது. 'அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல்அர்ளி — அவன், வானங்கள் பூமி ஆகியவற்றின் ஜோதியாயிருக்கிருன். அவனது உள்ளமையில் 'அநேகம்' என்பது நுழைவதில்லே, அவனது உள்ளமை தன்னில்தானே குறித்துக் காட்டுவதாயிருக்கிறது. அந்த குறிக்கோள் அதன் ஒருபாகமாக ஆவதில்லே. ஏனெனில் தோற்றங்கள் (கற்பனேகள்) உள்ளமையினது பண்புகளாக தானிருக்கின்றன ஒவ்வொரு வஸ்தும் தனது சொந்த உள்ளமையை அறிந்திருக்கிறது.

குறிப்பான ஒன்று பொதுவான ஒன்றைவிட அதி பிரத்தியட்சமாயிருக்கிறது ''வபீ அன்புஸிகும் அபலாதுப்ஸிரூன்'' அவன் உங்கள் இதயங்களிலிருக்கிருன். எனினும் நீங்கள் நோட்டமிடுவதில்லே'. எனவே, அவனுடைய உள்ளமையை அறிதல் நப்ஸு ஆகிய தனது உள்ளமையை அறிவதற்கு முந்தியதாயிருக்கிறது.

ஹக்கிடமிருந்து உண்டாகும் 'ஹிஜாபு' என்னும் திரை இருவகைப்படும். தன்னேச் சார்ந்த 'தாத்தீ' ஒன்றும் பிறரைச் சார்ந்த 'சிபாத்தீ' ஒன்றுமாகும் தனது சொந்த 'தாத்'தே தனக்கு திரையாக இருக்கும், 'அப்து' என்னும் அடிமையாக நீஇருக்கும்வரை தன்னேச் சார்ந்த 'தாத்தீ'

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

யான திரை ஒருக்காலும் மறைந்து விடுவதில்லை. அதனை நீக்குவதற்கு எடுக்கப்படும் பிரயத்தனமும் முயற்சியும் பிரகாசிக்கச் செய்தற்காக வேண்டி ஒரு கல்லைத் தீட்டுவதற்கு ஒப்பாகும். அந்தக் கல்லோ ஒருகாலும் பிரகாசியாது.

உன்னுடைய 'தாத்'தையும் 'சிபாத்'தையும் நீ மாற்றி அவனுடைய தாத்தாகவும் சிபாத்தாகவும் நீ உணரும் போது பண்புகளான சிபாத்தின் திரை மறைந்து விடுகிறது. இது ஒரு கண்ணாடியில் படிந்தது பாசியைத் துடைப்பது போலாம்,

என்னுடைய தாத்தும் சிபாத்தும் அவனுடைய தாத்தும், சிபாத்துமே. அப்துக்கும், றப்புக்குமிடையே சம்பந்தம் இதுவே.

வஹ்தத்து தொடுத்து அஜ்ஸாம் (ஷாஹ் · கமால்) இறுதியாக தோற்றங்களின் சகல நிலைகளிலும் நாயகம் (ஸல்) அவர்கள் சம்பூர்ண தோற்றமானவர்கள். இதனாலேயே 'பூர்த்தியாளர் எனற அர்த்தங் கொண்ட 'காதம்' என்றும் 'முத்திராங்கர' என்ற பொருள் கொண்ட 'காதிம்' என்றும் நபி (ஸல்) அவர்கள் அழைக்கப்படுகின்றனர் 'லைஸ்பஃதி நபிய்யுன்' எனக்குப் பின்னர் நபி கிடையாது என்று ஒரு ஹதீது கூறுகின்றது.

ஹம்தான்—கஸ்ஸார் (என்னும் வண்ணான்) கூறுவதாவது:- என்னுடைய 'நப்ஸை' பிர்ஔனுடையதைவிட மேம்பாடுடையதாய் நான் கருதுகிறதில்லை, நான் என்னை தரிபடுத்துவதில் 'நப்ஸு' இணைவைக்கத் தொடங்குகிறது. 'நப்ஸு' என்பது ஒன்றே எனவே மூஸா (அலை) பிர்ஔன் முதலானோரின் 'நப்ஸுகள்' இயற்கையில் ஒன்றேயாம். 'ஹக்கு'டைய பார்வையில் வெறுக்கப்பட்டவற்றை செய்தலை விட்டும் நப்ஸு நீங்கி இருப்பதில்லை. ஏமாற்றுவதில் ஈடுபட்டிருக்கும்பொழுது 'ஆரிபு'டைய ,நப்ஸு' 'ஆரிபா'கவே இருக்கிறது.

தானாகவே தேர்ந்தெடுக்கப்படுவதின்றி 'ஹக்கு' தானே 'சூபி'யை நியமனஞ் செய்திருக்கிறான். அவரோ 'ஹக்'கினால் காதலிக்கப்பட்டிருக்கிறார். 'ஹக்கு'டைய காதலுக்காக வேண்டி தன்னை தெரிந்தெடுத்துக் கொள்பவரே 'பகீர்' ஆகும் அவர்தான் 'ஹக்'கைக் காதலிப்பவராகும் அல்லது 'ஹக்'குடைய காதலை தேடுபவராகும். சகல இயமநியமாதிகளிலிருந்தும் அவர் ஓடிவிடுபவாராகும். ஒன்றில் 'சூபி'யாகிரவர் தேடப்பட்டவரும், ஹக்கு தேடுகிறவனும் மற்றொன்றில், 'பகீர்' தேடுபவரும், ஹக்கு தேடப்பட்டவனுமாகும்.

துவிதம் அத்துவிதத்தின் எதிர்பதம் எவனொருவன் துவிதத்தால் திரையிடப்பட்டிருக்கின்றானோ அவன் அத்துவிதத்தை விட்டும் தடுக்கப்பட்டிருக்கிறான். ஒரு 'முவஹ்ஹிது' ஆகிய அத்வைதி துவிதத்தை விட்டும் வெளிவந்து. தனது தன்மையின் ஏகத்தில் தன்னை அவ்வளவாக முழ்கச் செய்து பனா-பில்-பனாவாகிய அந்த அத்துவிதமான ஏகத்துவத்தையும் போக்கிக் கொள்பவராகும். 'அத்தௌஹீது நிஸ்யானுத்தௌஹீது' — தௌஹீது என்பது தௌஹீதை மறந்து விடுதலாம், மன் அறபல்லாஹலா யஃரிபலலா(ஹ்) அல்லாவை அறிந்த ஒருவன் அல்லா(ஹ்)வை அறியாதிருத்தலேயாம். அறிவின் 'கஷ்பு' ஆகிய திரை நீக்கலை நாடி இறைஞ்சும் தேட்டமுடையோன் அறிவை விட்டும் திரையிடப்பட்டிருக்கிறான்.

ஒரு 'ஜாஹிது' நன்மையை 'ஹக்'கின் புறமும் தீமையை தனது பக்கலும் சேர்க்கிறார். 'ஹக்கு'டைய உணர்ச்சியின் வாயிலாய் 'ஜாஹிது' நன்மை செய்பவனாயிருக்கிறான், (ஸைர் Fபில்லா(ஹ்)வின் முதல் நிலையிலிருக்கும்) 'முதல்லிக்' சிலவேளை தன்பாலும் சிலவேளை 'ஹக்'கின்பாலும், நன்மை தீமையைச் சேர்ப்பவனாகும். ஸைர் Fபில்லா(ஹ்)வின் கடைசி நிலையிலிருக்கும் 'முஹக்கிகு' மூன்றாவது

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

தன்மையடைந்தவராதலால் தானே செயல்கர்த்தாவாகிருர். (முதல் 'நான்' என்னுந் தன்மை அஸ்மாவிலிருக்கிறது. இரண்டாவது தன்மை வாஹிதிய்யத்திலிருக்கிறது. மூன்ருவது தன்மை வஹ்தத்திலிருக்கிறது) அவர் சகல சடம், சித்து ஆகிய தோற்றங்களியாவற்றிலும் தன்னைக் காண்கிருர். மேலும், சகல 'அஸ்மாயெகௌனி'யிலும் தன்னைக் காண்கிருர். அவரே செயல்கர்த்தாவும் தனது சொந்த 'கலீபா'வுமாகிருர். தன் ஸ்தூல சரீரத்தையும் தனது கலீபாக்களுள் ஒன்ருகக் கருதுகிருர்.

'கஷ்பு' என்பது திரையை விட்டும் வெளிப்படுதலாகும் திரையில் மிக இருண்டது 'சாலிக்கு' (முமுட்சு)டைய 'நான்' எனுந் தன்மையே 'நீயே உன் சொந்த திரையாயிருக்கிருய்' ஓ ஹாபிஸ் இடையிலிருப்பதைவிட்டும் வெளிப்படுவாயாக' உனது 'இருப்பு' உண்டென்று நீ கற்பித்துக் கொள்வதைத் தவிர யாதொரு திரையுமில்லை.

'அநேகம்' வெளிப்பட்டதும், 'ஹக்கு' 'கல்கு' ஆகிய சிருஷ்டிப் பொருளாயும். அது மறைந்ததும் 'கல்கு' 'ஹக்கு' ஆகவுமிருக்கிருன். ராபிய்யத்துல் பஸரிய்யா (ரலி) அவர்கள் கூறுவதாவது:- 'ஹக்கு' முதலில் வெளியீடாயிருக்கையில் 'கல்கு' (பிரபஞ்சம்) மறைந்திருக்கிறது இப்பொழுது பிரபஞ்சம் வெளியீடாயும், 'ஹக்கு' மறைந்துமிருக்கிறது. முன் இருந்தது போன்று 'ஹக்கு' வெளியீடாகி பிரபஞ்சம் மறைந்து உள்ளீடாவது போன்று ஜீவிப்பாயாக.

'கானல்லாஹு வலம் யகுன் மாஅஹுஷைஉன்', அல்லாஹுத்தஆலா உண்டாயிருந்தான். அவனுடன் யாதொன்றுமில்லை. 'வல்லாஹு அல்ஆன கமாகான' — முன்பிருந்தவாரே அல்லாஹு இப்பொழுதுமிருக்கிருன். கீழ் நோக்கிய 'நுஸூல்) ஆகிய 'பர்கு' (வியட்டி)யுடைய வட்டத்தின் பேரில் யாத்திரை செய்தலையும் பின்னர் மேல் நோக்கிய 'உருஜ்' ஆகிய 'ஜம்உ'(சமட்டி)யுடைய வட்டத்தின்மீது

யாத்திரை செய்தலையும் இது சுட்டிக்காட்டுவதாயிருக்கிறது. கீழ் நோக்கிய பிரயாணம் முடிவடைந்ததும் மேல் நோக்கிய பிரயாணம் மிஃராஜ் ஆரம்பமாகின்றது. அநேகத்தன்மையாகிற 'கத்ரத்து'க்குப் பின்னரே ஏகத்தன்மையாகிய 'வஹ்தத்து' அடையப்படுகிறது! 'மகாமுன் மஹ்மூது' என்னும் மகா மகத்துவமிக்க புகழப்பட்ட நிலை என்றும், ஓர் வில்லினது இரு வளைவுகளும் சந்தித்தற்குரிய இடமெனும் 'காப கௌஸைனி' என்றும் அழைக்கப்படும். 'ஜம்உல் ஜம்உ' ஆகிய நிலையாகும் 'கௌது', 'குத்பு' ஆகியோரின் ஸ்தானம் இதுவேயாகும் 'பர்து' ஆகிய கனித்தோரின் நிலை 'ஜம்உ' ஆகும். 'கௌது'ம் 'குத்பு'ம் பிரபஞ்சத்தை தங்களின் தோள் புயங்களின்மீது சுமப்பவர்களாகும்.

'வஹமல்னாஹும் Fபில்பர்ரி வல்பஹ்ரி' — அவர்களை நாம் தரைமீதும், கடல்மீதும் சுமந்தோம்.

கருகிகள், பண்புகள் ஆகிய அடையில் 'தாத்து' ஆகிய சுக்சொரூபம் கன்னைத் தோற்றுவித்தது தான் 'ஆலம்' ஆகிய பிரபஞ்சமாகும் இதுவே காதலின் கொந்தளிப்பாகும்; கடலானது அலைகளாலான ஆடையில் தோற்றமளிக்கின்றது. 'முஹம்மது மக்ரிபீ' கூறுவதாவது:- கடலிலிருந்து பலநிறப்பட்ட அலைகள் தோன்றின. 'நிறமின்மையினின்றும் பல்வேறு நிறங்களைப் பெற்றன' அதலின், 'ஹக்'கின் அகமியமே 'கல்கி'ன் அகமியமென்றும், கருதிக்கொள்வாயாக. சடம் ஆலம் நாசூத்து போன்றும் தண்ணீர் மிதால் போன்றும், காற்று ஆத்மா போன்றும், நெருப்பு 'சிபாத்து' போன்றும், பார்வை 'தாத்து' போன்றும் இருக்கிறது.

தன்னுடைய இச்சைகளுக்கு வழிபடுவதல்லாமல் அடிமை (அப்து) தனது ஆண்டவனுக்கும் வழிபட வேண்டி

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

யிருக்கிறது. எதுபோலெனில் ஒரு குழந்தை விளையாட்டில் ஈடுபட்டிருக்கையிலேயே தன் தாயினால் ஏவப்பட்ட சில கடமைகளையும் முடித்துக் கொள்கிறது.

வஸ்துக்கள் 'ஹக்கு'டைய வார்த்தைகளாகும். ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு அர்த்தமுண்டு. சரிவர நோட்டமிடுபவன்தான் வொவ்வொரு வஸ்துவின் கோலத்திலிருந்து அதன் அர்த்தத்தை உணர்பவனாயிருக்கிறான். வொவ்வொரு வஸ்தும் அவனுடைய 'ஜமால்' என்னும் பேரழகின் கண்ணாடி 'சநுரீஹிம் ஆயாதினா பில்ஆபாகி வபி அன்புஸிஹிம் ஹத்தா எதபையன லஹும் அன்னஹுல்ஹக்' நமது சிருஷ்டாந்தங்களை பிரபஞ்சத்திலும், அவர்கள் உள்ளங்களிலும் 'நாம் அவர்களுக்கு அது போதிய பிரத்தியட்சமாகி, அதுவே 'ஹக்கு' (மெய்ப்பொருள்) எனக்காணும்வரை காட்டுவோம்'' இங்கு பிரபஞ்ச வஸ்துக்களும், உள்ளங்களும் கண்ணாடிகளாகும் வொவ்வொரு செயலும் ஒரு எண்ணத்தின் கோலம். அல் அஃமாலு பின் நிய்யதி; எண்ணம் நேர்மையாயிருப்பின் செயலைப் பற்றிக் கவலையில்லை. 'நிய்யத்துல் முஃமினீ கைருன்மின் அஃமாலிஹி' ஒரு நன்நம்பிக்கையாளனின் எண்ணம் அவனுடைய செயலைவிட சிறந்தது. ஒவ்வொரு வஸ்துக்கும் ஒரு கோலமும், அர்த்தமும் உண்டு. அர்த்தமாகிறது 'ஹக்கு'தான் ஆதலின் கோலத்தைவிட்டும் நீ அர்த்தமாகிய மூலத்தளவில் ஓடிவிடவேண்டும். உன்னுடைய வெளியரங்க செயல்கள் சில 'பராயிலு' என்னும் கடமைகளுக்கு மேல் அதிகமாயிருக்க வேண்டாம். (அது வேற ஒவ்வொரு 'முஃமின்' பேரிலுள்ள கடமை) நீ பாவத்தினின்றும் விரண்டோடுவதைப் போன்று வெளிவேஷமான போலி வணக்கத்தை விட்டும் ஓடிவிட வேண்டும்.

அஸ்ராரே அனல்ஹக்

9-வது அத்தியாயம்

சலாத்து — தொழுகை

சலாத்து (தொழுகை) 'வஸ்லத்து' ஐக்கியமடைதல், நெருங்குதல் என்பதிலிருந்து அடையப்பெற்றது வெளியரங்கக்காரர்கள் (ளாஹிரீன்) இதனை 'தொழுகையில் சில குறித்த சடங்குகளையும், சட்ட ஒழுங்குகளையும், கடைப்பிடித்து தொழுகுதல்' என்ற அர்த்தங் கொள்கின்றனர். ஞானிகளோவெனில் இதற்கு 'காதலன் காதலியுடன் ஐக்கியமாதல்' என்ற கருத்துக் கொள்கின்றனர். 'ஒளு (தொழுகைக்கு முன்னர் சுத்தி செய்துகொள்ளல்) என்பது பிரிதல்' என்றும் 'சலாத்து' என்னும் தொழுகை சேர்தல் அல்லது ஐக்கியமடைதல் என்றும் ஷிப்லி (றஹ்) அவர்கள் கூறுகிறார்கள். 'மன்லம்யன் பஸல்லம்யத்தஸல்' — பிரியாதவர்கள் சேராதவர்களே. இதுவே நித்திய நிரந்தரமான தொழுகை. 'அல்லதீன ஹும் அலாஸலாத்திஹிம் தாஇமூன்!' அவர்கள் நிரந்தரமான தொழுகையில் ஈடுபட்டிருக்கிறார்கள். காதலியுடைய காதலிலே காதலன் சதா மூழ்கிக் கிடக்கிறான். மற்றொருவகை தொழுகையோ தினசரி ஐங்கால தொழுகையாகிய சாதாரண தொழுகையாகும். ஐங்கால தொழுகை 'கிப்லா'வை முன்னோக்கியது. நிரந்தரத் தொழுகை 'ஹக்கு'டைய சமுகத்தை முன்னோக்கியது. 'பஐனமாதுபவலஹு பதம்ம வஜ்ஹுல்லா(ஹ்)' எத்திசையில் உன் முகத்தை திருப்பினும் அங்கு அல்லா(ஹ்)வின் முகமுருக்கிறது.

சில குறிப்பிட்ட சட்ட ஒழுங்குகளைக் கொண்டு வரையறுக்கப்பட்டது சாதாரண தொழுகை மற்றொரு வகை 'சலாத்து' மிகவும் விசாலமுடையது ஒன்றின் 'கிப்லா' குறிப்பிட்டஸ்தானத்துள்ளடங்கியது, மற்றொன்றினுடையதோ சர்வ வியாபகமானது. ஒரு தொழுகையிலிருந்து மற்றொரு தொழுகை அளவில் திரும்பியபொழுது ஷெய்கு அபூபக்கர்

சலாத்து தொழுகை

அவர்கள் கட்டிய முந்திய 'தக்பீர்' என்னவெனில், 'காபிர்ஷு'தம்துன்னூர் பூஸ்தம் அல்லாஹு அக்பர்' — ''நான் 'காபிர்' (திரையிடுபவனாய்) ஆய்விட்டேன். பூநூலையும் அணிந்துகொண்டேன் அல்லாஹு அக்பர்'' என்பதாகும். சம்பூர்ண 'கிப்லா'வை முன்னோக்கியுள்ள அவர்களுக்கு குறிப்பிட்டதோர் 'கிப்லா'வின்பால் திரும்புவது குப்ரைவிட குறைந்ததன்று. கிப்லாவென்றும் முன்னோக்கும் ஸ்தலம் நான்கு ஆகும். அவையாவன:- (1) மக்காவின் கிப்லா (2) ஒருவனது பீர் அல்லது ஷெய்கு (3) ஒருவனது கல்பு என்னும் இதயம் (4) ஹக்குதலா ஒருவன் முந்திய கிப்லாவிலிருந்து இரண்டாவது அளவிலும், இரண்டாவது கிப்லாவிலிருந்து மூன்றாவதின்பாலும் மூன்றாவது கிப்லாவிலிருந்து நான்காவதிலும் முறையாக திரும்ப வேண்டும் குறிப்பிட்ட ஐங்காலத் தொழுகையில் இந்த நிலைகளை அடையப்படுமேயாயின் மிகவும் நன்று நீ முஹம்மது (ஸல்) அவர்களுடைய பாத்திரத்தினின்றும் குடித்தவனாய் இல்லாவிடில் அதனை அடையப்படுதற்கு சாத்தியமான எவ்வகையிலாயினும் அடைய வேண்டும். உனது (திரேகம் நான் என்ற) தன்மையை விட்டும் நீங்கிவிட வேண்டும், அவ்வேளை நீஹக்குடன் ஐக்கியமடைந்தவன் ஆனாய் இதனாலேயே 'ஒளு' என்பது பிரிதல் என்றும் சலாத்து என்பது சேர்தல் என்றும் சொல்லப்பட்டது பேரின்பக் காதலர்களின் தொழுகை (ஜீவத்தன்மையை) விட்டுவிடுதலாகும். பக்திவான்களின் தொழுகையோ உட்காருவதும், குனிதலுமேயாகும், தொழுகை என்பது 'முஃமீன்' (விசுவாசி) உடைய மிஃராஜ் (ஏற்றம்) ஆகும். இந்த விசுவாசி தனது (திரேகாதியான) கண்டிப்பான தன்மையைக் காலி செய்துவிட்டு தனது காதலியை அடைவதாகும் — இதுவே 'மகாமுன் மஹ்மூது இந்த நிலையில் ஒருவன் தன்னைத்தானே தொழுது கொள்கிறான்.

தொழுகை இரு தன்மையானதாகும், ஒன்று 'ஜிஸ்மி'யாகிய சரீர சம்பந்தமுடையதும், மற்றொன்று 'ரூஹி'யாகிய ஆன்மா சம்பந்தமுடையதுமாகும்; சடத்தன்மை சட்டரீதியான ஆசாரங்களுடன் சம்பந்தப்பட்டது, ஆத்மீகத் தன்மை ஆத்மா

வுடன் சம்பந்தப்பட்டது. சரீர சம்பந்தப்பட்டதை அனுஷ்
டித்துவிட்டு 'ஹக்'கின் பார்வையாகிய ஆத்மாவையடை
யாது (திரேகாதியான) தன்மையை மறந்துவிடாது போனுல்
ஆத்மா இன்றிய ஒரு சடமான தொழுகை ஆகிவிடுகின்றது.
சரீர அனுஷ்டானங்களின்றி அந்த பார்வை கிடைத்துவிடுமே
யாகில் அப்பொழுது சரீரமின்றிய ஆத்மாவாயிருக்கிறது. இந்த
இருவகையிலும் பூர்ண தன்மை கிடையாது. சடங்காசாரங்
களைக் கடைபிடித்தொழுவது இரும்பைத் தீட்டிப் பிரகாசிக்கச்
செய்தற்கொப்பாகுமென்று சிலர் கருதுகின்றனர். இரும்பானது
துலக்கப்பட்டால் பிரகாசம அந்த இரும்பிலிருந்தே வெளிப்படு
கிறது. நெற்பக்கோளறையில் சம்பூர்ணமாக்கப்படும் சரீரத்
துக்கு ஆத்மா அதனிடமிருந்தே அதற்கு வருகிறது. விளக்கு
தயாரிக்கப்பட்டு கிரியை செம்மைப்படுத்தப்பட்டதும்
அத்திரி தானுகவே நெருப்பைப் பற்றிக் கொள்ளும்
தன்மையைப் பெறுகிறது. 'நபக்துபீஹி மின்ருஹி' — 'நான்
எனது ரூஹில் நின்றும் அதில் ஊதினேன்' என்று இறைவன்
அருளியிருக்கிறான். 'பார்வை' என்பதோ எதிர்பாராத விருந்
தாளி, எந்த எதிர்பாராத நேரத்திலும் அது மீளலாம். போது
மான பக்குவத்துடன் ஒருவன் தன்னை வைத்துக்கொண்டு
இந்த விருந்தாளியை வரவேற்கத் தயாராக இருக்க
வேண்டும்.

'சஜ்தா' (சாஷ்டாங்கமாகிறது) பக்திக்கும், மரியா
தைக்கும் ஏற்படுத்தப்பட்டது. ஆதமுக்கு மலக்குகளான வான
வர்கள் சாஷ்டாங்கஞ் செய்தனர். அந்த சாஷ்டாங்கம்
யதார்த்தத்தில் 'ஹக்கு'க்கு உண்டானது. ஒரு குறித்த
திசையிலே ஹக்குக்கு செய்யப்படும் சாஷ்டாங்கம் என்ப
தின்றி, 'கிப்லா' நோக்கிய ஒருவன் சாஷ்டாங்கஞ் செய்தால்
அது 'ஷிர்க்கு' ஆகிய இணைவைத்தலேயாம். ஒருவன் படைப்
பினங்கள் யாவற்றையும் தனது 'கிப்லா'வாகக் கொள்ளலாம்
'பஐனமாதுவல்லூ பதம்ம 'வஜ்ஹுல்லா(ஹ்)' — நீங்கள்
எத்திசை திரும்பினும் அங்கு அல்லா(ஹ்)வின் முகமிருக்கிறது'.
ஒரு 'மஜ்தூபு' ஆகிய பரவச நிலையில் சொக்கிய கறக்கமுடை

ஸலாத்து தொழுகை

யோர் தான் கண்ட வஸ்துக்கள் ஒவ்வொன்றின் முன்னிலையிலும் சாஷ்டாங்கஞ் செய்து சொன்னதாவது 'அல்லஹூம்ம அஊதுபிக மின்அன் உஷ்ரிக பிகுல்லிஷைஇன்' 'ஏ இறைவா! ஒவ்வொரு வஸ்துவிலுமுள்ள ஷிர்க்கு ஆகிய இணைவைத்தலை விட்டும் நான் உன்னிடத்தில் காவல் தேடுகிறேன்' என்பதாகும். மஸ்ஊதுபேக் என்பார் இதனைக் கண்டு அன்னாரின் மகனைப் பார்த்து, 'உம்முடைய தந்தை ஷிர்க்கு ஆகிய இணைவைத்தலிலேயே ஆண்டவனின் காவல்பாட்டைத் தேடுகிறாரே!' என்றதற்கு அவருடைய மகன் பின்வரும் பதிலுரைத்தாரம்:- 'அன்னார் வஸ்துத் தன்மையை நீக்கிய வஸ்துக்களைப் பார்ப்பதால் அவர்களை 'முஷ்ரிக்கு' என்று அழைக்காதீர்கள்'' என்பதாம், இதனாலேயே ஒரு முஃமின் தனது நோட்டத்தை 'கிப்லா'வை விட்டும் ஹக்கு' (மெய்ப்பொருள்) அளவில் திருப்புகிறார். தொழுகையின் 'தக்பீர் தஹ்ரீமா'வில் இந்த நிய்யத்து வைக்கப்படுகிறது ஹக்கு அளவில் நோட்டம் வைத்தலே நிரந்தரத் தொழுகையான 'ஸலாத்துன் தாஇமுன்' ஆகும். வானவர்கள் ஆதமுக்கு 'ஸஜ்தா' செய்ததை ஆதமில் பிரகாசிக்கும் 'நூரு - முஹம்மதீ'யான முஹம்மதுடைய ஜோதியை நோக்கியே என்று இமாம்கள் ஒத்தோர்மித்து கூறுகின்றனர். ஒரு கண்ணாடியில் பிரதிபலிக்கும் ஜோதியை ஒருவன் வணங்கினால் அவ்வணக்கம் ஜோதிக்கேயன்றி கண்ணாடிக்கு அன்று. 'பசீரத்து' என்னும் அகப்பார்வையுள்ள மனிதன் சகல வஸ்துக்களையும் அல்லாஹுத்தஆலாவுடைய ஜோதி பிரதிபலிக்கும் கண்ணாடியாகவே கருதுகின்றான்.

'அஸ்ஸாபிஹூ ம அல்லாஹ்'. ''நீங்கள் அல்லாஹுத்தஆலாவுடன் கலந்துறவாடுங்கள்''. இந்த தொழுகையோ ஒத்திப்போடுவதற்கு முடியாததொன்று. ஆனால் சாதாரண ஐங்கால தொழுகையை ஒத்திப்போட்டு பிற்படுத்தித் தொழலாம். ''வல்லதீனஹூம்அலா ஸலாத்திஹிம்யுஹாபிளூன்'' — தங்கள் தொழுகையின் மீது கண்காணிப்புடையவர்கள். இந்த தொழுகைதான் அகண்ட பரிபூர்ண உள்ளமையை தனது 'கிப்லா'வென்னும் முன்நோக்குதற்குரிய ஸ்தானமாகக்

கொண்டது; சாதாரணத் தொழுகை கஃபாவைத் தனது கிப்லாவாகப் பெற்றிருக்கிறது 'பவைலுன்னில்முஸல்லதீன ஹூம்அன் சலாத்திஹிம்சாஹூன். ''பொடுபோக்கான மறதியாளர்களாய்த் தொழுகிற வணக்கவாளிகளுக்கு கைசேதம்'' என்ற குர்ஆன் வாக்கியம் பரிபூர்ண உள்ளமையை மறந்திருப்போரை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதாகும் ஒருவரது 'ஒளு' (சுத்திகரித்தல்) சரீரத்துடையதும், மனிதனது அசுத்தங்களைப் போக்கி சுத்தி செய்தலாகும். மற்றொருவன் ஒளு' (சரீரம் நான் என்னும்) தன்மையை விட்டும் பிரிதலாம். 'அல் ஒளு இன்பிஸால். வஸ்ஸலாத்து இத்திஸால்' — 'ஒளு' வாகிறது பிரிதலும், தொழுகையானது சேர்தலுமாகும். உனது 'ஜுஸ்இ'ய்யான ஜீவ அகங்காரம் உன்னில் உறைந்திருக்கையில் நீ இந்த தொழுகைக்கு உன்னை தயாரித்துக் கொண்டவனன்று.

ஒருவர் ஒரு எழுத்தாளனை எழுதுகோல் காகிதம், சாயம் இவைகளின்றி 'அல்லாஹ்' பெயரை எழுதுமாறு சொன்னதற்கு. அவர் எழுந்து நின்று தொழுகையின் குனிதல், நிமிர்தல், சாஷ்டாங்களுஞ் செய்தலாகிய அனுஷ்டானங்களை செய்து முடித்தார். நிற்பது 'அலிபு' ஆகவும், குனிதல் 'லாம்' ஆகவும், சாஷ்டாங்களைச் செய்தல் 'ஹே'யாகவுமிருக்கிறது.

ஓ சோதரா! நீ சித்திரத்தை சித்தரிப்பவனைக் கருதிக் கொள்வாயாக.

10-வது அத்தியாயம்

பீர் — ஞானோபதேசிகர்

நேர்மையில் வழிநடத்தப்படுவதற்கு அறிவும் உணர்ச்சியுமே பெரிதும் தேடப்படுகிறது; இல்லாவிடில், தங்கு தடையின்றி லோக விவகாரங்கள் சென்று கொண்டிருக்கும் 'புலனுதிகளான உழைப்பாளிகளும், காரியஸ்தர்களும் பூர்ணத்தை யடைவதற்காக தாங்கள் தங்கள் கருமத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் வேளாண்மைகாரர்களிடமிருந்து கண்டு முதலான தானியங்களை சேகரித்து அரச களஞ்சியத்துக்கு அனுப்பிவிட்ட போதிலும் அரசனுக்கு மட்டும் இதனைப் பற்றி தெரிவிப்பதில்லை. கருணை கூர்ந்து தாங்கள் இதனை தெரிவிப்பீர்களென்று நம்புகிறேன்' என்று சிஷ்யன் தனது ஞானோபதேசிகருக்கு எழுதியிருந்தார் தாத்து என்னும் தத்சொரூபம் தனது சிபாத்து என்னும் பண்புகளைப் பெற்று பண்புகளின் வாயிலாய் அவற்றின் இன்ப சுகங்களை அடைய பெறுகின்றது. ஆனால் சாலிக்கு ஆகிய முமுட்சுக்கு இதனைப் பற்றிய அறிவிப்பு ஏதுமின்றி அறியாமையிலிருக்கின்றான் 'அறிவுடைய 'தஜல்லி'யாகிய தோற்றம் உதிக்கும்வரை எந்த முமுட்சும் 'ஆரிபு' என்னும் ஞானியாக இருப்பதில்லை அறிவு உதித்தபொழுதுதான் தன்னைப் பற்றி அவன் அறிந்தவனாகிறான் 'சிபாத்து'க்கள் இருந்தபோதிலும் அறிவு உதிக்கும் முன்னர் 'தாத்து' அவற்றை அறியாதிருந்தது தன்னில் தான் மூழ்கிக் கிடந்தது

'சாலிக்கு' ஆகிய முமுட்சு, உள்ளமை, நாட்டம், சக்தி, கேள்வி ஆகியவற்றைப் பெற்றிருக்கிறான், அந்த 'சாலிக்கு' இவற்றை உணராதிருக்கும் நிலையில் அவனுக்கு இவை இல்லாதிருப்பது போன்றே இருக்கிறது.

'சாலிக்கு' கேட்கிறான் பார்க்கிறான் எனினும் 'ஹக்கு'தான் கேட்கிறான், பார்க்கிறான் என்பதை உணர்வ

தில்லை, இந்த வகையில், ஹக்கு கேட்கிறான் பார்க்கிறான்: 'சாலிக்கு' ஹக்குடைய 'சிபாத்து'களை உணர்வதில்லை. அந்த உணர்ச்சி அவனுக்கு வந்துவிடும் பொழுது அவன் தனது சொந்த ஆரிபு' என்னும் ஞானியாக ஆகிறான். உணர்ச்சி பார்வையைக் கொண்டு வருகிறது பார்வை உள்ளமையை வில் சேர்த்து வைக்கிறது. 'ஹிஜாபு, என்னும் திரை தன்னாலே தன் மீதே போடப்படுகிறது அவன் தன்னைக் கொண்டு தானே 'ஆரிபு' ஆக ஆகிறான். தன்னைக் கொண்டு தானே ஜாஹில் ஆக ஆகிறான். 'கைர்' என்னும் பிற வஸ்து இங்கு கிடையவே கிடையாது மன்யஹ்தியல்லாஹு பலமுதில் லாஹு வமன்யுதில்ஹு பலஹாதியலஹு' (ஹதீது குத்ஸி;

'யாரை ஹக்கு நேர்வழியில் நடத்துகிறானே அவரை யாரும் வழிகெடுக்க முடியாது எவனை அவன் வழிகேட்டிலாக்கு கிறானே, அவனை யாரும் நேர்வழியிலாக்க முடியாது

பீர் ஆகிய ஞானதேசிகரினது 'ஜமால்' என்னும் பேரழகை முரீது என்னும் சிஷ்யன் தெரிசிக்க வேண்டும். பீருடைய ஜமால் முரீதுடைய இதயத்தில் பிரதிபலிக்கப்பட வேண்டும் பீர் என்னும் ஞானதேசிகரின் 'ஜமால்' என்னும் கண்ணாடியில்தான் முரீது என்னும் சிஷ்யன 'ஹக்கு'டைய ஜமாலைத் தெரிசிக்கிறான். முரீதுடைய இதயம் பீருடைய ஜமாலைத் தெரிசிக்கும் கண்ணாடியாக இருக்கிறது ''மன்ரஆனி பகத்ரஅல்ஹக்'' - எவனொருவன் என்னைக் கண்டானோ அவன் 'ஹக்'கைக் கண்டவனாகும்'. என்று நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீது ஒன்று கூறுகின்றது ?'என்னை தெரிசித்தலில்தான் 'ஈமான்' (நம்பிக்கை விசுவாசம்) உடைய அசமியமிருக்கிறது'' என்று பிறிதொரு ஹதீது பகரு கின்றது ''அல்ஈமானு அன்துஅ்மினபிருஅ்யதி''

'சுலூக்' என்னும் பாதை நடப்பவர்கள் தங்கள் பார்வையிலிருந்து வஸ்துக்களினது வஸ்துத் தன்மையை மறைந்து விடுகின்ற மாபெரும் நிலையை அடைகின்றார்கள். அவர்களின் கண்காட்சியான பார்வையில் அல்லா(ஹ்)வின்

வேற்றுமைப் பொருள் என்பது கிடையாது. இந்த நிலையில் அவர்கள் 'இன்பிஸால்' என்னும் பிரிதலுடைய எதிர்பதமான 'இத்திஸால்' (ஐக்கியம் —முக்தி) என்று அழைக்கப்படுகின்றனர்.

சில தர்வேஷுகள் தங்களை விட்டும் சாதாரண ஜனங்கள் நீங்கி இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தங்களை உயரிய கம்பளி ஆடைகளால் போர்த்திக் கொண்டு நல்ல உணவுகளை அருந்துகின்றவர்களாய் இருந்தார்கள் 'தனது சொந்த பீருடைய காலத்திலேயே அன்னாரின் உறவை வெட்டிக் கொண்டு, மற்றொரு பீரைத் தேடுகிறவன் அல்லா(ஹ்)விடம் 'பைஅத்து'டைய நேரத்தில் தான் அளித்த வாக்குறுதியை தறித்துக் கொள்வது போன்றது என்று ஷெய்குல் அக்பர் (றலி) அவர்கள் அருளி இருக்கிறார்கள் ஒரு நபியைப் பின்பற்றிய ஒருவர் முந்திய நபியின் வாழ்நாளிலேயே மற்றொரு நபியைப் பின்பற்ற முடியாது.

'அல்லா(ஹ்)வினும் வேறு என்ற (மாய்கையான) சங்கற்பவிகற்பமாகிய எண்ணத்தை மனமானது தன்னுள் அடக்கிக் கொள்ளாதிருக்கும் நோக்கத்துக்காகவே 'ஷுக்லு' என்னும் அப்பியாஸ முறையையும், 'திக்று' என்னும் 'ஹக்கு'டைய திருநாமங்களை ஜெபித்தலாகிய தியானத்தையும், 'முராக்கபா' என்ற மனதின் பல்வேறு எண்ணங்களைப் பரிசோதித்தலையும் ஏற்படுத்தப்பட்டன

ஆரம்பக்காரனுக்கு அவனுடைய குற்றங்களை எடுத்துக் கூறினால் அவன் உன்னை விட்டும் தூரப்பட்டு விடுவான் ஹிருதய சுத்தம் ஏற்பட்ட பிறகு சகல குற்றங் குறைகளும் தாங்களாகவே மறைந்து விடும்.

நேர்வழி காட்டும் ஷெய்கு மேற்குத்திசையிலும் முரீது (சிஷ்யன்) கீழ்த்திசையிலும் இருக்கக்கூடும் எனினும் பீர் உடைய மிகக் குறைந்த தகுதியாதெனில் அவர் 'கஷ்புல் குலூபு' (என்னும் முரீதுடைய உள்ளங்களிலுள்ளவற்றை

அறிதல்)ஐயும். 'கஷ்புல்குபூறு' (என்னும் மரித்தோரின் நிலைமைகளை உணர்தல்)ஐயும் பெற்றிருப்பதாம் அவருக்கு இந்த தகுதி இல்லாவிடில் 'முரீது' கொடுப்பது அவர் பேரில் 'ஹறாம்' (விலக்கப்பட்டது) ஆகி இருக்கிறது உலகத்தின் கடந்த விஷயங்களையும், நிகழப் போகும் விஷயங்களையும் அவர் அறிந்திருக்க வேண்டும். அவர் தான் பூமியில் அல்லா(ஹ்)வின் பிரதிநிதியாக இருக்கக் கூடியவர் '.இன்னீ ஜாஇலுன் பில் அர்ளி கலீபா'' நாம் அவரை பூமியில் (நமது) பிரதிநிதியாக்கிறோம்.

பீர் ஆகிய ஞானகுருவாகிறவர் நீ இறைவனை அடுத்தற்குரிய 'பர்ஜக்' என்னும் நடுநிலையாயிருக்கிறார்.

பிரகாச மிக்க சூரியனை நீ பார்ப்பதற்கு உனக்கு புகையினால் மூடப்பட்ட கண்ணாடியொன்று தேவைப்படுகின்றது. 'முரீதீன்' பேரிலுள்ள பீருடைய செல்வாக்கு முரீது தனது சரீர சம்பந்தத்தை நீக்கிக் கொண்ட பிறகும் தங்கி நிற்கின்றது மன்சூருல் அல்லாஜ் (ரஹ) அவர்களுக்கு பரீதுத்தீன் அத்தார் (ரஹ) அவர்கள் 150 வருட காலம் பிந்தியவர்களாயிருந்தும் ஹல்லாஜ் (ரஹ்) அவர்கள் அத்தார் (ரஹ்) அவர்களுடைய குறைகுணங்களை சீர்படுத்தினார்கள். முதல் 'பீர்' காலமான பிறகு ஒருவன் மற்றொரு பீரிடம் .பைஅத்து' பெற்றுக்கொள்ளக் கூடும். ஒன்றன்பின் ஒன்றாக அபூ—யஸீது பிஸ்தாமீ (றலி) அவர்கள் 12 பீர்களைப் பெற்றிருந்தார்கள் முடிவில் எல்லா பீர்களும். 'அல்ஹாதி' (நேர்வழி காட்டுவோன்) என்ற இஸ்மின் தோற்றமாகும் முரீது தனது 'பீருக்கு' பெருங் கண்ணியத்தையும். மரியாதையையும் அளிக்கிறார்.

'முரீது'கள் சாதாரணம் என்றும். விசேஷம் என்றும் இரு வகையினராவர். அவர்களின் தகுதிகளுக்கும், தன்மைகளுக்கும் தக்கவாறு பீர்' அவர்களுக்கு உபதேசிக்கிறார். ஒருவன் சாதாரண போதனைகளைப் பெறுகிறான்; மற்றவர் சாதாரண முரீதுகளுக்கு அறிவிக்கப்படாத

பீர் ஞானபதேசிகர்

(விசேஷ)போதனைகளையும் பெறுகிறார். ''எனது வார்த்தைகளே 'ஷரீஅத்து' ஆகும்; எனது செயல்கள் 'தரீகத்து' ஆகும்; எனது சொந்த நிலைமையே 'ஹகீகத்து' ஆகும்''; என்ற பொருள் கொண்ட 'அஷ்ஷரீஅத்து அக்வாலீ வத்தகரீத்து அப்ஆலி வல்ஹகீத்து அஹ்வாலீ'' என்ற ஹதீதை நாயகம் (ஸல்) அவர்கள் அருள் செய்திருக்கிறார்கள்'

சுயநலம் என்பது 'முரீது'டைய தன்மைக்கு ஒரு கொடிய விஷம் போன்றது; தனது சமுகத்தில் செய்யப்படும் எத்தகைய செயல்களைப் பற்றியும் தன்னை யாதொரு கேள்வியும் கேட்கக்கூடாதென, கிலுறு' (அலை) அவர்கள் மூஸா (அலை) அவர்களை முரீதாக எடுத்துக் கொள்வதற்கு முன்னர் நிபந்தனையிட்டிருந்தார்கள் கப்பலை (துவாரமிட்டு) மூழ்கடித்ததைப் பற்றியும், வாலிபனை கொலை செய்ததைப் பற்றியும் கேட்ட கேள்விகளை 'கிலுறு' (அலை) அவர்கள் மன்னித்து விட்டார்கள் ஆனால் சுவரைப் பழுது பார்த்ததற்கு பணம் வாங்காத விஷயத்தைப் பற்றிக் கேட்கப்பட்டதும். மூஸா (அலை) அவர்களை (ஒன்றும் பேசாது) அனுப்பி வைத்து விட்டார்கள் முதல் இரு கேள்விகளும் 'ஷரீஅத்து'க்காக வேண்டியே கடைசி கேள்வி தன் சுயநலத்தைக் கருதியே. அபூயஸீது பிஸ்தாமீ (றலி) அவர்களும். உதுமான்—கைபரி அவர்களும் சேர்ந்து தொழுது கொண்டிருந்தார்கள். உதுமான் கைபரி அவர்கள் 'ஏ இறைவா! நான் விரும்பும் சகலவற்றையும் எனக்கு அளிப்பாயாக' என்று கூறி தனது தொழுகையை முடித்தார்கள் அபூயஸீதில் பிஸ்தாமீ அவர்களோ. 'ஏ இறைவா! நான் விரும்பும் சகலவற்றையும் தரித்து விடுவாயாக' என்று முடித்தார்கள் 'உதுமான் அவர்கள். 'இது எப்படி சரியாகும்? என்' றார்கள் அதற்கு அபூயஸீது (றலி) அவர்கள் கூறிய பதிலாவது;— ''ஹக்கைத் தேடும் ஒருவனுக்கு தனது நப்ஸுடைய இச்சைகளுடன் என்ன வேலையிருக்கிறது அவ்வாறானவன் மாஸிவல்லா(ஹ்)வென்னும் 'ஹக்'கின் வேறான பொருளை உதறித்தள்ளிவிட்டு தனது (கண்டிப்பான) இருப்பையே மறந்து விடுகிறான்;

அஸ்ராரே அனல்ஹக்

'ஷரீஅத்து' என்பது உலமாவினாலும், 'தரீகத்து', 'ஹகீகத்து' என்பது 'மஷாஇகு'களாலும் போதிக்கப்படுகின்றன. உலகத்தில் தீங்கு பரவாதிருத்தலைப் பார்த்துக் கொள்வதே 'உலமாவின் வேலை. அவர்கள் நரகத்தின் பயத்தைப் பற்றி எச்சரித்தும், சுவர்க்கத்தின் ஆசி கூறியும் வந்தார்கள். மேலும், சீன தேசத்தின் மாபெரும் மதிற்சுவர் இல்லாமல் 'யஃஜூஜ்', 'மஃஜூஜ்' கூட்டத்தார்களை உலக சமாதானத்தைக் கலைக்காது செய்தற்கு முடியாது (என்றும் அவர்கள் கூறுகின்றனர்) ஆனால் அல்லா(ஹ)வின் அளவிலே யாத்திரை செய்யும் ஒருவனை இங்கு தடைசெய்து நிறுத்துவது அவனுக்கு முன்னர் ஒரு முள்வேலியைப் போடுவதற்கு ஒப்பாகும். உயரிய நாட்டங்களையும் நற்குண நற்செய்கையையும் உடையோரின் எதிரிலுள்ள அந்த முள்வேலியை ஒளலியாக்கள் நகர்த்தி விடுகிறார்கள். படிப்படியாக அவர்கள் அத்திரையை உயர்த்தி விடுகிறார்கள். மேலும் இப்பிரபஞ்சம் பூராவும் 'ஹக்'கின் ஜோதியைக் கொண்டு நிரப்பப்பட்டு பிரகாசித்துக் கொண்டிருப்பதை அவர்கள் கண் முன்னர் பிரத்தியட்சமாகக் காட்டப்படும் வரை அவர்களின் திரை கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப்படுகிறது.

இவ்வாறு இவர்கள் செய்வது 'கஷ்பு' (ஆலமே மிதாலின் காட்சிகளை நோட்டமிடுதல்) கொண்டேயொழிய கற்பனையும் வெற்று எண்ணங்களையும் கொண்டதன்று. 'ஹக்'கைத் தவிர சக்தியும், பூராயமுடையது யாதொன்றுமில்லை என்பதை முரீது உலகிலேயே பார்த்திருக்கிறார். 'ஹக்'கைத் தவிர பார்ப்பவனும் கேட்பவனும் பேசுபவனும் யாருமில்லை. கொடுப்பவனும், வாங்குபவனும், வைத்திருப்பவனும் யாருமில்லை ஹக்'கைத் தவிர.

இரண்டாவது, தடவையும் எனது பீர் (பிரமணிய) பூநூலுக்காக வேண்டி தங்களது 'கிர்வா'வென்னும் ஆடையைக் கைவிட்டார்கள்.

அவர்கள் தனது தொன்னூறு வருடங்களின் சேகரத்தை 'குப்பார்'களான அசுவாசிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள் (அத்தார்) பீர் அவர்கள் அந்தரங்க அகமியத்துக்காக வேண்டி வெளியரங்க வேஷங்களை விடுத்தார்கள். ஆரம்பத்தில் 'முமூட்சு' நீண்ட ஆடையை போர்த்திக் கொண்டு பக்தியையும், விசுவாசத்தையும் கடைபிடிக்கிறார்; முன்னேற முன்னேற அவர் யாதொன்றையும் உணர்வதில்லை. 'சலாமத்து' ஆகிய பாதுகாவலான நிலையை விடுத்து 'மலாமத்து, ஆகிய ஒன்றையும் அறியாத நிலையை எடுத்துக் கொள்கிறார். அதாவது. வெளிவேஷங்களை அவர் கைவிட்டு விட்டு உண்மையான பக்தியைக் கடைபிடிக்கிறார் நீ உனது (குறுகிய) தன்மையை மறந்துவிட வேண்டுமானால் இந்த விடுதியினுள் புகுவாயாக புகுந்து. அந்த விடுதியும். அதன் சொந்தக்காரனும் உனக்குஎன்ன செய்திருக்கிறார்கள்' என்று பார்ப்பாயாக அங்கு தான் நீ 'குலிர் ரூஹுமின் அம்ரிறப்பி' என்பதன் அர்த்தமாகிய ' நபியே! ரூஹு (ஆத்மா) ஆகிறது எனது இறைவனுடைய 'அமரு' ஆகிய ஏவலில் நின்றுமுள்ளது என்று சொல்வீராக'' என்பதை உணர்வாய். விடுதியாகிய தங்குமிடம் என்பது ஒருவன் காதலில் மூழ்கும் திக்கு திசையற்ற ஸ்தானம். 'ஷரீஅத்'தின் சட்டதிட்டங்கள் ஸ்தூல சரீரத்துக்கேயொழிய 'ரூஹு' ஆகிய ஆத்மாவுக்கன்று. ''யௌமது பத்திலுல் அர்ளு கைருள் அர்ளு'' — அந்த நாளில் பூமியானது வேறொரு பூமியாக மாறும். (குர்ஆன்) அந்தரங்க நிலைமைகள் இந்த தடைகளுக்கெல்லாம ஐக்கியப்பட்டவையன்று. துன்னூன்—மிஸ்ரீ (றலி) அவர்கள் நாற்பது வருஷ பக்தியில் ஈடுபட்டிருந்த சிஷ்யரை 'பர்லு'. 'சுன்னத்து' ஆகியவற்றைத் தவிர இதர வணக்கங்கள் சகலவற்றையும் விட்டு விடும்படி உத்தரவிட்டார்கள்

அஸ்ராரே அனல்ஹக்

இந்த பிரபஞ்சம் அல்லாஹ்றவின் ஊதலாக இருக்கிறது 'பைஹுற்றஹ்மானி' (றஹ்மானின் கொடை)யாக கண்டிப்பாக அது ஆகி இருக்கிறது. 'அல்ஆலமு கர்புன் மின்கர்புர் ரஹ்மான்' — இந்த பிரபஞ்சமாகிறது றஹ்மானின் ஊதுதல்களின் நின்றும் ஒரு ஊதலின் எழுச்சியாயிருக்கிறது. எஜமானின் சமுகத்தில் நீ பல வருட காலம் பட்டு வந்த முயற்சிகளாலும் அடையாத 'பஞ' நிலையை ஒரே ஊதலால் அடைந்து விடுதலாம் 'இன்ன யௌமுன் இந்தறப்பிக கஅல்பிFசனதின் மிம்மாத உத்தூன்'', 'நீ கணக்கிடக்கூடிய ஆயிர வருடங்கள் உனது றப்பினடத்தில் ஒரு தினத்துக்கு சமானமாகும்'

11-வது அத்தியாயம்

முரீது—சிஷ்யன்—அல்லது முமுட்சு

மனிதர்கள் மூவ்வகைப்படுவர்' அவர்களாவன:-

(A) 'வஹ்ததத்து' ஆகிய ஏகத்துவத்திலிருந்து 'கத்ரத்து' ஆகிய பலவற்றினளவில் அனுப்பப்பட்டவர்கள். அவர்கள், தங்கள் (சுபாவ) குணங்கள் என்னும் இருளால் மூடப் பட்டவர்கள் இது 'தெய்வீகக் கோபம்' என்பதினுடைய 'தஜல்லி'யாகிய தோற்றமாகும். ''அஊதுபி அப்விக மின் சக்திக அஊதுபில்லாஹி மினஷ்ஷைத்தா னிர்றஜீம்'' ''நான் உனது கோபத்தை விட்டும், உனது மன்னிப்பாகிய பாது காவலைத் தேடுகிறேன்; விரட்டியடிக்கப்பட்ட ஷைத்தானை விட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன்'' என்ற பிரார்த்தனை இதற்காகவே ஏற்பட்டது துரிதத்தில் கலைக்கப்படுகின்ற கோடைகால மேகத்தைப் போன்றே இந்த 'தஜல்லி' உண்டா யிருக்கிறது சாலிக் ஆகிய முமுட்சுவினுடைய ஒப்புக்கொள்ளப் பட்ட மனித வாழ்வின் ஜீவியத்துக்குத்தான் ஏற்படுத்தப்பட்டது. ஜனங்கள் பொருத்தத்திற்குரிய வாழ்வை நடத்துவான் வேண்டி யும், தங்கள் தங்கள் இனத்தவர்களின் பழக்க வழக்கங்களைக் கடைபிடித்து பிரபஞ்சத்தின் கண்டப் பொருள்கள் 'ரூஹு' ஆகிய ஆத்மாவின் தன்மையைப் பெருமலிருந்தற்காகவும் மனித வர்க்கத்தின் பொருத்தப்பட்ட மறதியும் உண்டாயிற்று. இவ் வாருன நிலை சில ஔலியாக்களுக்கும், இத்ரீஸ் போன்ற நபி மார்களுக்கும் ஏற்படுத்தப்பட்டிருந்தது 'தாத்'துடைய 'தஜல்லி' ஒரு வினடி உதயமளித்து மறு வினடி மறைந்து விடுகின்றது. இடைவிடாது இந்த 'தஜல்லி' ஏற்பட்டால் கண்டிப்புகள் மறைந்து விடும். 'அர்வாஹுனு அஜ்சாதுனு வஅஜ்சாதுனு அர்வாஹுனு'—நமது ஆன்மாக்களே நமது சடலங்கள். நமது சடலங்களே நமது ஆன்மாக்கள்

(B) சில மனிதர்கள் 'தாத்'தின் தஜல்லியைக் கொண்டு தங்களை மறந்து சதாகாலமும், 'மகாமுன் மஹ்மூது' என்னும் புகழப்பட்ட ஸ்தானத்தில் தரிபட்டிருக்கிறார்கள் அவர்கள் 'மஜ்தூபு' என்னும் பரவச நிலையில் சொக்கி கறக்கமுடையோ ராயிருக்கின்றனர்.

(C) அந்த நிலையிலிருந்து திரும்பி சிலர் 'சாலிக்' ஆகிய முமுட்சுவாக ஆகிவிடுகின்றனர் அவர்களின் 'சுலூக்கு' ஆகிய யாத்திரையில் சில வேளை சுயேச்சையாக திரிந்து கேவலப்படுகின்றனர்; பின்னர், மிருகங்களைப் போலாகி மேலும் கேவலத்தை யடைகின்றனர் ''வஉலாஇக கல் அன் ஆமி பல்ஹூம் அளல்லு'' சில வேளை சிலர் 'தாத்'துடைய 'தஜல்லி' யிலிருந்து 'சிபாத்'துடைய 'தஜல்லி'யாகி பின்னர் 'சிபாத்' துடைய 'தஜல்லி!யிலிருந்து 'அப்ஆல்' உடைய 'தஜல்லி'யைப் பெற்று உன்னதமாக்கப்பட்டு அவர்களின் யாத்திரையுடைய சுழற்சியையும் முடித்துக் கொள்கின்றனர்.

'சுலூக்' என்னும் பாதை நடத்தல் 'அல் அல்லாஹ்' வென்ற 'அல்லாஹ்' அளவிலும் 'Fபில்லாஹ்' வென்ற 'அல்லாஹ்'விலும், 'மஅல்லாஹ்' உடனும் என்ற பல்வேறு வகைப்படும் இந்த யாத்திரை மற்றவர்களை சீர்திருத்து வதற்காகவேயாம். ஒரு 'மஜ்தூபு' தனது பரவச நிலையை விட்டும் திரும்புவது பிறரை சீர்திருத்தவேயாம் தன்னுடைய 'ஜத்பு' ஆகிய பரவச நிலையில் அவர் நிழலிடாத நடுப்பகல் சூரியனைப் போன்றிருக்கிறார் அவருடைய திரும்புதலில் அவர் அஸ்தமிக்கும் சூரியனைப் போன்றிருக்கிறார். அந்த அஸ்த மிக்கும் சூரியன் தனது பூரா யாத்திரையை முடித்ததாயிருக் கிறது. ' இன்றைய தினம நான் உங்களுடைய மார்க்கத்தை சம்பூரணமாக்கித் தந்து எனது அரும்பெருங் கிடைத்தற்கரிய சன்மானங்களை பூர்ணமாக உங்கள் மீது அளித்தேன்'' — ''அல்யௌம அக்மல்துலகும் தீனகும் வஅத்மம்து அலைக்கும் நிஃமதீ''.

முரீது — சிஷ்யன் அல்லது முமுட்சு

தனது யாத்திரையை முடித்துக் கொண்ட ஒரு 'பீர்' தனது ஒவ்வொரு முரீதுடனும் யாத்திரையிலாகிறார். ஒரு வித்தானது மரமாக ஆகி, மறுபடியும் வித்தாகி, இவ்வாறே மீண்டும் கணக்கற்ற முறைகள் செய்வது போன்றும், ஒரு புள்ளி ஒரு வரியாக ஆகி, ஒரு கற்றுக்கோடாக ஆகி, மறுபடி புள்ளியின் நிலையையே அடைவது போன்றும் அந்த 'பீர்'யும் தனது முரீதுடனும் யாத்திரை செய்து கொண்டேயிருக்கிறார். இதுவோ ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவினுள் நுழைதலன்று. இதனைக் ஆனால் 'தஜல்லி'யினது ஒரு வெளியீடுதான். இதனைக் கருதியே மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ) அவர்கள் ''எழுநூற் றெழுபது சரீரங்களை நான் கண்டிருக்கிறேன்' என்று கூறியிருக்கிறார்கள்

முதன் முதலில் 'பீர்' தனது சொந்த 'சுலூக்கு' ஆகிய யாத்திரையை முடித்துக் கொண்டு அந்த யாத்திரையை ஒவ்வொரு 'முரீது'டனும் நிறைவேற்றுகிறார் இவ்வாறாக அவர் முன்னிருந்ததைவிட மேலான பூர்ணத்தைத் தடவைக்கு தடவை அடையப் பெறுகிறார். நபி அவர்களின் ஜோதி பெரியதோர் சூரியனாயிருக்கிறது: ஒரு சமயம் மூஸாவிலும் மறுசமயம் ஆதமிலும் தோற்றமளித்தது பூமத்திய ரேகையில் தான் எஜமானனின் நேரமிருக்கிறது. அது சகல சாய்கைகளையும், நிழல்களையும் விட்டு நீங்கியது (குல்ஷன் — ராஜ்)

'சூபி'யாகிறவர் அந்த கோப்பையினின்றும் குடிக்கும் வரை கலப்பு நீங்கியவராக ஆவதில்லை.

காய் பழமாக ஆவதற்கு மிகுந்த யாத்திரை அவசியப்படுகிறது. (மத்னவீ)

'பீச்' முரீதின் வடிவைப் பெற்று தனது ஆசிகளை அளிக்கிறார். 'பீரு'டைய ஆன்மா 'முரீது'டைய ஆன்மாவை தனது செல்வாக்கைக் கொண்டு வசப்படுத்திக் கொள்கிறது இதுவே 'புருஜ்'

என்னும் 'தஜல்லி'யே தவிர, ஒன்றிணைதலன்று. இதுவோ, அநேக விளக்குகளை ஒரே விளக்கின் நின்றும் கொளுத்துவது போன்றும் முதல் விளக்குதான் அல்லாஹ்வினது ஜோதியினின்றும் கொளுத்தப்பட்ட முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஜோதி ''அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல்அர்லி. மஸலு நூரிஹி கமிஷ்காதின் பீஹா மிஸ்பாஹுன் அல்மிஸ்பாஹு பீஸுஜாஜதின்'' (குர்ஆன்) அல்லாஹ் வானங்களினதும், பூமியினதுமான ஜோதியாயிருக்கிறான்: அவனது ஜோதிக்கு உவமானமாவது யாதெனில் மேல்பாகத்தில் விளக்கொன்றை வைக்கப்பட்ட விளக்குத் தண்டு போன்றும் அந்த விளக்கு ஒரு சிம்னியினுள்ளும்

அதாவது, அந்த ஜோதி 'கல்பு'(இதயம்) என்னும் விளக்கில் பிரகாசிக்கின்றது. அந்த 'கல்பு' ஆகிய விளக்கு சரீரமென்கிற சிம்னியினுள்ளிருக்கிறது இவ்வாறு பல்வேறு தன்மையடைந்தது திரிகளின் பெருக்கத்தினால், ஜோதியினால் அன்று ஆதம் (அலை) அவர்களில் ஆரம்பித்து நபித்துவம் முஹம்மது (ஸல்) அவர்களில் சம்பூர்ணமடைந்தது. (அவர்களே நபித்துவத்தின் முத்திரையாகும்) அதாவது ஹகீகத்து முஹம்மதீயானது சகல நபிமார்களிலும் சுற்றுதலடைந்து முஹம்மது (ஸல்) அவர்களில் பூர்த்தி 'முத்திரை' பெற்று 'விலாயத்து' மட்டுமே உலகில் தங்கியது அவ்வாறு தங்கி இரண்டாவது சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்தது. அவ்வடைந்தது. ஒரு குறிப்பிட்ட தகுதி அல்லது அளவின் சாலிக் ஆகிய முரீத் ஒரு தோற்றத்தில் தோற்றமாகயிருக்கிறான்; அவன் அந்த தோற்றம் மற்றொரு மட்டுமே அடைபட்டிருக்கிறான். ஒரு தோற்றம் மற்றொரு தோற்றத்தினுள் சென்றேற முடியாது சாலிக்கு ஆகிய முரீத் 'பனா' நிலையை அடையும்பொழுது தோற்றமும் மறைந்து 'பகா'வை அடைகிறான். இந்த நிலையில் அவனது தகுதி விரிவடைந்து சாலிக்கு சம்பூர்ணத்தையடையப் பெற்று 'தாத்து' 'முத்லக்'காகிய சம்பூர்ண தத்சொரூபத்தை அவன் உணர்கிறான் அதாவது, தனது அறிவினுள்ளே சம்பூர்ண அறிவு இருப்பதை உணர்கிறான். 'ரூஹி'யுடைய அறிவில்

'ஹக்'குடைய அறிவு மறைந்து விடுகிறதென்று மௌலானா ரூமி (கத்) அவர்கள் கூறியிருப்பது இதைக் குறித்தே முதன் முதலில் சாலிக்கு ஆகிய முமுட்சு தனது கைர் ஆக தோன்றின 'ஷான்' (தோற்றம்) அல்லது 'இஸ்மி'லிருந்து மேல் நோக்கிச் சென்று அதனை முடித்துக் கொண்டு இப்பொழுது சம்பூர்ண 'தாத்'திலிருந்து (கீழ்நோக்கிப்) பிரயாயணப்படுகிறான். கண்டமானது அகண்டமாக ஆகி விடுகிறது. 'லாயஸஅனி அர்லீ லா ஸமாஇ வலாக்கின்யஸ அனிகல்பி அப்துல் முஃமீன்'' வானம் பூமி எனக்கு விசாலமானதல்ல; எனினும், உண்மை விசுவாசியின் உள்ளம் எனக்கு மிக விசாலமானது இதுவே 'சூபியின்' அறிவில் ஹக்குடைய அறிவு மறைந்திருப்பதாகும். ஒரு துளியாக இருந்த சூபி ஒரு பெரிய சமுத்திரமாக ஆகினர். (கண்டார்த்த) தன்மையை இன்மையாக்கலே அவரின் தகுதியை விசாலிப்பதாகும் — ஒரு துளியினது தகுதியேதான் சமுத்திரத்தின் தகுதியைப் பெற்றது. நீ ஒரு நீர்த்துளியின் இதயத்தைக் கிழிப்பாயேயாகில் அதனுள் நூறு சமுத்திரங்களைக் காண்பாய். (குல்ஷன் ராஜ்) 'ஓடத்திற்குள் கடல்' என்பதன் பொருள் இதுவே, தன்னளவிலே (அதாவது தன் கண்டிப்பு நிலையில்) நீர் துளி இன்மையாக்கப்பட்டு சமுத்திரத்தில் நிலைபாடானது தன்னைச் சுற்றிலுமுள்ள சகலவற்றையுஞ் சேர்த்து 'அர்ஷு' ஆனது என் இதயத்தின் ஒரு மூலையிலிருந்தாலும் நான் அதனை உணர்ந்தறிய மாட்டேன்'' என்று அபூயஸீதுல் பிஸ்தாமி (ரலி) அவர்கள் அருட் செய்திருக்கிறார்கள்.

ஷரீஅத்து (சரியை)யும், தரீகத்து (கிரியை)யும் ஒழுங்கான முறையில் எடுத்து நடத்தப்படாவிட்டால் ஹகீகத்து ஆகிய அகமியம் சரிவர உண்டாகாது. எழுதுகோலானது சரியானபடி சீவப்படா விட்டால் எழுத்துக்கள் ஒழுங்காக அமையாது.

மனிதர்கள் நான்கு வகைப்படுவர் அவர்களாவன:—

(1) சிருஷ்டிப் பொருள்களைப் பார்க்காது 'ஹக்கை) மட்டிலும் தெரிசிப்போர்.

(2) சிருஷ்டிப் பொருள்களை பிரத்தியட்சமாகவும் 'ஹக்'கை உள்ளீடாகவும் பார்ப்போர். இவர்களை 'தவில் அக்லு' என்னும் 'விவேகிகள்' என்றழைக்கப்படுகிறது இவர்களுக்கு சிருஷ்டிப் பொருளிலே 'ஹக்கு' தோற்றமளிக்கிறான்.

(3) 'ஹக்'கை பிரத்தியட்சமாயும், சிருஷ்டிகளை மறைந்ததாயும் தெரிசிப்போர். இவர்களுக்கு 'ஹக்கி'லே சிருஷ்டிப் பொருள்கள் தோற்றமளிக்கின்றன. இவர்கள்தான் 'தவில்—ஐன்' என்னும் தெரிசினையுடையோராவார்.

(4) ஹக்கை கல்கிலும் கல்கை 'ஹக்'கிலும் கிலும் இரண்டுக்குமிடையே யாதொரு திரையுமின்றி தெரிசிப்போராவார் இவர்களே 'தவில்—ஐன்' வஅக்லு என்னும் பார்வையும், விவேகமுமுடையோருமாகும். இதுதான் 'கத்ரத் ஆகிய பலவற்றினுடன் 'வஹ்தத்து' ஆகிய ஏகத்துவத்தை தெரிசிப்பதைக் குறிப்பிடுகிறது 'சுத்த தௌஹீது' ஆவது யாதெனில் சகல வஸ்துக்களிலும் அல்லாஹ்வைக் காண்பதே யாகும்' என்று இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். ''அத்தௌஹீதுல் காலிஸு அன்லாயாரா ஹீகுல்லிஷைஇன் இல்லல்லாஹ்'' இவரோ சகல வஸ்துக்களிலும் அல்லாஹ்வின் 'ஜமால்' என்னும் பேரழகைப் பார்க்கிறார் இந்த 'ஜமால்' ஆகிய பேரழகுதான் ஒவ்வொரு வஸ்துவிலும் உள்ளமையாக உள்ள 'ஹகீகத்து முஹம்மதி'யாகும். ஏனெனில் இந்த அகமியத்தின் மீதுதான் ஒவ்வொரு வஸ்தும் அடங்கியிருக்கிறது வஸ்துவோ அந்த அகமியத்திலிருந்தும் தோன்றி அதனளவிலேயே மீண்டுவிடுகிறது. ஹக்குடைய ஜமால் என்னும் பேரழகு ஒவ்வொரு வஸ்துவிலும் பிரத்தியட்சமாயிருக்கிறது வஸ்துக்கள் அந்த 'ஜமால்' ஆகிய 'ஹகீகத்து முஹம்மதி'யின் கண்ணாடிகளாயிருக்கின்றன. இந்த கடைசி வகை 'சாலிக்கு' ஆகிய முரீட்கு முஹம்மது (ஸல்) அவர்களை தனது மத்திய ஸ்தானமாகக்கொள்கிறார்.

முரீது — சிஷ்யன் அல்லது முமுட்சு

சந்தேக நிவர்த்திக்குரிய ஒளடதமாவது ஆரிபு ஆகிய மெய்ஞ்ஞானியின் சமூகத்திலிருப்பதேயாம். தனது பீருடைய சாவகாசத்தில் முரீது தன்னுடைய சந்தேகங்கள் யாவற்றையும் போக்கிக் கொள்ள வேண்டும்; சூரியனானது உச்சியை அடுத்ததும் நிழலானது மறைந்து விடுகிறது. "குல்ஜா அல்ஹக்கு வஜஹகல்பாதிலு" சொல்வீராக, மெய் வந்து விட்டது; பொய் மறைந்து ஒழிந்தது'. முரீதுக் குரிய தன் பீரின் உபதேசம் செம்பை பரீட்சிக்கும் உரைக்கல் போன்றிருக்கிறது அவர் அறிவு கற்பதிலும், நினைப்பதி லும் மட்டும் அடங்கியதன்று; ஆனால் அதனினும் உன்னத மானது, அதாவது, இவ்வித முறைகளால் கற்க முடியாத தொன்றாயிருக்கிறது. 'ஹால்' (நிலை) ஆகிய கஷ்பு என்னும் திரை நீங்கலாலேயே அடையப்படுகிறது. 'ஹால்' என்னும் நிலை தெரிந்து கொண்டு சென்றால் அது 'மகாம்' ஆகிய பதவி யாக ஆகிறது. யாருக்கு 'ஹால்' ஒரு தடவையேற்பட்டதோ அவரே ஆரம்பக்காரராகி ஒரு 'வலீ'யுடைய பதவியைப் பெறு கிறார். இந்த 'ஹால்' ஆகிய நிலையைத் தொடர்ந்து இடை விடாது அடையப் பெறுபவரே 'குத்பு'ம் கௌதுமாக ஆகிறார். "திராட்சை ரசத்தை சுற்றிக் கொணரப்படுங்கால் அதனின்றும் ஒரு கோப்பை அல்லது இரண்டையே குடித்துக் கொள்; நிரந்தரமாக அதில் மூழ்கிப் போவதை எதிர்பார்த்து நில்லாதே. (ஹாபிஸ்)

ஒளலியாக்கள், குத்புமார்கள் ஆகியோரின் பதவிகள் இந்த ஹால் ஏற்பட்டு நிற்கும். நேர. அளவைப் பொறுத் திருக்கிறது: இதனை சில ஜனங்கள் ஒரு வினாடி நேரம் பெறு வர்; சிலர் அவர்களின் தகுதிக்குத் தக்கவாறு நீடித்த நேர மும், மற்றுஞ் சிலர் சதாகாலமும் பெற்றிருப்பர்,

"அலலதீனஹும்ம அலாசலாத்திஹிம் தாஇமூன்" அவர்கள் நித்திய கால நிரந்தரத் தொழுகையில் ஈடுபட்டிருக் கிறார்கள், 'மிஃராஜ்' என்னும் இரவில் நடந்த யாத்திரை 'லைலத்துல் கத்ரு' என்னும் மகிமை மிக்க இரவு ஆகிய இந்த

நேரங்களேயாம் ஜனங்களுக்கு 'ஹாலு' (நிலை)ம் 'விசாலு' (ஐக்கியம்)ம் பல்வகைப்படும். அவையாவன:—

(A) வணக்கவாளி (ஆபிது) தனக்கு யாதொரு அசைதலுமின்றிய ஒரு சடப்பொருளாகத் தன்னைக்காணும் ஹால் என்னும் பனு நிலை

(B) 'ஆஷிக்கு' ஆகிய காதலன் ஹக்குடைய அழகுகளைப் பல்வேறு வஸ்துக்களிலும் தெரிசிக்கிருன்.

(C) 'முதகல்லிக்' ஆகிய நேர்மையாளன் தனது பண்புகளை 'ஹக்'குடைய பண்புகளாக மாற்றிக்கொண்டு 'குர்பு' - பராயி'லையும், - குர்பு' நவாபிலையும் அடையப்பெற்று அவற்றின் நிலைமைகளையும் அடைகிருன். காதலனே காதலியுடைய அழகை ஒரு குறித்த தூரத்திலிருந்து தான் தெரிசிக்கிருனேயன்றி தன்னை தனது காதலியின் தோற்றமென்றும், பண்புகளென்றும் காண்பதில்லை. ஆனல் ஏனையோர் அந்த பண்புகளாக மாற்றமடைவதைப் பார்க்கிருன் காதலியின் தெரிசனையால் அவன் தாகசாந்தியடைகிறான். தரிசனையாகிய இந்த திராட்சை ரசத்தின் ஒரு துளியையேனும் ருசித்திருந்தாலும் வணக்கவாளிக்கு அவ்வாருன திருப்தியடையாது. ' ஐனன் யஷ்ரபுபிஹல் முர்ராபூன்'' இந்த பானம் அவர்களின்பால் மேலிருந்து இறங்கிய தண்ணீரால் சேர்க்கப்பட்டது.

( ) 'முவஹ்ஹிஹி'தானவர் 'தாத்தில்' இன்மையாகி தனது தாத்தை ஹக்குடைய தாத்தாகக் காண்பவராகும்`

(E) 'முதுஹக்கிக்' என்பவர் தாத்திலிருந்து சிபாத்தளவில் அன்பியாக்களையும், சில ஒளலியாக்களையும் போல் கீழிறங்குகிறவராகும். இந்த நிலைமைகள் குறித்த கால அளவைப் பெற்றிருக்கின்றன' சிலர் ஹால் ஏற்பட அவசியமில்லையென்றும், உண்மை விசுவாசம் மட்டும் இருந்தால்போதுமென்றும் கூறுகின்றனர் விசுவாசிகள் கைபு என்னும்

முரீது — சிஷ்யன் அல்லது முமூட்சு

மறைப்பொருளின்பால் விசுவாசங் கொள்கின்றனர்' "யுஃமினூன பில்கைபி' அவர்கள் மறைப் பொருளின் மீது நம் பிக்கைக் கொள்கினறனர்' ஆரிபீன்களான ஞானிகள் மறைப் பொருளைப் பார்க்கின்றனர்' ஆதலின், ஞானம் என்பது பார்வையைப் பொருத்ததேயன்றி வெறும் நம்பிக்கையும் கல்வியுமல்ல. விசுவாசம் என்பது கேட்பதும், கேட்டதைப் பார்த்து நம்புவதும், பார்த்ததின் இருப்பை அறிந்திட உறுதி கொள்வதுமாகும். தாகமுடையோன் தண்ணீரின் பேரைக் கேட்டதும் அவனுக்கு (தண்ணீரின் பேரில்) விசுவாசம் ஏற்படுகிறது. அதை (தண்ணீரை)ப் பார்க்கிருன். நம்பிக்கை அதிகரிக்கிறது. அதை ருசிக்கிருன்' திட உறுதியும். நிச்சயமும் ஏற்படுகிறது' ஒருவன் கேட்பதுடன் நின்று விட்டால் பார்த்தல் ருசித்தல் என்னும் நிலைமைகளுக்கு முன்னேறுவதை விட்டும் தடை பண்ணப்படுவான். ஹால் என்பது கால் என்ற சொல்லினுடைய அகமியமாக ஆக வேண்டும்.

12-வது அத்தியாயம்

சுலூக்கு — பயிற்சிமுறை

பார்வை என்னும் பண்புக்கு பார்க்கல் என்னும் தத்துவத்தைத் தவிர உலகில் யாதொரு தோற்றமுமில்லை. பார்த்தல் என்னும் தத்துவத்துக்கும் கண் என்னும் பார்க்கும் கருவியின் வாயிலாகவேயொழிய யாதொரு தோற்றமுங் கிடையாது. தத்துவாதிகளின் வாயிலாகத் தோற்றமளிக்கும் பண்புகளே 'ஷரீ அத்து' (சரியை)படி 'மலாஇகத்துகள்' என்றும் 'சூபி'யாக்களின் பாஷையில் 'ரூஹுகள்' அல்லது 'ஆன்மாக்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன. தத்துவாதிகள் என்று தத்துவ சாஸ்திரிகளால் அழைக்கப்படுகின்றன. 'ஹக்கு'டைய பண்பாகிகளின் தோற்றமே 'இந்த பிரபஞ்சம். ஒவ்வொரு பண்பும் ஒரு தத்துவத்தின் கோலத்தைக் கொண்டதும் அதன் மூலம் சடலோகத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு கருவியாக ஆனது. தத்துவம் 'மலகூத்து' என்னும் சூட்சுமலோகத்தைச் சேர்ந்தது: பண்பு 'ஜபரூத்' ஆகிய காரண லோகத்தைச் சேர்ந்தது. எனவே சகல கருவிகளும் அவயங்களும் பண்புகளின தோற்றங்களாகும். மனக்கண் திறந்த சீரன் தனது கருவிகளும் அவயங்களுமான கண்ணாடியிலே ஹக்குடைய பண்புகளைப் பார்க்கிறான். அவ்வேளை அவன் செயல்கர்த்தாவாகிறான். இந்த நிலையை சூபியாக்கள் குர்பு – நவாபில் —(சாலிகுடைய கருவியாக ஹக்கு ஆதல்) என்று அழைக்கின்றனர். சிலவேளை அவன் தன்னை ஒரு தத்துவமாகவும் ஒரு கருவியாகவும் காண்கிறான். அதாவது தான் ஹக்குடைய கருவியாகவும் ஹக்கு செயல் கர்த்தாவாகவும் ஆகிறான்.

'பனா'வென்னும் இன்மை நிலையில் 'சாலிக்'குடைய கண்டிப்பான உள்ளமையை 'ஹக்'குடைய சம்பூர்ண உள்ளமை மிகைத்ததும் சாலிக்கு தனது கண்டிப்புத் தன்மையையும் வஸ்துக்களின் கண்டிப்புத் தன்மையையும் பற்றி நினைப்பதில்லை. இதுவே விலாயத்துடைய நிலை. ஒளலியாக்களுக் கிடையேயுள்ள வித்தியாசங்கள் இந்த நிலையில் அவரவர்கள் தரிபடுவதின் நேர அளவைப் பொருத்திருக்கிறது. சிலர் ஒரு

களுக்கு பயிற்சிமுறை

நிமிட நேரமும் சிலர் ஒரு மணி நேரமும் சிலர் ஒரு நாளைக்கும் பலவாறாக இந்த நிலையின் அனுபவத்தை அடையப் பெறுகின்றனர். தங்கள் வாழ்நாள் பூராவும் இதனை இடைவிடாது பெற்றிருப்பவர்கள் மஜ்தூபு என்னும் பரவச நிலையில் சொக்கிய கறக்கமுடையோர் என்று அழைக்கப்படுகின்றனர். சம்பூர்ணமான ஓர் நிலையில் அவர்கள் தரிபடுகிறார்கள். இதுவே பகாவென்னும் 'தரிபாடான நிலை' சிலர் நம்புவது படி ஹக்குடைய பகாவாகிய தரிபாடு சாலிக் ஆகிய மூமுட்சுடன் சேர்ந்துகொள்வதன்று.

ஒரு பாரஸீகக் கவிஞர் கூறுவது யாதெனில்;—

''கடலோரப் பிரயாணமொன்று செய்து ஓர் அதிசய காட்சியைக் கண்டேன்; கடலினுள் ஓடத்தையும், ஓடத்தினுள் கடலையும் யான் தெரிசித்தேன்'' அகண்ட உள்ளமையை இங்கு ஒரு கடலுக்கும், கண்டிப்பான உள்ளமையை ஒரு ஓடத்திற்கும் ஒப்பிடப்படுகிறது. அல்லது 'தாத்'தையும், 'இன்ஸான்-காமிலை' யும் சுட்டிக் காட்டுகிறது. ''லாயஸஅனி அர்ளி வலாசமாஇ வலாகின் யஸ் அனீபீகல்பி அப்துல் முஃமின்'' — ஒரு சம்பூர்ண ஞானி ஹக்குடைய மெய்யான கண்ணாடியாக இருக்கிறார். பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவும் 'ஹக்'குடைய சில பண்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்க, ஒரு சம்பூர்ண 'ஆரிபு' அல்லது 'இன்ஸான்காமிலு'க்கு மட்டுமே இதனை அளிக்கப்பட்டிருப்பதேன்? மனிதனே 'ஹக்'டைய சகல பண்புகளையுமுடைய சம்பூர்ணமான கண்ணாடியாக இருக்கிறான். பார்ப்பவனின் முகம் கண்ணாடியில் தோற்றமளித்ததற்கு அவசியமான மிக இருண்ட பூச்சுகளை மானிடன் பெற்றிருக்கிறான். 'மலக்கு'களான வானவர்கள் பிரகாச பாகத்தை மட்டிலும் பெற்றிருக்கின்றனர் சடப்பொருள்கள் இருண்ட பாகத்தை மட்டுமே அடையப் பெற்றிருக்கிறன. மானிடனே இந்த இரு பாகங்களையுமே தன்னில் பெற்றிருக்கிறான். அதனாலேயே அவன் ஓர் தகுதி வாய்ந்த சம்பூர்ணமான கண்ணாடியாக இருக்கிறான்.

அஸ்ராரே அனல்ஹக்

'சூபி' யுடைய அறிவில் 'ஹக்கு' டைய அறிவு மறைந்துவிடுகிறது; 'சாதாரண மக்கள் இதனை எவ்வாறு விளங்குவர்?' (மத்னவி) ஆரம்பத்தில் சிருஷ்டிகள், சிருஷ்டிப் பொருள் என்னும் பாகுபாட்டினால் ஏற்பட்ட 'ஹக்கைப்பற்றிய அறிவு 'சூபி'யுடைய அறிவிலே காலக்கிரமத்தில் மறைந்து விடுகிறது. கீழ்வரும் வரிகள் இதனை மிகவும் தெளிபடுத்து கின்றன. அவை யாவன:— 'சூபி'யுடைய அறிவு 'ஹக்'குடைய அறிவில் மறைந்துவிடுகின்றது; மடையனொருவன் இதனை எவ்வாறு தெளிவான்?

''லாஇலாஹ இல்லல்லாஹ்'' அல்லாவின் வேருன நாயன்யாருமில்லை 'சாலிக்'குடைய உள்ளமையைத் தவிர யாதொரு உள்ளமையுமில்லை இதுதான் 'அஹ'வாதிகளின் கொள்கை உள்ளமையை 'ஹக்கு' (மெய்ப்பொருள்)டைய உள்ளமையென்று நீபூர்ணநிட்சயத்துடன் கருதிக்கொள்வாயாக. 'நான்'மட்டுமே இருக்கிறேன். 'நான்' என்பதைத்தவிர வேறு யாருமில்லை'' !-''லாமவுஜூத இல்லாஅஹ'' ''என்னைத் தவிர உள்ளமையுடையான் யாருமில்லை'' சர்வ கர்ப்பனைகளின் அகமியமும் மெய்ப்பொருளாகவே இருக்கிறது சர்க்கரையி லிருந்துதான் பல கோலங்களாயமைந்த மிட்டாய் வகைகள் தயாரிக்கப்படுகின்றன இவைகளுள் யாதொன்றையேனும் நீ விழுங்கியபோது சர்க்கரையின் தித்திப்பைத் தவிர வேறு எதையும் நீ காண்பதில்லை.

'ஷிர்க்கு' — ஹக்குடன் ஓர் இணையை உண்டு பண்ணுதல் - வணக்கத்திலும். காதலிலும் நாயகத் தன்மை யிலும், உள்ளமையிலும் எதிலிருப்பினுஞ்சரி அவ்விதஷிர்க்கு ஆகிய இணைவைத்தல் இருவகைப்படும் ஒன்று 'ஜலீ' (பகிரங்க மானது), மற்றொன்று 'கபீ' (அந்தரங்கமானது) 'ஷிர்க்கு' 'கபீ' என்னும் அந்தரங்க இணை வைத்தல் கருப்பு எறும்புகள் கருங்கல்லின் மீது ஊர்ந்து செல்வது போன்று அவ்வளவு மறைவும், விளங்குதற்கரிதானதுமாயிருக்கிறது அது

களுக்கு பயிற்சிமுறை

'தாத்' திலும். 'சிபாத்'திலும் 'அப் ஆலி'லுமிருக்கும். ''மனிதர்களுள் பெரும்பான்மையோர் 'ஹக்'கின் மீது இணை வைத்தலின்றி விசுவாசங்கொள்வதில்லை'' — ''வமாயுஃமினு அக்தாரஹுºம் பில்லாஹிஇல்லாவஹுºம் முஷ்ரிகூன். ''அல்லாஹுºம்ம அந்தரப்பீ வஅனு அப்துக'? 'ஓ' அல்லாஹ்! நீ எனது இரட்சகன். நான் உனது அடிமை!'' என்று சொல்லும் வணக்கவாளிகள் யாவரும் இந்த 'ஷிர்க்கு-கபீ' யில் சிக்கியிருக்கிறார்கள். இந்த 'ஷிர்கை'ப் பற்றியே நாயகம் (ஸல்) அவர்கள், ''அல்லாஹுºம்ம இன்னீ அஊதுபிக மினஷ்ஷிர்க்கி'' ''ஏ, இறைவா! நான் உன்னிடம் 'ஷிர்க்கு' என்னும் இணை வைத்தலைவிட்டும் காவல் தேடுகிறேன்'' என்று பிரார்த்திக்கிறார்கள் சகல நற்செயல்களும், துற்செயல்களும் 'ஷிர்க்கு' தான். நீ உன்னுடைய (கண்டிப்பான) இருப்புத் 'தன்மையை 'ஹக்கு'டையதில் போக்காவிடில் நீ ஷிர்க்கை விட்டும் (ஒருக்காலும்) தப்பிப் பிழைக்க முடியாது ''லாஇலாஹ இல்லல்லாஹ்'' என்பதே ஷிர்க்கைப் போக்கி 'தௌஹீதை'த் தரிபடுத்தலாயிருக்கிறது சரியை, கிரியையினின்றும் தன்னைத் துண்டித்து அறிவை அடிப்படையாகக்கொண்ட வெறும் விசுவாசத்தினாலும், அவற்றின் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளாலும் திருப்தியடைபவன் எவனோ அவனே ஒரு 'முல்ஹிது' என்னும் வழி கேடானவன் 'ஹால்' என்னும் நிலையைப் பெற்று, தனது பார்வையில் யதார்த்த உள்ளமையை அடைந்து ஷரீஅத்து ஆகிய சரியையின் யாதொரு விஷயத்தையும். தான் 'ஹால்' என்னும் நிலையினால் மிகைக்கப்பட்டு விட்ட நேரத்திலேயேயொழிய மற்ற நேரங்களில் மறக்காதிருப்பவரே உண்மையான 'முவஹ்ஹிது' என்னும் அத்வைதியாவார்.

'குப்ரு'ம் 'இஸ்லாமு'ம் ஒவ்வொன்றும் இருவகைப் படும். அவை யாவன:—

(1) பகட்டான 'குப்ரு' என்றும், உண்மையான குப்ரு' என்றும்.

(2) பகட்டான இஸ்லாம் என்றும், உண்மையான இஸ்லாம் என்றும் பிரிக்கப்படும். வெளிவேஷம் அல்லது போலி 'குப்ரு' என்பது யாவராலும் அறியப்பட்டதே இதுவோ உண்மையை மறைத்து வைத்து அதனை வெளிக் காட்டாமல் இருத்தலாகும் வேளாண்மைக்காரன் ஒருவன் ஓர் வித்தை மண்ணினுள் புதைத்துவைப்பது போன்றும் மெய்யான 'குப்ரு' தான் 'சாலிக்கு'டைய கண்டிப்பான (ஜீவ) அகங்காரம். இதுவோ உண்மையை ஒருவன் தனது அகங்காரத்தினுல் மூடிவிடுதலாம். போலி இஸ்லாம் என்பது 'ஷரீஅத்துடை'டைய சட்ட ரீதிகளுக்கு ஒப்ப ஆசாரங்களைக் கடைபிடித்து ஒழுகுத லாகும் மெய்யான இஸ்லாமோ 'பஞு' நிலைக்குப் பின்னர் 'பகா'வை அடைதலாம் அதாவது ஜீவ அகங்காரத்தைப் போக்கி பிர்ம அகங்காரத்தில் தரிபடுதலாம்.

"கண்ணுடிகளுக்குப் பின்னுல் நான் ஓர் கிளியைப் போன்று வைக்கப்பட்டிருக்கிறேன்; நித்திய கால நாயகன் எதைச் சொல்கிருனே அதனை நான் திரும்பச் சொல்கிறேன்." இங்கு சடத்தை கண்ணுடிக்கும் அதன்' பின்னுலிருக்கும் ஜீவ அகங்காரத்தை வேலைக்காரனுக்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது. தனது உள்ளமையை இன்மையாக 'சாலிக்' மாற்றிக்கொள்ளும் பொழுது அவனது சகல செயல்களும், அனைதல்களும் ஹக்குடையதாக ஆகிறது "மாரமைத்த இதரமைத்த வலா கின்னல்லாஹா ரமா" — "(பத்ருபோரில்) நீர் ஓர் பிடிமண்ணை (கூழாங் கற்களை) எறிந்தபோது நீர் எறியவில்லை; எனினும், அல்லாஹ்தான் எறிந்தான்."

'பிக்ரு' (சிந்தனை அல்லது ஆராய்தல் அல்லது நோட்ட மிடல்) மூன்று வகைப்படும் அவை யாவன:—

(1) இவ்வுலக காரியங்களைப்பற்றிய 'பிக்ரு'.

(2) சுவர்க்க நரகத்தைப்பற்றிய 'பிக்ரு'.

(3) 'தாத்து', சிபாத்தைப்பற்றிய பிக்ரு

களுக்கு பயிற்சிமுறை

மூன்றாவது அல்லது கடைசி வகை 'பிக்ரு' அல்லது சிந்தனை ஒரு வினாடி செய்யப்படினும் அது இரு லோகங்களின் வணக்கத்தைவிட மேலானது ''தபக்கருசா அதின் கைருன் மின் இபாததித்தகலேன்''. இங்கு வஸ்துகள் வேற்றுமையாகத் தோற்றலே, வேற்றுமையைப் பார்வையினின்றும் அகற்றுவதைக் கொண்டு ஹக்குடைய 'தாத்'தாக கருதவேண்டும். வஸ்துக் களின் எதிரிடையான பண்புகளின் வேற்றுமையை 'ஹக்குடைய பண்புகளாகவும் அவற்றின் செயல்களை ஹக்குடைய செயல் களாகவும் கருதவேண்டும். இதுதான் வேற்றுமை மறைத லாகிய 'வஹ்தத்து' ஆகும் அந்த 'வஹ்தத்'தை அடைதற் குரிய மார்க்கம் இதுவே. முதன்முதலில் நீ உன்னை 'தாத்து' டைய அகமியமென்றும், எனது'தாத்'தே ஹக்குடைய 'தாத்' தென்றும் பின்னர் கீழிறங்கி 'எனது செயல்களே 'ஹக்கு'டைய செயல்களென்றும் கருதவேண்டும். இதுவோ 'நுஸுால்' ஆகிய. 'படி இறங்குதல்' ஆகும். பிறகு 'உரூஜ்' என்னும் 'படி ஏற்ற'த் தில், எனது செயல்களே, 'ஹக்கு'டைய செயல்களென்றும். எனது 'தாத்'துதான் 'ஹக்குடைய' 'தாத்'தென்றும், கருது வாயாக. மறுபடியும், 'படி இறங்குதல்' ஏற்படுகின்றது இந்த படி இறங்குதல் 'ஹக்கு'டன் யாத்திரை செய்தலாம் - (ஸைர் மஅல்லாஹ) படி ஏற்றமாகிய உரூஜில் நீ '(ரு)' நிலையை அடைகிறாய் இரண்டாவது படி இறங்குதலில் நீ 'பகா' நிலை யைப் பெறுகின்றாய். படி எற்றத்தில் சாலிக்'குடைய செயல் களும், பண்புகளும், 'தாத்து'தும், முறையே 'ஹக்கு'டைய வற்றில் மறைந்துவிடுகின்றன படி இறங்சலில் 'ஹக்'குடைய செயல்களும், பண்புகளும், 'தாத்து'தும், 'சாலிக்'கினிடத்தில் உறுதிப்பட்டு விடுகின்றன.

''மெய்யான 'குப்ரை' ஆடையாகப் பார்க்கக் கூடியவன் பகட்டான இஸ்லாத்தின் பேரில் வெறுப்படை கிறான்'' (குல்ஷனி ராஜ்) பகட்டான இஸ்லாம் சடங்காசாரங் களைக் கடைப் பிடிப்பதிலும், யதார்த்த இஸ்லாம் ஜீவ அகங்காரத்தை ஒழிப்பதிலுமிருக்கிறது முந்தியது விக்கிரக ஹாராதனையை ஒத்திருக்கிறது. எனவே ''அஸ்ஸுா பிலா மத்ஹபல்ஹு இல்லா மத் ஹபுல் ஹக்கு'' 'சூபி' ஒருவருக்கு

'ஹக்கு' ஆகிய மெய்ப் பொருளைத் தவிர யாதொரு 'மத்ஹபு'
ஆகிய பிரிவுமில்லை பகட்டான 'காபிரும்' பகட்டான
முஃமினும் வெளியரங்கசுத்தஞ் செய்வதில் மட்டும் ஈடுபட்டிருக்
கின்றனர். இதனைவிட்டும் நீங்கியவராக ஒரு 'சூபி' ஆகி
யிருக்கிறார்.

வறுமையைப்பற்றி ஹக்குடைய சமூகத்தில் பிரஸ்தா
பிப்பது ஒரு குற்றஞ்சாட்டலாகும். ஒரு அடிமை தனது
எஜமானிடம் குற்றஞ்சாட்டுவது கூடாது 'ஷௌத்காரியா'க்கள்
அவ்வாறு குற்றஞ் சாட்டுவது கிடையாது அவர்களுக்குக்
கிடைப்பதை புசித்து உண்மையான அந்த மாபெரும் கொடை
யாளனை 'ஹக்'கை சதாதங்கள் நோட்டத்தில் வைத்துக்
கொண்டிருக்கிறார்கள் உள்ளமையை நோட்டமிடுவதாகிறது
'தவக்கல்' என்னும் பரஞ்சாட்டலைவிட மேலானது ஒரு 'பகீர்'
இம்மையின் எஜமானையிருப்பதால் தனது சொந்த சொத்தை
அவர் உபயோகிப்பதினின்றும் யாரும் அவரைத் தடை செய்ய
முடியாது இந்த உலகின் சொத்து. அவருடைய சொந்த
சொத்தாகும் 'சுவர்க்'கில் நீ 'கைர்' ஆகிய வேற்றுமையை
விட்டும் உனது பார்வையை அகற்றிவிடவேண்டும் 'அன்சார்'
களில் ஒருவரான 'ஹாஷிமு'டைய வீட்டில் ஒரு கொத்து
பேரீச்சம் பழத்தை நாயகர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.
(கேட்கும் வகை இல்லாதலின்) யாரும் கேட்டல் என்பதை
வஸ்துக்கள் அழிவில் சாட்டி குழப்பிவிடக்கூடாது. 'மாலிக்
காபூர்' என்பார் ஒரு 'பகீரு'க்கு நன்கொடை அனுப்பியதற்கு
அந்த 'பகீர்' "நான் அல்லாஹ் வல்லாத வற்றிடமிருந்து
எதையும் ஒப்புக்கொள்வது கிடையாது" என்று பதிலிறுத்து
அந்த வெகுமதியை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார் 'காபூர்'
மறு முறையும், "ஸப்பஹ லில்லாஹி மாபிஸ்ஸமா வாத்தி
வல்அர்லி Fபஜனல் 'காபூர்' என்று பதில் சொல்லி அனுப்பினார்
அதாவது "வானங்களிலும், பூமியிலுமுள்ளவை அல்லாஹ்வின்
மீது துதி பாடுகின்றன எனவே 'காபூர்' என்பவனுக்கு இங்கு
இடமெங்கே?" என்பதாம் கொடுப்பவனும், வாங்குபவனும்
இங்கு 'ஹக்கு'தான் (பாகுபடுத்துதற்கு முயற்சிக்கும்)
'முஜாஹதா'வானது குழந்தை விளையாட்டுக்கும். ('ஹக்'கை
எவ்விடத்தும்) நோட்டமிடுதல் மானுஷிக யுத்தத்துக்கும்

களுக்கு பயிற்சிமுறை

ஒப்பாகும் ஷரீஅத்து'படி 'பனு' செய்தலென்பது பாவத்தை யும், 'நப்ஸு'டை இச்சைகளையும் போக்கிவிடுதலாம் 'பனு' நிலையில் அவர்கள் இச்சைகளைப் போக்கிக்கொள்கின்றனர்; 'பகா' நிலையில் 'ஹக்கு'டைய பண்புகள் யாவற்றையும் கணிக்கின்றனர் ''ஷரீஅத்தில் மரணித்தல் என்பது பாவத்தை விட்டும் நீங்குதலேயாம். 'தரீகத்தில் துர்நடத்தைகளைவிட்டு நீங்கி நற்குணங்களென்னும் ஆடையால் தன்னைப் போர்த்திக் கொள்வதாம். 'தகல்லகூபி அக்லாகில்லாஹ்' — ''அல்லாவின் குணதிசயங்களை நீங்கள் அடையப்பெறுவீர்களாக'' — என்று ஹதீது பகருகின்றது 'ஹகீகத்'தில் ஒருவன் தனது ஜீவ அகங்காரத்தைப் போக்கிக்கொள்வதுதான் இதுவோ மேற் சொல்லப்பட்ட இரண்டையும்விட மிகக் கடினமாயும், வெகு துரிதத்தில் போக்குதற்கு சாத்தியமில்லாத ஒரு நிலையாயு மிருக்கிறது. ஏனெனில் அது ஒரு பரவச நிலை முந்திய இரண்டையும் கொஞ்சம் பிரையாசையினுல் போக்கி பலனடையக்கூடும் மூன்றாவதாகிய இந்த ஜீவ அகங்காரமான தேகான்ம புத்தியைப் போக்குதற்கு இறை அருளும், சம்பூர்ண 'பீர்' ஆகிய ஞான தேசிகரின் வழி காட்டலும் தேவைப்படு கின்றன அப்பியாஸங்களாலும், 'முஜாஹிதா' வென்னும் தெண்டிப்பினுலு மட்டுமே இதனை அடைய சாதித்து வெற்றி பெறுவது மகா கடினம் ''தாலிக பல்ளுல்லாஹியுஃதீஹி மன்யஷாஹு'' ''இதுவோ அல்லாஹ்வின் அருட்கொடை; அதனை அவன் நாடியவர்களின் மீது அளிக்கிருன்;'' சிலர் 'நப்ஸு' மாணித்தல் என்பதை (உயிர்ப்பெற்று) ஜீவித்தல் என்பதாய்க்கொள்கின்றனர். மரணிப்பதற்கு யாதொரு அவசியமுமில்லை. ஏனெனில் (அவர்கள் கூறும் 'அதம்' ஆகிய மனிதனின் தாத்து) மரணம் தானுகவே இருக்கிறது. ஷுத்தாரியாக்கள் மரணித்தல் என்பதை ஒப்புக்கொள்வதில்லை. இதுவே அவர்களின் நிலையாகும். ''தனது 'தாத்'தையும், சிபாத்தையும், 'அப்ஆலே'யும் அல்லாஹ்வின் 'தாத்து', 'சிபாத்து', 'அப்ஆல்' என்று கருதினுலேயே யொழிய எந்த 'ஆரிபு' ஆகிய ஞானியும் அல்லாஹ்வை அறிவதில்லை,'' என்று அப்துல்லாஹ்பில்யாலி அவர்கள் கூறுகிறார்கள்.

ஹக்கு' தனது தரிபாட்டில் தரிபாடானவனுயிருக்கிருன்.

'வேறு' என்று முற்றிலுமில்லே. 'லய்ஸ F பில் உஜூதி இல்லல்லாஹ்' - ''உள்ளமையுடையான்யாருமில்லே, அல்லாஹ்வைத் தவிர'' 'இன்னீ அனல்லாஹு லாஇலாஹ இல்லா அனு' —'' நான் அல்லாஹ்வாயிருக்கிறேன்' என்னின்வேறான நாயன் யாருமில்லே. '' 'நான்' என்று அல்லாஹ்வைத் தவிர வேறு யார்தான் கூறமுடியும்? '' மன்அரப நப்ஸஹு பகத் அறப றப்பஹு — '' தன்னை யாரென்று அறிந்தவன் நிட்சயமாக தனது நாயனை அறிந்தவனும். '' என்று ஒரு ஹதீது ஏற்பட்டிருக்கிறது உன் 'தாத்து' ஆகிய சுயத்தை அல்லாஹ்வின் 'தாத்து' என்றும் உனது அறிவை அவனுடை அறிவென்றும் உனது உள்ளமையை அவனது உள்ளமை என்றும் உனது உள்ளமையை அவனது உள்ளமை என்றும்' உணர்வாயாக அப்பொழுது 'நானே அல்லாஹ்' அல்லது 'அவனே அல்லாஹ்' என்று எப்படி சொன்னாலும் பாதகமில்லே (அரபி இலக்கணப்படிக்குள்ள) பதினான்கு பிரதிச் சொற்களும் (தன்மை ஒருமையாகிய) 'நான்' என்ற பிரதிச் சொல்லானது, பதினான்கு திசைகளின் சுற்றிவருதலேக் கொண்டு ஏற்பட்டன. தன்மையைக் குறிக்குங்காலே அனல் ஹக்கு' (நானே ஹக்கு [மெய்ப்பொருள்]. என்று அந்தப்பிரதிச் சொல் கூறுகிறது தன்மை. ஒருமையாகிறது பிரதிச் சொற்களின் பெருக்கத்தால் அதிகரித்து விடுவதில்லே; இந்த பெருக்கத்துக்கு யாதொரு தனி உள்ளமையுங் கிடையாது பெருக்கமென்பது பண்புகளிலும், பயன்களிலும் தான் ஏற்பட்டிருக்கிறது உள்ளமை ஒன்றைவிட அதிகரித்ததன்று ஆனால் (அந்த உள்ளமைக்கு) தனது ஏகத்தன்மையில் வெளியரங்கத்திலும், அந்தரங்கத்திலும் பிரதிபிம்பங்களான தோற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன பண்புகளிலும், செயல்களிலுமே பெருக்கமேற்பட்டிருக்கிறது. மற்ற வகையாகக் கூறுமிடத்து 'தாத்'தைப்பொருத்தவரை அது தன்மைப் பிரதிச் சொல்லான 'நான்' ஆகியிருக்கிறது 'கைபு' என்னும் மர்மத்தினின்றும் வெளிப்பட்டதும் அதுமுன்னிலேயாகிய 'நீ' என்று தன்னேத்தானே அழைக்கிறது; 'கைபு'க்குள் மீண்டும்தான் புகுந்துகொண்டதும் 'அவன்' என்று நினேத்துக் தன்னேப் படர்க்கையாகிய தனது தொகுப்பான (சமஷ்டி) அகமியத்தின் கொள்கிறது

களுக்கு பயிற்சிமுறை

மீது தன் பார்வையை செலுத்தும்போது தன்னை 'நாம்' என்று அழைத்துக்கொள்கிறது. 'நஹ்னு அக் ரபு இலய்ஹி மின் ஹப்லில் வரீது' — ''அவனுடைய பிடரி நரம்பைவிட நாம் அவனுக்கு மிக சமீபித்து இருக்கிறோம்'' 'நான்' என்பது தாத்துடைய ,தஜல்லி'யாகிற தோற்றமாகவும், மற்ற பிரதிச் சொற்கள் யாவும் 'அஸ்மா', சிபாத்து, 'அப்ஆல்' ஆகியவற்றின் 'தஜல்லி'யாகவும் இருப்பதால் 'ஹக்கு' மாத்திரம்தான் 'நான்' என்று சொல்ல முடியும். (அவனைத்தவிர) யாதொரு (வேறு) மில்லை. ''இன்னீ அனல்லாஹ் லாஇலாஹ இல்லா அன'' '' திட்டமாக, நானே அல்லாஹ்வாகும். 'நான்' என்பதைத் தவிர நாயன் யாருமில்லை எனவே. உனது 'நான்' எனும் தன்மையை உணர்ந்து. உன்னைக்கொண்டே நீ ஜீவித்துக் கொண்டிருக்கிருய் என்று கருதிக்கொள்; 'கைர்' என்னும் அன்னியவஸ்து என்பதைக் கனவிலுங்கொள்ளாதே ''மன் அரபல்லாஹலாய கூலுல்லாஹ் அல்லா(ஹ்)வை அறிந்தவன் அல்லா(ஹ்)வென்று கூவியழைக்க மாட்டான். நீ உன்னை 'ஹக்'குடைய உள்ளமையைக் கொண்டு ஜீவிப்பவனுக கருதினுல் நீ ஒரு 'முஷ்ரிக்' என்னும் இணைவைப்பவனுக ஆய்விடுகின்றாய். உள்ளமைக்கு பிரிதொரு உள்ளமையிருக்குமாகில் வேறொரு 'ஹக்'கை நீ அடைந்துவிடுவாய் அவன் உள்ளீடாயிருக்கையிலேயே வெளியீடாய்த் தோன்றினுனேயொழிய அவனது வேறு என்பது கிடையாது 'மாயுஃமினு அக்தாஹும் பில்லாஹி இல்லாவஹும் முஷ்ரிகூன்' — அல்லாஹ்வின் மீது விசுவாசங்கொண்டவர்கள் அநேகரிருப்பினும் அவர்கள் முஷ்ரிக்காகவே இருக்கின்றனர் பெறுதற்குரிய யாதொரு அன்னியமாகிய 'கைரு'ம் அவனுக்கில்லை. 'ஆலம்' என்பது அல்லாஹ்வின் 'வேறு' அன்று; ஹக்கு தனது தத்துவாதிகளுடையவுமான கோலங்களிலே வெளியீடாயிருக்கிருன். அவனுடைய வெளிப்பாட்டையே பிரபஞ்சம் என்று அழைக்கப் படுகிறது அது அவனுடைய வெளியீட்டின் திருஷ்டாந்தமாகும். 'ஆலம்' அல்லது பிரபஞ்சம் அவனுடைய ஆடை. 'தௌஹீது' என்னும் அத்வைதமாகிறது. திரோகாதியான (கண்டிப்பான ஜீவத்) தன்மையை இன்மையாக்குவதினுலும், கண்டிதத் தன்மையைப் போக்கி குறிப்புகளை விட்டுவிடுவதினு

லும், அகண்டார்த்தமான (குறிப்பற்ற) தன்மையை உணர்வ திலுலும் அடையப்படுகின்றது.

ஜனங்களை தங்கள் வழிக்கழைப்பதற்கு 'ஔலியா'க்கள் கட்டளையிடப்படவில்லை ஆனால் 'அன்பியா'க்களோ அவ்வாறாக கட்டளையிடப்பட்டிருந்தனர் முடிவான எல்லைக் கோடே 'விலாயத்து' ஆகும் 'நபித்துவம்' 'விலாயத்து'க்கு ஐக்கியப் பட்டது. 'நபி' (ஸல்) அவர்களும் கீழ்ப்பட்டிருந்தார்கள் என்பது எதுபோலெனில். ஒரு அரசன் தனது பொக்கிஷ தாருக்கு அவர் ஐக்கியமாவதுபோல் வெளிப்படையில் அது கீழ்ப் பட்டிருந்தாலும். யதார்த்தத்தில் அது அவனுடைய கட்டளை யாகும் 'விலாயத்து' 'ஹக்கு'டனே வைத்திருக்கும் மர்மம்: நபித்துவம் அல்லது 'நுபுவ்வத்து நேர்வழிக் கழைத்தலாம். 'லீம அல்லாஹு வக்துன் லாயஸ் அனீஹிமலகுன் முகர்ரபுன் வலா நபிய்யுன் முர்ஸலுன்' 'ஹக்கு'டன் எனக்கு ஒரு நேர மிருக்கிறது அந்த நேரத்தில் மிக சமீபித்த 'மலக்கு'ம் தூதனுப்பப்பட்ட 'நபி'யும் இடம்பெற மாட்டார்கள்' என்று நாயகம் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள் இதுவே 'விலாயத்து'டைய பதவி. இந்த பதவியில் நபித்துவத்துக்கு சமீபிக்கும் 'தஜல்லி' இன்மையாகிவிடுகிறது.

'நபி'த்துவம் தாற்காலிக பண்பு; ஏனெனில். ஒவ் வொரு 'நபியும் தனது வாழ்நாளில் ஓர் குறித்த காலத்துக்கு 'நபி'யாக இருந்தார். சிஷ்டிப் பொருள்களின் நிலையை உயர்த்துவதற்குத்தான் இது ஏற்படுத்தப்பட்டது. இதுவோ சாசுவதமற்றது 'விலாயத்து' என்பது 'தாத்து'டைய தரி பாடான பண்பு. ஒரு 'நபி'யின் நுபுவ்வத்து முடிந்துவிடுங் காலை அவர் ஒரு 'வலீ'யாக மட்டும் தரிபட்டிருக்கிறார். 'விலாயத்து'ம். 'நபுவ்வத்து'ம் ஒரு மனிதனில் சேகரமாயிருந் தால் 'விலாயத்'துதான் மேன்பதவியைப்பெறும்.

முதன்முதலில் 'நபி'மார்கள் 'தௌஹீ'தைப்போதித்து பின்னர். 'ஷரீஅத்து'வாயிலாய் 'சுலூக்கு' என்னும் பயிற்சி முறையைக்கற்பித்தனர். 'குல்-ஹாதாஸபீலீ அத்ஊஇலல்லாஹி

கலுக்கு பயிற்சிமுறை

அலா பஸீரதின் '' — '' சொல்வீராக. இதுவே மார்க்கம்
அல்லது பாதை அகப்பார்வையைக் கொண்டு நான் உங்களை
அல்லாஹ்வளவில் அழைக்கிறேன். '' (குர்ஆன்) முதலில் நாயகம்
(ஸல்) அவர்கள் ஜனங்களை '' தௌஹீ'தின் பால் அழைத்தார்
கள். '' மன்கால லாஇலாஹ இல்லல்லாஹு தகலல்ஜன்ன '' —
'' யாரொருவன் அல்லாஹ்வின் வேறான நாயன் யாருமில்லை
யென்று சொன்னாரோ அவன் சுவன பதியில் புகுந்தவனாகும் ''
(ஹதீது) காபிரீன்கள் இந்த சொல்லைக்கேட்டு நிட்சயமாக இது
ஓர் பேராச்சரியமும், விந்தையுமான விஷயமாயிருக்கிறது என்ற
அர்த்தங்கொண்ட '' இன்ன ஹாதால ஷைஉன் உஜ்ஜாப் ''
என்றும், '' என்ன! எல்லா இலாஹுகளையும் அவர் ஒரே
இலாஹாவா ஆக்குகின்றார்? '' என்ற பொருள் பொருந்திய
'' அஜஅலல்ஆலி ஹத இலாஹுன் வாஹிது '' என்றும் கூறி
னர். பிறகு நபி அவர்கள் அவர்களை 'உபூதியத்து' என்னும்
அடிமைத்தனத்தின் பால் அழைத்து அவர்களின் வணக்க
முறையை 'திக்று' என்னும் ஜெபித்தலாக செய்துவிட்டார்கள்.
'தௌஹீது' அளவில்தான் அழைப்பு ஏற்பட்டிருந்ததால் இது
விஷயத்தில் 'நபி' மார்கள் யாவரும் ஒத்திருக்கின்றனர் எல்லா
மார்க்கங்களும் ஒரே பொதுவான அடிப்படையின்பேரில்
ஸ்தாபிதமாயிருக்கின்றன நபிமார்கள் ஆத்மீக உன்னதம்
பெற்றவர்களுக்கு மட்டும் 'தௌஹீ'தையும், சாதாரண பொது
மக்களுக்கு ஷரீஅத்தையும் போதனை செய்து தங்கள் தூது
வேலையைத் தொடங்கினர் ஏனெனில் சாதாரண பொது மக்கள்
ஷரீஅத்தின் மூலம் மேலேறி ஹகீகத்தை அடைவரென்றும்,
ஆத்மீக உன்னதம் பெற்றோர், 'ஹகீகத்திலிருந்து கீழிறங்கி
ஷரீஅத்தை அடையப்பெற்று [தன்ஸீஹ், தஷ்பீஹ்] இரண்டை
யும் ஒன்று சேர்ப்பார்களென்ற கருத்துக்கொண்டே நபிமார்கள்
அவ்வாறு போதித்தார்கள். அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த
பேதாபேதங்கள் ஷரீஅத்தின் அனுஷ்டான முறைகளைப்
பொருத்ததேயாம்.

ஷரீஅத்துக்கு முதலிடத்தை இப்பொழுதே அளிப்பா
யாக. 'ஷரீ அத்தின் வாடையின்றி 'ஹகீகத்து' என்பதில்லை
(குல்ஷன்ராஜ்) ஒரு 'மஜ்தூபு - சாலிக்கு 'ஹகீக்கத்திலிருந்து'

அஸ்ராரே அனல்ஹக்

ஷரீ — அத்தின் பால் கீழிறங்குகிறார். ஒரு 'சாலிக்கு' மஜ்தூபு' ஷரீஅத்திலிருந்து ஹகீகத்தின் பால் மேலேறுகிறார்.

'அதம்' என்னும் இன்மையுடன் சம்பந்தப்பட்டது தான் தீமை. நேர்முறணான எதிரிடையான 'இஸ்மு'களுடைய சம்பந்தா சம்பந்தம்தான் அந்த தீமை "மாஅஸாபக மின்ஹஸயனுத்தின பமினல்லாஹ்வமா அஸாபக மின்ஸையி ஆதின் பமினன்நப்ஸிக" — நன்மையாக வெளிப்படுவதை ஹக்கின் புறத்திலும், தீமையாகவெளிப்படுவதை உனது நப்ஸின் புறத்திலும் சாட்டிவிடுவாயாக. அடக்கியாள்பவன் (கஹ்ஹார்), கிருபையுடையோன் (றஹீம்) ஆகியவை இரண்டு இஸ்முகளாகும். இவ்விரண்டுக்கும் ஏற்படும் சம்பந்தம்தான் தீமை (ஷர்ரு) என்றாகிறது. எனவே 'ஆரிபு'கள் இவற்றை விட்டும் கடந்தவர்கள். "வமா அர்ஸல்னாக இல்லா றஹ்மது லில் ஆலமீன் (நபியே!) நாம் உம்மை சர்வலோகத்தினருக்கும் அருட்கொடையாகவேயன்றி அனுப்பி வைக்கவில்லை"

'கைர்' என்னும் வேற்றுமையைத் தரிபடுத்தும் 'ஷிர்க்கு' ஆகிய இணையைவிட்டும் நபிமார்கள் நீங்கி இருக்கிறார்களென்று உலமாக்கள் யாவரும் ஒத்தோர்மித்துக் கூறுகின்றனர் ஏனெனில் 'நுபுவ்வத்து' பெறுவதற்கு முன்னர் அவர்கள் 'வலீயு'டைய நிலையை அடைந்துவிட்டனர்; அந்த 'வலி' பதவியானது வேற்றுமையை நிராகரித்து 'ஹக்'கை தரிபடுத்துதலாகும்இது நிற்க. அவர்களால் யாதேனும் பாவம் நிகழ்ந்துவிடுமாயின் அதனைப்பற்றி அவர்களுக்கு யாதொரு அச்சமுமில்லை "இன்னல்லாஹ லாயக்Fபிறு அன்உஷ்ரக பிஹி வயகFபிறு மாதூனதாலிகலிமன்யஷாஉ" . "ஷிர்'க்கை மட்டும் 'ஹக்கு' ஆகிய மன்னிப்பதில்லை. அவன் நாடியவர் களுக்கு அவன் பாவங்களை மன்னித்துவிடுகிறான் 'ஹக்கு' ஆகிய மெய்ப் பொருளுக்காக வேண்டிய ஹக்கிலிருந்து 'ஹக்கு'க்கு இடப்படும் கட்டளையே பாவங்களாகும் "மாரமைத்த இத்ரமைத்த வலாகின்னல்லாஹ ரமா" — "(பத்ருயுதத்தில்) நீர் எறிந்த ஒருபிடி (மண் அல்லது கூழாங் கற்களை) நீர் எறியவில்லை, எனினும் ஹக்குதான் எறிந்தான்."

ஹுக்கு பயிற்சிமுறை

'விலாயத்' தென்பது ஹக்கை ஹக்கின் வாயிலாய்ப் பார்ப்பதாம். 'நுபுவ்வத்'தென்பது 'ஹக்'கை சிருஷ்டிகளின் வாயிலாய்ப் பார்த்தலாம். முந்தியதில் சிருஷ்டிப்பின் சாய்கையினுடைய யாதொருதிரையுமிருப்பதில்லை; பிந்தியதில், 'ஃகல்க்'கைப் பார்த்தலுடனே வஸ்துக்கள் பிரத்தியட்சமாய்த் தெரிப்பட்டிருக்கின்றன. முந்தியதில், 'சாலிக்கு' உட்பட சிருஷ்டிப் பொருட்களின் (தனி) இருப்பைப்பற்றிய விபரீத புத்தியின்றியே ஹக்கைப் பார்த்தலுண்டாயிருக்கிறது. பிந்தியதில், 'ஹக்கை'யும், வஸ்துக்களையும் பார்த்தல் உண்டாயிருக்கிறது. முந்தியது 'பனா' நிலையும் பிந்தியது 'பகா' நிலையுமாகிறது. முந்தியதையே சம்பூர்ணமான பதவியிருக்கிறது. சிலர் 'முந்தியதையே அல்விலாயத்து அப்லலுமினன் நுபுவ்வத்தி' என்றுகொள்கின்றனர்; 'விலாயத்தானது நுபுவ்வத்தைவிட சிறந்தது. நான் அகலியக் கடலை அடைந்தபோது நபிமார்களைக் கடலோரத்திலும் என்னை அக்கடலிலுமிருக்கக் கண்டேன் என்று அபூயஸீது புஸ்தாமீ (றலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள். நபி (ஸல்) அவர்களுடைய 'முப்தா'வாகிய பூர்வ காலத்தையும், 'மஆது' ஆகிய நித்திய காலத்தையும்பற்றித் தெரிந்துகொள்வதாகும் மற்றவர்கள் தங்கள் தங்கள் 'முப்தா'வையும், 'மஆதை'யும்,' நபி அவர்களுடைய போதனையிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும் 'நபி'மார்கள் தங்களை அல்லாஹ்விடமிருந்து வந்தவர்களென்றும், அல்லாஹ்வுடைய தன்மையுள்ளவர்களென்றும், அதேஅல்லாஹ்வின் கண்டித்த தன்மை தாங்களேயென்றும், அவர்களது கண்டிப்பு ஆரம்பமானதென்றும், இதா பிந்திய தொடர்பான கண்டிப்புகளை அடைய வளைந்ததென்றும் கருதிக்கொள்கின்றனர் அவர்களின் ஆரம்பமான 'முப்தா'வென்னும் பூர்வீகத்தையும், அவர்களது முடிவான 'மஆது' என்னும் நித்திய காலத்தையும்பற்றி அவர்கள் நன்கறிந்திருந்தனர்.

உனது பாதையில் 'குப்ரு'ம் 'இஸ்லாமு'ம் ஓடிக்கொண்டிருக்கின்றன.

நீயே இணையின்றிய ஏகன் எனக் கூறிக்கொண்டிருக்கின்றாய்.

அஸ்ராரே அனல்ஹக்

ஏகத்தன்மையை அவர்கள் வெளிப்படையாக மறுத்த போதிலும் 'காபிரீன்'கள் அல்லாஹ் ஒருவன்தான் என விஸ்வாசங்கொள்கின்றனர்; எனினும் 'துபுல்வத்'தை மட்டும் நிராகரிக்கின்றனர். வித்தியாசம் செயலில் இருப்பதாக வாதித்தாலும் அதுவும் சரியே; ஏனெனில் செயல்கள் எண்ணங்களைப் பொருத்திருக்கின்றன. "குல்லு மவ்லூதின் யூலது அலா பித்ரதில் இஸ்லாம்" (ஹதீது) சகல சிருஷ்டிப் பொருட்களும் இஸ்லாத்தின் தன்மையுடனேயே பிறக்கின்றன. "யுஸப்பிஹு லில்லாஹி மாபிஸ்ஸமாவாத்தி வமா பில் அர்ளி" — வானங்களிலும், பூமியிலுமுள்ள சகலமும் அல்லா(ஹ்)வின் மீது துதிபாடுகின்றன. ஏகத் தன்மையின் பால் விசுவாசிக்கும் கூட்டத்தைவிட்டும் 'காபிர்'களை நீக்கி விடமுடியாது.

'முஸ்லிம்' ஒருவன் விக்கிரஹம் என்பது யாதென்றறிந்தால் விக்கிரஹாராதனைதான் மார்க்கம் என்று தெரிந்து கொள்வான் (அஸ்தஃபிருல்லாஹ்) ஒரு விக்ரஹாராதனைக்காரன் எப்பொழுது விக்கிரஹாராதனைக்காரனாக ஆகிறானென்றால் அவன் ஓர் விக்கிரஹத்தில் சிருஷ்டித் தன்மையை மட்டும் பார்ப்பானே அப்பொழுதுதான்; அவ்வேளைதான் அவன் ஓர் 'காபிர்' ஆக ஆகிறான்.

மறைந்திருக்கும் ரகசியத் தன்மையை அதில் நீ பார்க்காவிடில் உன்னை 'ஷரீஅத்'படி 'முஸல்மான்' என்று அழைக்கப்படுகிறது. இதுவே பகட்டான 'இஸ்லாம்—மஜாஸீ' யாகும். வார்த்தைகளிலும், அஹ்லெ-ஷரா ஹுனராகளிலுமே யன்றி அர்த்தத்தில் வித்தியாசமில்லை 'முஸ்லிம்'கள் அல்லாஹ் வென்றும், ஹிந்துக்கள் 'பிரம்ம்' என்றும் அழைக்கின்றனர். சர்வாங்கத்திலும், சகலத்திலும், வானங்களிலும், பூமியிலும் வணங்கப்படுவது யாருமில்லை, 'ஹக்'கையன்றி - இதனை பொருட்டே கீழ்வரும் சம்பவம் ஒன்று விபரிக்கப்படுகிறது 'லப்பைக்' (இதோ நான் இருக்கிறேன்) 'லப்பைக்' (இதோ தான் இருக்கிறீர்) என்ற சப்தம் இறைவனிடமிருந்து

தொனிக்க ஜிப்ராயீல் (அலை) அவர்கள் ஒரு சமயம் கேட்டு இந்த கிருபாகடாட்சம் யாரை நோக்கியது என்று வியந்து போயிருந்தார்கள். அவ்வேளை 'மஜூஸி'யின் வணக்க ஸ்தலத்திலும், கிருஸ்துவ கோவிலிலும், முஸ்லீமுடைய பள்ளிவாயிலிலும் யாதொரு வணக்கவாளியையும் இறைவன் மீது புகழ் கூறிப் பாடிக் கொண்டிருக்க அவர்கள் காணவில்லை. அச்சமயம் தெய்வீக தொனி (அசரீரியாக) "ரூம் தேசத்திலுள்ள இன்ன கோவிலுக்குப் போய் உண்மையைக் கண்டறிந்துகொள்" என்று கூறிற்று அங்கு ஒரு 'மஜூஸி' ஒரு விக்கிரகத்துக்கு சாஷ்டாங்கஞ் செய்து நெஞ்சுருகி அழுது கொண்டு "ஓ இரட்சகா!" என்று கூவி அழைத்தபோது "லப்பைக், லப்பைக்" என்ற மறுமொழி உண்டானதை ஜிப்ராயீல் (அலை) அவர்கள் கோபாவேசங்கொண்டு அந்த 'மஜூஸி'யுட்பட அந்த கோவிலையே கவிழ்த்து விடுவதற்கு இறைவனிடம் உத்திரவு கேட்டு இறைஞ்சினார்கள் அதற்கு இறைவன் "ஓ ஜிப்ராயீல்! அவன் தனது வணக்கத்தின் இலட்சியத்தை இழந்துவிட்டபோதிலும் 'வணங்கப்படுபவன்' தன்னை இழந்து விடவில்லை எவ்விடத்திலும், எந்நிலையிலும் 'அவன்' தான் வணங்கப்படுவோன்." என்று கூறி ஜிப்ராயீல் (அலை) அவர்களைத் தடுத்துவிட்டான்.

'அறிவு - முராக்கபா' வாகிய நிஷ்டையாளருக்கு கிரந்தமோதுவோரின் நட்பு தீங்கிழைப்பதாயிருக்கிறது. 'முராக்கபா'வில் கற்ற கல்வியையும் மறக்கவேண்டியிருக்கிறது 'முராக்கபா'வில் 'தஜல்லியாத்து' கூட மனதை மறைக்கின்றன. உள்ளில் யாதொரு கல்வியும் புகுத இடமளிக்காது. மதியில் உன்னை மூழ்கடித்துக்கொள் எண்ணங்கள் வருங்கால் அவைகள் மனதில் கற்பனை சித்திரங்களை சித்தரித்து, அதனை ஓர் சித்திரசாலையாக்கிவிடுகின்றன. 'தஸவ்வுப்'டைய ஞானமும், பல்வகை 'அஹ்காமை' (அப்பியாஸங்களைப்) பற்றிய அறிவும் கூட தொன்மை புத்தியை மறக்கச் செய்வதற்கு தடையாயிருக்கின்றன "அல்இல்முஹிஜாபுல் அக்பர்" 'இல்மானது அல்லாஹ்வின் பெரிய திரையாயிருக்கிறது.' 'மறதி' என்னும் நிலையுடன் உனக்கு எதிரானவைகளை அவ்வளவாக உன்னை நீ மறந்துவிடவேண்டும்.

அஸ்ராரே அனல்ஹக்

உன்னில் 'தாத்து' 'சிபாத்து'டைய 'தஜல்லியாத்து' கள் உனது மனமென்னும் கண்ணுடியில் பிரதிபலித்து, அக் கண்ணுடி உன்னுடைய மானுஷீக தன்மையென்னும் துருவினுல் மறைக்கப்பட்டு, (அகக்கண்) குருடாகிவிட்டாய்

உள்ளமைக்கு 'வேறு' ஆகிய இன்மையான 'அதம்' என்பதிலிருந்துதான் ஒவ்வொரு தீமையும் ஏற்பட்டிருக்கிறது. உள்ளமையுடன் தீமை என்பது சம்பந்தப்பட்டதன்று. இம்மையிலோவன்றி மறுமையிலோ அதனைக்கொண்டு சங்கடத்தை அனுபவிக்கும் ஒரு மனிதன் பால்தான் தீமையை சாட்டப் படுகிறது. தீமை என்பது தீமையுடன்தான் சம்பந்தப்பட்டது. நாயும், பன்றியும் அவ்வவற்றைப் பொருத்தவரை நன்மையானதுதான்; மனிதனைப் பொருத்தவரை அசுத்தமானவையே. உள்ளமையென்பது முற்றமுடிய சம்பூர்ண நன்மையே நன்மை. முறண்பாடான 'இஸ்மு'கள் ஒன்ருேடொன்று சம்பந்தப்படுங்காலை 'தீமை வெளிப்படுகின்றது. 'அல்கைருஹூவல் உஜூது வஷ்ஷர்றுஹூவல் அதம்;' என்று 'சூபி' கூறியிருக்கிருர் சதுர்ப் பூதங்களும் தங்கள் 'அஸ்லு' அளவில் மீண்டுவிட்டதும், 'ரூஹு' ஆன்மா மட்டுமே மீதப் படுகின்றது: அதில் 'ஹக்'குடைய 'தஜல்லி' பிரகாசிக்கின்றது.

''ஹக்கு'டன் பித்தன் ஒருவனைப் போன்று நடந்துகொள்; முஹம்மது (ஸல்) அவர்கள்விஷயத்தில்எச்சரிக்கையாயிரு.'' என்று ஒருவர் பாடியிருக்கிருர் அதாவது, 'அஹ்லுல்லாஹ்'க்களிடத்தில் பித்தனைப் போன்று நட; ஏனெனில், 'காதல்' என்பது ஹக்கிடத்தில் பித்தனைப் போன்றிருப்பதாம். 'அல் இஷ்கு ஜூனூனுல்லாஹ்' — 'ஷரஉ'டையவர்களிடத்தில் புத்தி சாதுரியத்துடன் நடந்துகொள்வதோடு காதலைப்பற்றியும் பேசாதிருப்பாயாக. ''துகல்லிமுன்னஸ அலா கத்ரி உகூலிஹிம்.'' ''ஜனங்களுடைய விளக்கத்துக்குத் தக்கவாறு அவர்களிடம் நீங்கள் உரையாடுங்கள்'' என்று முதுமொழி வருகிறது பேரின்ப பைத்தியம் என்பது தாத்தின் காதல்; உணர்ச்சியென்பது 'வஹ்தத்து' அல்லது 'ஹகீகத்து முஹம்மதீ'யைச் சார்ந்தது. 'இருப்பதும், இல்லாததுமான நிலை இதுவே

சுலுக்கு பயிற்சிமுறை

'ஹகீகத்து'டைய முடிவான எல்லை 'ஹகீ அத்து' ஆகும். ''லாஇலாஹ இல்லல்லாஹ்'' என்பது 'ஹகீ அத்து'டைய முடிவான ஸ்தானம்; முஹம்மதுர் ரசூலுல்லாஹ்வென்பது ஹகீகத்துடைய முடிவான எல்லை. ஒன்றிலிருந்து மற்றொன்றின்பால் படி எடுத்து வைத்து ஒரு சம்பூர்ண மானிடனாக (மஜ்தூபு — சாலிக்கு) ஆகி 'மகாமுன் மஹ்மூது' என்னும் பதவியைப் பெறுவாயாக. 'சுக்ரு' இல்லாமல் 'சஹ்வு'வை அடைய முடியாது. நீ உன்னை மறந்து, நீ அவ்வாறு மறந்து விட்டதைத் தெரியாதவரை யாதொரு திருப்தியுமிருக்காது.

மறதியைப்பற்றிய ஞாபகம் (சஹ்வு) உனக்கு ஏற்பட்டு நீ உன்னளவிலாகாதவரை வெறும் மறதி (சுக்ரு) மட்டும் பயன் படத்தக்கதன்று. ஆலம் மிதால் (சூட்சும லோகம்) உன் மீது ஒரு தடவை உதயமாகிவிட்டால் அதன் பயன் அழியாது தரிபட்டுவிடும். நீ ஒரு உன்னத மனிதனுள ஒளியானாக ஆய்விடுவாய் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிஃராஜ் ஒரு தடவைதான் ஏற்பட்டது.

''லாஇலாஹ இல்லல்லாஹ்' அல்லாவின் வேறான நாயன் யாருமில்லை.'' 'லா' என்றும் 'இல்லை' என்பது (ஜீவ) அகங்காரத்தையும், பிரபஞ்சத்தையும் இன்மையாக்க லாகும் 'சாலிக்கு'ம், பிரபஞ்சமும் இவ்வாறு இன்மையாக்கப் பட்டுவிடுகின்றனர். 'சாலிக்கு' தனது (ஜீவ) தன்மையில் இல்லாமையாயும், ஹக்கில் தரிபாடானவராயுமிருக்கிறார். அறிவுடைய எல்லைக்கு அப்பாற்பட்ட 'அஹதியத்து' மட்டுமே தரிபட்டு நிற்கின்றது. 'தாத்து' தன்னை அறிந்துகொண்ட 'நுக்தா'வாகிய முதற் புள்ளிதான் 'ஹகீகத்து முஹம்மதி'யாகிய முஹம்மது (ஸல்.) அவர்களுடைய அகமியமாகும்.

''உனது இருப்பின் பிரதிபிம்பம் கண்ணாடியில் தரி பட்டிருக்கும் பரியந்தம், உன்னால் வணங்கப்படுவது உனது சொந்த எண்ணங்கள்தான்.'' என்று ஒருவர் பாடியிருக்கிறார். உனது 'அறிவு' என்னும் கண்ணாடியில் உனது இருப்பின் பிரதிபிம்பம் தரிபட்டு நீ (திரேகாதியான கண்டிப்பான 'நீ'யாக

மட்டும் இருக்கும்வரையில் உன்னால் வணங்கப்படுவது உனது நினைவுகள் மட்டுந்தான்: அப்பொழுது யதார்த்த உள்ளமையைவிட்டும் நீ திரையிடப்பட்டுவிடுவாய். உனது 'ஜீவ' அகங்காரம் நீங்கிவிடும்பொழுது அவனுடைய 'பிர்ம' அகங்காரம் உதயமாகி அவனுடைய 'ஜமால்' என்னும் பேரழகை உணர்வு பெறாத உன் பேரில் காட்டத் தொடங்குகிறது. 'தாத்து முத்லக்கு'தான் ஆராமி; வஸ்துக்களோ கண்ணாடியில் தோன்றும் கண்டிப்புகளான பிரதி பிம்பங்கள். எதுவரை உள்ளமையின் இந்த பிரம்பிம்பங்கள் உனது அறிவிலும், உன் எண்ணத்திலும், கற்பனையிலும் தரிபட்டிருக்கின்றனவோ அதுவரை அறியப்பட்டது வஸ்துக்கள் மாத்திரம் தான் அவைகள்தான் உன் வணக்கப் பொருளாய் இருக்குமேயன்றி, 'ஹக்கு'டைய உள்ளமையன்று 'ஹக்கு' ஆகிய மெய்ப் பொருள் 'ரூஹு' ஆகிய ஆத்மாவில் மறைந்ததும் 'ரூஹா'னது 'கல்பா'ன மனதில் மறைந்தும் 'கல்பா'னது 'காலிபா'ன சரீசத்தில் மறைந்தும் இருக்கிறது சரீரம் உன் பார்வையில் இருக்கும்போதே, நீ மெய்ப் பொருளாகிய 'ஹக்கை' தேட்டமிடவேண்டும்.

''ஹக்கு' பிஜான் அந்தர் நிஹான் வஜான் பதில் அந்தர் நிஹான். அய் நிஹான் அந்தர் நிஹான் அந்தர் நிஹான் அந்தர் நிஹான்.''

'உஜூதை' தேட்டமிடுதலாகிய 'முஜாஹதா' 'முஷாஹதா' அல்லது 'குர்பு நவாபிலு' ஆகிய 'பஜ' 'குர்பு — பராயிலு' ஆகிய 'பகா'வை அப்பியாசிப்பவரே ஒரு 'தர்வேஷ்' ஆகும்.

சரீர சுகங்களை ஒரு 'சாலிக்கு' முதன் முதலில்விட்டு விடவேண்டும் தேர்ச்சிபெற்றவன் இவ்வித சுகங்களைக் கொள்ளலாம்

''நீங்கள் சரீரசுகங்களை எவ்வளக்கெவ்வளவு அடையப் பெறுகின்றீர்களோ அவ்வளக்கவ்வளவு உங்கள் முதுகு மறுமைமையின்பால் திருப்பட்டுவிட்டது.'' என்று ஒரு ஹதீது

களுக்கு பயிற்சிமுறை

கூறுகிறது ஒருவன் ‘ஆரிபு’ (ஞானி) ஆக ஆய்விடுங்காலை விஷயம் மாற்றமாக ஆய்விடுகின்றது. ‘‘முஜாஹதா’வென்பது குழந்தை விளையாட்டு ‘மஃரிபத்து’தான் மனிதச் செயல்’’ என்று அலீ உஸ்மான்ஜீலானி அவர்கள் கூறி இருக்கிறார்கள் தங்கள் வணக்க பலத்தால் சரீர இச்சைகள் யாவற்றையும் கைவிட்டுவிட்டார்கள் பிஷ்ருல் ஹாபீ (றழ்ற) அவர்கள், மஃரூபுல்கர்கீ (றலி) அவர்கள் சரீரசுங்களைக் கடைபிடித்து வந்தார்கள் ஒரு ஆரோக்கியமான மனிதனுக்குள்ள வாழ்க்கை விதிகளைவிட்டும் ஒரு சீக்காளியுடை நிலைமை வேறுபட்டதாயிருக்கிறது. ‘‘ஆரம்பத்தில் என்னைக் கண்டவன் ஒரு ‘சித்தீகு’ (உண்மையாளர்) ஆக ஆய்விட்டான்; முடிவில் என்னைக் கண்டவன் ஒரு ‘ஸித்தீகு’ (பாவி)யாக ஆய்விட்டான்’’ என்று ஜுனைதுல் பக்தாதீ (ரலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

குற்றஞ்சாட்டுவதும், துக்கத்தை வெளிப்படுத்துவதும் பொறுமைக்கு மாற்றம் என்று சில ‘மஷாயிகு’கள் நம்புகின்றனர். அவ்வித செய்கை ‘ஹக்’கல்லாத பிறிதொரு பொருளிடத்திற்தான் சாத்தியப்படும், என்று மற்றுஞ் சிலர் கருதுகின்றனர். தாழ்மையும், அழுகையும் அல்லாஹ்விறைல் அங்கீகரிக்கப்பட்டவை. பொறுமை குணத்தில் உறுதிபூண்டிருந்த ‘நபி’மார்களும் ஒலிமார்களும் தாழ்மையையும் பிரார்த்தனையையும் கைவிட்டுவிடவில்லை. நாயகம் (ஸல்) அவர்கள்கூட ‘‘எ இறைவா! மாறு வஸ்துவை விட்டும் என்னை காப்பாற்றுவாயாக’’ – அல்லாஹும்ம அஸ்யினீ அலாகாரத்தில் மௌத்தீ’’ என்று பிரார்த்திக்கிறார்கள்.

ஒருவனது புத்தியானது ‘ஹால்’ என்னும் உணர்ச்சி நிலையினால் பிணைக்கப்படுங்காலை அவனை ‘மஜ்தூப’ என்று அழைக்கப்படுகிறது அன்றி அவன் கவலையினாலோ அல்லது சந்தோஷத்தினாலோ பிணைக்கப்பட்டுவிட்டால் அவன் ‘மஜ்னூன்’ (பித்தன்) ஆக ஆய்விடுகிறான். எதுவாயிருப்பினுஞ்சரி அவனுக்கு முன்னுள்ள திரையானது நீக்கப்பட்டுவிடுகிறது அவன் மறை பொருளை பார்க்கக்கூடியவனாகிறான். பித்தன் தனது பழைய நிலையையடைந்துவிட்டபொழுது அவனுக்கு நடந்ததொன்றும் புரியாது! அதன் பயனையும் உணர்ந்து

கொள்ளமாட்டான். 'மஜ்தூ' போசதாகாலமும் அவனுக்கு ஏற்பட்ட 'கஷ்பு' ஆகிய திரை நீங்கலை மறுமையிலும் பெற்றிருப்பான்.

'ஷிர்க்'கைவிட்டும் 'நபி'மார்கள் நீங்கியிருக்கின்றனரென்று 'உலமா'க்கள் ஒத்தோர்மித்து கூறுகின்றனர். 'ஷிர்க்கு' என்பதோ 'வேறு' ஆகிய 'கைரை'த் தரிபடுத்துவதாகும் 'நுபுவ்வத்'தை அடைதற்கு முந்தியே 'விலாயத்'தை அவர்கள் பெற்றுவிட்டனர் 'வலி'த்தனம் என்பது 'கைர்' என்னும் பிறபொருளை இன்மையாக்கி 'ஹக்'கைத் தரிபடுத்துதலாகும். இவ்வாறிருந்தும் அவர்கள் பாவங்களைப் புரிந்துவிட்டாலும் அவர்களுக்கு யாதொரு அச்சமுமில்லை "இன்னல்லாஹ லாயக்பிறு அன்உஷ்ரக பிஹி வயக்பிறு மாதூன தாலிகமன்யஷாஉ' — அல்லாஹ் இணை வைத்தலை மன்னிப்பதில்லை. எனினும், அவன் நாடினுல் சகல பாவங்களையும் மன்னித்துவிடுகிருன் 'ஹக்கு' ஆகிய மெய்ப் பொருளிடமிருந்து ஹக்கின்பால் 'ஹக்'குக்காக வேண்டி இடப்பட்ட கட்டளைகளே பாவங்களாகும். 'மாரமைத்த இத்ரமைத்தவலாகின்னல் லாஹறமா' — "(பத்ரில்) நீர் ஓர் கைப்பிடி மண்ணை (கூழாங் கற்களை) விரோதிகளின் மீது எறிந்தபோது நீர் எறியவில்லை எனினும், அல்லாஹ்தான் எறிந்தான்."

'கோலியா'த்தை தாவூது (அலை) அவர்கள் தங்கள் (ஜீவந்) தன்மையினுல் கொன்றபொழுது ஒரு பாவியாக ஆனுர்கள் ஆனுல் நாயகம் (சல்) அவர்களுடைய கையிலிருந்து எறியப்பட்ட கூழாங் கற்களை எறிந்தது நாயகம் (ஸல்) அவர்கள் அல்லவென்றும். ஆனுல் அல்லஹ்தான் எறிந்தான் என்றும் கொள்ளப்படுகிறது 'யதுல்லாஹி பௌக ஐதீஹிம்' — அவர்களுடைய கைளுக்கு மேலால் அல்லாஹ்வின் கரமிருந்தது 'அன்பு' மார்க்கத்தில் பாவமென்பது பாலமென்பது மன்னிக்கப்பட்டதொன்று "லியக்பிரலகல்லாஹு மாதககத்தமவமாத அக்கர" — (ஓ நபியே!) அல்லாஹ் உம்முடைய முந்திய பாவங்கள், பிந்திய பாவங்கள் யாவற்றையும் மன்னித்து விட்டான் (குர்ஆன்)

களுக்கு பயிற்சிமுறை

ஷெய்குல் அக்பர் (றலி) அவர்கள் தங்கள் 'புசூசல்) ஹிகம்' என்ற கிரந்தந்தில் 'பஸ்ஸேஹாருன்' என்ற தலையங்கமுள்ள அத்தியாயத்தில், "ப இன்னல் ஆரிபு மன்யரஉல் 'ஹக்கு' பீகுல்லிஷைஇின் பல்யரஉஜன் குல்லிஷை இன்" — ஒவ்வொரு வஸ்துவிலும் வெறுமனே 'ஹக்'கைப் பார்ப்பதோடு நின்றுவிடாமல் அவனை (ஹக்கை) ஒவ்வொரு வஸ்துவின் அகமியமாகவும் பார்க்கின்றவனே 'ஆரிபு' என்னும் ஞானியாயிருக்கிறன் " என்று கூறியிருக்கிறார்கள். இவ்வாறில்லாவிடில் அல்லாஹ்வின் 'ஷரீஅத்து'படிக்கு வெளியரங்கத்தைப்பார்த்தல் மட்டுமே ஏற்படும் 'மூஸா' (அலை) அவர்கள் 'ஹாரூன்' (அலை) மீது கோபங்கொண்டது 'வெளிப்படை'க் குற்றத்தைப் பார்த்தே தான். 'ஸாமிரி'யின் 'பசு'வின் அகமியமாகிய 'ஹக்'கைப் பார்க்கும் மூஸா (அலை) அவர்கள் வெளியரங்கத்தைப் பொருத்தே 'ஹாரூன்' (அலை.) அவர்கள் மீது கோபங் கொண்டார்கள். அவர்களின் வெளியரங்க நிகராகரிப்பு அவர்களின் கொள்கையை உண்மையில் உறுதிப்படுத்திவிட்டது ஒரு 'வலீ'யுடைய தொழில் யாதெனில் வஸ்துக்களான கண்ணாடிகளில் 'ஹக்'கை நோட்டமிடுதலும் அதனை குறித்த ஓர் வஸ்திலும் கண்டித்துவிடாதிருத்தலுமேயாகும் அந்த தங்கப் பசுவில் ஹக்கைக் கண்டப்படித்திதனுல்தான் 'ஸாமிரி' பாவத்தில் வீழ்ந்தான்.

'தாத்து', 'தாத்'தைக்கொண்டு 'தாத்'துடன் தாத்தின் மீது உதயமாகிசொக்கிப்போய் ஏகவஸ்துவாகி, பின்னர், 'தாத்'தைக்கொண்டு 'தாத்து'டன்தோற்றமளிக்கின்றது. இந்த நிலையில் பண்புகளுக்கு இடமில்லை 'தௌஹீது'டைய 'நுக்தா' வென்னும் புள்ளியாகிறது 'தாத்து'டைய ஒரு 'தஜல்லி'யாயிருக்கிறது 'சாலிக்கு' பிறருக்கு போதிக்க வேண்டுமாயில இந்த நிலையிலிருந்து அவர் கீழிறங்க நேரிடுகின்றது.

குறிப்பிட்ட தொழிலை நிறைவேற்றும் மானிடன் ஒருவனுக்கே 'நுஸூல்' ஆகிய 'படி இறங்குதல்' ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு அவன் நியமிக்கப்பட்டிராவிடில் ஹக்குடன்

அவன்பெற்றிருக்கும் ஐக்கியத்தினின்றும் வெளிவரவேண்டிய அவசியமில்லை. முஹம்மது (ஸல்) அவர்களிடம், "நீர் புறப்பட்டுச் சென்று லோககைங்கரியங்களில் ஈடுபடுவீராக" என்று கூறப்பட்டது உவைசுல்கர்னி (றலி) அவர்களைப் பார்த்து, நீர் நெருங்கி வந்து எங்களுடன் இருப்பீராக." என்று சொல்லப்பட்டது. யாதொரு தொழிலுக்கும் நியமிக்கப் படாதவர்களுக்கு பிரபஞ்சத்திலும், குடும்பத்திலும் சம்பந்தம் கிடையாது "நீ ஒரு துறவியாகயிருந்தால் உனது பாதை யைத் தொடர்ந்துக்கொள்; அன்றி நீ ஒரு குடும்பியாகயிருப்பின் உனது பாதையைத் தொடர்ந்துகொள்;" என்று ஒரு கவி பாடியிருக்கிறார் பலவந்தப்படுத்தப்பட்டுதான் நபிமார்கள் குடும்ப வாழ்க்கையை நடத்த முன் வந்தனர் இந்த பலவந்தம் (லோக) நன்மையை முன்னிட்டுதான் உண்டாயிற்று.

இந்த பாதையின் ஒழுங்குதான் சுற்றுதல் அல்லது சூழற்சியாகும். 'சாலிக்'குடைய சுழற்சி அல்லது சுற்றுதல் 'ஹக்'கை நோக்கியே.

"உள்ளமையென்றும் சமுத்திரத்தில் தன்னை அறிதல் என்ற முத்தைத்தவிர யாதொன்றுமில்லை நாம்தாம் நம்மைச் சுற்றி நீர் சுழியைப் போன்று சுழன்றுக்கொண்டு வருகிறோம்" என்று ஒரு கவிஞர் பாடியிருக்கிறார். நமது செயல்களிலும், நடத்தைகளிலும், மறைவான 'ஷிர்க்'கிலிருந்து 'தௌஹீது' அளவில் சுழற்சி அல்லது சுற்றுதல் ஏற்பட்டிருக்கிறது இன்மை யாக்குதற்கு யாதொரு அவசியமுமில்லை இல்லாத ஒன்றினை இன்மையாக்கல் முடியாத காரியம் செயல்களிலும், நடத்தை களிலும் ஏற்படும் சுற்றுதலைக் கவனித்தற்கு எவ்வளவு அத்தியா வசியமில்லையோ அது போன்றே மறைவான 'ஷிர்க்'கிலிருந்து 'தௌஹீது' அளவில் ஏற்பட்டுவரும் சுற்றுதலை கவனிக்கவும் அவசியமில்லை. நாயகம் (ஸல்.) அவர்களுடையகாலத்தில் 'ஷிர்க்' கைப் போக்குதற்கு இவ்வளவு கடினமான வாழ்க்கை விதிகளை அனுஷ்டிக்க உத்திரவிடப்பட்டில்லை. நீ எதனை 'கைர்' என்று கருதுகிறாயோ அது உண்மையில் 'ஹக்கு' தானாகவே யிருக்கிறது. நீ 'உன்னை'யும் 'பிரபஞ்சத்'தையும், 'கைர்'

களுக்கு பயிற்சிமுறை

என்று நினைக்கிறாய் அருபத்திலும், வகை விபரத்திலும், சொருபத்திலும் (வியஷ்டியிலும்) நீயும், பிரபஞ்சமும், 'ஹக்கு' தானாகவேயிருக்கின்றாய் என்று கருதிகொள்வாயாக.

" மக்ரிபீ! உனது 'கல்வத்து' அறையில் ஏகனை நீ தேடிக்கொண்டிருக்கிறாயோ, அதனையே நான் ஒவ்வொரு தெரு மூலையிலும், சந்து பொந்துகளிலும் தோற்றமளிக்கக் காண்கிறேன். " என்று ஒருவர் பாடியிருக்கிறார் தொழுகை, நோன்பு, தனித் திருத்தல், 'தஸ்பீஹு' செய்தல் ஆகியவை யாவும் 'ஹக்'கைத் தன்னிலும், கடற்கரையின் மனற்றுளிகளி லும் நோட்டமிடுதற்காகவே ஏற்படுத்தப்பட்டன. நீ அலைகளை மட்டும் பார்த்துவிட்டு. தண்ணீரைப் பார்த்தலை இழந்து விடுகிறாய். அலைகளோ வெறுங் கற்பனை ரூபங்கள். தண்ணீர் மட்டுந்தான் மெய்ப்பொருள். உனது உள்ளமையை 'ஹக்' குடைய உள்ளமையாகக் கருதிகொள்; இன்னும் உனது 'சிபாத்து'களான பண்புகளையும். 'அப்ஆல்' ஆகிய செயல் களையும் 'ஹக்கு'டைய 'சிபாத்து' 'அப்ஆல்' (பண்புகள், செயல்கள்) ஆக எண்ணிக்கொள்; முதலில். உனது ஜீவத் தன்மைவிடுத்து நீ இழந்துவிட்ட உள்ளமையான 'பிர்ம' அகங்காரத்தைத் தேடி அடையப் பெறுவாயாக உனது ஜீவ அகங்காரம் இன்மையாக்கப்பட்டதென்றும். 'ஹக்'குடைய அகமியமே உனது அகமியமென்றும் யாதொரு சந்தேகமுமின்றி கருதிக்கொள்வாயாக.

'கைபு' என்ற அந்தரங்கத்தையும் 'சஹாதத்து' என்ற வெளிரங்கத்தையும் 'ஹக்'கு அறிகிறவனாயிருக்கிறான் 'ஆதி' உள்ளீடு என்னும் அவனது திருநாமங்கள் 'கைபு' என்னும் அந்தரங்கத்தைக் குறிக்கின்றன; 'அந்தம்' வெயீடு என்பவை வெளியரங்கத்தைக் குறிக்கின்றன. அவனுடைய அறிவில் 'அஹதிய்யத்து' 'உலூஹியத்து' ருபூபிய்யத்துடைய அந்தரங்க நிலைகள் யாவும், 'அல்லாஹு' 'அம்தால்' 'அஜ்ஸாம்' ஆகிய வெளியரங்க நிலமைகள்யாவும் இவற்றினுள் சேர்க்கப்படு கின்றன. இதுவே 'ஷரீஅத்து'டைய பாஷை சூபிய்யாக் களின் பாஷையில் இந்நிலைமைகள் 'கைபு' 'ஷாஹாதத்து'

'ரூஹா' 'மிதால்' அஜ்ஸாம் என்னும் ஹல்ராத்து – கம்ஸா (ஐம்பெரும் சமுகங்கள்) தோற்றங்கள். என்று அழைக்கப்படுகின்றன. 'ஷைபு' 'காயிபுல்கைபு' என்றும், 'கைபு' என்றும் காட்டப்படுகின்றது. 'ஷரீஅத்'தின் ஆறு பதவிகளும் இவ்வாறு ஏற்படுகின்றன 'ஹுவல்லதீ கலகஸ்ஸமாவாதீவல் அர்ள பீஸித்ததி ஐயாமின்தும் மஸ்தவா அலல் அர்ஷி' — "அவன் ஆறு நாட்களில் வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தான் பின்னர் 'அர்ஷ' (சிம்மாசனம்) மீது அமர்ந்தான்" — (குர்ஆன்)

'ஷரீஅத்'தை உண்டுபண்ணுகிறவர் சாதாரண மக்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்திக் காட்டுவதில்லை 'துகல்லி முன்னாஸ அலாகத்ரி உகூலிஹிம்' 'அவரவர்களின் அறிவின் விளக்கத்துக்குத் தக்கவாறே நீங்கள் மனிதர்களுடன் உரையாடுங்கள்' என்பது ஒரு பொருத்தமான சொல்லாகும்; 'நபி'மார்கள் இரகசிய பூட்டுகளை உடைத்து வெளிப்படுத்தும் பொருட்டு நியமிக்கப்படவில்லை. அவர்களுடைய 'ஷரீஅத்'தைக் கொழிக்கச்செய்து அசுமியங்களை மறைத்து வைக்க வேண்டியிருந்தது உதாரணமாக, சிலஜனங்கள் 'நபி' (ஸல்) அவர்களைப் பார்த்து. "அ-அன்த அஹது" — (நீங்கள் 'அஹது' தானா?) என்று கேட்டதற்கு, அவர்கள் மறுமொழியாக 'லாஅஹு அஹ்மதுன் பிலாமீம்' — (இல்லை. நான்மீமின்றிய 'அஹ்மது' வாயிருக்கிறேன்) என்றார்கள் அதாவது "நான் 'பந்தா'வாகிய அடிமை (கண்டப் பொருள்); என்னுடைய அசுமியம் 'ஹக்கு' (அகண்டப் பொருள்) ஆக இருக்கிறது." என்பதாம் 'ஹகீகத்'தென்பது 'ஷரீஅத்'தினுள் மூடப்பட்டிருக்கிறது "அல்ஈமானு உர்யானுன் லிபாசுன் தக்வா" — 'நன்நம்பிக்கையாகிறது நிர்வாணமாயும், அதன் ஆடை பயபக்தியாயுமிருக்கிறது' என்று சொல்லப்படுகிறது 'ஔலியா'க்கள் மர்மங்களை வெளிப்படுத்தி வைக்கவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், அதனாலேயே அவர்கள் பொது கூட்டங்களில் அவற்றை விவரித்துப் பேசுகிறார்கள் எனது பகிரங்கத் தன்மைகள் வெற்றியிலிருந்து தோல்வியளவில் தலைகீழாய் விழுந்துவிட்டன;' எவ்வாறு விளங்காத கூட்டங்களுக்கு

களுக்கு பயிற்சிமுறை

இரகசியங்கள் மறைக்கப்பட்டிருக்கும்? (ஹாபிஸ்) இவ்வாறு 'ஒளலியா'க்கள் செய்திராத பக்ஷத்தில் திருகுர்ஆனின் இரகசிய கருத்துக்கள் யாவருக்கும் பறைக்கப்பட்டே போயிருக்கும். 'நபி' மார்களால் மூடிவைக்கப்பட்ட மர்மங்களை 'வலி' மார்கள் வெளிப்படுத்தினர்கள். 'நபி'மார்களால்தொடப்படாத ஆத்மீகக் கஸ்தூரியைப் பொதிந்துகொண்டிருந்த தோலைக்கிழித்து வெளிப்படுத்தி மணக்கச் செய்தது 'ஒளலியா'க்கள்தான்.

''ஒமக்ரிபி! தனித்த இடத்திலிருந்து நீ தேடிகொண்டிருக்கும் வஸ்துவை நான் ஒவ்வொரு வீதியின் மூலையிலும் சந்து பொந்துகளிலும் தோற்றமளிக்கப்பார்த்து வருகிறேன்'' ஜுனைதுல்பக்தாதீ (றலி) அவர்கள், 'அறு அக்லறு. வகறு அஸ்மஉ மன்பித்தாரைனி கைரீ' — ''நானே பேசுபவனும், நானே கேட்பவனுமாய் இருக்க இருலோகங்களிலும் எனது வேறு ஆகிய (அன்னியப்பொருள்) என்பது யார்? என்று அருளியிருக்கிருர்கள். மேலும் மற்றொரு 'ஒளலியா.' ''லைஸபீஜுப்பிதின் சிவல்லாஹ்' ''என்னுடைய சட்டைக்குள் அல்லாஹ்வையன்றி வேறு யாரிருக்கிருன்?'' என்று கூறியிருக்கிருர்கள். மற்றொருவர், ''லைஸ பித்தாரைனி கைரீ'' — என்னைத் தவிர இருலோகங்களிலும் யாருமில்லை'' என்னும் பகர்ந்திருக்கிறார் இவை நாயகம் (ஸல்) அவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட ''அறு அஹமதுன் பிலாமீம'' ''நான் மீமின்றிய அஹமதுவாயிருக்கிறேன்''என்ற மூடுதலான மொழியின் விபரங்களாயிருக்கின்றன. 'ஒளலியா'க்கள் 'நபி' மார்களுடைய வாரிசு பெற்ற நாவு அல்லது பேச்சாளர்களாயிருக்கிருர்கள் 'நபி'மார்களுடைய 'பாதின்' ஆகிய அகமியப் பொருட்களை வெளிப்படுத்தி வைப்பவர்கள் அவர்களே. 'அல்வலது சிர்ருன்லி அபீஹி' — ''தந்தையினது (வெளிப்படுத்தப்பட்ட) மர்மம் குழந்தைதான்'' தங்கள் 'பீர்' ஆகிய ஷெய்குபஹாவுத்தீன் ஜகரியா' அவர்களுடைய நூற்களில் காணப்படாதவற்றை 'மீர்ஹுஸைனுஸ் ஆதத்து' அவர்களும், 'பக்ருதீன் இராக்கீ' அவர்களும் வெளிப்படுத்திவிட்டதனுல் அவர்கள் 'பித்அத்து' என்னும் நூதனத்தை கற்பித்துவிட்டதாக சில ஜனங்கள் அவர்களை குறை கூறினர்கள் அதற்கு

பக்ருத்தீன் இராக்கி அவர்கள் " நாங்கள் அவர்கள் முரீது'கள். முரீதுகள் தங்கள் 'பீரு'டைய நாவாகயிருக்கின்றனர்; 'பீர்' எதனை மறைத்து வைத்துக்கொண்டாரோ அதனை அவருடைய நாக்குதான் வெளிப்படுத்தி வைக்கும் " என்று பதிலளித்தார்கள். 'அல்லது சிர்ருன் லி அபீஹி' — களது தந்தையின் மர்மம் தனையன்தான்! பாத்திரத்திலிருப்பவற்றைக் கொண்டுவரும் அகப்பைகள் நாங்களே. 'நபி' மார்கள் தங்களுக்கு பின்' ஒரு 'நுக்தா' வாகிய புள்ளியை விட்டுச் சென்றனர். 'ஔலியா'க்கள் அதனை ஒரு சுற்றுக் கோடாகச் செய்துவிட்டனர் இந்த உலகிலிருந்து அந்த சுற்றுக் கோடுகள் அல்லது வட்டங்கள் மறைந்துவிடினும் சுவனபதியில் அவைகள் சதாதரிபட்டிருக்கும் ஏனெனில், அதுவே நிரந்தரமான நித்திய உலகு சகல மர்மங்களும் மறைந்துவிடும் இடமே நிரந்தர உலகம் அந்த மர்மங்களை நிராகரிக்கும் பகட்டான் 'சரியை' வாதிகள். வேஷக் குருக்கள். பொய் வணக்கவாளிகள் ஆகியோருக்கு இவை வெளிப்படா. 'ஹக்கு' தோற்றமளிக்கும் இந்த உலகிலும் 'ஹக்'குடைய 'தஜல்லி' வெளியாகும் மனிதனிலும் நோட்டமிடுதலில் கொஞ்சமேனும் அவர்கள் நம்பிக்கை வைப்பதில்லை. 'ரஐத்துரப்பீ அலா! சூரத்தில் அம்ராத்' — நான் எனது நாயனை ஒரு அழகிய வாலிபனின் கோலத்தில் தெரிசித்தேன். 'என்று நாயகம் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள். " நீ விஷேஷ தஜல்லி'யைப்பார்க்க நாடினால் மனிதனின் முகத்திலே பார்ப்பாயாக; அங்கு தெளிவான புன்முறுவல் பூத்ததாக ஹக்குடைய தாத்தை நீ காண்பாய் " (மத்னவி)

உருப்படியான முழு கண்ணாடியிலே நீ பார்க்குங்கால் உனது கண்களின் ஒளி கிரணங்கள் உனது முகத்தில் பிரதிபலிக்கிறது. முகமானது ஒன்றே ஒன்றாக இருப்பதால் ஒரே முகம்தான் பிரபிம்பிக்கப்படுகிறது. பல்வேறு கண்ணாடிகளிருக்கையில் அவற்றினின்றும் அநேக முகங்கள் ஒரே கண்ணில் பிரதிபலிக்கின்றன ஒவ்வொரு கண்ணாடியைப் பார்க்கும்பொழுது ஒரே முகம்தான் தனித்தனியே பலவாகப் பிரதிபலிக்கின்றன. ஒரு முழு கண்ணாடியை எடுத்து பல துண்டுகளாக உடைத்து அந்த துண்டுகளை ஒரு அட்டையின் மீது ஒட்டிய பின்னர் நீ உன்

முகத்தை இந்த பல்வேறு துண்டுகளிலும் பிரதிபலித்துப் பல வாகக் காண்கிறாய்.

"ஒவ்வொருவனும் ஒரு தடவைதான் மரணிக்கிறான். ஏழை 'ஜாமீ' மட்டும் அநேக தடவைகள் பிரதி பிம்பத்திலும் மரணிக்கிறார்." முகம் ஒன்றே, கண்கள் பல. கண்ணாடியில் அவ்வாறுதான் தோன்றுகின்றது. 'ஜமால்' என்னும் பேரழகு பலதிரப்பட்ட தோற்றங்களிலிருக்கின்றன. இந்த தோற்றரவுகளைப் பார்வையிட பல்வேறு கண்கள் தேவைப்படுகின்றன; அதாவதுதான் பார்க்கப்பட்ட காதலுக்குப் பல்வேறு கண்கள் தேவைப்படுகின்றன காதலன் தன்னுடைய சுய அழகினாலேயே தன் மீதேதானே காதலிக்கிறான். அழகின் காட்சிகள் கணக்கற்றவை; காதலின் அனுபவங்களும் எண்ணற்றவை. அழகு என்பது மேற்றிசையினதுமன்று; கீழ் திசையினதுமன்று; 'அரபி'களுடையதுமன்று; அஜமிகளுடையது மன்று. தான் பிரதிபலிக்கப்படுதற்கு அழகு அனேக கண்ணாடிகளை வேண்டிற்று காரணம் வெவ்வேறு காட்சிகளைக் காட்டுதற் பொருட்டேயாம் ஒரே அழகினுடைய பலதிறப்பட்ட தன்மைகளை கண்ணாடிகளின் எண்ணிக்கை கொணர்ந்துவிட்டது ஏனெனில் இந்த தன்மைகளை ஒன்றன் மீதொன்றாய் குவிப்பதற்காகவே. 'மஅறப்னாக ஹக்க மஃரிபதிக.' மாஅபிதனாக ஹக்க ஷஹாததிக' — "உன்னை அறியும் அளவுக்கு நான் உன்னை அறிந்துவிடவில்லை. என்று நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

'ஹக்கு'டன் உண்மையான இணைவைத்தல் என்ற ஒன்றுயிருப்பதுமில்லை; இருந்ததுமில்லை. 'ஷிர்க்' என்பது 'கைர்' என்ற பிறப்பொருளுடன் கூட்டு வைத்தலைக்கொண்டு வருகிறது. 'ஹக்கு'டைய 'வஹ்தத்'தென்னும் நிலையில் யாதொரு 'கைர்' என்னும் 'வேறு' கிடையாது. இவ்வாறாக 'கைர்' என்பது அடியோடு இன்மையாக இருக்கையில் ஒருவன் எவ்வளவுதான் முயன்றபோதிலும் அவன் ஒரு 'முஷ்ரிக்' என்னும் இணைவைப்பவனாக ஆகமுடியாது 'கைர்' என்னும் வேறு பொருளைக் குறிக்கும் பொய்த் தோற்றங்களைதான்

'ஹக்'டைய அகமியம் அணிந்துகொள்கிறது; அப்பொழுதுதான் அனேகத் தன்மை வெளியாகிறது எனினும், அதற்கு 'கைரு' மில்லை அனேகமுமில்லை. ஏனென்றால் வெறுந் தோற்றமானது மெய்ப்பொருளைவிட முற்றிலும் மாறுபட்டது "ஒரு தோற்றத்துக்கு தனியான உள்ளமை கிடையா; தன்னையே தனக்கு மெய்யல்லாத பொய்யான கற்பனை எண்ணத்திலே தோற்றிக்கொண்ட மெய்ப்பொருளின் வெற்று எண்ணமேயாம். கற்பனையான தோற்றத்தின் பலனாக ஏற்பட்ட கற்பனையான 'ஷிர்க்கு' என்னும் இணைவைத்தலானது மெய்ப்பொருளாகிய 'ஹக்கு'டைய 'தஜல்லி' (தோற்றம்), ஏற்பட்டவுடன் மறைந்துவிடக்கூடிய ஓர் கற்பனை எண்ணமாயிருக்கிறது "ஜா-அல் 'ஹக்' வஸஹகல் பாதிலு இன்னல் பாதில கான ஸஹூக்கா" - மெய்ப்பொருள் உதயமாகிவிட்டது: நிச்சயமாக பொய்மையானது மறையக்கூடிய ஒன்றேயாம் ஒரு தோற்றத்திற்கு உள்ளமையின் அடிக்களம் யாதொன்றுமில்லை ஆனால் எதனை அது அடித்தளத்தினின்றும் பெற்றிருக்கிறதோ அது அந்த அடிக்களமான உள்ளமையைவிட்டும் மறையக்கூடியதே கோலத்தின் வாயிலாய்த் தோன்றும் அந்த ஒன்று மட்டும் தரிபட்டிருக்கிறது அதுவோ ஒரு மனிதன் ஓர் மனுஷியின் ஆடையில் காட்சியளித்தல் போன்றும்: அகமியமானது அறியப்படும்பொழுது ஆடையினது தேவையில்லாமல் போய்விடுகின்றது; பெண்மை என்பது ஒரு கற்பனை தோற்றமும், 'அகம்' ஆகிய இன்மையுமாயுமிருக்கிறது. உள்ளமையானது இன்மையை மிகைத்துவிடுகிறது. "லிமனில் முல்குல் யௌமவில்லாஹில் வாஹிதில் கஹ்ஹார் — "இன்றைய தினம் யாருடைய அரசாட்சியாயிருக்கிறது;? அது அடக்கி அரசாளும் அந்த ஒரு நாயனுடையதாயிருக்கிறது."

தீமை என்பது தோற்றத்தினின்றும் வெளிப்படுவதாகும். தோற்றமாகிறது அறிவுடன் சம்பந்தப்பட்டது அதுவே 'இஃதிபார்' ஆகிய ஹேஸ்யம் (கற்பனை) இவ்வாறு இப்பிரஞ்சம் ஒரு எண்ணமாகும் ஆனால் இந்த உலகத்தை ஒரு அகமியமின்றிய (ஹகீகத்தற்ற) ஒருவெற்று எண்ணம் என்று மட்டும் நான் சொல்வதாக நீ கருத

வேண்டாம். ஹகீகத்தாகிய அகமியம் எண்ணத்தின் கோலத்திலே வெளியிடாயிருக்கிறது. இவ் உலகமானது கற்பிக்கிறவனின் கற்பனையாகிய வெற்றிடத்தின் உள்ளமை பெற்றிருக்கிறது. எண்ணம் ஓர் வெறும் ஹேஸ்யமான 'இஃதி பார்' என்றும், அந்த ஹேஸ்யம் அல்லது கற்பனை 'கதீம்' ஆகிய பூர்வப் பொருளாயிருக்க முடியாதென்றும் கருதாதே. அவ்வாறிருக்கில் 'ஹக்கு'டைய அறிவும் பொய்யென்று ஆகிவிடும். நமது எண்ணம் பொய்யே; ஹக்குடைய அறிவோ 'கதீம்' ஆகிய பூர்வமானது அவனது 'இஃதிபாரத்'தும் பூர்வமானது; இந்த பூர்வமான 'இஃதிபாரத்தைத்தான் 'சிபாத்து' என்று அழைக்கப்படுகிறது. சிபாத்தென்பது அறிவிலிருக்கும் வெறும் 'இஃதி பாரத்து' ஆன ஹேஸ்யங்களாகும். இவை மறையும் வேளை 'தாத்து' மட்டும் தரிபட்டிருக்கிறது. 'தாத்தி'ல் 'தாத்'தைத் தவிர பிறிதொன்றுமில்லை ஆதலின், 'சிபாத்'தென்பது 'தாத்'தையன்றியே வேறு யாது? 'தாத்து' தன்னை தன்னளவில் திருப்பியபோது, 'அறிவு' என்னும் 'சிபாத்து' உதயமானது நீ 'சிபாத்து' என்றழைக்கும் 'இஃதி பாரத்து' அந்த அறிவு என்னும் கண்ணாடியில் தோன்றி உள்ளமைப் பெற்றது எனவே, ஒரே 'ஹகீகத்து' தன்னை 'இஃதி பாரத்து'டனும், 'சிபாத்து'டனும் கண்டு எதார்த்தமாகிய ஏகத் தன்மையை விட்டு, அனர்த்தமான அநேகத் தன்மை அளவில் இறங்கினது. அறிவுடைய நிலையில் அது உண்மையான ஏகத் தன்மையாயிருக்கிறது கற்பனையான அநேகத் தன்மை அந்த நிலையில் வெளிகோலத்தை எடுக்கவில்லை இரண்டாம்படி இறங்கலில் உண்மையான ஏகத் தன்மை அறிவின் கோலங்களுக்குத் தக்கவாறு உண்மையான அநேகத் தன்மையாகத் தோன்றின; அவ்வேளை உண்மையான அநேகம் உண்மை 'ஹகீகத்'தாகிய ஏகத்தை மூடிக்கொண்டது. (யாதொரு 'ஷிர்க்கு'ம் மெய்யாக இல்லாவிடினும்) அந்த யதார்த்த ஏகத் தன்மையை உணராத ஒருவன் 'முஷ்ரிகு' ஆக ஆகிறான். 'வஹ்தத்'தில் தரிபாடது அநேகம் என்னும் திரைகளின் வாயிலாய் தன்னை உணராது தானே தனது சொந்த 'ஆரிபு' ஆக ஆகாத ஒருவனே 'முஷ்ரிகு' ஆவான். எனவே, 'முஷ்ரிகும்' 'காபிரு'ம் இவ்வாறாக அறியப்பட்டார்கள்

இத்தகைய மனிதர்களின் நேர்வழிக்காகதான் 'நபிமார்கள் அனுப்பப்பட்டனர் 'ஜமால்' ஆகிய பேரழகின் முகத்தி லிருக்கும் திரைதான் தோற்றங்களாகும். இந்த திரையின் ஒரு மூலையானது சிலருக்கு சில வினாடி நேரம் உயர்த்தப் பட்டும். மற்றுஞ் சிலருக்கு அறவே உயர்த்தப்படாமலு மிருக்கும் அவ்வாறு உயர்த்தப்படாதவர்கள் சதா காலமும் திரை மறைவிலிருப்பார்கள்; அவர்களே நரகத்தில் குடியிருப்பவர்கள்; அதில்தான் அவர்கள் நித்திய காலமும் ஜீவிப்பார்கள் "வஉலாயிக்கு அஸ்ஹாபுன் நாரி ஹும்பீஹா காலிதூன்." திரை தூக்கப்பட்டவர்களே சுவர்க்கவாதிகள்; அவர்கள் 'ஜமாலை'க் கொண்டு போஷிக்கப்படுவர் திரை யிடப்பட்டவர்கள் ஜலாலைக்கொண்டு போஷிக்கப்படுவர். ஒருவருக்கு அமிர்தமும், தேனும் கிடைக்கும்; மற்றவர் 'ஸகூம்' கள்ளி மாத்தின் பழங்களையும், ரசத்தையும்பெறுவர் தோற்றங்களாய் வெளிப்பட்ட ஹக்குடைய எண்ணங்கள்தான் இவ்வாறாக ஆயின. அவன் (ஹக்கு) நன்மை, தீமை என்ற ஆடைகளையும். கருணை, மகிமை (கோபம்) என்ற ஆடைகளை யும் போர்த்திக்கொண்டான் யாரும் அவனை தடைசெய்ய முடியாது இன்னல்லாஹ யஹ்குமு மாயுரீது — தான் நாடு கிறதை 'ஹக்கு' கட்டளையிடுகிறான்.

'கத்ரத்'திலிருந்து (பலவற்றிலிருந்து) 'ஷிர்க்கு' உண்டானது ஒரே 'தாத்து'தான் தன்னை அநேக பல்வேறான ஆடைகளால் அலங்கரித்துக்கொண்டது எனவே அந்த ஒன்றை அநேக ஆயிரங்களாகப் பார்ப்பது 'ஷிர்க்கு'க்தான். தனது அழகின்மீது சொக்கிப்போய் அவன் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்து, ஒரு திரையைப் போட்டுக்கொண்டு இங்கு ஒரு மூலையையும் அங்கு ஒரு மூலையையும் உயர்த்துகிறான். தனது சுய அழகைத் தனது சொந்த அலங்கரிப்புக்காகவும், தனது அணிபணிக்கு தோற்றுவித்தற்காகவுமே திரை ஏற்பட்டது அத்திரைதான் 'பினாவு' என்னும் திரை. வேறானதே திரை அத்திரைதான் 'விஸால்' அதைப் போக்குவதினால் ஏற்படும் பலாபலன்தான் 'விஸால்' தன்னில் தானே 'ஹக்கு' ஐக்கியமடைதல்) என்பதாகும்.

களுக்கு பயிற்சிமுறை

வணங்கப்பட்டவனுடைய கூட்டுறவால் கற்பிக்கப்பட்ட அநேகத் தன்மையை ஒழித்தற் பொருட்டு தொழுகையுடைய நேரத்தில் 'சாலிக்கு' தனது (ஜீவத்) தன்மையைப் போக்கிக்கொள்ளவேண்டும்; அவ்வேளை வணக்கம் என்பதே மறைந்துவிடுகிறது கௌதுல் அஃலம் முஹைதீன் அப்துல் காதர் ஜீலானி (றலி) அவர்கள். 'ஹக்கே தனது சொந்த வணக்கவாளியும், வணங்கப்படுவோனுமாயிருக்கிறான்' என்று அருளி இருக்கிறார்கள். தொழுகையில் நீயே உன்னை வணங்குபவனாயிருக்கிறாய்; வணக்கத்திற்காகவேண்டி ஒரு விக்ரஹத்தை நீ தயாரித்துக்கொள்ளாதே நீ உன்னை 'ஹக்கு'க்கு வேறென்றும், 'ஹக்'கை உனக்கு வேறென்றும் கருதுவாயாகில் நீ 'ஷிர்க்கு'டைய அஸ்திவாரத்தை நிலை நாட்டிவிட்டாய். இரண்டாவது என்று ஒன்று வரும்பொழுது 'வேறு' என்பது உண்டாகிறது. இரண்டாவது என்பதில்லாவிடில் ஒன்று மாத்திரமே தரிபட்டிருக்கிறது ஆரம்ப காலம்தொடுத்து 'ஹக்'குடைய வேறு என்பது என்றுமிருந்ததில்லை; எனவே ஏன் உன்னை வீணில் 'வேறு' என்று அழைத்துக்கொள்கிறாய்? 'அன அஹ்மதுன் பிலாமீம்' – நான் மீமின்றிய 'அஹ்மது'வாயிருக்கிறேன் என்று நாயகம் (சல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். இவ்வாறே 'அஹ்மது' 'அஹது'வாய் ஆனது அதாவது (ஜீவத்) தன்மை நீங்கிய அஹமது 'அஹது'வாக ஆயிற்று. இந்த நிலையை நீ அடையப்பெற்றதும் உனது சரீரத்திலுள்ள ஒவ்வொரு மயிரும் "அனல் ஹக்கு" ('ஹக்கு' ஆகிய மெய்ப் பொருள் 'நான்'தான்) என்று சப்தமிடும் மேலும், வணக்கவாளி 'ஹக்கு'க்கு வேறானவனாயிருப்பதால் தொழுகைக்கு அவனுக்கு ஒரு திசை தேவைப்படுகிறது 'பஐனமாது வல்லூ பதம்ம வஜ்ஹுல்லாஹ்' – நீங்கள் எத்திசை திரும்பினும் அங்கு அல்லாஹ்வின் வதனமிருக்கிறது வணக்கவாளி தன்னளவில் முகம் நோக்கும்பொழுது அங்கு அல்லாஹ்வின் முகமிருக்கிறது வணங்குபவன் தனது (ஜீவத்) தன்மையைத் தன்னைவிட்டும் நீக்கிக்கொண்டபிறகு ஹக்கைத் தன்னில் காணவேண்டும், தன்னை ஒரே திசையில் திருப்பிக்கொள்ள வேண்டும் "இன்னீ வஜ்ஜஹ்து வஜ் ஹிய லில்லதீ பதரஸ்ஸமாவா திவல் அர்ளி" – வானங்களையும் பூமியை

யும் படைத்த அந்த ஒருவன் பால் எனது முகத்தைத் திருப்பிக் கொண்டேன்; உன்னை உன்னளவில் திருப்புவாயாகில் அங்கு 'கைர்' என்னும் 'வேறு' கிடையாது.

'குப்ரு' என்பது ஓர் விதையை மண்ணில் மறைத்து வைப்பதற்கு ஒப்பாகும் யதார்த்தத்தில் ஹக்கையே மூடி வைத்தலாகும் எனவே, எவனுடைய பார்வையிலிருந்து 'ஹக்'கானது மறைக்கப்பட்டிருக்கிறதோ அவனே 'காபிர்' ஆகும். அவனது மனக் கண்ணில் பொய் அல்லது கற்பனை (மாயையாகிய 'வேறு') தவிர யாதொன்றும் தோன்றுவதில்லை. இதுவே பகட்டான 'குப்ரு; மெய்யான 'குப்ரு' ஆகிய ஆகிறது ஒருவனது 'நான்' எனும் தன்மையை ஹக்குடைய 'அவன்' படர்கை ஒருமையில் மறைத்தலாகும். இந்த 'குப்'ரில் இஸ்லாத்தின் சரியை ஆசாரங்களுக்கு மாற்றமாக நடப்பதால் யாதொரு ஹானியையும் விளைவிக்காது. ஒரு கவள சாதம் தொண்டயில் அடைத்துக்கொள்ளும் வேளை. ஒரு மிடறு திராட்சை ரசத்தை அருந்துவது நன்மைதான் செய்யயும். இதனை 'சாலிக்கு' தனது 'பீரு'டைய கட்டளையைப் பெற்றே செய்கிருன்.

"உனது 'பீர்' உத்திரவிடுவாராயின் உனது தொழுகைக்குரிய பாயை திராட்சை ரசத்தால் தோய்ந்துவிடு; இந்த பாயையுடன் சர்பந்தப்பட்டிருக்கும் சடங்காசாரங்களை 'சாலிக்'குணர்ந்துக்கொண்டிருக்க முடியாததொன்றல்ல" உண்மையில் இந்த 'குப்ரு'தான் 'பனுபில்லாஹ்' (அல்லாஹ் வில் தன்னை இழத்தல் அதாவது தனது ஜீவத் தன்மையை உணராதிருத்தல் (பே குதி), ஏழ்மைத்தனம் 'பக்ரு' என்பதாகும்

ஒரு 'தர்வேஷ்' ஜுனைதுல் பக்தாதீ (றலி) அவர் களுடைய 'கான் காஹ்'வென்னும் ஆஸ்ரமத்திற்குச் சென்று 'அல்ஹம்து லில்லாஹ்' 'அல்லாஹ்'வுக்கே சகல புகழும்) என்று கூறினர்கள். ஜுனைது (றலி) அவர்கள் 'அல்ஹம்து லில்லா ஹிறப்பில் ஆலமீன்' ("சர்வலோக இரட்சகனுகிய

என்று சொல்லும்" என்று

அல்லாஹ்வைக்கே எல்லாபுகழும்) என்று சொல்லும்" என்று
அல்லாஹ்வைக்கே எல்லாபுகழும்) "தர்வேஷ்", " ஹக்குடனே கூறினார்கள். அதற்கு அந்த 'தர்வேஷ்' சகலலோகங்களும் எங்கே? நான் இணைத்துச் சொல்வதற்கு 'பனா' நிலையிலிருந்தார். என்று கேட்டார்கள். 'தர்வேஷ்' (அல்லாஹ்வின் அந்நிலையில் அவர் மாஸிவல்லாஹ் இன்மையாகக் கண்டார். 'வேறு')வை 'அதம்' என்றும் நிலையிருந்த 'ஜுஹூது' (நஃபி) அவர்கள் 'பகா' என்றும் கண்ணெதிரிலே தால் 'அதம்' ஆகிய 'இன்மை' என்றும் நோட்டமிடுதலை சுட்டிக் 'தாத்து'டைய தோற்றங்களை காட்டினார்கள்.

'பனா' நிலையில் 'சாலிக்கு'டைய உணர்வு (சுட்டறிவு) மறைந்துவிடுகிறது. அவருடைய உள்ளமையும், 'சிபாத்து'ம் 'அப்ஆலும்' அவ்வாறு ஆவதில்லை இங்கு உணர்வு என்பது வஸ்துக்களைப்பற்றிய அறிவையே குறிப்பிடுகிறது அதாவது வஸ்துக்களை வஸ்துக்களாகவும், அவற்றின் 'வேறு' என்பதைத் தரிபடுத்துவதாகவுமிருக்கிறது. அவருடைய அறிவில் வஸ்துக் களுக்கு சொந்தமாக யாதொரு உள்ளமையுமில்லை; வேற்றுமை யுமில்லை. இந்த நிலைமை நீடித்திருக்குமேயானின் இதனை 'ஜத்பு' (ஆனந்த களிப்பு - அல்லது பரிபூர்ண உணர்ச்சி) என்கிறோம். மேலும், இதனை 'ஜுனூனே இலாஹீ (நாயனில் பித்துக்கொண்டிருத்தல்) என்றும் அழைக்கிறோம் இதனை ஒரு விநாடி நேரம் பெற்றவர் ஒரு 'ஒலி'யாக ஆகிவிடு கிறார். நீண்ட நேரம் பெற்றவர் ஒரு 'குத்பு' அல்லது 'கௌது' ஆக ஆய்விடுகிறார்

'அப்து' 'ஹக்கு' அளவில் முடுகுதல் உண்மை யில் 'ஹக்கு' அப்து அளவில் முடுகுதலேயாம். ஏனெனில், 'ஹக்' அவனை நாடாவிடில் 'அப்து' 'ஹக்கி'டம் முன்னேறிச் செல்லமுடியாது 'சுலூக்கு' என்பது உண்மையில் 'ஜத்பு' என்னும் பரவச நிலை. 'பர்கு'டைய நிலையிலிருந்து 'ஜம்உ'டைய நிலையின்பால் 'ஹக்கு' திரும்பாதிருக்கும் வரையில், 'சாலிக்கு' ஹக்களவில் திரும்புவதற்கு இயலாது வேற்றுமை என்பது 'சாலிக்'குடைய மனதில் புகுதாதவரை

ஒருவன் தனித்திருக்கிருன். ஒருவனது மனதிலிருந்து 'வேற்றுமை' என்னும் எல்லா எண்ணங்களும் மறைவதுதான் தனிமையும், 'கல்வத்து'மாகும்.

ஒருவன் தூக்கத்தில் உணர்உடன் இருக்கும்பொழுது (அதாவது மனம் தூங்காத நிலையில்) கண்கள் மூடி 'திகறு.' 'பிக்று.'களை அந்த நிலையில் செய்துவந்தபோதிலும், விழிப் பும், தூக்கமும், ஜீவியமும், மரணமும், அவனுக்கு சமமாகவே ஆகிறது.

சாப்பிடும் வேளையில் கொடுக்கிறவன் 'இலாஹி'யான 'இஸ்மு' ஆகிய 'முன்இம்' (கண்காணிப்போன்) என்றும், உனது கரம் 'இஸ்மு - இலாஹி'யான 'றஸ்ஸாக்' 'போஷிக் கிறவன்) என்றும். உன்வயிறு 'இஸ்மு-கியானி' யாகிய 'மர்ஸுக்' (போஷிக்கப்பட்டவன்) என்றும். குடிக்கும்பொழுது 'இஸ்மு - இலாஹியான' ஹையுன் (உயிர்ப்பிப்போன்) என்பது தண்ணி நடைய நோலத்திலாகி மனதையும். சரீரத்தையும் உயிர்ப்பிக்கிறது என்றும் கருதிக்கொள்வாயாக.

நீ 'ஹக்'கை அவற்றில் பார்க்காவிடில் இவ்வுலகின் நற்கருமங்கள் 'ஹக்'குடைய திரையாயிருக்கின்றன. சில பக்தர்கள் நற்செயல்களையே அறவேவிட்டுவிடுகின்றனர்.

நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் தாங்கள் நோட்டத்தை சிதறச் செய்ததை முன்னிட்டு தங்கள் புதியதோர் ஜோடி செருப்புகளைக் கைவிட்டுவிட்டார்கள் வாழ்கையின் அவசியத் தைப் பொறுத்தே பக்தர் இவற்றைப் ஒப்புகொள்கிருர். அபூயஸீது (றலி) அவர்கள் ஒன்றரை வருட காலம் குளிர்ந்த தண்ணீரே குடிக்காதிருந்தார்கள். ஆனுல் ஒரு 'ஆரிபு' ஆகிய ஞானியோ நற்கிரியைகளென்னுங் கண்ணுடியில் கொடையாள னை அவனுடைய முகத்தை மட்டும் நோட்டமிடுபவர்களா யிருந்தார்கள். அந்த வகையில் நன்மைகளை எடுத்து கொண்டார்கள் இந்த நோட்டம் அவர்களைவிட்டும் நழுவியதும் அந்த நன்மைகளையும் கைவிட்டுவிட்டார்கள். " ஹாப்பிப

களுக்கு பயிற்சிமுறை

இலாமின் துன்யாகும் தலாதுான அத்தையிபு வன்னிஸாஉ வகுர்ர திஐனி பிஸ்ஸலாத்தி '' — 'நான்இவ்வுலகில் மூன்று வஸ்துக்களை நேசிக்கிறேன். அவை யாவன:- வாசனை திரவியம், பெண்மணிகள், தொழுகையில் எனது நேத்திரானந்த மான குளிர்ச்சி ஆகியவையே,'' என்று நாயகம்(ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். நல்ல வஸ்துக்களைக் கொடுத்தவனை பாராட்டுவதில் ஈடுபட்டிருக்கையில் நல்ல வஸ்துக்களை ரசித்தல் என்பது மறைந்துவிடுகிறது

அல்லாஹ்வின் மகோன்னதம் பெற்ற வஸ்துவாகிய மனிதன் மரங்கள் போன்ற கீழ்த்தரமான வஸ்துக்களின் முன்னர் தன்னைப் பணியச் செய்துகொள்கிறான். '' வஸக்கரலகும் மாபிஸ்ஸமாவாத்தி வமாபில் அர்ளி ஜமீஅன் மின்ஹு '' அவன் வானங்களிலும், பூமியிலுமுள்ள சகலவற்றின் மீதும் உங்களுக்கு அதிகாரத்தை அவனிடமிருந்து அளித்தான் (குர்ஆன்) மனிதன் கேவலத்தையடைந்தது இச்சையைக் கொண்டுதான் ஆஸ்தி பூஸ்திகளின் மீதும், கௌரவத்திலும் அவன் பிரியங்கொள்வதே அவனது தாழ்ந்த நிலைக்குக் காரணங்களாயின இறைவனை வணங்குவதும், சுவர்க்கத்தின் மீது வைக்கும் ஆசையால் தான். மனிதனுக்கு அவனது தெய்வத்தின்பால் ஏற்படும் பொழுதுள்ள ஆசை காதல் அல்லது அன்பிறைடைய 'தஜல்லி' யின் தோற்றமாகயிருக்கிறது. மனிதன் படி ஏறும்பொழுது தன்னை சகல இச்சைகளைவிட்டும் நிவர்த்தி செய்துகொண்டு உண்மை காதலியுடன் ஐக்கியமடைகிறான்.

ஷெய்குல்அக்பர் (றலி) அவர்கள் பஸ்ஸெ-ஹாகூனியில் '' ப இன்னல் ஆரிபு மன்யாராஉல்ஹக்கு பீகுல்லிஷைஇன் '' சகல வஸ்துகளிலும் ஹக்கைப் பார்ப்பவனே நிட்சய மாக ஒரு 'ஆரிபு' என்னும் ஞானியாக இருக்கிறான் 'ஹக்'கை வஸ்துக்களில் மட்டும் பார்ப்பதோடு நில்லாமல் அவன் (ஹக்கு) சகல வஸ்துக்களின் அகமியமாக இருப்பதை பார்ப்பவனே ஒரு உண்மை 'ஆரிபு' ஆக இருக்கிறான் ஆகையால் அவன் (ஆரிபு) தனது சொந்த 'பாதின்' (ஆகிய அகமியம்)ஐ ஒருக்காலும் நிராகரிப்பதில்லை; (ஏனெனில் அது 'ஹக்'குடைய அகமியமா

யிருக்கிறது.) அவ்வாறு அவன் செய்தால் அவன் கொள்கையின் மீது 'ஷரீஅத்'தினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வெளியாங்க சூழ்நிலைகளைப்பொருத்தும். தன்னை ஹக்கிடமிருந்து 'மஹ்ஜூப்' ஆகிய திரையிடப்பட்டவனாகச் செய்துக்கொள்வதற்கேயாம். குறித்த இந்த காரணத்தை முன்னிட்டே மூஸா (அலை) அவர்கள், 'ஹாரூன்' (அலை) அவர்கள் மீது கோபங் கொண்டார்கள். 'நபி'மார்களுடைய நேரிய பாதை (சிராதுல் முஸ்தகீம்) 'ஷரீஅத்து'தான். ஹக்கினால் நிர்ணயிக்கப்பட்ட தடைகள் இந்த பாதையில் ஏற்பட்டிருக்கின்றன. தங்கள் சொந்த தன்மையை முன்னிட்டு சகிக்கப்படவேண்டிய கஷ்டங் களான இத்தடைகளாலான தன்மையை சிலர் ஒப்புக்கொண்டனர்; இதனை ஒப்புக்கொள்ளாது மறுத்தவர்கள் 'காபிர்' என ஆயினர், 'றப்புல் அர்பாபு'டைய கோபத்திற்கும் ஆளாயினர் (ரப்புல் அர்பாபு) என்பது 'றப்பு'களின் 'றப்பு' எனப்படும். ருபூபியத் துடைய பகுதியில் சகல 'இஸ்மு'களில் மீதும் ஆட்சிபுரிந்து. சகல இஸ்முகளையும் தன்னுள் சேகரித்துக்கொண்ட 'இஸ்மு'தான் 'இஸ்முல் அஃலம்' அல்லது 'ரப்புல் அர்பாபு' என்ப்படும் தங்களைப் பின் தொடர்பவர்களின் மீது 'நபி'மார்களின் கோப முண்டானது இக்காரணத்தினாலேதான். (பின்தொடர்ந்தோர் கள் நேரான பாதையில் இல்லாதிருந்தார்கள்) 'அஸ்மா.' 'சிபாத்'துடைய 'தஜல்லியாத்'தின் ஒளியில் பிரபஞ்சத்தின் சகல தோற்றங்களிலும் ஒரு 'ஆரிபு' ஹக்கைத் தெரிசிக்கிறார். இந்த தடைகளை எல்லாம் நோட்டமிட்டு அவற்றினால் ஏற்படும் சங்கடங்களைப் போக்கிக்கொள்பவரே ஒரு மெய்யான ஞானி யாகும் 'வமன்யதஅத்த ஹூதூதல்லாஹி பகத்லளம நப்ஸஹூ' - ஹக்கினால் நிர்ணயிக்கப்பட்ட எல்லையை மீறுபவன் தனக்குதானே அநியாயஞ் செய்துகொண்டவனாகும் 'ஆரிபு' ஆகிய ஞானியோ 'அஸ்மா'வை அவற்றின் சகல தோற்றங் களிலும் தெரிசிக்கிறவராகும். மேலும், நபிமார்களுடைய பாதையில் நடப்பவனும், 'கத்ரத்'தாகிய அநேகத் தன்மையில் சிக்கி 'மஹ்ஜூப்' என்னும் திரையிடப்பட்டவனாக ஆகாமலு மிருப்பான் இதுவே 'ஜம்உல்ஜம்உ'டைய நிலை. (இதில் நபிமார்களுடைய பாட்டைகளும். அஸ்மாவின் பாட்டைகளும் ஐக்கியப்பட்டிருக்கின்றன) 'மாஜல் பஹ்ரைனியல் தகியானி

சதுக்கு பயிற்சிமுறை

பைனஹுமா பர்ஜகுன் லாயப் கியான்' — நாம் இரு கடல்களையும் இரண்டும் சந்திக்கும் வகையில் ஓடச்செய்தோம்; இவற்றினிடையில் ஒன்றை ஒன்று கடந்துவிட முடியாத ஒரு தடை ஏற்பட்டிருக்கிறது. 'இந்த இரு கடல்களும் ஆரிபினிடத்தில் சங்கமமடைந்து கலக்கின்றன.

ஒன்று பலதில் தெரிசிக்கப்படுகிறது. ஹக்கை ஹக்கைக் கொண்டு தெரிசிப்பாயாக 'பஸாஹா பிஸ்பரிஹி' தெரிசனைக்கு முன்னர் காதலனை காதலிக்கப்பட்டவனாயிருந்தான். காதலியில் தனது பண்பகளை இழந்தபோது காதலன் துவிதத்தைக் கண்டான்.

'ஹக்'குடைய 'ஜமாலி'ன் கண்ணாடியாக மனிதனிருக்கிறான். நல்லுடைத் தரித்த ஒரு மனிதன் தனது உடையாபரணத்தைப்பற்றி யாதொரு கவலையும் எடுத்துக்கொள்வதில்லை. தன்னையேதான் பார்க்கும் கண்ணாடியில் ஒரு சிறு நேரம்தான் தூசிப்படிந்திருக்கிறது. அவனே தனது ஆடையினால் அந்த தூசியைத் துடைத்துவிடுகிறான்.

மனிதனுடைய ஆத்மாவும், 'ஹகீகத்து இன்ஸானி' யாகிய இன்ஸானுடைய அகமியமும் அரூபத்தில் ஹக்குடைய ஞானத்தைப் பெற்றுள்ளவை. மனிதனுடைய சரீரத்தில் அவைகளுடைய தோற்றமுண்டாகி அவற்றிற்கு 'இர்பான்' என்னும் ஞானத்தை அளித்தது. மாகலக்துல் ஜின்ன வல்இன்ஸ இல்லாலி யஃபுதூன்'' — ''நான் ஜின்னையும், மனிதர்களையும், படைக்கவில்லை. என்னை அவர்கள் வணங்கி வழிபடுதற்கேயொழிய'' (குர்ஆன்) அலஸ்து பிறப்பிகும்காலூபாலஷஹித்னா'' ''நான்உங்கள்இரட்சகனல்லவா?'' என்பதற்கு அவர்கள் ஆம், '' மெய்தான்; நாங்கள் அவ்வாறே சாட்சி பகருகிறோம்.'' என்று வாக்கு தத்தம் செய்ததை மறந்த அவர்களை இறைவனும் மறந்துவிடுகிறான் இதனைக் கொஞ்சமேனும் ஞாபகித்தவர்களே 'நபி'மார்களின் மீது விசுவாசங்கொண்டனர்.

அஸ்ராரே அனல்ஹக்

தொழுகை, நோன்பைக்கொண்டும், இராக் காலத்தில் கண்விழித்திருப்பதைக் கொண்டும், வணக்க முறைகளைக் கடைப் பிடிப்பதினால் மட்டும் 'பக்ரு' அல்லது 'தர்வேஷு'த் தனம் உண்டாகியிருக்கவில்லை ஆனால் ஹக்குடைய அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட வஸ்துக்களின்பால் அதிருத்தியடையாதிருக்கலில் தானிருக்கிறது சம்பவங்கள் யாவும் இறைவனால் நிர்ணயிக்கப்பட்டதேயன்றி, 'கைர்'என்னும் பிறப்பொருளாலன்று. ஹக்கினால் சம்பவிக்கப்படும் காரியங்களுக்கு 'தர்வேஷ்'என்போர் தலைசாய்க்கவேண்டியவரே என்று ஷெய்கு அப்துல்லாஹ் பில்யானி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சாலிக்குடைய கர்வமும், அகங்காரமும் அவனது இதயத்திலிருந்து நீங்காதவரை அவனுக்கு யாதொரு 'பனா'வுமில்லை எனெனில் இவைகளோ (கர்வம், அகங்காரம்) 'சாலிக்கு'டைய ஜீவத் தன்மையின் பண்புகளாயிருக்கின்றன. ஒருவனுடைய ஹிருதயத்திலுள்ள கர்வத்தைத் தோண்டி எடுப்பதைக்காட்டிலும் ஒரு மலையை வேருடன் களைந்துவிடுவது வெகுசுலபமானது ஆகையால் அந்த ஜீவத் தன்மையே தானாக நீங்கிவிடவேண்டும்.

'பஸுப்ஹானல்லதீபியதீஹிமலகூத்துகுல்லிஷைஇன்' சகல வஸ்துகளின் அரசாட்சியும் யாருடைய கையிலிருக்கிறதோ அவனுக்கே எல்லா மகிமையும். (குர்ஆன்)

தபாரகல்லதீ பியதி ஹில் முல்கு வஹுவ அலா குல்லிஷைஇன் கதீர் — யாருடைய கையில் அரசாங்கமிருக்கிறதோ அவனே ஆசீர்வதிப்புடையவன். சகல வஸ்துக்களின் மீதும் அவனே சக்தி பெற்றிருக்கிறான். (குர்ஆன்) ஹக்கினிடமிருந்துதான் சர்வ வஸ்துக்களும் உண்டாகின்றன; ஆனால் அன்பினால் தூண்டப்பட்ட மரியாதையானது நன்மையைப் பொருத்தவரை 'ஜப்ரு'க்கும், தீமையைப்பொருத்தவரை 'கத்'ருக்கும் குறிப்பிடும்படி உன்னை ஏவுகிறது " அல்ஈமானு பைனல் கத்ரிவல்ஜப்ரி " — " ஈமானாகிறது 'கத்ரு'க்கு

'ஜப்ரூ'க்குடையதில் ஏற்பட்டிருக்கிறது '' என்று ஷெய்கும் அப்துல் காதிர் ஜீலானி (றலி) அவர்கள் அருளியிருக்கிறார்கள். 'மா அலைபக மின்றைபெயறுத்தின் பமினல்லாறிமைமா அலைபக மின்ஸ்லையி ஆதின் பமினன் நப்ஸிக' — நீ நன்மை யிலிருந்து எதனைப் பெறுகிறாயோ அது ஹக்கிடமிருந்தே; தீங்கிலிருந்து எதைப் பெறுகிறாயோ அது உன்னிடமிருந்தே '' அவ்வாறான நிலையே உண்மையில் 'அக்லா'வென்றும் பயபக்தி யுடைய தன்மையைப் பெற்றது. ஆதம் (அலை) அவர்களைக் கீழ்ப்படியாததைப்பற்றிக் கேட்கப்பட்ட பொழுது, அவர்கள் '' றப்பனா ளலம்னா அன்புஸனா '' — நாயனே நாங்கள் எங்கள் 'நப்ஸு'களுக்கே அநியாயஞ் செய்துகொண்டோம். '' என்று பதிலளித்தார்கள். அப்துடைய செயல்கள் ஹக்குடைய சிருஷ்டியாகும் முன்பின் என்பதால் இரண்டும் வெவ்வேறாய்த் தோன்றினும் சாவியின் அசைவேதான் கையினது அசைவாகும். இந்த இரு அசைவுகளும் ஹக்குடையகையின் அசைவுகள்தான். '' யதுல்லாஹி பௌகஅய்தீஹிம் '' — ஹக்குடையகை அவர்களின் கையின் மேலிருக்கிறது.

'' அல்மஃரிபத்து உஜூது ஜஹ்லிக இன்தகியாமி இல்மிஹி' — '' ஹக்குடைய அறிவின் முகத்திலுள்ள உன்னுடைய உண்மையான மடமையின் உள்ளமையுடைய பார்வையே 'மஃரிபத்து' ஆகும். ஹக்குடைய அறிவுடன் ஒத்துப்பார்க்கும் பொழுது உன்னுடைய தாத்தின் அகமியம் மடமைத்தனமே. உன்னுடைய அறிவை ஹக்குடைய அறிவென்று கருதிக்கொள். உன்னுடைய அறிவு உண்மையில் வெளிப்படையிலும், பகிரங்கத்திலும், ஹக்குடைய கண்டிப்பான அறிவாயிருக்கிறது; அதன் உள்ளீடான தன்மை உண்மையும், அகண்டமுமா யிருக்கிறது. 'இல்மெ ஹக்தர் இல்மெ சூபிரும் வதைவது' — சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு மறைந்திருக்கிறது.

'கைர்' என்னும் வேற்றுமையைப்பற்றிய அறிவு மறைந்துவிடுவதுதான் 'பனா'வாகும். 'கைர்' என்னும் வேற்றுமையின் அறிவுமறைந்த பிறகு ஒருவன் அடையப்பெறும்

ஹிக்குடைய அறிவுதான் 'பகா'வாகும். விலாயத்தை அடையப் படும் சுலூக்குடைய முடிவான எல்லையிலிருக்கும் 'நுக்தா' வென்னும் இந்த புள்ளியை ஒருவன் அடைகிறான்.

இன்னல்லாஹகலக ஆதம அலாசூரத்திஹி (ஹதீது குத்ஸீ) ஹக்கு தனது சுயவடிவிலே மனிதனை சிருஷ்டித்தான். 'கைபு;' 'ஷஹாதத்து.' 'ரூஹு.' 'அம்தால்,' என்னும் நிலைமைகள் சகலவற்றையும் 'ஹக்'குடைய 'தாத்து' சூழ்ந்தறிகின்றது அதைப்போன்று மனிதனுடைய அகமியமும் (ஹகீகத்து இன்ஸானீ) அவைகளை சூழ்ந்திருக்கின்றது; ஒன்று ஹகீகத்தாகிய அகமியத்திலும். மற்றொன்று கண்டிப்பிலும் செய்கின்றது '' மன் அரப நப்ஸஹு பகத் அரபறப்ப ஹு '' தனது றப்பை இந்த நிலைமைகள் யாவற்றையும். சூழ்ந்தறிவதாக அறிந்த ஒருவன்தானே அவைகள் யாவற்றையும் சூழ்ந்தறிவதாகத் தன்னை அறிந்துகொள்கிறான். '' அரப்து ரப்பீ பிறப்பீ '' — நான் எனது 'றப்' பில் ரப் பாக தரிப்பட்டு இருக்கிற நிலையில் என் 'றப்'பை உணர்ந்தேன். உன்னுடைய 'தாத்து' 'சிபாத்து' 'அப்ஆல்' ஆகியவற்றை 'ஹக்கு'டைய 'தாத்து' 'சிபாத்து' 'அப்ஆல்' ஆகக் கருதி ஒன்றுபடுவாயாக. இதுவே 'ஷுத்தாரியா'க்களின் பாதை '' அப்பியாஸங்களையும். 'முஜாஹதா'வெனும்கெண்டிப்பையுங்கடைபிடித்துஉன்னுடைய நப்சை 'பனா'வின் வழியிலும். 'ஹக்'கையதை'பகா'வின் வழியிலும் உனது நப்ஸை 'உபூதியத்து' என்னும் அடிமைத்தனத்தின் வழியிலும். அவனுடையதை ருபூபியத்து என்னும் இரட்சகத் தனத்தின் வழியிலும் (நிலைநாட்டி) கருதுவாயாக என்று கூறும் (அப்றார். அக்யார்களின்) பாதை மற்ற 'ஆரிபீன்'களுடைய பாதையன்று வேற்றுமை பாதையால் அறிவது இந்த (மேற் கூறப்பட்ட) ஹதீதின் தாத்பரியமன்று.

இச்சையானது 'ஷிர்க்கு-கபீ' என்னும் அந்தரங்க இணையாகும், அது சரீரத்தின் சகல அவயங்களிலும் ஊடேறிச் சென்று ஒவ்வொரு நரம்பிலும் உறைந்திருக்கிறது. ''லாயுஃமினு அக்தாஹும்பில்லாஹி இல்லாஹும் முஷ்ரிகூன்'' அவர்கள் அல்லாஹ்வின் மீது விசுவாசங்கொண்டிருப்பினும்

களுக்கு பயிற்சிமுறை

அநேகர் இன்னும் அவர்களுள் 'முஷ்ரிக்'காகவே இருக்கின்றனர். 'முஷ்ரிக்கு'டைய அகங்காரத் தன்மை 'ஷைத்தானி'யாக இருக்கின்றது. அது அவனுடைய ஹிருதயத்திலிருந்து நீங்காதவரை 'ஹக்கு'டைய 'ஹுவியத்'தாகிய 'அவன்' என்னும் படர்க்கைத் தன்மை அதில் தோற்றமளிக்காது.

13-வது அத்தியாயம்

('அத்கார்,' 'அஷ்கால்,' — தியான அப்பியாஸ முறைகள்)

தனிமையில் தானாக தன்னால் செய்யப்படும் 'திக்ரு' 'ஷுக்லால்' அதிக பலனில்லை பலன்தரதக்க கருத்தோர்மித்த ஒரு 'பீரு'டைய செல்வாக்கின் கீழிருந்தாலன்றி எண்ணங்கள் ஒர்மிக்காது விருப்பமுடையோரின் விஷயத்தில்தான் 'பீரு'டைய செல்வாக்கு பெரிதும் பலன் தரதக்கதாயிருக்கிறது. 'பன'உடைய நிலையை அடைந்துவிட்ட 'பீர்' தனது முரீதையும் அவ்வாறே ஆகச் செய்யலாம். ஒரு பஞ்சுப் பொதி பூதக் கண்ணாடியானது இரண்டு வஸ்துக்களுக்கிடையில் குறிக்கிட்டதும் பஞ்சு உடனே தீப்பற்றிக்கொள்கிறது சூரிய வெளிச்சத்தினால் நெருப்புப் பற்றாமல் சதாதரிபட்டிருக்கிறது. 'மாஸிவல்லாஹ்' (அல்லாஹ்வின் 'வேறு') வைப் பார்க்காத வகையில் ஒரு சம்பூர்ண 'பீர்' ஆகிய ஞானி குருடாகத்தானிருக்கிறார். 'மாஸிவல்லாஹ்'வை மட்டும் பார்க்கும் ஒரு முரீதும் குருடனாகவேதானிருக்கிறான் 'ஹக்'கைப் பார்க்காத குருடாக 'பீர்' இருந்தால் அவர் குருடனுக்கு வழி காட்ட முடியாது. 'ஸைர்' இல்லாஹ் அல்லாஹ் அளவில் யாத்திரையை முடித்துக்கொண்டு 'பீர்' ஸைர் பில்லாஹ் (அல்லாஹ்வில் யாத்திரை)யினுள் நுழைகிறார். ஆனால் 'அவர் தனது ஆத்மீகப் பலத்தினால் 'ஸைர் இல்லாஹ்வை' மறுபடியும் .முரீதுடன்'டன் தொடங்கி முரீதை படிப்படியாக அதன் முடிவான எல்லைக்குக் கொண்டுபோய் சேர்க்கிறார்.

களுக்கு பயிற்சிமுறை

அநேகர் இன்னும் அவர்களுள் 'முஷ்ரிக்'காகவே இருக்கின்றனர். 'முஷ்ரிக்கு'டைய அகங்காரத் தன்மை 'ஷைத்தானி'யாக இருக்கின்றது. அது அவனுடைய ஹிருதயத்திலிருந்து நீங்காதவரை 'ஹக்கு'டைய 'ஹாவியத்'தாகிய 'அவன்' என்னும் படர்க்கைத் தன்மை அதில் தோற்றமளிக்காது.

13-வது அத்தியாயம்

('அத்கார்,' 'அஷ்கால்,' — தியான அப்பியாஸ முறைகள்)

தனிமையில் தானாக தன்னால் செய்யப்படும் 'திக்ரு' 'ஷுக்லால்' அதிக பலனில்லை பலன்தரதக்க கருத்தோர்மித்த ஒரு 'பீரு'டைய செல்வாக்கின் கீழிருந்காலன்றி எண்ணங்கள் ஒர்மிக்காது விருப்பமுடையோரின் விஷயத்தில்தான் 'பீரு'டைய செல்வாக்கு பெரிதும் பலன் தரதக்கதாயிருக்கிறது. 'பனா' உடைய நிலையை அடைந்துவிட்ட 'பீர்' தனது முரீதையும் அவ்வாறே ஆகச் செய்யலாம். ஒரு பஞ்சுப் பொகிபூதக் கண்ணாடியானது இரண்டு வஸ்துக்களுக்கிடையில் குறிக்கிட்டதும் பஞ்சு உடனே தீப்பற்றிக்கொள்கிறது சூரிய வெளிச்சத்தினால் நெருப்புப் பற்றாமல் சதாதரிபட்டிருக்கிறது. 'மாஸிவல்லாஹ்' (அல்லாஹ்வின் 'வேறு') வைப் பார்க்காத வகையில் ஒரு சம்பூர்ண 'பீர்' ஆகிய ஞானி குருடாகத்தானிருக்கிறார். 'மாஸிவல்லாஹ்'வை மட்டும் பார்க்கும் ஒரு முரீதும் குருடனாகவேதானிருக்கிறான் 'ஹக்'கைப் பார்க்காத குருடாக 'பீர்' இருந்தால் அவர் குருடனுக்கு வழி காட்ட முடியாது. 'ஸைர்' இல்லாஹ் அல்லாஹ் அளவில் யாத்திரையை முடித்துக்கொண்டு 'பீர்' ஸைர் பில்லாஹ் (அல்லாஹ்வில் யாத்திரை)யினுள் நுழைகிறார். ஆனால் 'அவர் தனது ஆத்மீகப் பலத்தினால் 'ஸைர் இல்லாஹ்வை' மறுபடியும் 'முரீதுடன்'டன் தொடங்கி முரீதை படிப்படியாக அதன் முடிவான எல்லைக்குக் கொண்டுபோய் சேர்க்கிறார்.

முரீதை தன்னில் மரித்தவனாகவும், ஹக்கில் ஜீவிப்பவனாக வும் செய்கிறார். ஆதம் (அலை) தொடுத்து இது பரியந்தம் ஒரே ஒரு பீர்'தான் யதார்தத்தில் இதனை செய்து முடிக்கிறார். அவர்கள்தான் நபிகட்பிரான் (ஸல்) அவர்களாகும். முரீதை நேர்வழி காட்டிக்கொண்டிருக்கும் 'ஔலியா' 'அன்பியா'க் களின் பல்வேறு நிலைமைகளிலும் அவர்கள்தானிக்கிறார்கள். 'ஆதம்' (அலை) தொடுத்து 'காத்தமும் ஔலியா'வான முஹம்மது அலி மஹ்றதீவரையிலும்' ஸ்தூல சரீரத்தில் அல்லாஹ் வின் பிரதிநிதியானவர் அவர்களேயாகும் இவ்வாறு குறிப் பிட்டது 'தனாசுக்' என்னும் அவதார முறையிலன்று; 'புரூஜ்' என்னும் பிரதிபிம்பித்தலின் வகைதான். ஒரு விளக்கிலிருந்து அநேக விளக்குகளை கொளுத்துவது போன்றே எல்லா விளக்கு களிலும் பிரகாசிப்பது ஒரே ஜோதிதான் சம்பூர்ண 'நபித்து'வம் ஒரே சரீரத்தில் தன்னைத் தோற்றுவித்து முஹம்மது (ஸல்) என்னும் பெயரைப்பெற்றது.

முராக்கபா — முஜவ்விர் (முடுதலுக்குரியாதியானம்) 'கிப்லா'வை நோக்கி உட்கார்ந்துகொண்டு அந்தரங்க எச்சரிக் கையைக் காது தாழ்த்திக் கேள் உன்னுடைய இருதயத்தி லிறங்கும் ஒவ்வொரு 'கத்ரா'வான எண்ணத்தையும் அல்லாஹ் வுடைய கட்டளையென்று கருதி அவை உனது தத்துவத்திற்கு உட்பட்டதாயிருந்தால் அவற்றை செயல் நடத்திவிடு; இல்லா விடில் வெறும் எண்ணத்துடன் மட்டும் விட்டுவிடு. (அதாவது நல்ல எண்ணங்களை மட்டுந் தொழில்படுத்திவிட்டு மற்றதை வெறும் எண்ணத்தோடு ஒழித்துவிடு)

முராக்கபா — மீம்மீம். முதல் 'மீம்' 'முத்லக்' ஆகிய அகண்டத்தைத்தையும், இரண்டாவது 'மீம்' 'முகையது' அகண்டத்தையும் குறிக்கின்றன. அகண்ட பரிபூர்ண ஆகிய கண்டத்தையும் குறிக்கின்றன. அகண்ட பரிபூர்ண மாகிய ஹக்கு (முதல் 'மீம்') 'நுஸூல்' என்னும் படி இறங்க லில் கண்ட ரூபத்தில் (இரண்டாவது மீம்) வெளியீடா யிருக்கிறது இந்த கண்டம் 'உரூஜ்' என்னும் படி எற்றத்தில் அகண்ட பரிபூர்ணமாயிருக்கிறது.

(' அத்கார், ' ' அஷ்கால், ' — தியான அப்பியாஸ முறைகள்)

'நுஸூல் - ஊர்த்து வகமும், அல்லது படி இறங்குதல் உருஜ் - அதோமுகம் அல்லது படி ஏற்றம்)

அஹ்லெ - முகாஷபா வென்னும் திரை நீங்கியவர்கள் தங்கள் கஷ்பின் மூலம் வஹ்தத்தை உணர்ந்தார்களேயன்றி திருஷ்டாந் தங்களினுலன்று. உனது கண்களை மூடிக்கொண்டு வஹ்தத்தை பிரத்தியட்சமாக இருக்கக் காண்பாயாக; உனது கண்களைத் திறந்து பிரத்தியட்சமான வஹ்தாத்தாகிய) ஒன்றில் பலதைப் பார்ப்பாயாக வஹ்தத்து என்னும் ஏகம் தாத்தைச் சார்ந்தது; ' க த் ர த் து ' என்னும் அநேகம் ஸிபாத்தைச் சேர்ந்தது தாத்தைப் பொருத்தவரை அவன் முந்திய முந்தின வனுகவும், சிபாத்தைப் பொறுத்தவரை '' அவனே பிந்திய பிந்தினவனுயுமிருக்கிறுன் அதியாக இருப்பதில் தாத்து பாத்திஞயும் அந்தமாக இருப்பதில் சிபாத்து 'ளாஹி'ராயு மிருக்கிறது அவனே முந்தியவனும். பிந்தியவனும் வெளி யீடானவனும், உள்ளீடானவனுமாயிருக்கிருன் '' ' ஹூவல் அவ்வலு வல்ஆகிறு. வள்ளாஹிறு. வல்பாதினு ''

உனது கண்களையும். காதுகளையும் பொத்திக் கொண்டால் உனது சரீரமும். பிரபஞ்சமும் உன்னிடமிருந்து மறைந்துவிடும்; எனினும், உனது 'நான்' என்னும் தன்மை மட்டும் உனது அறிவில் தரிபட்டிருக்கும் அது மறையாத அளவுக்கு உனது நோட்டத்தை அதன் மீது செலுத்து இவ்வாறு செய்யத் தொடங்கு முன்னர் மனித சஞ்சாரமற்ற ஓர் மூலையைத் 'தேடியடைந்து மனித சாவகாஸத்தைவிட்டும் நீங்கிக்கொள். 'இந்த ஷூக்லு' ஆகிய அப்பியாஸம் உனது மனதை ஓர் மிக்கச் செய்து உன்னுல் இழக்கப்பட்ட உனது சுயத்தை உனக்குக் கிடைக்கச் செய்யும்.

வஸ்துக்களின் தன்மையின் மீதே ஷரீஅத்துடைய சட்ட திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன வஸ்துக்களின் தன்மை தாத்துடைய பண்பு (சிபாத்து)களின் மீதே ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது இந்த சுபாவத்தன்மையை ஒருவன் கடந்து விட்டானேயாகில் அவன் அகமியத்தை அடையப்பெறுகிருன்.

வஸ்துக்களுடைய தன்மையின் உண்மை அவன் மீது உதய மாகிறது. ' அல்லாஹும்ம அறினீஹகாயயிகல் அஷ்யா அகமாஹிய ' — '' நாயனே ! எனக்கு வஸ்துக்களை உள்ளா உள்ளபடியாக (அதன் அகமியங்களை) அறிவித்துத்தா '' — என்று நாயம் (ஸல்) அவர்கள் பிரார்த்தித்திருக்கிருர்கள். தன்மையிலிருந்து அகமியத்தளவிலும், அகமியத்லிருந்து மெய்ப்பொருள் (ஹக்கு) அளவிலும் யாத்திரை செய். ஹக்குடன் யாத்திரை செய்தல் (ஸைர்ம அல்லாஹ்) இதுவே; பின்னர் முடிவற்ற ஹக்கில் யாத்திரை செய்தலாகிய ஸைர் பில்லாஹ்வைப் பெறுகிருய்.

ஹிருதயங்கள் பல்வேறு முறையான வடிவங்களில் அமைக்கப்பட்டிருக்கிறன எனவேதான் பல்வேறு விதமான பலப்பலன்கள் அவற்றினின்றும் வெளிப்படுகின்றன மனித னுடைய அகமியம் அவ்வாறே (ஹகீகத்தி) ல் ஹக்குடைய அகமியமாகும் பேசும் சக்தி ஒன்றே; புல்லாங்குழல், வீணை. சிதார் ஆகிய பல்வேறு வாத்திய கருவிகளில் அமைப்புக்குத் தக்கவாறு பல்வேறு தொனிகளுண்டாயிருக்கின்றன

சகல சரீரங்களிலும் பேசுபவன் நீயே என்று கருதிக் கொள்வாயாக தொனியிலும், பேச்சிலுமுள்ள பேதங்கங்கள் சரீரங்களிலுள்ள பேசா பேதங்களைப் பொறுத்தே சகலவிடங் களிலும் பேசுபவன் நீயே ! இப்பொழுது சரீரங்களை நீக்கிவிடு. நீ ஒரு பேச்சற்ற பேச்சாகப் பேசுகிருய். அதுதான் உனது பேச்சுனுடைய அகமியம் ' ஜம்உல்ஜம்உ ' நிலையிலுள்ள 'கலாம் — தாத்தி' அதுவே வார்த்தைகளாலும் சப்தங் களாலும். சமைக்கப்பட்ட வகையான (ஜுஸ்இ) பேச்சு இப்பொழுது மறைந்ததும்' கலாம் ' ஆகிய பேச்சு இருவகைப் படும்: — ஒன்று 'ஜம்உ'டைய நிலையிலுள்ள 'கலாமிதாத்தியும்' மற்றொன்று பர்குடைய நிலையிலுள்ள 'கால-தப்ஸிலி'யுமாகும்; ஒன்று தொனியற்றது: மற்றொன்று தொனிகளும், வார்த்தை களுடையது மற்றொன்று தொனிகளும், வார்த்தைகளுடையது தொனிகளற்ற 'ஜம்உல்ஜம்உ'டையநிலையிலிருந்து ஹக்குடைய வார்த்தை அல்லது வசனமாகிய (குர்ஆன்) இறங்கினது ஒன்று மஜூரியான அர்த்தத்தை பொதிந்தது; மற்றொன்று குரத்

தாகிய கோலத்தைப் பெற்றது. கலாமீ-தாத்தியானது தன்னை கலாம் - தப்ஸீலியாகவேயன்றி வெளிப்படுத்திக்கொள்ள முடியாது. இப்போது உனக்கு 'கைர்' என்றும் வேறு இல்லை என்பதை அறிகிறாய். இந்த வேற்றுமை பல்வேறு சரீரங்களிலிருந்து அவற்றின் ஆதாயங்களுடன் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு தடவை எனது 'பீர்' சொன்னதாவது: — ஹக்குடைய திருநாமங்களிலொன்றை நான் ஜெபித்துக்கொண்டு எனது அறையிலிருந்தேன் எனது சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் அந்த பெயரை ஜெபிக்கவேண்டுமென்று நான் நாடினேன். அப்பொழுது வொவ்வொரு உருப்பும் எனது சொந்த பெயரையே சொல்லக் கேட்டேன். நான் இதனை எனது 'பீரு'க்குத் தெரிவித்தேன். அவர்கள் அதற்கு நான் எதிர்ப்பார்த்ததைவிட இதுவே சிறந்தது என்று என்னிடம் சொன்னார்கள் "பக்குருனீ அத்குருகும்" எனவே என்னை நினைப்பீர்களாக, நான் உங்களையும் நினைப்பேன்." ஜெபித்தல் மறைந்ததும் ஜெபிக்கிறவன் ஜோதியாக ஆகிறான். உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை அவன் ஜெபிக்கப்பட்டவனாகின்றான்" இது போன்றே உனது அறையின் சுவர்களும். அந்த பெயரையே ஜெபிக்கக்கூடும். இங்கு நீகுர்பு பராயிலேயும். குர்பு — நவாபிலேயும், அடைகிறாய் இதுவே திக்று — சிபாத்தீ திக்று தாத்தீயை பொறுத்த வகையில் அனல்ஹக்குடைய நிலைமையிலுள்ள தனது 'கல்பி'லிருந்து 'நான்' 'நான்' என்று தொனிப்பதை அவன் கேட்கிறான்.

சில ஆரிபீன்கள் திக்று சிபாத்தியைத்தான் பழகுகின்றனர்; ஏனெனில், திக்று — தாத்தி இதன் பின் அமைந்திருக்கிறது. திக்று — சிபாத்தீயானது திக்று — தாத்தீயை அடைவதற்குள்ள ஓர் ஏணியாகயிருக்கிறது. அங்கு 'நான்' என்பதைத்தவிர யாதொன்றுமில்லை. 'தாத்துடைய தஜல்லியை' 'சாலிக்கு' அடையாவரை அவன் அவனே ஹக் என்றும் அவனுக்கே புகழ் என்றும், கூறுகின்றான்; அந்த நிலையை அவன் அடைந்துவிட்டதும் அவன் நானே ஹக்கு (அனல் ஹக்கு) என்று சொல்கிறான். ஹக்குடைய அறிவு 'சூபி'யுடைய

அறிவில் மறைந்துவிடுகிறது. சாதாரண ஜனங்கள் இதனை எவ்வாறு உணர்ந்துகொள்வர். "(மத்னவீ) இங்கு 'சூபி' தரிபடுத்தப்பட்டும், அவருடைய 'கைர்' ஆகிய வேறு இன்மை யாக்கப்பட்டும்விடுகிறது; அதாவது ஹக்குடைய அறிவு 'ஆரிபு' டைய உலூஹிய்யத்தை இன்மையாக்கின்றது. ஹக்குதானாக இருக்குபொழுது 'கைர்' என்பது கிடையாது.

14-வது அத்தியாயம்

(கத்ராத் — மனதின் ஊசாட்டங்கள்)

உலக சம்பந்தப்பட்டோஅல்லது சாலிக் ஆகிய முழுமூட்சுவின் 'நப்ஸு' ஆகிய தன்மையைப் பொருத்தோ இவ்விரண்டிலும் எதுவாயினுஞ்சரி மாஸி வல்லாஹ் (அல்லாஹ் அல்லாதது)வின் உணர்ச்சியை இன்மையாக்குவதே 'பனா' என்பதாகும். 'பனா' நிலையில் 'சாலிக்கு' இன்மை யாக்கினோம் என்ற நினைப்பை மட்டும் சதா பெற்றிக்கிறார். அந்த அறிவும் இன்மையாக்கப்பட்டதும் அது 'பனாவுல் பனா' (இன்மையில் இன்மை)வாக ஆய்விடுகிறது. இன்மையில் இன்மைக்குப் பொருள் தரிபடுத்தல் என்பதாகும். எனவே. அது 'பகா'வென்னும் தரிபாடாக ஆகிறது 'இன்னீ அனல்லாஹ்' — நிடனாக நானே அல்லாஹ்வாகும்; தன்னை அறிகலே அல்லாஹ்வை அறிதலாகும். "குல்லு மன் அலைஹா பானின் வயப்கா வஜ்ஹு ரப்பிக துல்ஜலாலீ வல்இக்ராம்" — அதன் மீதுள்ள ஒவ்வொன்றும் இன்மையாக வேண்டியதே; வலுப்பமும். கன்னியமுந்தங்கிய உனது இரட்சகனின் முகம் மட்டும் சதா தரிபடாயிருக்கும்."

மாஸிவல்லாஹ் (அல்லாஹ் அல்லாதது) உன்னை கவர்ந்துகொள்ளாமலிருக்க 'கத்ராத்'வென்னும் மன ஊசாட்டங்களை நோட்டமிட்டு கவனித்து வருவதைக் காட்டினும் மேலானதும் பலன் தரதக்கதுமான வணக்கம் யாதொன்றுமில்லை ஒரு ஹதீதுபடி: — "சரீரத்தில் ஒரு துண்டு இறைச்சி இருக்கிறது.

(' அத்கார், '' அஷ்கால், ' — தியான அப்பியாஸ முறைகள்)

அது பரிசுத்தமடைந்தால் முழு சரீரமும் பரிசுத்தமடைகிறது
அது சீர்கெட்டால் பூராசரீரமும் கெட்டுவிடுகிறது '' ஹிருதய
மாகிறது அரசனும் மற்ற அவயவங்கள் அதன் பிரஜைகளுமா
யிருக்கும். அரசன் நேர்மையாக நடத்தப்பட்டால் சரீர
அவயவங்களான பிரஜைகளும் நேர்மையாக நடத்தப்படும்.
எனவே, அல்லாஹ்வைத் தேடுபவன் 'கத்ராத்'வாகிய
மன ஊசாட்டங்களை ஒழித்து தனதுஹிருதயத்தைசுத்தப்படுத்தி
ஞல் பிரஜைகளாகிய சரீரஅவயவங்கள் சீர்படும் உலமாவாகிய
பரோட்சஞானி ஹிருதயத்தை சுத்தப்படுத்தும் நோக்கங்
கொண்டு முதன் முதலில் சரீரத்தைச் சீர்படுத்த முயலுகிருர்.
இதுவோ நீண்டதோர் முறை தீர்க்கதரிகள் ஹிருதயத்தையே
முதலில் நோட்டமிடுவது கொண்டு மனக் கண்ணைத் திறக்
கிருர்கள்.

அல்லாஹ்வின் 'தஜல்லி'யாகிய பிரதிபிம்பத் தோற்றம்
எதிர்ப்பாராமல் ஹிருதயத்தில் உதயமாகிறது. ஆனல் அதற்கு
தயாரிலிருப்போரின் இதயத்தில் மட்டும்தான் அது உதய
மாகிறது.

ஒரு அப்து ஆகிய அடிமையைத் தனது 'றப்' ஆகிய
நாயனை உணரச் செய்யும் 'கதராத்' வாகிய ஊசாட்டமே
'ஜிப்ரயீல்' ஆகும் ருஹூ - முஹம்மதியின் வழியாக
இறை வசனம் உலூஹிய்யத்து என்னும் நாயகத் தன்மையி
லிருந்து ஜிப்ரயீலுக்கு இறங்கி வருகிறது. அங்கிருந்து
பின்னர். முஹம்மது (ஸல்) அவர்களுடைய சரீரத்துக்கு
இறங்குகிறது. முஹம்மதுடைய ஹகீகத்து முஹம்மதுடைய
மனதினிடம் பேசுகிறது அது (முஹம்மதுடைய மனது)
முஹம்மதுடைய சரீரத்திடம் பேசுகிறது இறைவனது வசனம்
முதலில் வஹீ(தூது)யாகவும், பின்னர் 'இல்ஹாம்' என்னும்
உதிப்பாகவும், அதன் பின்னர் 'கதரா' (மலகானி, நப்ஸானி
ஷைத்தானீயாகிய ஊசாட்டங்கள்) வாகவுமிருக்கும், இவை
யாவும் இறை வசனத்தின் தஜ்ல்லியாத்து என்னும் தோற்றங்
களாகும்.

அஸ்ராரே அனல்ஹக்

எதெது உன்னை அல்லாஹ்வின்பால் இழுத்துச் செல்கின்றதோ அது மார்க்கம்; எதெது அல்லாஹ்வை யடையும் பாதையில் குறுக்கிட்டு நின்கின்றதோ அதுவே உலகம்.

நப்ஸை அழிச்சாட்டியம் செய்தவன் யாரெனில் இம்மைக்காகவும், மறுமைக்காகவும் வேண்டி இறைவனை வணங்கியவனேயாகும். அன்லாஇலாஹஇல்லாஅந்தசுபுஹானக இன்னீ குந்து மினல்ளாலிமீன்'' — நிட்சயமாக அதிதூய்மை யான உன்னையன்றி நாயன் யாருமில்லை. திடனாக நாங்கள் 'லாளிம்'களின் கூட்டத்திலுள்ளவர்கள் (ஒரு வஸ்துவை அதன் சுய இடத்தைவிட்டும் வேறிடத்தில் மாற்றுபவனே லாளிம்) ஷிர்க்கு என்னும் இணைவைத்தலைவிட்டும் நீங்கியிருக்க அல்லாஹ்வை அல்லாவுக்காக நினைப்பாயாக, திக்று என்னும் தியானத்தை விட்டுவிடாதே; ஏனெனில், சரீர இச்சைகளைத் தொலைப்பதற்கு உன்னால் முடியாதுபோய்விடும் 'திக்று' என்னும் தியானத்தின் ஆசி மூலமாக நீ இறைவனை அடைந்து விடலாம் நண்பனின் தேட்டத்திலேயே சதா ஈடுபட்டிரு. பகை வனுக்காக வேண்டி உனது நண்பன் மீதுள்ள தேட்டத்தைக் கைவிடாதே. ஷெய்குஷாஹ வஜஹாுத்தின் அவர்களுடைய சீடர்கள் தங்கள் மனதின் சலனத்தைப் போக்கிக்கொள்ள முடியா திருந்தார்கள். எனவே அவர்கள்எவ்வாறு 'திக்று' ஆகியதியானம் செய்ய முடியும்? ஷெய்கு அவர்கள் கூறியதாவது:- ''ஷைத்தா னுடைய வேலையோ உங்கள் மனதின் அமைதியைக் குலைப்ப தாகும். உங்கள் வேலையோ அந்த மனதை ஓர் மிக்கச் செய்த லாகும் 'கன்னாஸ்' ஆகிய 'ஷைத்தான்' உங்கள் எண்ணங்களை சிதறடிக்கிறான் என்று கூறப்பட்டிருக்கிறது. 'யுவஸ்விஸு பீஸுதூரின்னாஸ்.' மேலும், ஜின்னையும், மனிதனையும், என்னை வணங்கவேயொழிய நான் படைக்க வில்லை' — வமாகலக்துல் ஜின்ன வல்இன்ஸ இல்லா லியஃ புதூன், என்றும் கூறப்பட்டிருக்கிறது. எனவே வணக்கத்தில் உனது எண்ணங்களைச் சிதறவிடாதே

அல்கவாதிர் ரசூலுல்ஹக்கு — ஒவ்வொரு 'கதரா' வாகிய மன ஊசாட்டமும் 'ஹக்குடைய' தூதராயிருக்கிறது.

'ஜலாலி'யாயினும், ஜமாலியாயினும் ஒவ்வொரு 'கதரா'வும் இறைவனின் தீர்க்க தரசியாயிருக்கும் ஆனால் 'சாலிக்' தனது புலனுறுதிகளின் உணர்ச்சியைப் பெற்றிருக்கும் பரியந்தம் அவன் 'ஷரிஅத்து' டைய எல்லையை கிஞ்சிற்றும் கடக்கக் கூடாது எத்தகைய அமிதத் தன்மையைவிட்டும் அவன் விலகிக்கொள்ள வேண்டும். "எவ்விடத்திலும் இறைவனையே செயல் கர்த்தா வாகக் காண்பாயாக;

ஆனால் எல்லைகளை மட்டும் கடந்துவிடாதிருப்பாயாக. (குல்ஷன்ராஜ்) ஏனெனில் 'ஷரீஅத்து'க்கு முரண் செய்வது கொடிய விஷமாகும். அது மனதை மரிக்கச் செய்து அந்த காரத்தில் ஆழ்த்திவிடுகிறது.

அமீருல் முஃமினீன் ஹஜ்ரத் அலி (கர்) அவர்கள் கூறியிருப்பதாவது:—

உன்னிலேயே உனக்கு மருந்திருக்கிறது நீ பார்ப்பதில்லை உன்னில் நின்றும் உனக்கு வியாதி ஏற்படுகிறது நீ நோட்டமிடுவதில்லை." கண்டிப்புகளின் நிமித்தம் நீ அற்பமாக இருக்கிறாய். உன்னிலேயே யாவற்றையும். எல்லாவற்றிலும் உன்னையும் வகை வகையாக நீ காண்பாயாக உனக்கு எது வேண்டினும் உன்னிடத்திலேயே இச்சித்துக் கொள்.

உதிப்பின் வாயிலாய் 'கதரா' வென்னும் எண்ணங்கள் மனதில் வருகின்றனவே யன்றி 'ஆலம்முல்க்குக் சொந்தமான இந்திரியங்களின் மூலமாயன்று அவைகள் நல்லதாயினும், கெட்டதாயினும் இந்திரியங்களிருக்கவே அவைகள் ஆலம்— மலகூத்திலிருந்து வருகின்றன. புலனுறுதிகள் மூலமாகத்தான் உலக சம்பந்தப்பட்ட அறிவு உண்டாகிறது ஆலம் மலகூத்தி லிருந்து வருவது எகெதோ அது மரணத்தின் பின்னர் நினைப்பின் உதவியின்றியும். கனவிலிருப்பதுபோல் கற்பனு சக்தியின் வாயிலாகவும் மணக்கண் வழியாக இறங்குகின்றது சாதாரண மனிதர்களுக்கு அனிச்சை மரணத்திற்குப் பின்னர் கதரா'வாகிய எண்ணங்கள் விருப்பம் அல்லது இச்சையுடன்

ஏற்படுகின்றன. மரணத்திற்கு முன்னர் மரித்துவிடுவோருடைய நிலைமையும் இவ்வாறேயாம் ‘மூத்தூகப்ல அன்தமூதூ’ — மரணத்தின் முன்னர் மரித்துவிடு, என்பது நாயக வாக்கியம் ஆதலின் பின்சொல்லப்பட்டவர்களுக்கு ‘முஜாஹதா’ (பெரும் பிரயாசையுடன் கூடிய தெண்டிப்பு) இன்றியமையாதது. ஏனெனில் ஜீவியத்திலேயே ஒருவன் மரணத்தை அடையப் பெறுகின்றான். எதனை மற்றவர்கள் மரணத்தின் பின்னர் அனுபவித்து இல்முயகீன் (பரோட்சஞானம்) மூலம் ‘ஐனுல்யகீன்’ ஆகிய அபரோச ஞானத்தை அடைகிறார்களோ அதனை இவர் ஜீவியத்திலேயே அனுபவிக்கிறார் தீர்க்கதரிசிகளும். ஒளலியாக்களும் தங்கள் வாழ்நாளிலேயே இந்த அனுபவங்களை அடையப் பெறுகிறார்கள். (அதாவது) அவர்கள் விழிப்பிலேயே இந்த ஜீவியத்தில் ஆலம் அர்வாஹு ஆகிய ஆன்மலோகம். ஆலம்மிதால் ஆகிய சூட்சும லோகம் ஆகியவற்றினை நோட்டமிட்டு அறிகிறார்கள்.

ஹுவல் அவ்வலு. வல் ஆகிறு. வல்ளாஹிறு. வல் பாதினு'' — அவனே முந்தியவனும். பிந்தியவனும். வெளியீடானவனும். உள்ளீடானவனுமாகும். அவன் அவ்வாறிருக்கையில் வஸ்து அல்லது பிறவற்றின் இருப்புக்கோ வெளிப்படையிலும். உள்ளீட்டிலும் இடமே கிடையாது. அலா இன்னஹு பிகுல்லிஷைஇன் முஹீத்’ — திட்டமாக அவன் சகல வஸ்துக்களையும் சூழ்ந்திருக்கிறான்'' அதாவது வெளிப்படை வஸ்துக்களையும் நினைப்பிலுள்ள வஸ்துக்களையும் சூழ்ந்திருக்கிறான் அவனுடைய ஆதியே அந்தமும். அந்தமே ஆதியாயுமிருக்கிறது: அவனின் வெளியீடே உள்ளீடும். உள்ளீடே வெளியீடாயிருக்கிறது அவனிடத்தில் மாறுந் தன்மைக்கு இடமேதுங் கிடையாது.

‘கத்ரா’ வென்னும் ஓட்டம் அல்லது எண்ணம் ஹக்கிடமிருந்து வருவதாகும். ‘கைர்’ யென்னும் ‘வேறு’ அல்லது பிறப்பொருளின்பால் அதனை சுட்டக் கூடாது. நன்மைக்கோ தீமைக்கோ எதற்காயினுஞ்சரி ‘கத்ரா’ வென்னும் எண்ணங்கள் ஹக்குடைய வார்த்தையின் பிரகாசத்

தோற்றங்களே. " அல்கவாதிர் றசூலுல் ஹக்கி பயஸ்த ஜிப்லஹா " கதராக்கள் இறைவனின் தூதர்களாகும்; எனவே அவற்றை நீங்கள் அங்கீகரியுங்கள்.

ஷைத்தானி அல்லது நப்ஸானி கதராவானது உனது இதயத்தில் உதிக்கும்பொழுது அதனை ஹக்குடைய கட்டளையென்று அங்கீகரித்து அறிவிலும். கற்பனையிலும் மட்டும் அதற்குக் கீழ்படிந்துக்கொள். ' றஹ்மானி ' அல்லது ' மலகீ ' ' கதரா ' உதிக்கும் வேளை அதனை உள்ளபடி செயல் நடத்து; ஏனெனில், அது உன்னை இறைவன்பால் சமீபிக்கச் செய்கிறது. இவ்வாறே சூபி தனது நோட்டத்தை கதராவின் மீது சதா செலுத்தி வருகிறார். அவர் ஹிருதயத்தின் காரியங்களை மறந்தவராயிருப்பதில்லை. இந்த வகையில் 'ஷுத்தாரியாக்கள்' மிகுந்த கவனஞ் செலுத்தி எல்லா கத்ராக்களையும் இந்த மூலஸ்தானத்தினின்றும் வருவதாகக் காண்கிறார்கள்.

' வஹ்தத்தா 'கிய ஏகத்தன்மையில் ' கத்ரத்தாகிய ' அநேகத் தன்மையை அடக்கிவிடமுடியாது ' வஹ்தத்து ' ஆகிய ஏகத் தன்மையை அடைவதற்கு 'கத்ரத்தாகிய' அநேகத் தன்மையை ஒழித்துவிடவேண்டும் ' அஹமதுடைய ' ' மீம் ' ' அஹது ' என்பதிலே ஒழிக்கப்பட்டுவிடுகிறது நாயமவர்களின் தோழர்கள் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து " நபியே ! நீங்கள் அஹதுவா? " என்றதற்கு நாயகமவர்கள், " இல்லை நான் மீமின்றிய அஹ்மதுவாயிருக்கும் " என்று பதிலுரைத்தார்கள். ' அஹதிய்யத்துடைய ' ' தஜல்லியிலேயே ' ' மீம் ' இன்மையாக்கப்பட்டது " மன்றஆனி பகத்ரா அல்ஹக்கு " — யார் என்னைக் கண்டானோ நிட்சயமாக அவன் ஹக்கைக் கண்டான் !

வஹ்தத்தில் ' கைறு ' என்னும் வேறு இல்லாதிருக்கும் பொழுது தீவணக்கத்தில்எவ்வாறு ' கைர் ' என்பதைக் காண முடிந்தது ' கைர் ' என்பது இருக்கும்வரை வணக்கத்தில் நய வஞ்சகம் ஊடாகும்.

தாழ்மையான வஸ்துக்களில் நீ அவனைக் காண்ப
தில்லை. அவனுடைய மகிமையே உன் முன்னால் ஒரு திரையாக
நிற்கிறது மாபெரும் அலக்ஸாந்தர் ஒரு சுமை தூக்கியுடைய
ஆடையை தரிக்கும் வேளையில் யாரும் அவரை விளங்கிக்
கொள்ளமுடியாது. அவனுடைய அடிமைத் தன்மையே அவனை
மறைக்கும் ஒரு திரையாக இருக்கிறது.

ஒரு பாவம் நிகழ்ந்திட்டபோது அதனை ஹக்குடைய
கட்டளையென்றும், அதனை நிகழ்த்தப்பட ஒருவனை நியமிக்கப்
பட்டிருக்கிறதென்றும் கருதுவாயாக; பின்னர் அதன் கெடுதலை
விட்டும் ஹக்கிடம் காவல் தேடிக்கொள்: அது ஆண்டவனின்
கட்டளை; 'களா'கத்ரை புறக்கணித்துவிடாதே உன்னை
ஒரு செயலின் கருவியென்று கருதிக்கொள் 'தௌஹீது-
பில்அப்ஆல்' என்ற செயலில் தௌஹீதை சதா கவனித்தில்
வை: உன்னையும், உனது செயல்களையும் புறக்கணித்து விடு.
நன்மையாயினும். தீமையாயினும் ஒவ்வொரு செயலும் மெய்
யான செயல்கர்த்தாவினிடமிருந்து நிகழ்கிறது அவனே
முத்தலக்கான ஹக்கு அவனது எண்ணற்ற பண்புகளின் ஒரு
பண்பின் பலன் அல்லது ஆதேயமாகிய முடிவே ஒரு
செயலாகும். 'பண்பு' 'தாத்து' ஆகிய 'தத்சொரூபத்துக்கு
ஐக்கியப்பட்டது செயலிலிருந்து பண்பு அளவிலும். பண்பி
லிருந்து தாத்து ஆகிய சத்சொரூப அளவிலும் செல்வாயாக.
இவ்வுலகில் நடக்கும் உனது ஒவ்வொரு செயலும் அவனுடைய
செயல், பண்பு, அல்லது தாத்து ஆகியவற்றின் தோற்றம்.
இந்த தோற்றங்களிலே நீ உன்னை கரையச்செய்து
கொள்வாயாக இக்கொள்கையினரின் தலைவரான ஜுனைது
(றலி) அவர்கள் 'மஃரிபத்து' நான்கு நிலைமைகளைப் பெறும்
என்று கூறியிருக்கிறார்கள் நன்மையோ, தீமையோ, சாலிக்
கினிடமிருந்தோ, அன்றி உலகனிடமிருந்தோ நிகழும் ஒவ்
வொரு செயலையும், அசைவையும், உண்மையான செயல்
கர்த்தாவிடமிருந்து தான் உண்டாகிறது என்று கருது.
யாதொரு செயலும், பண்பும், தாத்தும். தனக்கு சொந்தமா
யில்லாத கண்டிப்பான செயல்கர்த்தாவிடமிருந்து இச்செயல்
களை நீக்கி தாத்துடைய செயல் என்று கருது. சம்பூர்ணத்தின்

(கத்ராத் — மனதின் ஊசாட்டங்கள்)

செயல்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடிதான்.
தாத்து. பண்பு. இரண்டாவதாக, செயலிலிருந்து பண்பள
கண்டிப்பு ஆகும். ஏனெனின் ஒரு பண்பிலிருந்து நிகழாத
வில் செல்வாயாக; மூன்றாவதாக, ஒவ்வொரு
யாதொரு செயலுமிருக்க முடியாது. கட்டளையாகக் கருது அது ஒரு
கத்ராவையும் ஹக்குடைய ஷரீ அத்துக்கு முரண் இன்றியு
'ஜலாலி' கத்ராவாயும், "ஊர்ந்து திரிபவற்றின்
மிருந்தால் அதனை தொழில்படுத்து 'றப்பு'டைய கையில்இருக்கிறது
முன்னெற்றி உரோமம் அதன் முன்னெற்றி உரோமம்
உன்னுடைய மனமாகிய றப்புடைய 'றப்பு'டைய கையிலிருக்
ஜீவத் தன்மை என்ற கண்டிப்பான கையிலிருக்கிறது.
கிறது பிந்திய இது 'றப்புல் அர்பாபு'டைய (அதாவது அஸ்மா-
பிந்திய இதுவோ 'உலூஹியத்து'டைய பிந்திய இதுவுர்வாஹிகியத்துடைய
இலாஹி) கையிலிருக்கிறது ஹற்ததத்துடைய கையி
கையிலிருக்கிறது 'வாஹிகியத்து' தாத்து-மகலக்குடை கையி
லிருக்கிறது. வஹ்ற தத்து. தன்னை அறியும் அறிவு 'ஹக்'
லிருக்கிறது நான்காவதாக. ஏனெனில் நீ
குடைய அறிவின் கண்ணாடியைத் தேடுகிறது; உனது இர்பான்'
ஹக்குடைய அறிவை உன்னுடைய அறிவில் அதாவது அதே
ஆகிய ஞானமாக விளக்கிகொள்ளவேயாம்; ஞானத்தின் மெய்
அறிவு அவனுடைய 'இர்பான்' ஆகிய இதுவே ஹக்கிடத்தி
மாக ஆரிபிடத்தில் தோற்றமளிக்கிறது என்பதைக்காட்டுகிறது
லிருந்து பண்புகள் வெளிப்படுகின்றன நன்மை. தீமையுடன்
பண்புகள் தாத்தை தோற்றுவிக்கின்றன அவர் ஒரு கருவி
ஆரிபு ஆகிய ஞானிக்கு வேலை கிடையாது பார்வையை
மட்டுமேயாம் கட்டளையின் பேரிலேயே உனது கட்டளையிடப்
செலுத்திவா; கட்டளையிடுபவன் மீதோ அன்றி இல்லாவிடில்
பட்டவன் மீதோ உன்பார்வையை செலுத்தாதே தங்கள் நப்ஸின்
ஜனங்கள் செயலின்முடிவைத் தங்கள்பாலும், ஒருநாள் ஒரு சீடன்
பாலும், ஷைத்தான் மீதும் சாட்டுவார்கள் "அல்ஹம்து லில்லாஹி
தொழுகையில் கூறியதாவது:— அலாதக்ஸீரி —"
அலாதெள பிக்கி மஅஸ்துக் பிருல்லாஹ பாவத்தி
நேர்வழி காட்டிய இறைவனை நான் புகழ்கிறேன் இதனைக் கேட்ட
னின்றும் காவல்தேடுகிறேன்" என்றார் நீ உனது
அவருடைய பீர் சப்தமிட்டுக் கூறியதாவது

தொழுகையில் தொழுது ஒரு முஸ்லீம் ஆக ஆனாய் யென்று நினைத்தேனேயன்றி நீ ஒரு காபிராயும். முஷ்ரிக்காயும் ஆய்விட்டாயென்று நினைக்கவே இல்லை '' என்றார். அதற்கு முரீது ''அது எப்படி?'' என்று கேட்டார். ''நீ உனது செயல்களையும் ஹம்திலும், இஸ்திக்பாரை உனது ஜீவத் தன்மையுடனே சம்பந்தப்படுத்தினாய்'' என்று பீர் பதிலிறுத்தார். இதுவோ குப்ரும், ஷிர்க்குமாகும். ''வல்லா ஹு கலக்கும் வமாதஃமலூன்'' — அல்லஹுத்தஆலா உங்களையும், உங்கள் செயல்களையும் படைத்தான். அவன் சிருஷ்டிப்பு பூர்ண நன்மையானது ஏனெனில் உள்ளமை முற்றும் நன்மையே உன்னுடைய கற்பனையில் வரும் எத்தகைய கெடுதலும் 'அதம்' அளவில் சாட்டப்படுகிறது. ஒருவன் பாவத்தை தனதளவில் சாட்டிக்கொள்வது. 'அல்லாஹ்'க்குரிய 'அதபு' அல்லது மரியாதையாகும். ஆதம் (அலை) அவர்களும், ஹவ்வா (அலை) அவர்களும், ''ளள்ளம்னா அன்புஸனா'' – எங்களுக்கே நாங்கள் அநியாயஞ் செய்துகொண்டோம்'' என்று கூறி தங்கள் பாவங்களை தாங்களே ஒப்புக்கொண்டார்கள் தடைபண்ணப்பட்ட மரத்தின் கனியை ஏன் புசித்தீர்கள்? என்று கேட்கப்பட்டபோது அவர்கள் அவ்வாறு கூறினார்கள் அதால் மரியாதையை ஷிர்க்குடைய எல்லை மட்டும் கொண்டு போகக் கூடாது. ''அலா இன்ன ஒளலியா அல்லாஹிலா கௌபுன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன்'' — நிட்சயமாய் அல்லாஹ்வின் நண்பர்களுக்கு யாதொரு அச்சமும், அபாயமுமில்லை ஷிர்க்கும் அச்சமும் தௌஹீதின் பாதையில் குறுக்கிட்டு நிற்கின்றன ''லாஇன்த நப்பீஸபாஹும் வலாமஸா உன்'' — எனது நாயனிடத்தில் காலைப்பொழுதும் மாலைப்பொழுதுமில்லை ஒருமுவஹ்ஹிது தனது நோட்டத்தை சதா தௌஹீதின்பாலே செலுத்திக் கொண்டிருக்கவேண்டும்; பாவமானது இச்சையின்றியே அவர்களினின்றும் வெளிப்பட்டபோதினும், அது அவர்களின் கேட்டின்பால் இழுத்துச் செல்லக்கூடிய முடிவைப் பெற்றிருந் தாலும் அவர்கள் பாவத்தை காட்டினும் ஷிர்க்குக்கே மிகவும் பயந்து வந்தார்கள் உனது ஜீவத் தன்மையைவிட்டும் சிவத் தன்மையை வைத்துக்கொள்ளாவேண்டுமானால் நீஷிர்க்கு ஆகிய

இனை வைத்தலைவிட்டும் நீங்கிக்கொள்வாயாக. ''லாது ஷ்ரிகு பில்லாஹி இன்னஷ் ஷிர்க்க லளுள் முன் அளீம்'' — அல்லா வுடன் எதனையும் சேர்க்காதே நிட்சயமயமாக ஷிர்க்கு ஆகிறது. மகாகொடிய பாவமாகும். ஜீவத் தன்மையை விட்டும் ஒருவன் தனது சிவத் தன்மையை மீண்டும் அடையப் பெறுவதானது தன்னையே கொன்று இவ்வாழ்க்கையின் மரணத்தை அடைவதினும் மிகக் கடினமானது

15-வது அத்தியாயம்

(சமாஉ இராகங் கேட்டல்)

என் ஆனந்தத்தாண்டவம் புரியவில்லை? என்று கேட்கப் பட்டபொழுது ஜுனைதுல் பக்தாதீ (றலி) அவர்கள் குர்ஆன் வாக்கியமொன்றை ஓதிக் காட்டினார்கள் அது கீழ்வரும் கருத் தடங்கியதாகும்:— நீங்கள் மலைகளைப் பார்க்கிறீர்கள் எனினும் அவைகள் மேகங்கள் கலைந்து போவதுபோது குலைந்துபோய் விடுகின்றன.'' மெய்ஞ் ஞானிகளின் சரீரம் வெளிப்படை அசைவையுடையதன்று; உள்ளீடான அசைவை மட்டுமே அது பெற்றிருக்கும். வஹ்தத்துடைய 'நுக்தா'வாகிய புள்ளி தனது சுழல் நடனத்தால் கத்ரத்துடைய அநேகத் தன்மையைப் பெறுகின்றது முற்றுந் திறந்த கண்கள் மட்டுமே இதனைப் பார்க்க இயலும் ''குன் பய கூன்'' — என்ற முறையில் இந்த நடன தாண்டவம் உள்ளீட்டிலிருந்து வெளியீட்டளவில் தாத்துடைய அசைதலாகும் . உண்டாகு; அவ்வாறே ஆய்விடுகின்றது. அந்தந்த காலத்தின் 'குத்பு' பிரபஞ்சத தின் அணுக்களுடன் 'தஜுத்துல் அம்தால்' என்ற சூட்சு மாணுக்களை உயிர்ப்பித்தல் என்ற முறையின்படி தன்னை ஐக்கியப்படுத்திப் காண்கிறார் ஸமாவென்னும் இராகங் கேட்கும் நேரத்தில் 'ஔலியா'க்களில் சிலர் குர்பு-நாவாபில் என்ற நிலையை அடையப்பெறுகின்றனர்; அதில் தாங்கள்

அல்லாஹ்வைக்கொண்டே பேசுகிறார்கள். அல்லாஹ்வைக் கொண்டே கேட்கிறார்கள் அவர்கள் அகமியப் பொருளாக ஆய்விடுகிறார்கள் ஹக்கு அவர்களின் கருவியாக ஆகிறான். நானே பேசுபவனும், நானே கேட்பவனுமாய் இருக்க என்னின் வேறாக இருலோகங்களிலும் யார் இருக்கிறான் (நீர்க்குமிழி சமுத்திரத்துடன் தனக்கிருக்கும் ஐக்கியத்தை உணர்கிறது) சிலர் குர்பு-பராயிலுடைய நிலையில் புகுந்துகொள்கின்றனர். அதில் அவர்கள் பாடுபவனுடைய நாவினால் பேசுபவனையும், தங்கள் சொந்த காதினால் கேட்கிறவனையும் ஹக்கை உணர்கின்றனர்; அதாவது ஹக்கு இங்கு அகமியப் பொருளாயும், அப்து கருவியாயுமிருக்கின்றது. (சமுத்திரம் ஒரு குமிழியுடன் தனக்கிருக்கும் ஏகத் தன்மையை உணர்கிறது) பாடுபவன் ஒரு மரமாக இருக்கிறது ('சினை'யின் எரியும் புதர்) கேட்பவர் மூஸா (அலை) அவர்களாயிருக்கிறார்கள். மூஸா (அலை) அவர்களுடைய சகல அவயங்களும் அவர்களுடைய காதாக மாறி, அந்த வசனத்தைக் கேட்கின்றன. அவர்களோ இன்மையாகிவிட்டார்கள் சிலர் ஐனுல் - ஐன் ஆகிய நிலையை அடைகின்றனர்; அதில் வஹ்தத்துடைய நிலை அவர்களை மிகைத்துக்கொள்கின்றது. அவர்கள் அப்பொழுது இப்னுல் வக்து ஆக ஆகின்றனர் பாடுபவனையும், பாடலையும் அவர்களின் அகமியமாகக் கண்டு அவர்களையே பாடகனைக் காண்கின்றனர் பாடகன், பாட்டு, அசைவுகள், கருவிகள் யாவும் வஹ்தானிய்யத்தாகிய ஏகத் தன்மையைவிட்டும் புறம்பாக இல்லை ஆனால் 'அபுல்வக்து'டைய நிலை இதனைவிட சிறந்தது. இந்த நிலையைப் பெற்றவர் 'ஜம்உல்ஜம்உ' என்னும் சேகரமாகிய சமஷ்டி நிலையை உணர்ந்த பின்னர் 'பர்கு' என்னும் பிரிவினையாகிய வியஷ்டி நிலையின்பால் இறங்கி வருகின்றனர். அவர் 'சமா'வென்னும் இராகத்தை மிகைத்தவர்; இராகம் அவரை மிகைக்காது.

கேட்பதைக்கொண்டு
உல்லாச தாண்டவநிலை இராகங் கேட்பதைக்கொண்டு
ஏற்படும் ஒருவித உணர்ச்சியாலான நடனம் சாதாரண நிலைமைகளில் இதனை நாயகம் (ஸல்) அவர்கள் விலக்கியிருந்தார்கள். ஆனால் அவர்களை "ஓ, முஆவியா! எவனொருவன் மஹ்பூபைப்

(சமாஉ இராகங் கேட்டல்)

பற்றி பேசப்படுவதை கேட்டமாத்திரத்தில் உல்லாஸமடையப் பெறவில்லையோ அவன் உண்மையில் ஹக்கைத் தேடுபனல்ல என்று அருளியிருக்கிறார்கள். இராகங் கேட்பதில் ஒருவனுக்கு ஏற்படும் உல்லாசநிலை 'மீதாக்' ஆகிய வாக்கு தத்தத்தின் நாளில் இறைவன் ஆத்மாக்களை குறித்து கேட்டதை அவனுக்கு ஞாபகமூட்டுகிறது என்று ஜுனைது (ரலி) சொன்னார்கள். உல்லாசம் என்பது மீன் தண்ணீரைத் தேடுவதுபோலும், கொளுத்தப்பட்ட விளக்கின்பால் விட்டில் பூச்சி தாவிப் பறந்து செல்வதுபோலுமாகும் இராகங் கேட்பதால் சில வேளை ஜனங்கள் மீறிய உல்லாசத்தால் மரணித்தும் விடுவதுண்டு இதனாலேயே இராகங் கேட்பதைத் தடைபண்ணப் பட்டிருக்கிறது.

ஒரு ஆரம்பக்காரனுக்கு பாடகனின் பாடல் உல்லாச மடையப்பெற தேவையாயிருக்கிறது, ஒரு முதிர்ந்த ஞானிக்கோ பட்சிகளின் இராகமும், காற்றின் வீசுதலும் போதுமான இராகமாயிருக்கிறது ஒருவன் கற்பனைக்குக் கட்டுப்பட்டு வார்த்தைகளின் ரசிப்பை அடைகிறன். இதுவோ ஒரு திரை யாகும். மற்றவர் ஹக்குடைய தோற்றங்களை நோட்டமிடுவதில் ஈடுபட்டிருக்கிறார். அவர் முன்னர் இராகம் மறைந்துவிடுகிறது; கற்பனை யென்னும், திரையும் உயர்ந்துவிடுகிறது. மஜ்னூன், லைலாவைப் பார்த்தபொழுது தன்னையே மறந்துவிட்டார் லைலா பேசியபொழுதுதான் அவர் தன்னை உணர்ந்தார். அதாவது உல்லாச நிலையினின்றும் கீழிறங்கினார். இராகமானது தோற்றங்களிலே சொக்கிப்போய் யிருப்பவர்களை தங்களின் சாதாரண நிலைக்குக் கொண்டு வருகிறது. ஆயினும் ஆரம்பக் காரனுக்கு இராகமானது ஒரு ஏற்றமாயிருக்கிறது.

தீர்க்கதரசிகளின் பாதை அஸ்மாவுடையவர்களின் பாதையினும் மாறுபட்டது அஸ்மாவுடையோரின் பாதைக்கு கீழ்வரும் குர்ஆன் வாக்கியம் சான்று பகருகின்றது: — "வமா மின் தாப தின் இல்லா ஹுவ அகிதுன் பிநஸ்சிய திஹா இன்ன றப்பீ அலாசிராதின் முஸ்தகீம்" — (பூமியில்) ஊர்ந்து திரிப வற்றின் முன் நெற்றி உரோமங்கள் 'றப்' ஆகிய இரட்சகனின் கையிலிருக்கிறது; அந்த 'றப்' நேரான பாதையின் மீதிருக்கு

கிறான். அஸ்மாவுடைய பாதையில் தரிபட்டு நடந்து சாலிக் ஆகிய முமூட்சு தீர்க்கதரிசியின் பாதையில் பின்னர் நடந்தேற வேண்டும் உல்லாச நிலையில் அவர் ஒரு சமயம் எல்லை மீறி விட்டாலும் அவர் மன்னிக்கப்படவேண்டியவரேயாம்.

16-வது அத்தியாயம்

(உரூஜ் — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

'மன்கான பீஹாதிஹி அஃமா பஹுவ பில்ஆகி ரத்தி அஃமா வஅளல்லு ஸபீலா':— "இம்மையில் எவனொருவன் (அகக்கண்) குருடாக இருந்தானோ அவன் மறுமையிலும் குருடாகவும். மிகுந்த வழி கேட்டிலும் இருப்பான்" எவனொருவன் ஹக்குடைய 'தஜல்லியாத்து' ஆகிய தோற்றங்களை இம்மையில் காணவில்லையோ அவன் மறுமையிலும் அவற்றைப் பார்க்க இயலாதவனாயிருக்கிறான் இந்த உலக வாழ்வோ மறு உலக வாழ்வின் அறுவடை ஸ்தானமாயிருக்கும். அத்துன்யாமஜ்ரஅதுல்ஆகிரா.

அஜீஜ் முஸப்பீ அவர்கள் சொல்கிறபடி சுவர்க்கத்தின் இரகசியமாவது நமக்கு பிரியமான ஒன்றேயாம்: நரகத்தினுடையதோ நமக்கு விருப்பமின்றிய ஒன்றாம்: ஒன்று சந்தோஷமுடையதும். மற்றொன்று துக்கமுடையதுமாம். சுவர்க்கத்திற்கும், நரகத்திற்கும் அநேக வாயில்கள் இருக்கின்றனவாம் போற்றத்தக்க கருமங்களும், வார்த்தைகளும் சுவர்க்கத்தின் கதவுகளாகும்: வெறுக்கத்தக்க காரியாதிகளடங்கலும் நரகத்தின் கதவுகள் ஒன்றினின்று சந்தோஷமும். மற்றொன்றினின்று துக்கமும் வெளிப்படுகின்றன. இவைகளே மறு உலகில் 'தஜத்திதுல் அம்தால்' என்னும் சூட்சுமாணுக்களை உயிர்ப்பித்தல் என்பதினுடைய மூலங்களாகும் இறைவனுக்கு வழிபடுதல், பக்தி போன்ற நற்கிரியைகள் உருவமெடுக்கின்றன 'குப்ரு' பாவம் போன்ற துற்கிரியைகளும் கோலமெடுக்கின்றன.

(உரூஜ் — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

அத்துகூலுபில்குப்ரில் ஹக்கீகி. வல்குருமிஜு"ன் இஸ்லாமில் மஜஸி மெய்யான குப்ரினுள் பிரவேசித்து வெளிப் படை இஸ்லாத்தினின்றும் வெளியேறிவிடு வெளிப்படை இஸ்லாமாகிறது. 'ஷிர்க்குகபீ'யான அந்தரங்க இணைவைத்தா லாகும். உனது உள்ளமையாக உன்னால் கருதப்பட்டு வரும் உனது ஜீவ அகங்காரம்தான் மாபெரும் விக்ரஹாராதனையா யிருக்கும். 'நப்ஸ'' ஆகிய ஜீவத்தன்மை அல்லது அகங்காரமே பாரியவிக்ரஹம். அதனைபராமரித்து நோட்டமிடுவதே 'ஷிர்க்கு —தாத்தீ'யயாகும் மெய்யான 'குப்ரா'கிறது ஜீவ அகங்காரத் தை பிரம அகங்காரத்தில் கறையச் செய்துவிடுவதாம் வாக்கி யார்த்தப்படி 'குப்ரு' என்பதற்கு 'மூடிமறைத்தல்' என்ப தாகும் ஒரு வேளாண்மைக்காரன் விதையை பூமியினுள் மறைப்பதால் அவனையும் 'காபிர்' என்று அழைக்கலாம் இவ் வகையான 'குப்ரு'க்கு 'பனா' —'பில்லாஹ்' அல்லாவிலே இன் மையாதல் என்பதாகும்; ஆயினும், 'ஷரவு'படி சட்டதிட்டங் களுக்கு மாற்றமாக நடக்கும் முறை எனப்படும்.

இருவகையான 'சூபிய்'யாக்களிருக்கின்றனர் அவர் களாவன:— 'மலாமதீ' 'சலாமதீ' என்பனவாகும் வெளிப் படையில்'மலாமதீசூபி'யை குப்ருடையவர்களென்று அழைக்கப் பட்டாலும். அந்தரங்கத்தில் இவர்களே உண்மை முஸ்லீம் களும். பக்தசிகாமணிகளுமாகும் 'குப்ரு' என்பதற்கு வாக்கி யார்த்தப்படி ஒரு விதையை மண்ணினுள் மூடி மறைத்து வைத்தல் என்பதாகும் இங்கு அதன் இலட்சியார்த்தப்படிக்கு 'சாலீக்' ஆகியமுமூட்சுவினுடையஜீவத்தன்மையை'ஹக்கு'டைய சகலவற்றையும் மூடிமறைக்கக்கூடிய உள்ளமையின் நிழலிலே 'பனா' செய்தலாகிய இன்மையாக்குதலாகும் 'சலாமதீசூபி'கள் வெளியரங்க அனுஷ்டானங்களால் மிகைக்கப்பட்டவர்கள் ஹஜாரத்து கௌதுல்அஃலம் (ரலி) அவர்கள் ''பாவிகளெல் லாம் பாவத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர் பக்தர்கள் பக்தி யினால் மூடப்பட்டிருக்கின்றனர்; ஆனால் அல்லாஹ்வின் மெய் யான அன்பர்கள் இவ்விரண்டையும் விட்டு நீங்கியிருக்கின் றனர்'' என்று அருள் செய்திருக்கிறார்கள் ''அல்குருஜு"மின் இஸ்லாமில் மஜாஸிவத்துகூலுபில் குப்ரில் ஹகீகி'' என்று

அபூஅலிஸீனு அவர்கள் அபூஸஈது அபுல்கைர் அவர்களுக்கு எழுதி இருக்கிறார்கள். வெளியரங்க 'இஸ்லாத்தி'னின்றும் வெளியேறி மெய்யான 'குப்ரு' அளவில் பிரவேசிப்பாயாக. நீ மெய்ப் பொருளை ருசித்தால் வெறுஞ் சடங்காச்சாரங்களை விட்டுவிடு. பத்து மணங்கு திராட்சைப்பழத்தை நீ சாப்பிட்டாலும் உனக்கு ஒருபோதும் மஸ்து ஏற்பட வழி இல்லை உட்சதையானது பழுத்துவிட்ட உடன் வெளித் தோலால் யாதொரு பிரயோஜனமுமில்லை.

ஷெய்குயஹ்யா முனீரி அவர்கள் ஔலியாக்களுடைய பாதைகள் ஒரே மாதிரியாயிராது என்று எழுதியிருக்கிறார்கள் ஒருவர் திருப்தியாக உணவருந்தி சுகமாகத் தூங்குகிறார்; மற்றொருவர் நோன்பிலிருந்து இராவெல்லாம் கண் விழித்திருக்கிறார் ஒருவர் ஜனங்களுடன் சாவகாசித்துக்கொண்டிருக்கிறார் மற்றொருவர் ஜனங்களுடைய சம்பந்தத்தைவிட்டு நீங்கி தனித்துவாழ் கிறார். ஒருவர் கந்தையான உடைகளை அணிந்துகொண்டிருக் கிறார் மற்றொருவர் நேர்த்தியான பட்டுகளாலும். உயர்தர ஆடைகளாலும் தன்னை அலங்கரித்துக்கொண்டிருக்கிறார் ஒருவர் மௌனம் சாதிக்கிறார். மற்றவர் சதா சம்பாஷித்துக்கொண் டிருக்கிறார் ஒருவர் தனது நிலைமையை மறைத்துக்கொண்டிருக் கிறார். மற்றொருவர் தனது நிலைமையை வெளிப்படுத்துகிறார். ஒருவர் பக்தன். பாவியென்று வித்தியாசம் பாராட்டாது யாவருக்கும் ஊழியஞ் செய்கிறார் மற்றவர் பாவிகளுடைய சலாமுக்குக் கூட பதிலுரைப்பதில்லை. கேட்காமல் தானே வரும் நன்கொடைகளை ஒருவர் ஒப்புக்கொள்கிறார். மற்றவர் அதனை அங்கீகரிப்பதில்லை

'பனா'வென்னும் இன்மையாக்கலில் 'இன்மைசெய்தல்' என்ற நினைப்பு மட்டும் தரிபடுகிறது: ஒருவர் அதிலேயே அந்த நினைப்புடனே 'பகா'வை அடையப்பெறுகிறார் 'பனாஉல்பனா' வாகிய இன்மையின் இன்மையில் இன்மை செய்தலாகிய செய் தகின் நினைப்புங்கூட நழுவிவிடுகிறது இந்த நினைப்பின்றியே ஒருவர் இதில் 'பகா'வை அடைகிறார் முந்திய முறையில் அவர் தனது சொந்த 'தாத்திலே' இன்மையாக்கப்படவில்லை;

(உருஜ் — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

பிந்தியதில் தனது சொந்த 'பகா'வாகிய தரிபாட்டின் அறிவுடனும், தனது கைர் ஆகிய வேறு இன்மையானதின் நினைவுடனும் 'ஹக்குடன்' நித்தியகால தரிபாட்டைப் பெற்றிருக்கிறான் 'அதம்' என்னும் இன்மைக்கு இன்மையின் உணர்ச்சிகூட கிடையாது.

சிலர் அறிவுக்கு செயலைக்காட்டிலும் முதல் ஸ்தானம் கொடுக்கிறார் சிலர் அதற்கு மாற்றமாகக் கருதுகிறார்கள் உண்மை யாதெனில் செயலாகிறது அறிவின் ரூபமாகும் இவ்விரண்டையும் கடந்து 'ஹால்' என்னும் ஆனந்த உணர்ச்சி நிலையை அடையப் பெறு. இதுவே இவ்விரண்டினுடையது மான முடிவான இலட்சியம் 'அஹ்லுல்லாஹ்'வாகிய அல்லாஹ்க்குரியவர்கள் தௌஹீது என்னும் அத்துவித நாட்டத்தையன்றி வேறு எந்த விஷயத்திலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள மாட்டார்கள் அறிவு, செயல், நிலைமை இம்மூன்றும் படிப்படியாக நிகழ்கின்றன நேர்மையான செயல் ஒரு பூரண போதகரின் வழிகாட்டலால் நேர்மையான அறிவிலிருந்து ஏற்படுகின்றது

'பனா' நிலையில் 'சாலிக்கு' சகல 'தஅய்யுனாத்'தாகிய குறிப்புகளை 'ஹக்கு'டைய 'தஜல்லியாத்து' ஆகிய பிரதிபிம்பத் தோற்றங்களாகவும், தன்னை அவற்றிலின்றும் ஒன்றாகவும் காண்கிறார்; 'பகா'வுடைய நிலையை அடைந்துவிட்டபோது அவைகளைத் தன்னுடையதாகக் காண்கிறார் முந்தியதில் 'சாலிக்கு'டைய அறிவு 'ஹக்கு'டை அறிவில் மறைந்து விடுகிறது. பிந்தியதில் 'ஹக்குடை'ய அறிவு 'சாலிக்கு'டைய அறிவில் மறைந்து விடுகிறது. இப்பொழுது தனது சுய அறிவினாலேயே தானே அறியப்பட்டவனாக இருக்க (சாலிக்கு ஆகிய) அவன் அறிகிறான் 'கைர்' என்னும் பிறப்பொருளின் அறிவினாலன்று. ஏனெனில் அவனுடைய அறிவினால் 'கைர்' என்னும் அன்னிய வஸ்து மறைந்துவிட்டது ஹக்குடைய அறிவும், உள்ளமையும், 'சாலிக்கு'டைய 'நான்' என்னுந் தன்மையின் அறிவிலேயும், உள்ளமையிலும் மறைந்துவிட்டன இங்கு தன்னை மெய்ப்பொருளாகவும் பிறவற்றை

(பிரபஞ்சத்தை) தன்னுடைய சுயார்த்த அறிவினால் ஜீவிப்பன வாயும் காண்கிறான் 'சாலிக்கு' தனது துவிதத்தினால் ஹக்குடைய உள்ளமையைக் கொண்டுதான் உள்ளமையைப் பெற்றிருப்பதாகக் கண்டான் முன்பு அவன் 'ஹக்கு'டைய அறிவினால் அறிபவனாக தன்னை அறிந்தான். இப்பொழுது தன்னுடைய சுயார்த்த அறிவினாலேயே தன்னை அறிபவனாக அவன் தெரிகிறான் மதனவீ ஷரீபில் கீழ்வரும் பொருளமைந்த ஒருபைத்து வருகிறது அதாவது:— ''சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு மறைந்து விடுகிறது; பாமர மக்கள் இதனை எவ்வாறு நம்புவர்?'' ஹக்குடைய அறிவில் சூபியுடைய அறிவு மறையுங்காலை சூபியுடைய இன்மையாகலாகிய 'பனா' வைத் தேடும். ஆனால் சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு மறையும் வேளை சூபியுடைய பகாவாகிய சரிபடுக்கலைத் தேடும். சூபியுடைய அறிவு ஹக்குடைய அறிவில் நழுவிவிடும் பொழுது சூபியுடைய அறிவு ஹக்குடைய அறிவாகவே ஆய் விடுகின்றது. இவ்வாறாக படி ஏறுதல் அல்லது அதிகாரமாகிய 'உரூஜில்' 'சூபி' தன்னை ஹக்காகக் காண்கிறார்: ஏனெனில் இங்கு சூபியும். அவருடைய அறிவும் இன்மையாக்கப் பட்டுவிட்டன சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு நழுவி விட்டபொழுது அது 'பகா.வென்னும் சரிபாடு ஆகும் ஹக்குடைய அறிவு சூபியுடைய அறிவாகவே ஆகிறது இங்கு நீர் குமிழியே கடலுடைய அகமியமாக ஆய்விட்டபொழுது. கேவலம்—அது ஒரு குமிழியாக மட்டும் தரிப்பதில்லை குமிழியுடைய அகமியமாக கடல் ஆய்விட்டபொழுது அந்த குமிழி கடல் தானாகவே ஆகி தனது சொந்த அகமியத்தைக் காண்கின்றது மீண்டும் அறிவு உள்ளமையென்ற கண்டிப்புகளின் கீழ் சூபி இருக்கிறார். தன்னையே மறைத்துக்கொண்டு இன்மையாகியபொழுது அவருடைய அறிவு எல்லையற்றதாக ஆய்விடுகிறது இதுவே 'பனா' நிலையாகும். 'ஹக்குடைய' அறிவு சூபியுடைய கண்டிப்பின் கீழ்வரும்பொழுது சம்பூர்ண அறிவு கண்டிப்பான அறிவாக ஆகி விடுகிறது. இதுவே 'பகா' நிலையாகும் கடல் ஒரு குமிழியினுள் மறைவது போன்றும் இதுவே 'நுஸூல்' என்னும்படி இறங்குதல் அல்லது ஊர்த்துவமுகம் எனப்படும் மதனவீயில் கீழ்க்காணும் கருத்தடங்கிய பைத்து

(உரூஜ் — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

வருமாறு :— "ஒவ்வொரு அணுவிலும் ஒரு சூரியன் இருக்கிறது; ஒரு ஆட்டுக்குட்டியின் தோலின் கீழ் ஒரு வீர சிங்கம் இருக்கின்றது; முந்தியதில், உள்ளமையின் கண்டிப்புகளுக்குள் அகண்டமானதோர் சமுத்திரத்தை 'சூபி' காண்கிறார்; கண்டிப் பற்றதை தனது கண்டிப்புகளுக்குள் — சூரியனை அணுவுக்குள் — இருக்கக் கண்டடைகிறார் சம்பூர்ண அறிவையும், உள்ளமையையும் தன்னுள் கண்டிப்பாகப் பார்க்குங்காலை அவர் 'சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு மறைந்துவிட்டது' என்று கூறுகிறார். 'பனா'வென்பது சூபியை இன்மையாக்கி ஹக்கை உண்மையாக்குதலாம்; பகாவென்பது சூபியை உண்மையாக்கி ஹக்கை இன்மைபடுத்தலாகும் 'வேறு' என்னும் 'கைர்' இங்கு அறவே மறைந்து விடுகின்றது; இந்நிலையில் பிரபஞ்சம் பூராவும் அவரது சொந்த 'கமல்லி'யாகிய பிரதி பிம்பத்தோற்றமாகக்காணப்படுகிறது சவர்வமும் அருடையநாமங் கள், பண்புகள்ஆகிவற்றின்பொருள்களாய்விளங்குகின்றன இந்த நிலையில் ஷரீஅத்து (சரியை) தரீகத்து (கிரியை) ஆகியவற்றின் சட்டத்திட்டங்கள், அனுஷ்டானங்கள் யாவும் நழுவிடுகின்றன. 'பனா'வென்பது ஒருவனுடைய பொய்யான ஜீவத்தன்மை இன்மையாதலாம் பகாவென்பது மெய்யான பிர்மத்தன்மை அல்லது ஹக்குத்தன்மை சகலவற்றிலுமிருக்கக் காண்பதாம் தாத்துடைய திக்று என்னும் தியானம் தான் 'அனா'வாகிய மெய்யான 'நான்' என்பதினுடைய 'திக்று' ஆகும் எனவே அவர்கள், "அனல்ஹக்கு" 'நான் பிர்மம்' ஆகிய மெய்ப் பொருள் என்று பறை சாற்றினார்கள் இந்த நிலையில் வேற்றுமை நீங்கி விடுகின்றது "ஹூ" — (அவன்) என்பது படர்க்கை. ஒருமை பிரதிச் சொல்லாகும். தன்மையைப் பெற்றிருப்பவன் பிரசன்னமாயும், பிரத்தியட்சமாயு மிருக்கையில் இந்த படர்க்கை ஒருமை தேவையில்லை ஹக்கு தன்னைக் கொண்டு பேசும்பொழுது அவன் "நான் மெய்ப்பொருள்" — அனல் ஹக்கு என்றும் " நானே துய்யவன் " — 'சுப்ஹானீ' என்றும் கூறுகின்றான் சூபியிடைய தாத்து ஆகிய யதார்த்த ரூபத்தில் ஹக்த தரிபட்டும், சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு தரிபட்டுமிருக்கிறது சூபியாகிறவர் சிருஷ்டிப்பொருளின் தன்மைக்கு இறங்குங்காலை தான் முன்னிருந்த நிலைமையைக்

குறித்தவராக. 'ஹுவல்ஹக்கு' — (அவனே மெய்ப்பொருள்) என்கிருர் அடிமைத்தனத்தை அடிக்கடி ஞாபகமூட்டுவதே 'ஹுவல் ஹக்கு' — என்பதும், அவனுடைய பண்புகளை அவனுக்கு கொடுப்பதுமாகும்; ஹக்கை அடிக்கடி ஞாபகிப்ப தாகிறது தனக்கே அப்பண்புகளை அளிப்பதாகும்; 'ஷாஹே ஆலம்' அவர்கள் ஹக்குடைய 'ஜலாலி' அல்லது ஜமாலி (சக்தி அல்லது சாந்தி) யான திருநாமங்களை ஜெபித்தபொழுது தானே அந்நாமங்களுக்குரியோராஞர்கள். "அல்-ஜப்-பார்" அல்லது "அல்-கஹ்ஹார்" என்ற நாமங்களை கூறியதும் அவர்கள் ஒரு சிங்கம் அல்லது யானையுடைய கோலத்தில் தோற்றமாவார்கள் அவர்களின் சீடர்கள் யாவரும் அவர்களை விட்டும் விரண்டோடிவிடுவர்; "அல்ஜமீல் என்ற திருநாமத்தை மொழிந்தபொழுது அவர்கள் அழகிய தோர் வாலிபனின் கோலத்தில் காட்சியளிப்பதுண்டு.

"தானின்றிய ஆகாயமே ஆரிபுடைய அற்புதம்" இதில் நின்றும் ஆரிபு என்பது என்னவென்று விளங்கிக்கொள். உஜூது முதலக்க ஆகிய அகண்ட பரிபூர்ண உள்ளமையே 'ஆரிபு' ஆகிய மெய்ஞான சொரூபியின் பரிசுத்த 'தாத்து' ஆகிய தத்சொரூபம் அல்லது சுயார்த்த ரூபம்; 'ஜபரூத்' (காரண லோகம்) அவனுடைய பண்பாதிகளின் உலகம்; 'மலகூத்து' (சூட்சும லோகம்) என்பது அவரின் செயல்களின் உலகு. 'நாசூத்து' (ஸ்தூல லோகம்) அவரது 'ஆதார்' என்னும் அதேயங்களாகும் முடிவாக அடங்கலும் 'ஆரிபு' க்காகும். "அல்ஹம்துலில்லா ஹிறப்பில் ஆலமீன்" — (சம்பூர்ணமான) சகல புகழும் சர்வலோக இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கேயாம் 'அக்லுகுல்லி' யிலிருந்து மண் மண்டலம்வரை பூரா படைப்பும் அவனது காவலைத் தேடுகின்றன. அஸ்மாவாகிய திருநாமங்களினதும், தீர்க்கதரிசியினுடையதுமான நேரிய பாதைகள் அவரிடத்திலிருக்கின்றன. ஆரிபு என்ற அறிபவரும். 'மஃரூப்' என்ற அறியப்பட்டதும் ஏகமேயாம் (ஞாதுருவும், ஞேயமும் ஒன்றே)

(உஜ்ரு — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

காதல் என்ற நெருப்பே ஞானம் என்னும் ஜோதியாக காலப் போக்கில் ஏற்றிவிடுகின்றது. அவ்வாறு ஆய்விடுங்காலை (அந்த காதல் நெருப்பு) தனது உஷ்ணத்தை நழுவவிட்டு மன அமைதியையும். இன்ப அனுபவத்தையும் அடையப்பெறுகிறது. மதனவீ ஷரீபில் :— "நான்காம் நிலையில் ஹக்குடன்உரையாடல் என்பதைத்தவிர தேடுதலென்பதில்லை;

ஆரிபுடைய இன்ப நுகர்ச்சி காதலைவிட தலைசிறந்தது என்ற பொருள் பொருந்திய ஓர் பைத்து வருகின்றது

இஷ்கு ஆகிய காதலின் சூடு ஒருதரமே எரிகின்றது; ஞானத்தினதோ அநேக தடவைகள் எரிகின்றன ஞானியோ பானியாகிய இன்மையாக்கப்பட்டவர்; ஆயினும். ஒவ்வொரு விநாடியும், அவர் பாகீயாகிய தரிபாட்டைப் பெறுகிறார். காதலரின் இன்பம் தனது சொந்த உள்ளமையின் பேரிலிருக்கும். இன்மையாக்கப்பட்ட ஞானியினதோ ஹக்கின் பேரிலாகும். அந்த ஞானி ஹில்வா'வாகிய தித்திப்பு பாதார்த்தந்தானாகவே ஆய்விடுகிறார். இன்பானுபவத்தின் பாகுபாடுகூட அவரிடத்தில் கிடையாது முல்லாஜாமீ (றஹ்) அவர்கள். "ஒவ்வொருவரும் ஒரே தடவை மரிக்கிறார்கள் ஏழை 'ஜாமீ' மட்டும் அநேக தடவைகள் மரணிக்கிறான்" என்று கூறியிருக்கிறார்கள்.

காதல் என்பது 'ஜலால்' ஆகிய மகிமை அல்லது மகத்துவத்தின் 'தஜல்லி'யாகிய தோற்றம். 'இபான்' ஆகிய ஞானமோ 'ஜமால்' ஆகிய பேரழகின் 'தஜல்லி' யாகிய தோற்றம். ஒன்றில், காதலர் 'பனா'வாகிய இன்மையாக்கப்படுகிறார்; மற்றொன்றில், 'ஆரிபு' 'பகா'வான தரிபாட்டைப் பெறுகிறார் ஒன்றில் அது "நீ என்னைப் பார்க்க சக்திபெறமாட்டாய்" — லன்த-ரானீ என்றும்; மற்றொன்றில், "நீ உன் றப்பளவில் பார்ப்பாயாக" — "அலம் தர இலாறப்பிக" "பரிசுத்தப் பள்ளியிலிருந்து தூரத்திலமைந்திருக்கும் பள்ளிக்கு ஒரு இரவில் தனது அடிமையை எடுத்துச் சென்ற அவனுக்கே மகிமை யாவும்"

அஸ்ராரே அனல்ஹக்

ஒன்றில் காதலர் தானாகவே இறைவனிடம் முடுகுகிறார்; மற்றொன்றில் 'ஆரிபு' இறைவனால் அழைக்கப்படுகிறார். மூஸா (அலை) அவர்கள் நெருப்பு தேடிப்போனபொழுது இறைவன் அவர்களிடம் ஒரு எரியும் புதரிலிருந்து வசனித்தான். அவன் இதர எந்த கோலத்தில் தோன்றியிருந்தாலும் மூஸா (அலை) அவர்கள் திரும்பிப்போயிருப்பார்கள். தனது மனதை எதன் பேரில் செலுத்தியிருக்கிறானோ அந்த வஸ்துவின் பால்தான் மனிதன் திரும்புகிறான். சிலருக்கு இறைவன் முகவரை கீராத வாலிபனின் கோலத்தில் காட்சியளித்தான். ஷெய்கு பஹாவுத்தீன் நக்ஷபந்தீ அவர்களுக்கு ஷெய்கு நிஜாமுதீன் ஒளலியா உடைய கோலத்தில் தோன்றினான். நமது நாயகம் (ஸல்) அவர்களுடைய அருமை மகளான செய்யிதுனா பாத்திமா (ரலி) அவர்களுக்கு நாயகம் (ஸல்) அவர்களுடைய திருகோலத்திலே காட்சியளித்தான் 'கஸ்பு'டையவர்களின் மனதில் எற்படும். 'தஜல்லியாத்து'க்கு யாதொரு கோலமும், வடிவமுமில்லை

சுப்ஹானல்லதீ அஸ்ராபி அப்திலைலன் — (மிஃராஜுடைய) இராவிலே தனது அடியானைப் பிரயாணப்படச்செய்த அவனுக்கே மகிமை அடிமை போகவில்லையென்றும், போகுமாறு செய்யப்பட்டாரென்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதொன்று. வினைச்சொல்லுக்குரிய எழுவாய் 'அவன்' என்பதாகும். மூஸா (அலை) அவர்களுடைய விஷயத்தில். "லம்மாஜாஅ மூஸாலிமீகாத்தினா" — நம்மால் குறிப்பிடப்பட்ட அந்த வேளையில் மூஸா வந்தாரென்றும் "லன்தரானீ" — 'நீர் என்னைக் காணமாட்டீர்." என்ற பதில் அவர்களுக்குக் கிடைத்ததென்றும் கூறப்படுகின்றது. அழைக்கப்பட்டவரின் நிலையில் "அலம்ய அலமு பிஅன்னல்லாஹயரா" — நிட்சயமாக நாயன் பார்க்கின்றானென்று அவருக்குத் தெரியாதா? என்பதாகும். ஹக்குடைய திருசமுகத்துக் கொண்டு போகப்பட்டு அங்கு பார்பவரும், பார்க்கப்பட்டதும் 'ஹக்கு' ஆக ஆன வேளை நாயகம் (ஸல்) அவர்களுடைய கண்கள் வேறு ஆகிய பிரபஞ்ச அளவில் குருடாயிருந்ததென்பதை இராவில் நடந்தேரிய வசனங்கள் தெள்ளெனக்

(உஜ்ரு — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

காட்டுகின்றன: '' நாயகம் (ஸல்) அவர்களுடைய நேத்திரங் கள் எத்திசையும் திரும்பவில்லை; எல்லையையும் மீறிவிடவில்லை.''

முன்னர் நாயகம் (ஸல்) அவர்கள் பார்ப்பவர்களாயும், 'ஹக்கு' பார்க்கப்பட்டவனுயும், அவர்கள் கேட்பவர்களாயும் 'ஹக்கு' பேசுபவனுயும் இருந்தார்கள். இப்பொழுது முன்பின் மாற்றமாய்விட்டன. அவ்வேளை முஹம்மதே! சற்றே நிற்பீராக உம்முடைய நாயகன் உம்மை தொழுதுகொண்டிருக்கிருன் முன்னர் நீர் இறைவனைப் புகழ்ந்தீர்; இப்பொழுது அவன் உம் மீது புகழ் கூறுகின்ருன். (அதாவது) அவன் தனது முந்திய நப்ஸின் மீது புகழ் மொழிகளைக் கூறுகிருன் முன்னர் நீர் புகழ்பவராயிருந்தீர் : இப்பொழுதோ நீர் (மஹ்மூது ஆகிய) புகழ்ப்பட்டவராக இருக்கின்றீர்.

தொழுகை இரு வகைப்படும். அவையான: —

1) சாதரண தொழுகை 2) விஷேத் தொழுகை என்பனவாம் பிரபஞ்ச வஸ்து ஒவ்வொன்றும் சாதாரண தொழுகையில் ஈடுபட்டிருக்கின்றன: '' யுஸப்பிஹு லில்லாஹி மாப்பிஸ்ஸமாவாத்தி வல் அர்ளி '' — வானங்களிலுள்ள வையும் பூமியிலுள்ளவையும் (அவனது மகிமையைப்பற்றிப்) புகழ் கூறிக்கொண்டிருக்கின்றன. விஷேஷத் தொழுகையோ ஆரிபீன் ஆபிதீன்களாகிய பக்தர்களுடையதும். ஞான சொரூபிகளுடையதுமான களாகிய கண்டிப்புகளென்பது 'ஹக்கு'டைய 'கைர்' தொழுகையாகும் ஆகிய பிறப் பொருளன்று ஏனெனில் அவைகளுக்கு ஹக்குக்கு வேருக யாதொரு அத்தியாவசிய உள்ளமையுமில்லை 'சாலிக்கு' ஆகிய முமூட்சு 'பனு' நிலையை அடைந்துவிட்டபோது தாத்துடைய அத்தியாவசிய உள்ளமைக்கு வேருனதோர் உள்ள மையைப் பெறுகிருன்; அதாவது, அவன் சிபாத்துடைய உள்ளமையை அடைகிருன். இதனுலேயே மீர் ஹசன் சஆதத் என்பார் தங்களுடைய 'தன்ஸீ அத்துல் அர்லாஹு' என்ற கிதாபில். (கண்டிப்பையுடைய) பந்தாவான அடிமை 'முஜா ஹதா' வென்னும் தெண்டிப்பிடினல் ஒரு 'வலி'யாக ஆகின்ருரே

யொழிய ஹக்காக ஆவதில்லை மன்சூர் ஹல்லாஜ் (ரஹ்) அவர்களுடைய அனல் ஹக்கு பிரதாபமும், அபூயஸீது (ரஹ்) அவர்களுடைய 'சுப்ஹானீ' யும் வெறும் கண்டிப்புகளேயாம் 'கலாம்' என்னும் பேச்சுடைய பண்பின் தோற்றங்களே இவைகள்; அவருடைய நாவைக்கொண்டு அவன் பேசுகிறன். 'சிஜ' மரத்தின் வசனமாகிய, "இன்னீ அனல்லாஹு லா இலாஹ இல்லா அன" — "நான் உனது அல்லாஹ்வாகும். என்னின் வேறான நாயன் யாருமில்லை" என்பது இந்த வகையைச் சேர்ந்ததே. மன்சூர். அபூயஸீது. மரம் ஆகியவர்கள் இறை வசனத்தின் தோற்றப் பொருள்களேயாகும் அவர்கள் ஹக்குடைய கருவிகளேயாவர் எனினும் ஹக்குதானன்று. 'பனு'வில் சாலிக்குடைய உணர்ச்சி மறைந்து விடுகின்றது. இங்கு உணர்ச்சியென்றல் வஸ்துக்களின் அறிவும் 'கைர்' ஆகிய அன்னியத்தை ஸ்திரப்படுத்தலுமாம் அவ்வேளை அவருடைய பார்வையில் வஸ்துக்கள் உள்ளமையாகவே ஆய்விடுகின்றன. இந்த நிலை சதா தரிபட்டுவிட்டால் அவர் மஜ்தூப் அல்லது பரவச நிலையில் சொக்கியவராகின்றர்.

அலி (கர்) அவர்கள் அருளியிருப்பதாவது: —

என்னுடைய மனதில் மாபெரும் (அந்தரங்க) ஞானம் ஒன்று உண்டாயிருக்கிறது அதனை நான் வெளிப்படுத்துவேனாயின் கிணற்றினுள் இறக்கப்பட்ட (வாளியின்) கயிற்றினைப் போல் நீங்கள் யாவரும் நடுநடுங்குவீர்கள் இப்னு அப்பாஸ் (றலி) அவர்கள் "அலம்தரா கைபகலகல்லா ஹு சப்அசமாவாத் தின் திபாக்கா" — ஏழு வானங்களையும் எவ்வாறு அல்லாஹ் சமமாகப் படைத்தான், என்ற வேத வாக்கியத்தை நான் வியாக்கியானம் செய்திடுவேனாகில் நீங்கள் என்னை கல்லெறிந்து கொன்றுவிடுவீர்களென்று கூறியிருக்கிறர்கள்.

'தஜல்லி'யாகிய தோற்றம் இரு வகைப்படும் அவை யாவன: — றஹ்மானி தஜல்லி (இறைவனது தஜல்லியாகிய தோற்றம்) ரூஹானி தஜல்லி (மனதின் தஜல்லியாகிய தோற்றம்) எனப்படும். அனேக சாலிக்குகள் பிந்தியதின் பாதையில் ஒரு வித இன்பமும், மகிழ்ச்சியும் அவர்கள் மனதில்

(உஸ்ரு — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

உதயமான வேளை அவற்றினால் திருப்தியடைந்து வழி கேட்டி
லாகிவிடுகின்றார்கள் இந்தவிதமான தஜல்லியாகிய பிரதிபிம்பத்
தோற்றங்கூட அனல்ஹக்கு - நானே மெய்ப் பொருள் என்று
கூறும். ஏனெனில் சர்வ சிருஷ்டிகளும் தம் சிம்மாசனத்தின்
முன்னர் சாஷ்டாங்கம் செய்வதைக் கண்டு அவ்வாறு கூறு
கின்றது. ஆனால் அது ஒரு நொடிப்பொழுதில் மறைந்துவிடக்
கூடியதேயாம்; அதாவது. அதில் மெய்யாக இன்மையாதல்
என்பதில்லை. அது மறைந்துவிட்டபொழுது மீண்டும் மிருக
இச்சைகள் ஏற்படுகின்றன 'நப்ஸு' முன்னதைவிட
இப்பொழுது மனிதன்பேரில் தனது அதிக்கத்தை அதிதீவிர
பலத்துடனும், வன்மையுடனும் செலுத்தும் 'ஹக்கு' சினை
மலையில் தோற்றமளித்தகாலை அம்மலைத் தவிடு பொடியாய்த்
தகர்ந்தெரியப்பட்டதைப் போன்று 'தஜல்லி றஹ்மானியாகிய
இறைவனது பிரதிபிம்பத் தோற்றத்தால் நப்ஸு என்னும்
அகங்காரமாகிய பர்வதம் தூள் தூளாகிவிடும் சைத்தானி
தஜல்லியில் சந்தேகங்கள் அடிக்கடி மனதைத் தாக்கிக்கொண்
டிருக்கும். தெய்வீக ஞானத்தின் இன்பம் இங்கு பூர்த்தி
யடையப் பெறுவதில்லை. கர்வம் மனதில் இடம் பெறுகிறது.
ஒருவனது ஜீவ அகங்காரம் மேலும் மேலும் உறுதிப் பெரு
கின்றது. அப்பொழுது ஷரீஅத்துடைய விலங்குகளைத்
தகர்த்துக்கொள்கிறான். ஆனால் றஹ்மானி தஜல்லியில் இவை
யாவும் பொசுக்கப்பட்டு விடுகின்றன.

"தஜல்லியானது ஒரு பிட பூமியிலுள்ள மலை மீது
வீழ்ந்தால். அம்மலை தறிக்கப்பட்ட கள்ளியைப் போன்று துண்டு
துண்டாகிவிடும்;

உள்ளமை என்ற மலை மீது விழுமாயின் தெருவி
லிருக்கும் தூசியை போன்று அவ்வுள்ளமை அப்பொழுது ஆகி
விடும். "இதில் சாலிக்குடைய இருப்பு இருப்பின்மையாக மாறு
கின்றது சிறுமலையைப் போன்று அது திரும்ப மீளுவதில்லை
சிறுமலையும் மீண்டும் தனது முந்திய இருப்பைப் பெறவில்லை.
ஆகையால் மூஸா (அலை) அவர்கள் தங்களுக்கென தனி உள்ள
மையை வைத்துக்கொண்டே இறைவனைப் பார்க்க நாடின

பொழுது தவிடு பொடியாய்ப்போய் நிலை குலைந்த அந்த சிறு மலையைப் பார்க்கும்படி ஏவப்பட்டார்கள். தனக்கென் ஒரு தனி உள்ளமையை வைத்துக்கொண்டு மூஸா (அலை) அவர்கள் றஹ்மானி தஜல்லியை தாங்க முடியாது மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார்கள்.

றஹ்மானி தஜல்லியில் சாலிக்கு தனது ஜீவத் தன்மை நீக்கப்படவும், அது மீண்டும் திரும்பா வண்ணமாயும் காண்கிறான். இதில் அல்லாஹ்வைத் தெரிசிக்க வேண்டுமென்ற ஆசை மேலும் மேலும் அதிகரிக்கின்றது. றஹ்மானி தஜல்லி மூன்று வகைப்படும்:— (1) செயல்கள் (2) பண்புகள் (3) 'தாத்து' ஆகிய சுயார்த்த ரூபம் ஆகியவற்றினுடையவை. தாத்துடைய தஜல்லி மிகவும் அரிது. இன்மையாவதைவிடவும், அகங்காரத்தை ஒழித்தலைவிடவும் யாதுமில்லை.

நாம் 'அப்ஆல்' ஆகிய செயல்கள், சிபாத்தாகிய பண்பு இவ்விரண்டின் தஜல்லியைப்பற்றிப் பேசுவோம். தொழில் படும் சிபாத்தாகிய பண்புகளின் தஜல்லியில் 'சாலிக்கு' தனது மனதில் தனது இருப்புத் தன்மையையும், வஸ்துக்களையும் ஹக்குடைய அவர் ஹக்கை கேட்பவனைகவும் பார்ப்பவனையும் காதுகளாலும் கண்களாலும் பார்க்கிறார் தொழிற்படும் பண்புகளுடைய கண்ணாடியாகப் பார்க்கிறார் ஹக்குடைய தாத்திலே வஸ்துக்களுடைய தாத்து இவ்வாறாக இன்மையாகிறது. அநேகத் தன்மை அவரை விட்டும் மறைந்துவிடுகின்றன அறிவாலும், கற்பனையாலும் மட்டுமின்றி தனது கண்களைக் கொண்டே அவர் ஒரே தாத்தையும், ஒரே உள்ளமையும் பார்க்கிறார் தன்னையும், வஸ்துக்களையும்பார்ப்பதை இழந்துவிடுகிறார். இதுவே அவர் அல்லாஹ்வை அறியும் அறிவாக ஆகிறது ஆகவே அவர், ''இன்னி அனல்லாஹ் லா இலாஹ இல்லா அன'' நானே அல்லாஹ் என்னின்வேறாக நாயன் யாருமில்லை, என்று சொல்லவாகும். இதனை மத்னவீஷரீப் கீழ்வருமாறு நன்கு விளக்கிக்கிறார். இதனை — ''சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு காட்டுகிறது — மறைந்து விடுகிறது; எவ்வாறு பாமரர்கள் இதனை உணர்ந்துக்

(உ-ம் — பாடி எழுதல் அல்லது அகிதா முகம்)

சொல்வர்?" 'ஆபி'ஹக்காக அர்ப்பணிப்பது ஹக்காக அவ
வேற்றுமையும் மறைந்து விடுகின்றது. பட்சிகள் பிரதிப்
பெயர் ஆபியை விட்டும் மறைந்ததும் ஆபி தனது 'சுயம்' ஆகிய
தன்மையைத் தேடுகிறார். பிரபஞ்சத்தை விட்டும் தூரமாகின்றார். தான்
பிரசன்னம் இல்லாமலிருக்கிறார். தானே பிரமென்று பாவித்துக்
கொள்கிறார். ஹால் என்னும் நிலையானது பயன்தரத்தக்கது
கொள்கிறார். ஹால் என்னும் நிலையானதொரு பயன்தரத்தக்கது
அல்ல, பாயஸீது (றலி) அவர்கள் தன்னிலையைக் குறித்து நிலைப்
பின் முடிவும், பலஹீனமான 'ஹால்' உண்டாயிருக்கிறது. அதன்
நிலைப்பிலேதான் கட்டுப்பட்ட காலத்தில் ஒரு 'ஆபிட்' ஆகியதாகவி
கல்புடையவர் ஆகினரென்று கூறியிருக்கிறார்கள். 'வாஜிதாகீதரீக
கைச் சேர்ந்த 'ஆபி' அஹாக்காகிய பரிபூரண முறைமையைக் கண்ட
பிடிப்பதில்லை; மேலும், 'ஹக்கு' என்னும் பரவசத்தையும் பெறுவ
தில்லை எல்லா நிலைமைகளிலும் அவர் தன்னையே காண்கிறார்
பாயஸீது (றலி) அவர்கள் நூல்களாகிய தரீக்குகளிலிருப்ப
வில்லை. தன்னை ஹக்கு ஆக இருக்கக்கண்டார்கள் 'ஆபி ஒருவர்
சிறுவிலும், அதனிலும்கூறும் எப்பொருள்களைப் போன்றதையே
ஒரு கூட்டத்திலும் கண்டு அறிந்திருக்கிறார்" [சாதி] பாவ
மும், பாவமின்மையும் அவனுக்கு ஒன்றாகவே தோன்றுகின்றன
நாயகம் (ஸல்) அவர்கள், "கல்லுஹுயீ ஹுவல் மின்ஹுமா ஹுவ
லாஹு—" என அழகும் அல்லாஹ்வுடைய அழகில் நின்று
மாயிருக்கும். "இன்னல் லாஹுஜமீலுன் யுஹிப்புல் ஜமால்—"
அல்லாஹ் அழகு நிறைந்தவன்; அழகையே அவன்
நேசிக்கிறான்: அவனே சம்பூர்ண அழகுடையோன் ஒரு கீதம்
பாடு:—நீ அழகான பெண்மணிகளைப் பார்க்கும் கண்களை
லோகத்தின் ஹவிருள் என்பதை ஞாபகித்துக்கொள்; உன்னை
இம்மையிலிருந்து மறுமைக்கும். மறுமையிலிருந்து சம்பூர்ண
அழகுபொருந்திய ஹக்கு அளவிலும் சாட்டிவிடு நாயகம் (ஸல்)
அவர்கள் ஜைனப் [றலி] அவர்களைக் கண்டபோது தன்னை
சம்பூர்ண அழகின் பால் சாய்த்துவிட்டு அபூபக்கர் சித்தீக் [றலி]
அவர்களிடத்தான் மிஃராஜில் கண்டதினுடைய [அழகின்] ஒரு
சிறு அம்சத்தை மட்டும் ஜைனப் இடம் கண்டேன், என்று கூறி
னார்கள். 'புராத்' பிர மீந்நிர் கெஸ்லாமலேயே அவர்கள்
தாகத்திலேயே வாழ்ந்து கொண்டார்கள்

உருஜ் ஆகியபடிஏறுதல் அல்லது அதோ முகத்தில் 'சாலிக்கு' அர்ஷு என்னும் தெய்வாசம் வரையிலும் பூதாகாயத் தைக்காண்கிருர். அங்கிருந்துசடத்தன்மையானது சூட்சுமத்தின் நிறத்தை எடுத்து, மிகுந்த கனக்குறைவின் காரணமாக ஒளி அல்லது ஜோதியாக மாறுகிறது. ஆன்ம லோகத்தில் பின்னர் ஆன்மாவின் நிறத்தைப் பெறுகிறது. 'சாலிக்கு' அஃயானுடைய நிலைக்கு வந்துவிட்டபொழுது தன்னை ஒரு 'ஐன்' ஆக மட்டும் பார்க்கிருர். அதாவது அறிவிலுள்ள ஒரு கோலமாகக் காண் கிருர். பின்னர் முடிவில் ஹகீகத்து இன்ஸானியாகிய மானிட னின் அகமியத்தை அடையப் பெறுகிருர். தாத்துடைய தஜல்லி உதயமாய்விட்டவேளை இந்நிலைகளெல்லாம் பொசுக்கப் பட்டு இல்லாமலாக்கப்பட்டு சகலமும் அகண்ட பரிபூர்ணமாக ஆய்விடுகின்றது. பிறகு அவர் மண்மண்டலம்வரையிலுள்ள எல்லா நிலைகளிலும் கீழிறங்கி ஒர்சம்பூர்ணகலீபா அல்லது ஹக்குடைய பிரதிநிதியாக ஆகிருர். இதுதான் ஸைரெ-கபீர் என்னும் பெரிய யாத்திரை எனப்படும். ஸைர்-சகீர் என்ற சிறிய யாத்திரையில் ஆன்மா, மனம், நப்ஸு, சடம் ஆகிய யாவும் ஹக்குடைய வர்ணத்தை தீட்டப்படும்காலை திடீரென்று ஆண்டவ னின் அருள் 'சாலிக்கு' மீது இறங்குகின்றது. ஸ்தூல சரீரம் சூட்சுமமாயும், சூட்சுமம் காரணமாயும், 'காரணம் மகாகாரண மாகவும் இவ்வாறே அவர் உன்னததைப் பெறுகிருர்.

உள்ளமையின் குறிப்புகள் அல்லது எல்லைக் கோடுகள் நீங்கிய இடமே 'பஹ' வெனப்படும். ஒரு திட ஞானயாகிய 'சூபி' தன்னுடைய உள்ளமையும், தாத்தையும் மறைய காண் கிருர் 'குல்லுஷைஇன் ஹாலிகுன் இல்லாவஜ் ஹஹூ' — அவனது முகம் நீங்கலாக இதர ஒவ்வொரு வஸ்த்தும் அழியக் கூடியதே' என்பதை அவன் நன்கு உணர்கின்ருர். இந்த நிலையி லிருந்து அவர்இறங்கும்பொழுதுஹக்குடையபண்புகளுடனேயே 'பகா'வாகிய தரிபாட்டில்இறங்குகிருர். அவ்வாருனமனிதர்களை அக்காலத்தில் தீர்க்கதரிசிகளென்று அழைக்கப்பட்டது. இக்காலத்திலோ 'குத்புல் அக்தாப்' என்றும் 'கௌது' என்றும் அழைக்கப்படுகிறது. அவர்களுக்கு முஹம்மது (ஸல்) அவர்களே நடுநிலையாக இருந்தார்கள்

(உஜ்ரு — படி ஏறுதல் அல்லது அதோமுகம்)

அல்லாவிலே இன்மையானவரையே பக்கீர் எனக்
கூறப்படுகிறது. எனவே பிரபஞ்சம் பூராவும் அவருடைய
ஆஸ்தி. ஒருநாள் ஒரு 'குத்பு' யாத்திரை செய்துகொண்டிருக்
கிறார். அவர் ஒரு வயலில் நின்ற குதிரையொன்றைப் பிடித்து
அதன்மீது சவாரியாகப் போனார். அவருடன் சென்ற செய்யிது
முஹம்மது கேஸுதாராஜ் (ரஹ்) அவர்கள் இதனை சட்டவிரோத
மென்று சுட்டிக்காட்டினார்கள். அதற்கு அந்த பக்கீர் "நான்
'கைர்' ஆகியபிறவற்றின் சொத்தைத் திருடவில்லை என்பதை நீர்
பார்க்கவில்லையா" என்று பதிலுரைத்தார் இவ்வாறு ஜுனைது
நூரீ, ருயம் முதலானவர்கள் பக்தாதின் கடைவீதியிலுள்ள
கடைகளிலிருந்து வஸ்துக்களை சொந்தக்காரர் அனுமதியின்றி
எடுத்துக்கொண்டார்கள். ஏனெனில் அவர்கள் 'ஹக்கி' லே
'பானி' இன்மையாக்கி இருந்தார்கள்.

'மிஃராஜு' ஆகிறது 'ஹுவல்குருஜு' அன்குல்லி
ஷைபின் சிவல்லாஹ்' — அதாவது மாசிவல்லாவாகிய அல்லா
வின் வேறு ஆகிய பிறப் பொருளை விட்டும் வெளியாகி தன்னை
காலி செய்துகொள்ளுதலாகும், அது இரு வகைப்படும்:—
அதாவது சிறிய மிஃராஜ்' பெரிய 'மிஃராஜ்' எனப்படும். முந்திய
தாகிறது 'ஸுலூக்கு' 'முஜாஹதா' (தெண்டிப்பு) 'நப்சு'க்கு
மாற்றஞ் செய்தலாகியவற்றைக் கொண்டு ஜீவத் தன்மையை
விட்டும்வெளியேறுதல். இது ஆபிதீன்களாகிய வணக்கவாளி
களுடையது- பெரிய 'மிஃராஜா' கிறது 'நபீ'யாகிய இன்மையும்,
இத்பாத்து என்னும் தரிபடுத்தலுமாகும். 'கைர்' என்னும் பிறப்
பொருளை இன்மையாக்கி 'ஹக்கு' ஆகிய மெய்ப்பொருளை தரி
படுத்தலாகும். எனவே தன்னை இன்மையாக்கி ஹக்கில் தரி
பாடாக்கி இருக்கிறார்.

குரு கடாச்சத்தாலும் வழி காட்டலாலும் ஒருவர் தனது
சொந்தஉள்ளமையின் அம்சத்தை 'ஹக்குடைய' உள்ளமையின்
அம்சமாகமாற்றிக்கொள்கிறார் 'நப்ஸை' பழு செய்தல் என்பது
அவருக்கு தேவையாகாது 'ஷுத்தாரிய்யா'க்களிடத்தில் பழு
செய்த லென்பது கிடையாது.

அஸ்ராரே அனல்ஹக்

'கைர்' என்னும் அன்னிய வஸ்தே இல்லையென்ருகும் பொழுது எதனை நாம் இன்மையாக்குவது? என்ற கேள்வி எழுகிழுது. இன்மை செய்தல் என்பது சொல்மாத்திரமேயுள்ளது. ஏனெனில் உள்ளமை அற்றது முடிவில் உள்ளமை அற்றதேயாம்.

இத்திஹாது (சிருஷ்டிப்பொருள்களுடன் ஹக்கு இரண்டறக் கலந்து இருப்பது) என்பது ஒரு வஸ்து மற்ருெரு வஸ்துடன் சேர்ந்திருப்பதல்ல. 'ஹக்கு' டைய உள்ளமையுடன் வஸ்துக்கள்வெளியீடாகும்போது 'ஹக்கு' டன்வஸ்துக்கள் இத்திஹாதைப் பெற்றிருக்கின்றன. இதுவே 'மாஹிய்யத்து' (சேர்ந்திருத்தல், சூழ்ந்திருத்தல், சமீபித்திருத்தல்) என்பதன் பொருள். அது சாயத்துடன் வார்த்தைகளுக்கும், வார்த்தைகளுடன் சாயத்துக்கும் இருக்கும் ஐக்கியம் போன்ருகும். குர்ஆனில் மாஹிய்யத்து 'இக்கிஹாது' 'குர்பத்து' என்றவார்த்தைகள் எங்கெங்கு நிகழ்கின்றதோ அங்கங்கு 'சூபியா'க்கள் மேற்கூறப்பட்ட கருத்தையே கொள்வர். இவ்வாறே சிருஷ்டிப் பொருள், பண்புகள் ஆகியவை இதுபோன்றே பொருள் கொள்ளப்படும்.

ஷெய்குஜுனைதுல்லா அவர்கள் சொல்படி:— அல்லாவுடைய தெரிசனை வெகுநுட்பமானதோர் 'ஹிஜாப்' ஆகிய திரையின் வழியாகத்தான் கிடைக்கப்பெறுகின்றது. இந்த மிருதுவான திரையே. ஒருவன் அந்த தெரிசனையாகிய பார்வையைப் பெற்றிருக்கிருன் என்ற அறிவு ஆகும். இத்திரையானது நீக்கப்பட்டவுடன் பார்ப்பவனும், பார்க்கப்பட்டவனும் 'ஹக்கு' ஆக ஆகின்ருன். இதுவே 'பனுயெஇல்மி' என்னும் அறிவில் இன்மையாதல் யென்பதாம்.

''சொல்வீராக! எனது இறைவா! எனக்கு அறிவைப் பெருக்குவாயாக'' குல்ரப்பி சித்னீ இல்மன்: கால முடிவு பரியந்தம் ஒவ்வொரு 'தஜல்லியும்' எதன்மீது வீழ்கின்றதோ அதன்பால் அதிகமான ஒளிவைப் பரத்துகின்றது

(உஜ்ரு — படி ஏறுதல் அல்லது அதோமுகம்)

'பஞ' நிலையை 'அப்து' ஆகிய அடிமை அடையும் பொழுது அவர் 'மகாமுன்மறைமூது' என்ற புகழப்பட்டஸ்தானத்தைப் பெறுகிறார். அதில் அவர் ஹக்குடைய பண்புகளை அளிக்கப்படுகிறார். மேலும் சகலவற்றின் எஜமானுமாயும். இறைவனது பிரதிநிதியாகிய கலிபாவாயும் ஆகிறார். ''இன்னீ ஜா இலுன் பில்அர்ளிகலிபா'' — நாம் திடனாக உண்மைப் பூமியில் ஒருபிரதிநிதியாக்கினோம் '' 'குத்பும்.கௌதுர்முதற்குறிப்பாகிய வஹ்தத்திலிருந்து பூக பௌதிகங்களால் சமைந்த மண் மண்டலம்வரை எஜமானர்களாயிருக்கிறார்கள் ஆனால்அஹமது கஸ்ஸாலி அவர்கள், இரு தரப்பட்ட பாத்தியதை அல்லது உரிமையைத் தேடாதே. அடிமை ஒரு குதிரை மீதேறிச் செல்கிறான். குதிரை அவனுடைய சொத்தாக ஆவதில்லை. '' அனல் ஹக்கு' ' — நானே மெய்ப் பொருள் என்று யார் சொல்கிறார்களோ அவர்கள் எரியும் புதராகிய சினா' மலையின் மரத்தினைப் போன்றவர்களே. அந்த மலையோ 'இன்னீ அனல் லாஹூலா இலாஇல்லாஅனா' — திடனாக நானே அல்லாவாகும், என்னையன்றி நாயன் யாருமில்லை என்று கூறிற்று '' குர்ஆன் நபி அவர்களுடைய உதடுகளினின்றும் வெளிவந்த போதிலும், ஹக்கு பேசவில்லை என்று எவன் கூறுகிறானோ அவன் ஒரு காபிர் ஆகும். '' எவனொருவன் லாஇலாஹஇல்லா அனா (என்னைத்தவிர நாயன் யாருமில்லை) என்று சொல்கிறானோ அவன் கைர் ஆகிய பிறப் பொருளின் இருப்பை இன்மையாக்கி உள்ளமையை ஹக்கின்பால் தரிபடுத்துகிறான்.

'' அரப்து ரப்பீ பிரப்பீ — 'நான் எனது நாயனை என் நாயனைக்கொண்டே அறிந்தேன்.' ஆரிபும் ஒரு 'கைர்'தான் ''

சம்பூர்ணமான ஒரு பரம இரகசியத்தை வெளிப்படுத்தலே 'அனல் ஹக்கு. அனல் ஹக்கு என்று கூறுதற்கு ஹக்கையன்றி இருப்பது வேறு யார்?

ஷைய்குமுஹியித்தீன் அவர்கள் தங்கள் 'ரிஸாலாத்துல் அன்வார்' என்னும் நூலில் சில மஷாயிக்குகள் இம்மையிலேயே ஹக்கைத் தெரிசிக்கலாம் என்பதை நம்புகின்றனர் சிலர்

தெரிசனையை மறு உலகிற்கு விடுத்து செயல்களில் மட்டுமே நம்பிக்கை வைக்கின்றனர் ஷெய்கு அவர்களோ முந்திய வகையில் நம்பிக்கை கொள்கின்றனர்.

'அல் இல்முஹூ ஜாபுல் அக்பர்' — அறிவு ஓர் மாபெருந் திரையாயிருக்கிறது' — பேராச்சரிய நிலையில் கொண்டுவிடக்கூடிய 'ஷுஹூது' ஆகிய தெரிசனையைக் கொண்டு அடையப்படக்கூடிய அறிவு இதுவே. பரவசத்தால் அடையப்படும் அறிவு இந்த பேராச்சரியத்தினின்றும் எழக் கூடிய மனோ அமைதியை அடையச் செய்கின்றது. ஒன்று தேனைப்பார்ப்பதால் உண்டாகும் அறிவு போன்றும், மற்றொன்று அந்த தேனை ருசிப்பதால் உண்டாகும் அறிவு போன்றுமாகும்.

நாசூத்தாகிய கண்காட்சி உலகிலிருந்து ஆரம்பித்து மலக்கூத்தாகிய செயல் உலகினுட் புகுந்து, ஜபரூத்து எனும் பண்பு உலகிலாகி, பின்னர், அஸ்மாவாகிய நாமகத் திருநாமத்திலும் அதன் பின்னர் அஃயான் ஆகிய வஸ்துக்களின் அகமியங்களிலும் ஆகி சாலிக்கு தாத்தாகியதத் சொரூபத்தை அடையும் பொழுது தாத்தே தஜல்லியான ஹக்குடையதாத்தின் தோற்றம் அவன் மீது உதயமாகிறது. சம்பூர்ணத் தன்மையின் விசாலமான விகாசம் அவன் முன்பு திறந்து காட்டுகிறது. அதில் சகல குறிப்புகளும் நீக்கப்பட்டுவிடுகின்றன. இதுவே பனாவாகும் 'பகாபில்லாஹ்வாகிய அல்லாவைக் கொண்டுள்ள தரிபாட்டின் நிலையில் மீண்டும் உணர்வடைந்து இந்த நிலையிலிருந்து கீழிறங்கி படிப்படியாக, தாத்து (லாஹூத்து)டைய உணர்வற்ற நிலையினின்றும், சிபாத்து (ஜபரூத்து)டைய உணர்வைப் பெற்று தன்னை வஹ்தத்திலிருக்கக் காண்கின்றார் அதுவே முஹம்மது (ஸல்) அவர்களுடைய அகமியம் மனித வர்க்கத்தினுடைய தொகை (சமஷ்டி)யான அகமியத்தை அதில் உணர்கிறார் அதுவே வாஹிதிய்யது. இலாஹியான தெய்வீகப் பண்புகளாலும், கியானீ அல்லது கௌனியான மனித அல்லது சிருஷ்டிப் பண்புகளாலும் ஆன இரவலான உள்ளமையையும், அறிவையும் பின்னர் கண்டு. அதன் பிறகு தன்னையே தோற்றுபவனையும்

(உஜ்ரூ — படி ஏறுதல் அல்லது அதோமுகம்)

அதன் தோற்றமாயும் அறிகிறான். அத்தகையோரே தங்கள் காலத்தில் கௌதும், குத்பும், முஹம்மது (ஸல்) அவர்களுடைய பிரதிநிதியுமாகும். இதுதான் முஹம்மது (ஸல்) அர்களுடைய மிஃராஜு அல்லது ஸைர்-கபீர் ஆகிய பெரிய யாத்திரையாகும். ஸைர்-ஸகீர் ஆகிய சிறிய யாத்திரையில் தாத்துடைய தஜல்லி மானிட வர்க்கத்தின் அகமியமாகிய 'வாஹிதிய்யத்தில் அவன் மீது உதயமாகிறது. தெய்வீக, மானுஷீகப் பண்புகளாலான தனதுதாத்தைக்கொண்டுதன்னைத்தோற்றுவிப்பவராயும், 'உலூஹியத்தா'கிய நாயகத் தன்மையிலிருந்து, கீழ் நிலைவரையுமுள்ள தோற்றமாயும் அறிகிறார். அவர் அப்பொழுது பர்து என்னும் தனித்தவரென்று அழைக்கப்படுகிறார். சில நேரங்களில் இந்த இன்மையாக்குதலிலிருந்து அவர் பகா அளவில் திரும்பி தன்னை ஹக்குடைய பண்புகளின் தோற்றங்களுடைய கருவியாகவோ அல்லது ஹக்கை தனது செயல்களின் கருவியாகவோ காண்கின்றான் அவர் அவ்வாறாகவே தனது அகமியத்தை சகல வஸ்த்துக்களுடைய தொகுப்பான அகமியமாகவோ அல்லது ஹக்கை தனது தொகுப்பான அகமியத்தின் அகமியமாகவோ பார்க்கிறார் வஸ்துக்களின் செயலாதிகளை தனது பண்புகளாக அவர் கண்டு 'அனல் ஹக்கு' — நானே மெய்பொருள் என்று கோஷிக்கிறார். அல்லது அவற்றை ஹக்குடைய செயலாதிகளென்று கண்டு 'ஹுவல்ஹக்கு' அவன் மெய்ப்பொருள் என சப்திக்கிறார் அவர் தனது எஜமானனின் தொழிற்சாலையில் ஒரு வேலையாளைப் போன்று நிற்கின்றார். அல்லது எஜமானது சர்வ சக்திகளையும் அடையப்பெற்று தானே எஜமானனாக ஆய்விடுகிறார்.

'விலாயத்து' என்னும் 'அரபி' பதம் விலா என்ற மூல மொழியிலிருந்து அடையப் பெற்றது அதற்கு நட்பு, சினேகம் என்று அர்த்தம் பொது விலாயத்து என்றும், பொது விசேஷ விலாயத்தென்றும் இரு வகைப்படும். விலாயத்தாகிறது சகல முஃமினாகிய விசுவாசிகளுக்கும் சொந்தமானது "அல்லாஹு வலிய்யுல்லதீன ஆமனூ யுக்ரிஜுஹும் மினள்ளுமாத்தி இலன்நூரி" — விசுவாசமுடையோர்களின் போஷகன் அல்லாவாயிருக்கும். அவன் இருளினின்றும் ஒளியின்பால் அவர்களைக் கொண்டு வருகிறான்."

விசேஷ விலாயத்து தங்களை ஹக்கில் இன்மையாகச் செய்துகொண்ட சாலிக்குகளுக்கே உரியது. " பனாஉல்அப்து பில்ஹக்கி ' ஸைர் இலல்லா அல்லா அளவிலே பிரயாணித் தலின் முடிவான எல்லைதான் பனாவாகும் ஸைர் பில்லா- அல்லாவிலே பிரயாணித்தலின் ஆரம்ப நிலையே பகாவெனப் படும். தன்னில் உறைந்திருப்பனவும், தன்பேரில் கடுமை யாகப்பற்றிக்கொண்டு தனக்கு இன்ப சுகங்கங்களைக் கொடுத்து வந்ததவையுமான தாது. தாவா, மானிட. வானவ தகுதி அல்லது யோக்கியதைகளின் இச்சைகளுடைய தேவைகளில் நின்றுமுள்ள சாலிக்குடைய நாட்டத்தின் சிதைவுகள்தான் முந்தி சொல்லபட்ட யாத்திரையின் பாதையிலுள்ள தடை களாகும் வெற்றினின்றும் பரிசுத்தமடைந்ததும் அவர் இன்மையாக்கப்படுகிறார் சில மஜ்தூபுகளைப் போல் அவர் மீண்டும் அவ்விச்சைகளளவில் திரும்புவதில்லை. அவர் ஒரு தனியான வர்ணனைத் தீட்டிக்கொண்டு "எல்லாக் குறிப்புகளை விட்டும் வெளிப்பட்டு சம்பூர்ணத்தை அடையப் பெறுகிறார். இந்த முதல் யாத்திரையை முடித்துவிட்ட பொழுது ஒருவன் இரண்டாவதைத் தொடங்குகிறான். தன்னில் இன்மையானதும் ஹக்குடைய தெரிசனையில் அவர் 'பாகீ' தரிபாட்டை அடை கிறார் அவ்வேளை அவர் தன்னுடைய தாத்தை தனது நப் ஸாகிய ஜீவத்தன்மையென்று உணர்வதில்லை ஆனால் அதனைத் தோற்றுவிப்பதும். தோற்றமும். தோற்றப்பட்டதுமாக உணர் கிறார்

பனா நிலையில் பல்வேறு வகைகளுண்டு அவை யாவன :— செயலில் பனாவென்றும். பண்புகளில் பனா வென்றும். தாத்தில் பனாவென்றும் பலதிறப்படும் ஒருவன் செயலின் பானியாகிய பனா செய்பவனாகவும், மற்ற இரண் டிலும் இல்லாதவனாயுமிருக்கக்கூடும் இவ்வாறேதான் தரி படுத்தலாகிய பகாவைப் பொறுத்துமிருக்கிறது

ஷிர்க்கு ஆகிய இணையை விட்டும் நீங்கி இருத்தலே மெய்யான முத்தியாகும். அந்த ஷிர்க்கிதான் நரக நெருப்புக்குக் காரணமாயிருக்கின்றது.

17-வது அத்தியாயம்

முஃஜிஸாத்து - அற்புதங்கள்

லாஹூத்துடைய நிலையினின்றும் ஆரிபு ஆகிய ஞானி கீழிறங்கும் பொழுதுதான் அற்புதங்கள் நிகழ்த்தப்படுகின்றன. ஏனெனில் 'லாஹூத்து' (மகாகாரணம்) உடைய நிலையிலோ அவர் தன்னில்தானே சொக்கிப்போய் தனது பண்புகள் யாவும் இன்மையாக்கப்பட்டவராயிருக்கிறார் அங்கு ஒரு அற்புதம் நிகழுமாயின் அதை அவர் முற்றும் உணராதவராயிருக்கிறார். அது அவரை அறியாமலே நிகழ்வதாகும் சத்தியத்தைப்பரத்துவதற்காக உணர்வுடனே அற்புதங்களை நிகழ்த்தப்படுவது ஜபரூத்தில் நின்றுமாகும் விசேஷ தோற்றங்களான அன்பியா ஒளலியாக்களுடைய அற்புதங்கள் 'அல்ஹாதி அர்ரஷீத்து போன்ற அஸ்மா-ஜமாலியினின்றும். அல்முதில்லு போன்ற அஸ்மாஜலாலியினின்றுமாயிருக்கும், இவைகள் இஸ்தித்ராஜ் என்றழைக்கப்படும். அற்புதங்களென்றழைப்பது பொருத்தமன்று எழுதுபவன் கையிலுள்ள எழுது கோலுக்கு ஒப்பாகும் அற்புதங்கள். சக்தி அறிவு ஆகியவற்றில் இறைவனது செயலை வெளிப்படுத்தும் நோக்கங்கொண்டே அவைகள் நிகழ்த்தப்படுகின்றன எனவே காரண காரியம் அங்கில்லை பிந்தியவை இறைவனது அல் ஹக்கீம் என்ற திருநாமத்தின் தோற்றமாகும் இங்குடைய செயல் கண்டிப்புகளின் வாயிலாய் சிருஷ்டியில் வெளிப்படுத்தப் படுகின்றது இந்த நிறைந்த கண்டிப்புகளின் காரணமாக சிருஷ்டிப்பொருளுக்கு சக்தியின்மீது யாதொரு ஆதிக்கமுமில்லை கண்டிப்புகள் இல்லாவிடில் எல்லையற்ற முறையில் செயல் நிகழும் காரண காரியத்தின் போக்குக்குக் கீழ்ப்பட்டிராது. ரியாளத்து ஆகிய பொருத்தம், முஜாஹதாவாகிய கண்டிப்பு ஆகியவற்றின் பிரயோஜனம். கஸ்பு என்ற கண்ணாடியினின்றும் கண்டிப்புகளென்ற இருளைப் போக்குதற்கேயாம் எல்லையற்ற முறையில் செயல்நிகழ ஆத்மாவானது களங்கமற்ற கண்ணாடி போன்று தெளிவையடைகிறது. சம்பூர்ண பண்புகள் கண்டிப்பான பண்புகளாகின்றன குறிப்புகள் நீக்கப்படும்பொழுது பிந்தியவை

சம்பூர்ணமாக ஆகின்றன. சாலிக்கு இடத்தில் இந்த குறிப்புகளின் நீக்கம் ஜபரூத்தில் ஏற்படுகிறது லாஹூத்து. மலகூத்து. நாஸூத்திலன்று. முஃஜிஸாத்தும், காராமாத்தும் இந்த ஒன்றில்தான் பேதப்படுகின்றன. ஒன்று தீர்க்கதரிசிகளிடமிருந்து பகிரங்கமாக வெளிப்படுத்தப்படுகின்றது; மற்றொன்றில் ஒளலியாக்களால் இரகசியமாகக் கடைபிடிக்கப்படுகின்றது. அந்த இரகசியம் நீக்கப்பட்டு வெளிப்படுத்தப்படும்காலை விலாயத்து நபித்துவமாக ஆகும் அதுபோல் காராமாத்து, முஃஜிஸாத்தாக மாறுகின்றது. இதனை வெளிப்படுத்தல் கொண்டுதான் தீர்க்கதரிசிகள் ஒளலியாக்களைவிடச் சிறந்தவர்களாக இருக்கிறார்கள். மேலும் தெய்வ கட்டளைப்படி ஜனங்களை தீர்க்கதரிசிகள் நேர்வழிக்கு அழைக்குங்காலை ஒளலியாக்களும் அவர்களைத் தொடர்கிறார்கள். எனவே "எவனொருவன் நபிமார்களின் வழிக்கு மாற்றமானதோர் பாதையைத் தேடுகிறானோ, அவன் தனது எல்லையை ஒருக்காலும் அடைந்தேறமாட்டான்' (சா.அதி) 'வியாயத்து' எகிறது நுபுவ்வத்தைவிட தலைசிறந்தது. என்று சொல்லப்பட்டிருக்கிறது. "அவ்விலாயத்து அவ்வளுடைய னின் நுபுவ்வத்து" எனினும் ஒரு 'வலீ' ஒரு நபியைவிட மேலானவரென்று சொல்லப்பட்டில்லை; ஏனெனில் நபிக்கோ ஜனங்களை சத்தியத்தின்பால் அழைக்கும் அதிகப்பட்ட ஒரு வேலையும் அளிக்கப்பட்டிருக்கின்றது.

'குர்புபராயிகளில்' ஹக்கு செயல்கர்த்தாவும். அப்து அவனது கருவியாகவும் இருக்கின்றனர். 'மா ர மை த் த இதரமைத்த வலாகின்னல்லாஹாமா' (பத்ரு போரில்) நீர் (ஒரு கைப்பிடி மண்ணை) எறிந்தபோது நீர் எறியவில்லை. ஆனால் அல்லாஹ்தான் எறிந்தான் வெளித் தோற்றங்களுக்கு நபி (ஸல்) அவர்கள்தான் எறிந்தார்கள். மரித்தெழும் நாளின் உண்மையை ஊர்ஜிதம் செய்ய வெவ்வேறு மலை சிகரங்களின் மீதும் வைக்கப்பட்ட நான்கு பக்ஷிகளையும் இப்ராஹீம் (அலை) அவர்கள் அழைந்தார்கள். குர்பு-நவாபிலின் அதற்கு மாற்றமான முறையாயிருக்கிறது ஹக்குடைய பண்புகளைக்கொண்டு 'அப்து' தன்னைப் போர்த்திக்கொள்கிறான். அதாவது ஜீவியம் என்னும் பண்பைக்கொண்டு தன்னைப் போர்த்திக்கொண்டு

(உரூஜ் — படி ஏறுதல் அல்லது அதோமுகம்)

அவன் மரணித்ததை உயிர்ப்பிக்கிறான். இதுவே 'விலாயத்து'டைய நிலையாகுமேயன்றி நபித்துவமன்று

இறைவன் ஆதம் (அலை) அவர்கள் பால் ஊதினான். அவர்கள் ஒரு உயிர் மனிதரை ஆனார்கள். களி மண்ணினாலான பறவைகளின் மீது ஈஸா (அலை) அவர்கள் ஊதினார்கள்; அவைகள் உயிர்ப்பெற்றன. இரு தடவைகளிலும் ஊதியது ஒன்றேயாம். "நாம் யாவரும் புல்லாங்குழல்களே அவன்தான் அவைகளை ஊதுபவன் (வாசிப்பவன்)" அவனது உத்திரவு கொண்டே சகல அசைவுகளும் ஏற்படுகின்றன. உலகில் சகல அசைவுகளும் 'தஜல்லி'யாகிய பிரதிபிம்பங்களேயாம். "குல்லயௌமின் ஹுவ பீஷான்" — ஒவ்வொரு நாளும் அவன் மகிமையுடைய நிலையிலிருக்கிறான். 'ஷீஅத்கில்லா'ட்டின் கட்டுப்பாடு இருக்கிறது; ஏனெனில், அவன் தனது சொந்த பண்புகளைத் தானே விளக்கியிருக்கிறான் "உன்னுடைய காக்கும் அகம் ஆகிய இன்மை.. 'அகம்' ஆகிய இன்மையைக் கட்டுப்பாட்டிலாக்க முடியாது அவனுடைய 'காக்ஸ்' 'சிபாக்கு' 'அப்அல்' ஆகியவற்றின் தோற்றமான நீ அவற்றை அனிக்கப்பட்டவனாக்கிறாய் தன்னை ஏகேது தோற்றுவிக்கிறதோ அது தோற்றக்கி உள்ளதாயிருக்கிறது லிக்குடைய அசைகல்கள் சிருஷ்டிப் பொருளில் வெளியீடாயிருக்கின்றது வல்லாஹு கலக்கும் வமா தஅமலூன்' — 'உங்களையும், உங்கள் செயல்களையும் அவன் படைத்தான்.' தீர்க்கதரிசிகளுடையவும், ஒலிமார்களுடையவுமான முஃஜிஸாத்தும், காராமாத்தும் மெய்யாக இறைவனது செயல்களேயாம். அவற்றை வெளிப்படுத்த அவர்களுக்கு யாதொரு சக்தியுமில்லை அவர்கள் அதை நிகழ்த்தும்வேளை ஹக்கில் 'பனா'வாகித்தான் அவ்வாறு செய்கிறார்கள் குர்புந்நவாபிலில் 'சாலிக்கு' கண்ணிலே 'பனா' வாகிறான்; ஹக்கு அவனுடைய அகமியமாகவும், சாலிக்குடைய பண்புகள் ஹக்குடைய கருவியாகவும் ஆகின்றன குர்புந்நவாபிலில் சாலிக்குடைய 'சிபாத்து' ஹக்குடைய சிபாத்தைப் போன்று தோன்றுகின்றது அதாவது, சாலிக்கு ஹக்குடைய அகமியம்போலவும், ஹக்கு அவனுடைய கருவியாகவும் தோன்றுகிறான். ஒரு விஷயத்தில்! சமுத்திரம் குமிழியின்

அகமியமாக ஆகி, அதன் சமுத்திர தன்மை நீங்கிவிடுகின்றது. அடிமைத்தனம் (அப்தியத்து) அதன் தன்மையாக மாறுகிறது. மற்றொரு விஷயத்தில் குமிழி சமுத்திரத்தின் அகமியமாக ஆகுங்காலை நாயத் தன்மை அதன் தன்மையாக ஆகிறது ஒரு நிலையில் யானை ஒன்று ஒரு எறும்பின் கால்களைக்கொண்டு நடக்கின்றது மற்றொன்றில், எறும்பு ஒன்று யானை ஒன்றின் கால்களால் நடந்து செல்கின்றது பிந்திய முறையின் விளைவே சகல அற்புதங்களுமாகும். ஒன்றில், ஒரு வீரன் ஊசியைக் கொண்டு குத்துவது போன்றிருக்கின்றது. இதன் முடிவோ அற்பமானது செயல் கருவிக்கு கீழ்ப்பட்டிருக்கிறது. மற்றொன்றில் ஒரு குழந்தை வாளினால் வெட்டுவது போன்றும். அதே காரணங்கொண்டு அதன் முடிவு மகா பெரிதாயிருக்கிறது. சாலிக்கு அவனுடையகாதாக ஆகின்றான் அவன் தூரத்தில் நடக்கும் பேச்சுக்களைக் கேட்கிறான். கொலைவிலிருக்கும் வஸ்துக்களைப்பார்கின்றான். மூஸா (அலை) அவர்கள் ஹக்குடைய கேள்வியைக் கொண்டு ஹக்குடைய வசனத்தைக் கேட்டார்கள். சகல திசைகளிலிருந்தும் அவ்வாறு கேட்டார்கள். ஹக்கின் மூலமாக 'அப்து' கேட்கும் வேளை அவன் கிழக்கிலிருந்தும். மேற்கிலிருந்தும் சப்தத்தை ஒரே நேரத்தில் செவிமடுக்கிறான். 'பத்ரு போரில் நபி (ஸல்) அவர்கள் ஒரு பிடி மண்ணை எறிந்த போது அதை நீர் எறியவில்லை. அல்லாஹ் எறிந்தான்.' குர் ஆனைகிறது நாயகம் (ஸல்) அலை. அவர்களுடைய உதடுகளிலிருந்து வெளிவந்தபோதிலும். அதனை ஹக்கு பேசவில்லை என்று சொல்பவன் நிட்சயமாக் காபிராகும்." (மத்னவி) "இவைகள் குர்பு பராயிளுடைய உதாரணங்கள். அற்புதங்கள் குர்பு நவாபிலுடைய வெளிப்படையான விளக்கமாகும்"

18-வது அத்தியாயம்

(ஐப்ரூ. கத்ரு — ஆதி கற்பனை)

வஸ்துக்களின் 'தக்தீர்' (ஆதி கற்பனை அல்லது தெய்வ சங்கற்பம்) 'அஃயான்' ஆகிய வஸ்து அகமியத்துடன் சம்பந்தப்பட்டும், அவ்வவற்றின் அஃயானுடைய கையிலுமிருக்கின்றது ஏனெனில் வஸ்துக்களின் அகமியங்களுக்கு வஸ்துக்களைப்பற்றிய ஹக்குடைய அறிவு உடன்பட்டிருக்கின்றது அவனும் ஹக்குடைய சொந்தகுதிகளான அகமியங்களைமாற்றுவதற்கு ஹக்குக்கே இந்த விஷயத்தில் 'சக்தியில்லை. அகமியங்கள் மறைந்து செயலற்று கிடக்கின்றன ஹக்கு அவற்றிக்கு வெளியீட்டை அளிக்கிறான். அவனுடைய செயல் அந்த அகமியத்தின் பலனைத்தானே சுயமாகவே கொண்டு வருவதில்லை அறியும் விஷயத்தில் அறிவு அறியப்படும். பொருளுக்கு உடன்பட்டிருக்கிறது. ஆனால் அறியப்படு பொருளோ அறிவுக்குக் கீழ்ப்பட்டதன்று. சாயந்துவைப்போன்ற துணிக்கு சாயம் போடுகிறானே யன்றி சாயத்தை உற்பத்தி செய்பவன் அன்று எனவே, அஃயான் ஆகிய அகமியங்கள் அவற்றின் 'தக்தீர்' ஆகிய கற்பனையில் ஆள்கின்றவர்களாயும், ஹக்கு ஆளப்படுபவனுயுமிருக்கின்றனர். ஹக்கு அஃயான்களின் தகுதி அல்லது யோக்கியதையின் தேவைகளுக்குத் தக்கவாறு ஆக்ஞாபித்து (கட்டளையிட்டு) அவற்றின் சிருஷ்டி கர்த்தாவாக ஆனான். 'அ. '.யான் காரிஜா' என்னும் வெளிப்படை அ. '.யான்' அல்லது வஸ்துக்களுக்கு ஐக்கியப்பட்டிருக்கின்றன. அந்த அகமியங்களும் அவற்றின் 'ஷு'யூனத்' ஆகிய மறைமுகமான சக்திகளுக்கு கீழ்ப்பட்டிருக்கின்றன வெளியீடான 'தாத்து'க்கு 'ஷு'யூனத்' கீழ்ப்பட்டிக்கின்றன. 'தாத்து' தனது வெளியீட்டின் முறைக்கு அவற்றிற்கு ஐக்கியப்பட்டிருக்கின்றன 'முதகல்லிமீன்' ஆகிய தர்க்கவாதிகள் சொல்லுகிறபடி. வெளியீடென்பது இன்மையினின்றும் ஒரு வஸ்து வெளிபடுத்துவதன்று. ஆனால் வெறும் தோற்றுவித்தலே வெளியீடாகும்.

'தாத்து' ஆகிய தத்சொரூபம் 'கதீம்' என்னும் (ஆரம்பமின்றிய) பூர்வப் பெயருளாகும்; அதன் 'ஷுயூனத்தும்' பண்புகளும் 'கதீம்' ஆகிய பூர்வீகமே தோற்றம் என்பது உள்ளீட்டிலிருந்து வெளியீட்டுக்குவருதலேயாம்; இந்தமுறையில் இன்மையினின்றும் எதனையும் கொண்டு வருவதன்று. அஃயான் தங்களைத் தாங்களாகவே வெளிப்படுத்திக்கொள்ளமுடியாது. வெளிப்படுத்துபவன் அவற்றை வெளிப்படுத்தவேண்டும். இவ்வாறு வெளியீடுசெய்பவன் 'ஹக்கு'தான் 'ஹக்கு' அறிபவனும், 'அஃயானும்' வஸ்துக்களும் அறிபடுபொருள்களாயுமிருக்கின்றன; அறியப்படுபவனே அளுகிறவனும். அறிபவனே ஆளப்படுபவனுமிருக்கின்றனர்(குல்ஷன்ராஜ்)''களா'வென்பது 'கத்ரு'க்கு உட்பட்டது; 'கத்ரு' 'ஷுயூனத்து'க்குக்கீழ்ப்பட்டது; 'களா'வென்பது வெளிப்படையாவதற்குள்ள உத்திரவு; 'கத்ரு' அறிவிலுள்ள உள்ளீடான தேவை 'தாத்து' தனது வெளியீட்டில் 'ஷுயூனைத்து'க்குக் கீழ்ப்பட்டது தாத்திலிருந்தது போன்றே அறிவினுள்ளும் 'ஷுயுனத்தா'கிய மறை முகமான சக்திகள் உண்டாயின '' தக்கீர் ' என்பது அறிவிலுள்ள அளவு ஆகும் ஒவ்வொன்றும் அளக்கப்பட்டு பூர்வ அறிவிலே நிறுக்கப்பட்டிருக்கிறது அவை 'தாக்கில்' இருந்தபோன்று அறிவிலும் ஏற்பட்ட 'ஷுயூனத்து'க்கு இந்த அளவு ஐக்கியப்பட்டிருக்கிறது வெளிப்படையில் தோற்றுவிக்கும் பூர்வ அளவை அறிதலே அறிவு ஆகும் வெளிப்படுத்தி வைக்கும் ஒருவன் ஒரு கருவியேயன்றி ஒரு செயல்கர்தாவன்றி; 'அஃயானு'டைய கையில் தான் 'தக்தீர்' இருக்கிறது 'ஹக்கு'டைய கையிலன்று. காதலன், காதலியுடைய கையிலிருக்கிறான். அவனுடைய அஃயான் ஆகிய வஸ்துக் கோலம் அல்லது அளவு அல்லது தகுதிகளின் தேவைகளுக்குத்தகவாறு 'ஹக்கு' வெளியீட்டைக் கொடுப்பதை ஆசிக்கிறான்; அவனுடைய அறிவில் அவைகளுக்கு கோலங்களைக் கொடுத்து. வெளிப்படையிலும் தோற்றுவித்து தனது சுயார்த்த அழகினது அம்சத்தை தானே வணங்கினன். இனி இந்த முறை கால வரையறையின்றி நடந்தேறி வந்தன; இனியும் சதா காலமும் அவ்வாறே தான் நடந்தேறும் அவனே தன் சொந்த கண்ணாடியாகி தன்னை அதில் தோற்றுவித்து தானே அதில் நோட்டமிட்டு அந்த நோட்டத்தின் இன்ப

சக்தையும், தானே அநுபவிக்கிறான் அங்கு 'கைர்' ஆகிய
பிற வஸ்து அறவே கிடையாது.

நாட்டம் இறைவனைச் சார்ந்தது மனிதனுக்குத்
தனியான சொந்த நாட்டமொன்றுக் கிடையாது உள்ளமைக்கு
சக்தி ஐக்கியப்பட்டிருக்கிறது உள்ளமையற்றதுக்கு யாதொரு
சக்தியுமில்லை. அவனுடைய நாட்டத்தைக்கொண்டு 'ஹக்கு'
உன்னைப் படைத்தான். அந்த நாட்டம் உன்னில் வெளியிடா
மிருக்கிறது உன்னுடைய நாட்டத்தைக்கொண்டு நீ அவனுடைய
படைப்பினமாய் ஆகவில்லை. தக்தீர் ஆகிய ஆதிகற்பனையைக்
கொண்டு உனக்கு எவ்வெவற்றை சுலபமாக ஆக்கப்பட்டிருக்
கிறதோ அதனை நீ உன் நாட்டத்தைக் கொண்டு செய்துவிட்ட
தாகக் கூறுகின்றாய். உனக்கு யாதொரு சக்தியுமில்லையென்பதை
நீ உணர்வதில்லை தங்களின் செயல்களைத் தாங்களே சிருஷ்டிக்
கிறவர்கள் என்று முஃதஸிலாக்கள் கூறுகின்றனர். ''வல்லாஹு
கலக்கும் வமாத அமலூன்'' — உங்களையும், உங்களது
செயல்களையும் அல்லாஹ்தான் படைத்திருக்கிறான் (குர்ஆன்)
சுயேட்சையான நாட்டத்தையுடையோரான முஃதஸிலாக்களும்,
தலைவிதியை ஸ்தாபித்து பேசும் 'ஜபரியாக்களும் அவரவர்
களின்\ கொள்கைகளில் தவறுடையோர்களேயாம். ஹக்கு
செயல்கர்த்தாவாயிருக்க 'கைர்' ஆகிய பிற வஸ்து சுயேட்சை
யாயுமில்லை ஒரு கற்பனைக்கு கீழுமில்லை.

'அஃயான்'ஆகிய அவனுடைய தகுதிகளிலே 'கத்ரு'
அடங்கியிருக்கிறது; அந்தந்த தகுதி அல்லது அளவுக்குத்
தக்கபடி இடப்பட்டகட்டளையே 'களா'வெனப்படும். வேறுவகை
யாகக் கூறுமிடத்து, 'அஃயான்'களை குறித்த காலத்திலும்,
இடத்திலும் வெளிப்படுத்தி வைக்க ஏவப்பட்ட ஆக்ஞைதான்
'களா'வாகும் 'அஃயான்' ஆகிய வஸ்து கோலங்கள் தங்கள்
தங்களின் வழிப்படியும், தகுதி அல்லது அளவுக்குத் தக்கவாறும்
தங்களை வெளிப்படுத்திக்கொள்கின்றன; இதற்கமாற்றமா
யன்று காதானது கண்ணினுடைய தொழிலை செய்யாது.
அல்லது பாதாம் பருப்புகள் திராட்சைப் பழங்களைப் போன்று
ருசிக்காது பூர்வமான 'ஹக்கு'டைய அறிவுக்கு 'களா'

ஐக்கியப்பட்டிருக்கிறது 'ஹக்கு'டைய அறிவு அஃயான் ஆகிய வஸ்து கோலத்தின் தகுதிகளுக்கு ஐக்கியப்பட்டிருக்கிறது. மறைந்து கிடக்கும் வெளிப்படாத அவ்வியக்த 'அஃயான்' 'தாத்தில்' மறைந்தும் அதற்குக் கீழ்ப்பட்டுமிருக்கிறது ஒவ்வொரு வஸ்தும் தான் வியக்த (வெளிப்படுதற்கு) மாவதற்கு தத்தம். தகுதி. அல்லது அளவு என்ற நாவுகொண்டு இறைவனிடம் இறைஞ்சுகின்றது. இறைவன் அவற்றின் தேட்டங்களை பூர்த்தி செய்கிறான். "உத்ஊனீ அஸ்தஜிப்லகும்" — நீங்கள் என்னிடம் கேட்பீர்களாக, நான் உங்களுக்குப் பிரதி செய்வேன். சிருஷ்டிகளுடைய சிருஷ்டிப்புத் தன்மையால் சிருஷ்டிக்கப்பட்டவையல்ல: 'அ.'.யான்' முளில்லு (வழி கேட்டிலாக்குவோன்) என்ற திருநாமம் நெறிமுறை அல்லது ஆத்மீக சீர்கெட்டைக்கொணர்வதில்லை: 'மஹ்தீ' (நேர்வழி நடத்துபவன்) என்ற திருநாமும் நெறிமுறை அல்லது ஆத்மீக உன்னதத்தை அளிப்பதில்லை - யோக்கியதை அல்லது தகுதிகள் பூர்வீகமானவையே அவைகள்தான் 'அஸ்மா' 'சிபாத்து'டைய மூலங்கள் 'தாத்து'டைய அகமியப் பொருள்களும் அவைகளே அவை மாறாத் தன்மையுடையனவல்ல. அவைகளை 'ஹக்கு' வெளியிடாக்குகிறான். அவை அவனுடைய 'மாஹியத்து' என்னும் கடாக்ஷம். இதுவே அவனுடைய நீதி என்ற முதல் சந்தர்ப்பம் அறிவிலுள்ளபடி அந்த 'அ.'.யான்' ஆகிய வஸ்த்துக்களின் அகமியங்கள் தங்கள் தங்கள் கோலங்களைப் பெறுகின்றன அவற்றின் வெளியீட்டில் 'ஹக்கு'டைய அறிவு. நாட்டம் சக்தி ஆகியவை தழுக்கிடுவதில்லை அதற்கு பகரமாக அறிவிலுள்ள 'அஃயான்' தூட்சமமானதன்று ஆள்கிறவையாவும். 'ஹக்கு' ஆளப்பட்டதாயுமிருக்கின்றன ஹக்கு அறிபவனையும். 'அஃயான்' அறியப்பட்டவையாயுமிருப்பதைப் போன்றும் வேளாண்மைக்காரன் ஒருவன் அநேக வித தானியங்களை அவ்வற்றின் தன்மை அல்லது தகுதிகளுக்கு தக்கவாறு வியவகரிக்கவேண்டியதாயிருக்கிறது அவர் சோளம் விளைவிக்க கோதுமை சாகுபடி செய்யும் வேலையைவிட மாற்றமானதொன்றை அவன் கடைபிடிக்கவேண்டும் இவை இரண்டிக்குமுள்ள வித்தியாசத்தை அவன் தெரிந்துகொள்ளாவிடில் அது விஷயத்தில் அவன் பெற்றிருக்கும் மடமையை

(ஜப்ரு, கத்ரு — ஆதி கற்பனை)

அது வெளிப்படுத்தும். அவற்றின் தன்மைகளுக்குத் தக்கபடி அவனுடைய அறிவு அவைகளை வெளிப்படுத்தி வைக்கும் அவற்றிலுள்ள தகுதி அல்லது யோக்கியதாம்சத்திற்கு தகுந்த படி அவைகள் உள்ளமையைப் பெறும். ''லாமுபத்தில விகலி மாத்தில் லா-அல்லாவுடைய வார்த்தைகளை ஏதும் மாற்றுது

சிலர் சுயேட்சை நாட்டம் உண்டென்ற கொள்கை யுடையோர், சிலர் யாவும் தலைவிதிப்படி திணிக்கப்படுகின்றன என்ற கொள்கையுடையோர். ஆனூர் சிலர் மட்டும் இவ்விரண்டுக்கும் நடுவான கொள்கையுடையோர் உண்மையைக் கூறுமிடத்து 'ஹக்குடைய' 'தாத்து' தனது சிபாத்துகளுடன் தன்னைக்கொண்டே தன்மீதேதான் தோன்றுவதற்கு தன்னைத் தோற்றுவித்தது. இன்மையான 'கைர்' ஆகிய பிறப்பொருளுக் காகவன்று ''லாஇி லாஹ இல்லல்லாஹ்'' அவனையன்றி நாயனில்லை.

'கைர்' என்ற பிறப்பொருள் உண்டாயிருக்கும் பக்ஷத்தில் அது ஜபரிய்யா உடைய கொள்கையை ஸ்தாபித்துவிடும் 'சாலிக்கு' சகல மதங்களையும் ஒன்றெனக் காண்கிருன். ''நிச்சயமாக நான் என்னுடைய றப்புடைய மார்க்கத்தின் பேரிலிருக் கிறேன்.'' 'சாலிக்கு'டையபார்வை'வேறு' ஆகிய பிறப்பொருளை விட்டும் நீங்கி இருக்கிறது ''இன்னகலாதஹ்தீமன் அஹ்பப்த்த வலாகின்னலாஹ யஹ்தீமண்யஷாஉ'' — (ஒ. முஹம்மதே) நிச்சயமாக நீர் நேசிப்பவர்களை உம்மால் நேர்வழியிலாக்க முடியாது. ஆனல் இறைவன் தான் நாடியவர்களை நேர்வழியி லாக்கக்கூடியவன். ''மன்யஹ்தியல்லாஹு வலா முளில்லலஹு வமன்யுளில்ஹு பலா ஹாதியலஹு'' — அல்லா யாரை வழி கேட்டிலாக்குருேே அவனை உம்மால்நேர்வழிலாக்க முடியாது; எவனை அல்லா நேர்வழி நடத்துகிருனே அவனை உம்மால் வழி கேட்டிலாக்க முடியாது 'சாலிக்கு' உண்மையின்பால் மீளும் பொழுது சம்பந்தா சம்பந்தங்கள் மறைந்துவிடுகின்றன அவ் வேளை அவன் 'ஹக்கை'யாதொரு சாதன உதவியுமின்றி ஹாதியாக இருக்கக் காண்பான்

19-வது அத்தியாயம்

(தனாசுக் — புனர் ஜென்மம்)

மனிதனின் ஆன்மா தன்னைக்கொண்டு தானே போதுமானதல்லவென்றும், மரணமும் நாசமும் அதனை மிகைத்துவிடுவதில்லையென்றும் சிலர் நம்புகின்றனர் எனவேதான் அபிமானித்திருந்த ஒரு ஸ்தூல சரீரமானது மரித்துவிடுங்காலை அது மற்றொன்றைத் தேடி நிற்கின்றது அகவே ஆன்மா தனது முந்திய தொடர்புகளை நீக்கிக்கொண்டு கேவலமான அல்லது உன்னதமான எந்த சரீரமாயினும் அதில் தன்னைத் தோற்றுவித்துக்கொள்கிறது அதுவோ ஒரு புஸ்தகத்திலுள்ள வாசகங்களை ஒரு காகிதத்திலிருந்து மற்றொரு காகிதத்தில் எழுதுவதை போன்றும் 'ஷல்ஷன் ராஜு'டைய (ஷைய்கு மஹ்மூது சபிஸ்தரீ அவர்கள்) கூறுவதாவது: "மறு பிறவி யென்பது 'குப்ரும்' பொய்யுமாகும்: எனெனில் அது ஒரு குறுகலானகொள்கையே" புனர் ஜன்மவாதிகளின் குறுகிய கொள்கை தங்களை ஸ்தூல சரீரங்களில் மட்டும் அடக்கிக்கொண்டு சூட்சும லோகத்தை அறவே புறக்கணித்துவிடுவதிலும், நற்கருமங்களுக்காகவேண்டி ஆன்ம லோகத்தில் நபிமார்கள் கண்டபடி ஆன்மா அடையும் பதவி முன்னேற்றத்தை நம்பாததிலும் ஏற்படுகின்றது.

இரண்டாவதாக அவர்கள் ஆன்மாக்கள் பூர்வமானவைகளென்றும், ஒரு குறித்த எண்ணிக்கையை மட்டும் உடையனவென்றும், அவைகள் மாறி மாறி பல்வேறு சரீரங்களில் சுற்றி வருகின்றனவென்றும் கூறுகிறார்கள் ஒவ்வொரு விநாடியும் ஒரு புதிய 'தஜல்லியும்' தோற்றமும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிவதில்லை, 'ஹக்கு'டைய தஜல்லியாத்து எண்ணற்றனவாதலால் அவைகள் தங்களை மீண்டும், மீண்டும் தோற்றிக்கொள்வதில்லை மூன்றாவதாக ஆன்மாக்கள் சரீரங்களுக்கு ஐக்கியப்பட்டவையன்று என அவர்கள் உணர்வதில்லை "சரீரமின்றிய சரீரத்தையுடைய அது நீயாயிருக்கின்றாய்; நாம் மரணித்துவிடப் போகிறோமோ வென்று நீ ஏன் பீதிகொண்டிருக்கிறாய்?" (மத்னவீ)

(தஜுசுக் — புனர் ஜென்மம்)

நான்காவதாக, ஆன்மா ஒரு ஸ்தூல சரீரத்தைவிட்டு வெளிப்படுவதும், உட்புகுவதுமான ஒரு வஸ்த்துவல்ல ஆன்மா மற்றொரு சரீரத்தினின்றும் வெளிப்பட ஒரு சடப்பொருளன்று. ஐந்தாவதாக ஆன்மா ஆதிக்கஞ் செலுத்துவதாயும், அதன் ஆதிக்கம் நன்மையோ, தீமையோ ஒரு சரீரத்தில் மட்டும் செலுத்தப்படுவதாயுமிருக்கிறது ''லஹா மாகஸபத் வஅலைஹா மக்தஸபத்'' — நன்மைகளில் நின்றும் சேகரித்தவையே அதற்கும் தீமைகளில் நின்றும் சேகரித்தவையே அதன் பேரிலுமாகும். '' இவ்வுலகினின்றும் தனக்காக ஒருவன் அனுப்பி வைத்துக்கொள்ளும் கோலங்கள்தான் நரகமும் சுவர்க்கமுமாகும். அவைகள் அவனுக்காக சூட்சும லோகத்தில் காத்துக்கொண்டிருக்கிறன. பலா பலன்களை அடையப்பெற ஒருவன் இவ்வுலகிற்கு மீண்டும் திரும்புவது கிடையாது.

20-வது அத்தியாயம்

இர்ஷாதாத் — பலதிறப்பட்ட பொருக்கு மணிகள்.

நீ தாடி வளர்த்துக்கொண்டு ஒரு அவிசுவாசியாக ஆய்விட்டாய். தாடியின்றிய ஒரு காபிர் மெய்யானதோர் முஸ்லிமாயிருக்கிறன் ஒவ்வொரு சிருஷ்டிப் பொருளும் உடைய முஸ்லிம் தன்மையின் பேரிலேயே பிறக்கிறது — ஒரு குழந்தை முஸ்லிமாகவே இருக்கிறது வளர்ச்சியடையும்போதுதான் அதன் வழிபாடும், செயல்களும் அதனை ஒரு 'காபிரா'கச் செய்துவிடுகின்றன '' குல்லு மௌலூதின் யூலது அலா பித்ரதில் இஸ்லாம்.''

ஜனங்கள் தடை பண்ணப்பட்ட மரத்தைப்பற்றி பல்வேறு அபிப்பிராயங்கொண்டிருக்கின்றனர் சிலர் அதனை அத்தி மரம் என்றும், சிலர் திராட்சை மரமென்றும், சிலர் முஷாஹதாவென்னும் தெரிசனையுடையோர் நெறுங்கிச் செல்ல வியலாத 'அறிவு' என்னும் விருக்ஷம் என்றும் பலவாறுய் அபிப்

பிராயப்படுகின்றனர். 'நான்' என்னும் மரம் என்று சிலர் கூறுகின்றனர் நப்ஸூ என்னும் மரம் என்றும். காதல் (உலகப்பற்று) என்னும் மரம் என்றும் சிலர் சொல்லுகின்றனர்.

யதார்த்தமாக இன்மையாகியதோர் கற்பனையான பிரிவினையின் பட்டப் பெயரே 'இப்லீஸ்' எனப்படும். ஒரு வஸ்து தனது அகமியத்தினின்றும் தன்னைப் பிரித்துக்கொண்டு தனக்கே ஒரு 'கைர்' ஆகிய வேற்றுப் பொருளாக ஆக முடியாது ஒரு மனிதன் ஒரு மனைவியின் ஆடைகளை அணிந்துக்கொண்டு, தான் ஒரு பெண்ணென கற்பித்துக்கொள்கிறான்; அல்லது, ஒரு மனைவி ஒரு மனிதனின் உடைகளைப் போர்த்திக்கொண்டு தன்னை ஒரு மனிதனாக பாவித்துக்கொள்கிறாள் கற்பனையில் மட்டுமேயன்றி யதார்த்தத்தில் அவன் தன்னைவிட்டும் தன்னைப் பிரித்துக்கொள்வதில்லை இந்த வேற்றுமை அல்லது பிரிவினையாகிய கற்பனைதான் 'ஷைத்தான்' எனவும், 'இப்லீஸ்' என்றும் அழைக்கப்படுகின்றது. இந்த கற்பனை ஒரு கோலத்தைப் பெறுகின்றது உதாரணமாக, யதார்த்தத்திலேயே இல்லாவிடினும் கனவிலே ஒரு கோலம் தோற்றுவது போன்றும்.

நாற்பது காலைப்பொழுதுகள் 'ஹக்கு' தனது சொந்த கைகளால் ஆதம் (அலை) அவர்களுடைய மண்ணைப் பக்குவப் படுத்தினான். ஓர் அரசன் ஒரு அரண்மனையை கட்டுங்காலை அந்த வேலையை சிற்பிகளிடம் ஒப்புவிக்கிறான். ஆனால் 'கஸானா' அறையை மட்டும் கட்டும்பொழுது அந்த இடத்தின் மர்மத்தைத்தானே மறைத்து வைத்துக்கொள்கிறான் இறைவன் இவ்வுலகை தனது 'குன்' என்ற கட்டளையைக்கொண்டு சிருஷ்டித்தான் '' இன்னமா அம்ருஹூ இதா அராத ஷைஅன் அன்யகூல லஹூ குன் பயகூன் '' 'ஹக்கு' ஒரு வஸ்தைப் படைக்க நாடின பொழுது அவன் அதனைப் பார்த்து குன் - (ஆகு) என்று கூற அது உண்டாகிவிடுகின்றது ஆதம் (அலை) அவர்கள் விஷயத்தில் அவன் அவர்களுக்கு சொல்லையும் செயலையும் ஏகப்படுத்தினான் இந்த விஷயத்தில், காதல் என்னும் பொக்கிஷத்தையும் 'இர்பான்' என்ற ஞானத்தையும் ஆதமில் மறைத்து வைக்க அவன் நாடினான்; எனவே அவன் இரு கரங்களையுங்கொண்டு

ஆதமைப் படைத்தான் 'ஜிப்ராயீல்,' 'மீக்காயீல்,' இஸ்ராபீல் ஆகியோர் பூமியினின்றும் ஒரு பிடி மண் அள்ள சக்தி பெருதவர்களாயிருந்தார்கள். ஏனெனில், மண் இறைவனை அடுத்து நெருங்குதற்கு சக்தி பெருதிருந்தது. அதனுடைய பல்வேறு பாகங்களிலிருந்தும், இஸ்ராயீல் ஒரு பிடி மண்ணை அள்ளிக் கொண்டார்கள். எனவே மனிதர்கள் பல்வேறு நிறத்தவர்களாயிருந்தனர்.

ஆகாயங்களும், மண்டலங்களும் சுழல ஆரம்பித்த போது முதல் நாளாக தோற்றியது சனிக்கிழமையாகும்.

அநேகம் என்ற திரையின் கீழ் 'ஏகம்' என்ற உள்ளமையை மூடி வைப்பதே 'குப்ரு' எனப்படும் 'ஷிர்க்கு' என்பது ஒரே யதார்த்த உள்ளமையை இரண்டாகக் கருதுவதேயாம். 'ஷரீஅத்து'டைய 'குப்ரு'ம் 'ஷிர்க்கு'மாகிறது பாவங்களினின்றும் அசுசியத்தை அடைதல்; 'தரீகத்து'டைய 'குப்ரும்' 'ஷிர்க்கும்' உலகப்பற்று; 'ஹகீகத்து'டையதோ அநேகத்தன்மை மறைவில் ஏகமாய் தோன்றியிருப்பதைப் பாராது. 'கைர்' ஆகிய வேற்றுப்பொருளை நிலைநாட்டுவதாகும். 'வஇலாஹுகும் இலாஹுன் வாஹிது' — மெய்யாக உங்கள் நாயன் ஒருவனேயாம்." "வமாயுஃமினு அக்தரஹும் பில்லாஹி இல்லாவஹும் முஷ்ரிகூன்" — (அவனுடன்) இணையாக யாரையும் சேர்க்காமல் (மக்களுள்) அநேகர் அல்லாஹ்வை விசுவாசிப்பதில்லை.' இந்த 'ஷிர்க்கு' எளிதில் பார்வைக்கு அகப்படுவதன்று. சகல நிலைகளிலும் முன்னேற்றமடைந்து வரும் ஜனங்களில் அது மறைந்துகிடக்கின்றது. ஏனெனில் அது 'ஹக்கு'டைய பண்புகளுள் ஒன்ருகும். அது முளில்லு (வழி கெடச் செய்வோன்) 'முதில்லு' (தாழ்மையாக்குவோன்) என்ற திருநாமங்களான இஸ்முகளின் தோற்றமாகும்.

பிரதிபிம்பம் என்பது கண்ணின் ஒளி கிரணங்கள் கண்ணாடியின் மேற்பரப்பிலிருந்து கண்ணின்பால் திரும்புவதாகும். கண்ணாடியின் பின்புறத்திலுள்ள இரசப் பூச்சு கிரணங்களை கண்ணாடியின் வழியாகப் பிறிச் சென்றுவிடாதபடி தடுத்து

திரும்ப அந்த கிரணங்களை வந்தவிடத்திற்கு அனுப்பி விடுகின்றது அந்த கண்ணாடியில் கண்ணுடைய பிரதிபிம்பம் இருக்கிறதென்று சொல்வது தவறு. ஒருவனது கற்பனையிலேயே அது இருக்கிறது அது ஒரு நினைவின் கோலமாகும்.

'ஹிஸ்ஸெ முஷ்தரிக்' என்னும் பொது அறிவு புறக் காரணங்கள் ஐந்தையும், அக்காரணங்கள் ஐந்துடன் சேர்ப்பிக்கும் ஓர் அறிவு. சிலர் கண்தான் பார்க்கிறது. ஆனால் அது பகுத் தறிவதில்லை என்று கூறுகிறார்கள் அது 'ஹிஸ்ஸெ முஷ் தரிக்'குடைய தொழிலாகும் ஐந்து புற இந்திரியங்களும் அதனுள் பாய்கின்றன. அது ஓர் குளத்தைப் போன்றிருக் கிறது பின்னர் அங்கிருந்து அவைகளை ஐந்து அக இந்திரியங் களின் பல்வேறு வாய்க்கால்களுக்குக் கொண்டு போகப் படுகின்றன.

உனது நாசித் துவாரங்களில் நாற்றம் வீசக்கூடிய தூரி அசுத்தம் ஆகியவற்றைவிட்டும் நீ விரண்டோடிவிடு. மேலும் சுத்த நறு மணங்களை மட்டும் உட்கொள்வாயாக துர்வாடைகளும் ஒரு பண்பினுடைய தோற்றமாயிருப்பதால் அவைகளை விட்டும் உன் மூக்கை வெறுப்புக்கொண்டு திருப்பிக் கொள்ளாதே ஆனால் அந்த வெறுப்பும் ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தால் அது இறைவனது கட்டளை.

'ஹக்கி'னல் சிருஷ்டிக்கப்பட்ட கோலத்தை 'ஹக்கு'டைய கல்லினாலேயே தகர்த்துவிடு. நண்பனுடைய கல்லை அவனது கண்ணாடி விளக்கின் மீது எறிந்துவிடுவாயாக (மத்னவி)

இந்த கொள்கையின் அடிப்படையில்தான் ஜிஹாத் தைக்கொண்டு சத்தியத்தை பரப்பி வைக்கவும் விக்கிரஹங் களைத் தகர்க்கவும் ஷரீஅத்தினால் அனுமதிக்கப்பட்டது இந்த கொள்கையை எவன் நிராகரிக்கிறானோ அவன் ஹக்குடைய கட்டளையை நிராகரித்தவனாகும்

இர்ஷாதாத் — பலதிறப்பட்ட பொருக்கு மணிகள்.

ஏழ்மைத்தனம் இரு வகைப்படும் அவை யாவன:— வெளிப்படை அந்தரங்கம் என்பனவாகும். முதலாவது, ஆஸ்தி பூஸ்திகளின்மை; இரண்டாவது தாத்து, சிபாத்துடைய கற்பனை இன்மையாயிருத்தல். இன்மைசெய்தல் முடிவடைந்ததும், உள்ளமை தொடங்கிவிடுகின்றது. 'அஸ்ஸூபிலம்யுக்லக்' — சூபியாகிறவன் சிருஷ்டிக்கப்பட்டவனன்று.

ஜனங்கள் ஒன்று என்று கூறியபோதிலும் அவர்கள் அநேக கதவுகளில் தொங்கிக்கொண்டிருக்கின்றனர். இந்த மனிதனிடமிருந்தும் அந்த மனிதனிடமிருந்தும் எதிர்ப் பார்த்த வண்ணமிருக்கின்றனர் 'சூபி' ஒன்று என்று சொல்லுகிறார். ஆனால் அவரோ தனது சொந்தசங்கையைவிட்டும் ஓடிவிடுகிறார்.

உலகம் என்ற வார்த்தை எந்த ஒரு குறித்தப் பொருளையும் கருதுவதன்று. இம்மையை பொருத்ததாயினும், அல்லது மறுமையை பொருத்ததாயினும் எந்த ஒன்றின்பால் நீ உன் மனதை செலுத்துகின்றாயோ அதுவே உலகம் எனப்படும் அது 'மாஸிவல்லாஹ்' வாகிய 'அல்லாஹ்' வின் வேறு எனப்படும்.

ஆதமுக்கு 'ரூஹு' ஊதப்பட்டதும் அவர்கள் ஓர் தும்மலுடன் 'அல்ஹம்து லில்லாஹ்' — அல்லாஹ்வுக்கே புகழ் யாவும் என்றார்கள். அதற்கு பிரதி மொழியாக இறைவன் "யாறஹ்மக்கறப்பிக" — உன்னுடைய றப்புடைய கிருபை உன் மீதுஉண்டாகுக என்று அருளினான்.

எவனொருவன் சகலவஸ்துக்களையும் உணர்ந்து தன்னை மட்டிலும் உணராதிருக்கிறானோ அவன் ஒரு மாபெறும் மூடனும். எவன் தன்னை உணர்ந்து, மற்ற வஸ்துக்களை உணராதிருக்கிறானோ அவன் ஓர் தீவிரவிவேகி. 'மன் அரப நப்ஸஹு பகத்அர பறப்பஹு' யார் தன்னை உணர்ந்தானோ அவன் தன் நாயனை உணர்ந்தவனாகும்

அல்'சாரே அனல்ஹக்

'' ஏ கலக்கமுடைய மனிதா ! எவ்வளவு காலம் நீ உன் வாழ்நாளை சவச்சாலையை தெரிசிப்பதில் கழிப்பாய்? ஒரு ஆரிபு ஆகிய ஞானிக்கோ ஒரு உயிருள்ள பூனை ஓராயிரம் மரித்த சிங்கங்களைவிட சிறந்ததாகும். ''

கபடமின்மையாவது யாது? துன்பத்தில் இன்பத்தைப் பெறுதல் என்று ஒருவர் சொல்லுகிறார். மற்றொருவர், துன்பத்திற்குத் தலைசாய்த்தல் என்று கூறுகிறார். ஆனால் 'ருபியத்துல் பஸரிய்யா' (றலி) அவர்களோ துன்பத்தில் தன்னை இன்மையாகிக்கொள்ளுதலாகும் என்று அருட் செய்திருக்கிறார்கள். மனிதனே 'அதம்' என்னும் இன்மையாகும். ஆகலின் எந்த துன்பமும் ஒரு 'அதம்' ஆகிய இன்மையின்பால் வீழமுடியாது. அது அதனை உணராது.

'ஹக்கு' தனது நேசர்களுக்குக் கீழ்வரும் துவக்கத்தை யுடைய ஒரு அனுமதிச் சீட்டை அளிப்பான். அதாவது:— ''மினல் ஹய்யில்லதீலாயமூத்து இலல் ஹய்யில்லதீலாயமூத்து'' மரணமற்ற ஜீவிப்புடை யோனிடமிருந்து மரணமின்றிய ஜீவிப்புடையவனுக்கு'' என்றும், '' மினல் அஜீஸில்லதீலாயதாலு இலல் அஜீஸில்லதீலாயதாலு '' — '' தாழ்மைப்படுதலின்றிய மகிமை வாய்ந்தவனிடமிருந்து தாழ்மையடைதலின்றிய மகிமை வாய்ந்தவனுக்கு '' என்றும் பொருள்படக்கூடிய துலக்கத்தை அந்த அனுமதிச் சீட்டு பெற்றிருக்கும்.

ஔலியாக்களை பாவங்களினின்றும் இறைவன் பாது காப்பதை 'ஹிப்ளு' என்றழைக்கப்படுகிறது அவ்வாறு நபிமார்களைப் பாதுகாப்பதை 'இஸ்மத்' என்று அழைக்கப்படுகின்றது. பாதுகாத்தலென்பது ஒரு பாவம் மீண்டும் நிகழ விடாது பார்த்துக்கொள்ளலேயாம் ஏனெனில் விரும்பாமலேயே ஒரு வலியிடம் ஓர் பாவம் நிகழக்கூடும் ஆனால் அவர்கள் அதனை வேண்டுமென்றே செய்ததன்று (சம்ஞன் குடும்பத்தைச் சேர்ந்த 'புகாரா'வின் 'சூபி' அமீரான) செய்கு அலாவுக் தௌலாசம்னானி அவர்கள், ''ஒருவன்தான் பாவியாகிவிட்டேன் என்று சொல்லிக்கொள்வதைவிட பெரிய தோர் பாவம் யாதொன்றுமில்லை என்று கூறியிருக்கிறார்கள்

இர்ஷாதாத் — பலதிறப்பட்ட பொருக்கு மணிகள்

பூரா உலகமும் 'ஹறாம்' ஆகிய விலக்கப்பட்ட வஸ்துக்களால் நிரம்பியிருந்தபோதிலும் 'முஃமின்' ஒருவனுடைய கையில் வருவதெல்லாம் 'ஹலால்' ஆன அனுமதிக்கப்பட்டவையேயாம்.

"எழுத்துக்கள், வார்த்தைகள், 'இஸ்முகள்' யாவும் 'இல்மெ-சீமியா வென்னும் ஜீவ வசிய சாஸ்திரத்தின் அடையாளங்கள்" என்று ஷெய்குல் அக்பர் (ரலி) அவர்கள் அருளியிருக்கிறார்கள். சில ஜனங்களின் விஷயத்தில் பிஸ்மில்லாஹ் என்ற சொல்லானது சகல 'அஸ்மா' வினுடைய வேலையையும் செய்கின்றது. அவர்களுடைய நிலையில் சகல கதவுகளுக்கும் பிஸ்மில்லாஹ்தான் திறவு கோலாயிருக்கிறது.

அப்துல்ஹஸன் அவர்கள் ஜுனைது (றலி) அவர்களிடம் "ஒருவனுடைய உள்ளம் எப்பொழுது பூரிப்படைகிறது" என்று கேட்டதற்கு "மனமானது மனதிலேயே தரிபட்டிருக்கும் பொழுது மனம் சந்தோஷத்தையடைகின்றது" என்று ஜுனைது (றலி) அவர்கள் பதிலிறுத்தார்கள். ஷெய்குல் இஸ்லாம் அவர்கள், ஒருவன் தெரிசிப்பவனையும், "அந்த தெரிசனையில் ஹக்கு பிரசன்னமாயுமிருக்கும்பொழுது ஒருவனது மனம் பூரிப்படைகின்றது" என்று கூறியிருக்கிறார்கள். 'உஜூஹுன் யௌமஇதின் நாளிரத்துன் இலா றப்பிஹா நாளிரா" — "அவர்களுடைய நாயனைப் பார்த்ததாக சில வதனங்கள் அந்த நாளிலே மிகுந்த பிரகாசத்தைப் பெற்றிருக்கும்" ஒரு சூபியோ வெளிப்படையில் 'பந்தா'வாகிய அடிமையாயும் உள்ளீட்டில் 'ஹக்கு' ஆயுமிருக்கிறார்.

துன்னூனுல்மிஸ்ரீ (றஹ்) அவர்கள் தாத்தில் நோட்டமிடுதல் 'ஜஹ்லு' என்னும் மடமையாகும்; அவனை சுட்டிக்காட்டுதல் 'ஷிர்க்கு' ஆகிய இணை வைத்தலாகும் என்று அருளியிருக்கிறார்கள்.

ஒரு சேவல் முதல் இரு ஜாமங்களில் கூவுமேயானால் அது உடனே அறுக்கப்படவேண்டியதே; இல்லாவிடில் அத்தேசத்து அரசன் இறந்துவிடுவான் அல்லது ஏதேனுமோர்

அபாயம் அத்தேசாத்துக்கு ஏற்படும். 'ஹால்' ஆகிய பரவச அனுபவ நிலை கிடைக்காத வேளையில் பேசுவதிலீடுபட்டிருக்கும் 'சூபியும்' இதே கெதியை அடைக்கூடியவரே நீ ஜீவத் தன்மையுடன் எதைதனைச் சொல்லுகிறயோ அது யாவும் நேரங் கெட்ட வேளையில் கூவும் சேவலைப் போன்றும்.

சகலவற்றிலும் 'ஹக்கைத்' தெரிசிக்கும் 'ஷுஹூது'டைய நிலையை அடையப்பெருத சாதாரண ஜனங்கள் நாவாலும், மனத்தாலும் தீமையை மறுக்கிருர்கள் ஆனல் சதா தெரிசனையைப் பெற்றிருப்போர் உள்ளத்தில் அதனை மறுப்பதில்லை 'ஹக்கினல்'செய்யப்பட்ட சித்திரவேலையை'ஹக்கு'டைய உத்திரவுகொண்டே தகர்த்துவிடு நண்பனின் கல்லையே நண்பனுடைய கண்ணாடி விளக்கின் மீதுவிட்டெறிந்துவிடு இதுவோ 'ஹக்கை'க்கொண்டு 'ஹக்கை' மறுப்பதாகும். அதுபூர்ணமான மறுப்பாகாது. தங்களுடைய மார்க்க யுத்தங்களாலும் குற்றவாளிகளைத் தண்டித்காலும் தீர்க்கதரிசிகள் அல்லாஹ்வைத் தெரிசிப்பதின்றும் திரையிடப்படவில்லை அவர்கள் யுத்தகளத்தில் போரிட்டதும், கொன்றதும் 'அல்லாஹ்'வுக்காகவேயிருந்தன 'தஜல்லியாத்து' மிகைத்தபொழுது அவர்கள் 'ஔலியாவ'ாக ஆகின்றனர். 'மஜ்தூப்' ஆகிய பரவசத்தில் சொக்கிய காக்கமுடையோருக்கிருப்பதைப் போன்றே இவர்களுக்கும் சகல கடைகளும் நீக்கப்படுகின்றன அந்த நிலையில் மிகாபீபித்தவானவர்கள்கூட அவர்களுக்கும், ஹக்குக்குமிடையிலுள்ள காரியாதிகளில் குறுக்கிடுவதில்லை. 'லாயஸ் அனிபீஹிமாகுன் முகாரபுன்' 'ஷரீஅத்து'டைய சட்ட திட்டங்களுக்கு மஜ்தூபீன்கள் ஐக்கியப்பட்டவர்களன்று அவர்கள் தங்கள் நிலையிலின்றும் கீழிறங்குபவர்களல்ல ஆயினும், 'ஜுஸ்உல் ஜம்உ'க்கு எஜமானாகிய ஒரு 'ஆரிபுக்கு'ஏற்றமும், இறக்கமும் உண்டு இந்த நிலை தற்காலிகமானதே

'கைர்' ஆகிய பிறப் பொருளை உணர்த்த சகல 'கத்ராத்' என்னும் ஊசாட்டங்களைவிட்டும் மனதை சுத்தப்படுத்துவதே 'தௌஹீது' என்னும் அத்வைதமாகும்.

இர்ஷாதாத்—பலதிறப்பட்ட பொருக்கு மணிகள்

ஷெய்குல் அக்பர் அவர்கள் ' மஜ்தூப் ' ஆகிய பரவச நிலையில் சொக்கிய காக்கமுடையோர் ஒளியினுலான 'கஷ்பை'ப் பெற்றிருக்கிருர்; பைத்தியக்காரர் இருளாலான 'கஷ்பை'ப் பெற்றிருக்கிருர். மிருகாதிகளுக்கும் ஒளிவினுலான ' கஷ்பு கிடையாது. ' என்று அருளியிருக்கிருர்கள்.

" மன்தஷப்பஹ பிகௌமின் பஹுவமின் ஹூம் " (ஹதீது) ஒருகூட்டத்தினருக்குஒப்பானஒருவர் அவர்களினின்றும் ஒருவராகவே ஆகிருர் ஷெய்குஷ ஹாபுத்தீன் சுஹ்ரவர்த்தி அவர்களுடைய ' அவாரி புல்மஆரிபு ' என்னும் கிதாபில், ஒரு கூட்டத்தவருக்கு ஒப்பாகி அவர்களுடைய நெறி முறைகளை யும், நடத்தைகளையும் ஒருவர் கடைபிடித்தால் இம்மையிலும். மறுமையிலும் அவர்களைப்போன்றே அவர் ஆய்விடுகிருர் மலைக் குகையில் தூங்கிய ஏழுபேருடைய நாயும் நியாயத் தீர்ப்பு நாளில் மனித கோலத்தில்தான் எழுந்திருக்கும் ஒருவருடைய மகனுன பஅலம் " 'பஅலம்'பின் ஓர் நாயுடைய கோலத்தைப் பெறுவான்.

மனிதர்களுக்கு கொடுப்பதிலன்றி அவர்களிடமிருந்து பறித்துக்கொள்வதில் தைரியம் ' என்பது இல்லை 'அல்லாஹ்' வின் நண்பர்களுக்கு காட்டப்படும் வெளியரங்க மரியாதை 'அல்லாஹ்'வுக்கே அந்தரங்கத்தில் காட்டப்படும் மரியாதை யாகும் என்று அப்துல் ஹாபிஸ் கூறுகிருர்கள்

' குல்லுஷையின் ஹாலிகுன் இல்லா வஜ்ஹஹூ ' அவனுடைய ' முகம் ' நீங்கலாக ' கைர் ' ஆகிய ஒவ்வொரு வஸ்தும் நாசத்தையுடையதேயாம், ' கஷ்பு ' டையவர்கள் அந்த ' இன்மை ' யை இம்மையிலேயே பார்க்கிருர்கள். திரையிடப்பட்டவர்களோ அதனை மறுமையில் வாக்களிக்கப் பட்டிருக்கிருர்கள். (கடந்த, நிகழ், வரும்) காலத்தினவாகிய எதும் முக்காலத்தும் இன்மையாயிருப்பதால் இன்மையாக்கபட வேண்டிய அவசியத்தைப் பெறுவதன்று இந்த பிரபஞ்சத்தின் இன்மை முக்காலத்தும் தரிபாட்டுடனிருக்கும் 'ஹக்கு'டனே

ஒப்பிடப்படுகிறதன்றி ஏதுமில்லை. பூர்விகமாயும் சதா காலமும் நீடிப்பவனுயும் 'ஹக்கு' இருக்க வஸ்துக்கள் அந்த அம்சங்களைப் பெறுவதில்லை. 'ஹக்கு' இன்றிய யாவும் 'மித்தை' யாகிய பொய்யும். இன்மையுமாம் 'மும்கின்' ஆகிய இடம்பாடுடையது எப்பொழுதும் இன்மையின் அஸ்திவாரத்தையே பெற்றிருக்கின்றது. "யுக்ரிஜுல்ஹைய மினல் மையிதிவயுக்ரிஜுல்மை யிதமினல்ஹையி"

அவன் மரணித்தவற்றை உயிர்ப்பிக்கிறான்; உயிர் பெற்றவற்றை மரணிக்கச் செய்கிறான். அதாவது:

1) பார்வைக்கு மரித்துவிட்டதாக தோன்றும் இறந்த கிருமியினின்றும் அவன் உயிர்ப்பிக்கிறான். ஜீவிப்புடனிருக்கும் மனிதனை இறந்த மனிதனாகச் செய்கிறான்.

2) அவன் மூடன் ஒருவனை விவேகியாகச் செய்கிறான். விவேகியை மடையனாகுகின்றான்.

3) 'பனா' விலிருந்து 'பகா' அளிக்கிறான்; 'பகா' வினின்றும் 'பனா'வைக் கொடுக்கிறான்.

4) அகண்ட பரிபூர்ணத்திலிருந்து கண்டத்தைக் கொணர்கிறான். கண்டத்தினின்றும் அகண்டத்தை அளிக்கிறான்.

5) 'அஸ்மா இலாஹி' யிலிருந்து 'அஸ்மாகியானி' யையும். 'அஸ்மாகியானி'யிலிருந்து அஸ்மா இலாஹியையும் கொண்டு வருகிறான்.

சம்பூர்ணம்!

அல்ஹம்துலில்லாஹ்!

ஹிஸ்புல் பஹ்ரு ளாஹிர் பாத்தின் மஃனாவின் சுருக்கம்

★–★

1. என்னிலிருக்கும் ''நான்'' என்னும் தெய்வத் தன்மை தானாக இருந்து தொடங்குகிறேன். சர்வ ஜீவன் களிலும் தானே சாக்ஷியாக இருந்து தனக்குத் தான் கிருபை செய்பவன். தன் உள்ளமைக்கு நேர்பட்டவர்களை தன்மய மாக்குவதில் பிரத்தியேக தயாளன்.

2. பராபரமே! மேலாய்ப்பரமானவனே! மகத்துவம் நிறைந்தவனே! சர்வ சகிப்பாளனே! சர்வ அறிவு மயமானவே!

3. நீயே என்னுடைய இறைவன். நீ அறிவுமய மாய் என்னில் நிறைந்திருப்பதுவே எனக்குப் போதும். எனது இறைவனே நல்லவன். சர்வத்திலும் எனக்குப் போதுமான வனாக இருக்கும் அவனே நல்லவன் அல்லாஹ்வே! எங்க ளுடைய நாட்டங்களுக்கு நீயே காரணஸ்தன். உதவி வேணு மென்ற நாட்டத்தை நீயே எங்களுக்குப் போடுகிறாய் இன்னும் அவ்வுதவியை நீயே செய்கிறாய். நீயே சர்வத்தையும் மிகைத்தவன் உன் உள்ளமைக்கு நேர்பட்டவர்களை உன்மய மாக்கும் தயாளன்.

4. எங்களுடைய அவயவங்களிலிருந்து வெளியாகும் அசைவுகள், அமைதிகள், எங்கள் வாயிலிருந்து புறப்படும் சொற்கள், எங்கள் உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்கள், நினைப்புகள் ஆகியவைகளுக்கு நீயே காரணஸ்தன்.

அஸ்றாரே அனல்ஹக்

அபாயம் அக்கேசத்துக்கு ஏற்படும் 'ஹால்' ஆகிய பரவச அனுபவ நிலை கிடைக்காத வேளையில் பேசுவதிலீடுபட்டிருக்கும் 'சூபியும்' இதே கெதியை அடைக்கூடியவரே. நீ ஜீவத் தன்மையுடன் எதேதனைச் சொல்லுகிறயோ அது யாவும் நேரங் கெட்ட வேளையில் கூவும் சேவலைப் போன்றும்.

சகலவற்றிலும் 'ஹக்கைத்' தெரிசிக்கும் 'ஷுஹூது'டைய நிலையை அடையப்பெறாத சாதாரண ஜனங்கள் நாவாலும், மனத்தாலும் தீமையை மறுக்கிறார்கள் ஆனால் சதா தெரிசனையைப் பெற்றிருப்போர் உள்ளத்தில் அதனை மறுப்பதில்லை 'ஹக்கினால்' செய்யப்பட்ட சித்திரவேலையை 'ஹக்கு'டைய உத்திரவு கொண்டே தகர்த்துவிடு தன்பானின் கல்லையே நண்பனுடைய கண்ணாடி விளக்கின் மீது விட்டெறிந்துவிடு இதுவோ 'ஹக்கை'க்கொண்டு 'ஹக்கை' மறுப்பதாகும். அதுபூர்ணமான மறுப்பாகாது. தங்களுடைய மார்க்க யுத்தங்களாலும் குற்றவாளிகளைத் தண்டித்தாலும் தீர்க்கதரிசிகள் அல்லாஹ்வைத் தெரிசிப்பதின்றும் திரையிடப்படவில்லை அவர்கள் யுத்தகளத்தில் போரிட்டதும், கொன்றதும் 'அல்லாஹ்'வுக்காகவே யிருந்தன 'தஜல்லியாத்து' கிடைத்தபொழுது அவர்கள் 'ஔலியாவ்'ாக ஆகின்றனர். 'மஜ்தூப்' ஆகிய பரவசத்தில் சொக்கிய காக்கமுடையோருக்கிருப்பதைப் போன்றே இவர்களுக்கும் சகல தடைகளும் நீக்கப்படுகின்றன அந்த நிலையில் மிகசமீபித்தவானவர்கள்கூட அவர்களுக்கும், ஹக்குக்குமிடையிலுள்ள காரியாதிகளில் குறுக்கிடுவதில்லை. 'லாயஸ் அனிபிஹி மலிகுன்முகர்ரபுன்' 'ஷரீஅத்து'டைய சட்ட திட்டங்களுக்கு மஜ்தூபீன்கள் ஐக்கியப்பட்டவர்களென்று அவர்கள் தங்கள் நிலையிலின்றும் கீழிறங்குபவர்களல்ல ஆயினும், 'ஜம்உல் ஜம்உ'க்கு எஜமானராகிய ஒரு 'ஆரிபுக்கு' ஏற்றமும், இறக்கமும் உண்டு இந்த நிலை தற்காலிகமானதே

'கைர்' ஆகிய பிறப் பொருளை உணர்த்த சகல 'கத்ராத்' என்னும் ஊசாட்டங்களைவிட்டும் மனதை சுத்தப் படுத்துவதே 'தௌஹீது' என்னும் அத்வைதமாகும்.

ஷெய்குல் அக்பர் அவர்கள் ' மஜ்தூப் ' ஆகிய பரவச நிலையில் சொக்கிய காக்கமுடையோர் ஒளியினாலான 'கஷ்பை'ப் பெற்றிருக்கிறார்; பைத்தியக்காரர் இருளாலான 'கஷ்பை'ப் பெற்றிருக்கிறார். மிருகாதிகளுக்கும் ஒளியினாலான ' கஷ்ட கிடையாது.' என்று அருளியிருக்கிறார்கள்.

'' மன்தஷப்பஹ பிகௌமின் பஹ்ஹுவமின்ஹும் '' (ஹதீது) ஒருகூட்டத்தினருக்கு ஒப்பான ஒருவர் அவர்களினின்றும் ஒருவராகவே ஆகிறார். ஷெய்குஷ ஹாபுத்தீன் சுஹ்ரவர்த்தி அவர்களுடைய ' அவாரி புல்மஆரிபு ' என்னும் கிதாபில், ஒரு கூட்டத்தவருக்கு ஒப்பாகி அவர்களுடைய நெறி முறைகளையும், நடத்தைகளையும் ஒருவர் கடைபிடித்தால் இம்மையிலும், மறுமையிலும் அவர்களைப்போன்றே அவர் ஆய்விடுகிறார் மலைக் குகையில் தூங்கிய ஏழுபேருடைய நாயும் நியாயத் தீர்ப்பு நாளில் மனித கோலத்தில்தான் எழுந்திருக்கும் ஒருவருடைய மகனான பஅலம் '' 'பஅலம்'பின் ஓர் நாயுடைய கோலத்தைப் பெறுவான்.

மனிதர்களுக்கு கொடுப்பதிலன்றி அவர்களிடமிருந்து பறித்துக்கொள்வதில் தைரியம் ' என்பது இல்லை 'அல்லாஹ்'வின் நண்பர்களுக்கு காட்டப்படும் வெளியரங்க மரியாதை 'அல்லாஹ்'வுக்கே அந்தரங்கத்தில் காட்டப்படும் மரியாதை யாகும் என்று அப்துல் ஹாபிஸ் கூறுகிறார்கள்.

' குல்லுஷையின் ' ஹாலிகுன்இல்லா வஜ்ஹஹு ' அவனுடைய ' முகம் ' நீங்களாக ' கைர் ' ஆகிய ஒவ்வொரு வஸ்தும் நாசத்தையுடையதேயாம் ' கஷ்பு ' டையவர்கள் அந்த ' இன்மை ' யை இம்மையிலேயே பார்க்கிறார்கள் திரையிடப்பட்டவர்களோ அதனை மறுமையில் வாக்களிக்கப் பட்டிருக்கிறார்கள். (கடந்த, நிகழ், வரும்) காலத்தினவாகிய எதும் முக்காலத்தும் இன்மையாயிருப்பதால் இன்மையாக்கபட வேண்டிய அவசியத்தைப் பெறுவதன்று இந்த பிரபஞ்சத்தின் இன்மை முக்காலத்தும் நரிபாட்டுடனிருக்கும் 'ஹக்கு'டனே

ஒப்பிடப்படுகிறதன்றி எதுமில்லே. பூர்விகமாயும் சதா காலமும் நீடிப்பவனாயும் 'ஹக்கு' இருக்க வஸ்துக்கள் அந்த அம்சங்களேப் பெறுவதில்லே. 'ஹக்கு' இன்றிய யாவும் 'மித்தை' யாகிய பொய்யும், இன்மையுமாம் 'மும்கின்' ஆகிய இடம்பாடுடையது எப்பொழுதும் இன்மையின் அஸ்திவாரத்தையே பெற்றிருக்கின்றது. "யுக்ரிஜுல்ஹைய மினல் மையிதீவயுக்ரிஜுல்மையிதுமினல்ஹையி"

அவன் மரணித்தவற்றை உயிர்ப்பிக்கிருன்; உயிர் பெற்றவற்றை மாணிக்கச் செய்கிருன். அதாவது :

1) பார்வைக்கு மரித்துவிட்டதாக தோன்றும் இறந்த விருமியினின்றும் அவன் உயிர்ப்பிக்கிருன். ஜீவிப்புடனிருக்கும் மனிதனே இறந்த மனிதனைகச் செய்கிருன்.

2) அவன் மூடன் ஒருவனே விவேகியாகச் செய்கிருன். விவேகியை மடையனுகுகின்ருன்.

3) 'பனு' வினின்று 'பகா' அளிக்கிருன்; 'பகா'வி லின்றும் 'பனு'வைக் கொடுக்கிருன்.

4) அகண்ட பரிபூர்ணத்திலிருந்து கண்டத்தைக் கொணர்கிருன். கண்டத்தினின்றும் அகண்டத்தை அளிக்கிருன்.

5) 'அஸ்மா இலாஹி' யிலிருந்து 'அஸ்மாகியானி' யையும், 'அஸ்மாகியானி'யிலிருந்து அஸ்மா இலாஹியையும் கொண்டு வருகிருன்.

சம்பூர்ணம் !

அல்ஹம்துலில்லாஹ்!

ஏழு நிலைகள் - மகாம்களகள் - நப்ஸுகள் - எல்லைகள் - அல்லது ஞான பூமிகளின் விபரம்

1. நப்ஸ் அம்மாரு:—

(மகாமே நாசூத்து—மூலாதாரச் சக்கரம்—ஜாக்கிரம் - Gonads Clands)

இந்நிலையில் இருப்பவர்கள் புலன்களின் புசிப்புக்காக தன்னையே அர்ப்பணித்தவர்கள் நன்மை, தீமை இன்னது என்று புரியாமலே பஞ்ச மகாபாதகங்கள் அனைத்திலும் ஈடுபடும் தன்மை உள்ளவர்கள். இந்நிலையில் இருப்பவர்களுடைய விமோசனம் சரீஅத்தின் சட்டதிட்டங்களைக் கண்டிப்பாக கடைபிடிப்பதுதான் கடைபிடித்தால் நப்ஸ் லவ்வாமாவின் நிலையை அடையப் பெறுவர். இந்த தானத்தில் அல்லாவுடைய 'ஹாலிகு' (படைக்கிறவன்), 'முளில்லு' (வழி கெடுப்பவன் அல்லது மிருக குணம் உள்ளவன்) என்ற இரு இஸ்முகளும் இந்த மகாமுடன் இணைந்து செயல்படுகின்றன.

2 நப்ஸ் லவ்வாமா :—

(மகாமே மலக்கூத்து - சுவாதிஸ்தானச் சக்கரம்— சொப்பனம் — Adrenals Glands)

இந்த நிலையில் நன்மை எது? தீமை எது? என உணர முடியும். இந்நிலையில் உள்ளவர்கள் தீமையில் ஈடுபடும் பொழுது தன்னை நிந்தித்தாலும் அதிகமாய் தீமையின் பக்கமே சாடும் தன்மையுள்ளவர்கள். கெட்ட பண்புகளை புறக்கணித்து

நல்ல பண்புகளை மேற்கொண்டு தெய்வ பக்தியுடன் நன்மையே செய்து நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிமுறைப்படி (தரீகத்தின் படி) நடந்து வந்தால் ஜபரூத்து என்ற பதவியை அடைய முடியும். இந்த பூமியில் 'கவிய்யுன்' (சக்தி வாய்ந்த வன் [மலக்கு], 'லத்தீபு' (உன்னித்து கவனிப்பவன் [ஜின்] என்ற இரு இஸ்முகளும் இணைந்து செயல்படுகின்றன.

3. நப்ஸ் முல்ஹிமா:—

(மகாமே ஜபரூத்து—மணிப்பூரகச் சக்கரம் — சுழுத்தி — Pancreas Glands)

இந்நிலைக்கு வந்தவர்கள் முக்கால் பாகம் நன்மையிலும், கால்பாகம் தீமையிலும் ஈடுபடும் தன்மையுள்ளவர்கள். இவர்கள் மிகுதமாக ஜெபதபங்களில் ஈடுபட்டால் மகாமே லாஹூத்து என்ற பதவியை அடையப் பெறுவர். இந்த மகாமுடன் (1) 'காபிலு' (சுருங்கச் செய்வது) என்ற இஸ்மும் (கோலம் - நெருப்பு), (2) 'ஹைய்யு' (உயிருட்டுவது) என்ற இஸ்மும் (கோலம் — காற்று), (3) 'முஹ்யியி' (சுறுசுறுப்பூட்டுவது) என்ற இஸ்மும் (கோலம் — தண்ணீர்). (4) 'முமீத்து' (அழிப்பது) என்ற இஸ்மும் (கோலம் — மண்). (5) 'அலீலு' (பெருமதிப்புள்ளது) என்ற இஸ்மும் (கோலம் — உலோகங்கள்) (6) 'ரஸ்ஸாக்கு' (அன்னமளிப்பவன்) என்ற இஸ்மும் (கோலம் - உணவுப் பொருட்கள்) இணைந்து செயல்படுகின்றன.

4. நப்ஸ் முத்மஇன்னா.—

(மகாமே லாஹூத்து — அனாஹதாச் சக்கரம்—துரியம்— THYMUS GLANDS)

இந்நிலையை அடைந்தவர்கள் நன்மையைத் தவிர

நிலைமையைத் தெரியாதவர்கள். இவர்களுடைய மனம் சதாவும் ஆண்டவனையே தியானித்துக் கொண்டு இருக்கும். நான் என்பது அற்றுப் போன இடம். விலாயத்து உதயமாகும் இடம். இவர்கள் சதாவும் மௌனமாய் இருந்து ஆண்டவனை தியானித்து வந்து 'மகாமே ஹாஹூத்து' என்னும் பதவியை அடையப் பெறுவர். இந்த மகாமுடன் (1) 'முஹ்ஸிய்' (இல் ஹாம் என்னும் தெய்விக உதிப்பை பதிவு செய்வது) என்ற இஸ்மும் (கோலம்—புதன்), (2) 'முஹைமினு' (ரக்ஷகன்) என்ற இஸ்மும் (கோலம்—சந்திரன்) இணைந்து செயல்படுகின்றன.

5. நப்ஸ் ராளியா:—

(மகாமே ஹாஹூத்து —விசுத்தாச் சக்கரம்—துரியாதீதம்—THYROID GLANDS)

இந்நிலையை அடைந்தவர்கள் நான்காவது பதவியின் பூரணத்துவத்தை அடையப் பெற்று பேரின்ப நிலையை அடைந்தவர்கள். "இன்னல்லாஹாஹூவல் வலிய்யு' என்ற திருவசனத்தின்படி விலாயத்தை சம்பூர்ணமாகப் பெற்றவர்கள் இந்த மகாமுடன் 'முஸவ்விரு' (வடிவம் தீட்டுபவன்; தேகாதி குணங்களையும் அடிமைத்தனத்தையும் வெட்டி நீக்குபவன்) என்ற இஸ்மு இணைந்து செயல்படுகின்றது. இதன் கோலம் சுக்கிரன்.

அஸ்ராரே அனல்ஹக்

6, நப்ஸ் மர்ளியா:—

(மகாமே பாஹூத்து—அஜ்ஞ சக்கரம்—அதீதம்—
PITUITARY CLANDS)

தெய்வத்துடன் தொடர்பு கொள்ளும் நிலை இல்ஹாம் என்னும் தெய்வ உதிப்பைப் பெறுவதும், தெய்வ வசனங்கள் கிடைக்கப் பெறுவதும் இந்நிலையில்தான். நுபுவ்வத்தின் எல்லை. இந்நிலைக்கு அதீதம் என்றும், ஆருவது எல்லை என்றும், இதற்குமேல் ஒன்றுமில்லையென்றும் சில மகான்கள் கூறுகிறார்கள். இந்த மகாமுடன் (1) 'ரப்பு' (போஷிப்பவன்—சத்துவப்பொருளை சடப்பொருளாய் மாற்றுந் தன்மை) என்ற இஸ்மும் (கோலம் - சனி), (2) 'அலீமுன்' (வஸ்து அடங்களிலும் அறிவு மயமாய் வியாபித்திருப்பது என்ற இஸ்மும் (கோலம் வியாழன்). (3) 'காஹிரு' (சர்வத்தையும் அடக்கி ஆளுந் தன்மை) என்ற இஸ்மும் (கோலம் - செவ்வாய்) (4) 'நூரு' (பிரகாஸம்) என்ற இஸ்மும் ((கோலம் - சூரியன்) இணைந்து செயல்படுகின்றன.

7. நப்ஸ் காமிலா :—

மகாமே ஜப்ஹூத்து — சகஸ்ராராச் சக்கரம் —
PINEAL GLANDS)


தெய்வம் தானாய் இருக்கும் நிலை. நுபுவ்வத்தின் சம்பூர்ண நிலை. குதுபியத்தின் உதயம். இந்த நிலையை அடைந்தவர்களிடமே முழு உலகத்தினுடைய அந்தரங்க ஆட்சி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆளுநர்க்கு 'குத்புல் அக்தாப்' என்று பெயர். இந்நிலையில் இருப்பவர்கள் தற்போதம் இழந்து, உஷாரற்ற நிலையில் இருப்பதனால் இவர்

ஏழு நிலைகள்-மகாம்கள்-நப்ஸுகள்-எல்லைகள்-அல்லது
ஞான பூமிகளின் விபரம்

களுக்கு 'ஹாஹூன்கள்' என்று பெயர். 'மக்அது ஸித்கு' உண்மை குடிகொள்ளும் தானம் என்று பெயர், இந்த மகாமுடன் அல்லாஹ்வுடைய 'ஷகூரு' (ஒன்றுக்கு பன் மடங்கு அருள்பாலிப்பவன்) என்ற இஸ்மும், (2) 'கனிய்யு' (சர்வ சுதந்திரமானவன்; வஸ்து அடங்கலையும் தன்னில் காணும்நிலை) என்ற இஸ்மும், 'முக்கதிர்' (வஸ்து அடங்கலின் மீதும் தன் செல்வாக்கை செலுத்தும் தன்மை) என்ற இஸ்மும் இணைந்து செயல்படுகின்றன. கோலங்கள் வெளியாகும் தானமும் இதுவே.

அச்சிட்டோர் :
அஸ்ஸிமா பிரிண்டர்ஸ், கண்ணம்மன் கோவில் தெரு,
திருநெல்வேலி-627 001.

எழு நிலைகள் விபரம்


7 SAHASRARA
6 AJNA
5 VISHUDDHA
4 ANAHATA
3 MANIPURA
2 SVADHISTHANA
1 MULADHARA


پیران پیر دستگیر